Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 80 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 செப்டம்பர் 2024





# You too U.N.?









## SRI LANKAN CONTRIBUTION TO UNITED NATIONS PEACEKEEPING OPERATIONS



## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்




























விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203





www.sangathamil.ca




## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**இந்த உலகில்
அநீதியும் அடிமைத்தனமும்
இருக்கும் வரை சுதந்திரத்தை
இழந்து வாழும் மக்கள்
இருக்கும் வரை
விடுதலைப்
போராட்டங்களும்
இருக்கத்தான் செய்யும்.
இது தவிர்க்க
முடியாத வரலாற்று
நியதி.**






**சங்கத்தமிழ்**

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# "நான் சாகலாம், நீ சாகலாம்; ஆனால், நாங்கள் சாகக்கூடாது"

# லெப். கேணல் குணா

திரும்பிப் பார்க்கின்றோம் –

சுதந்திரத்தின் சிகரத்தை நோக்கிய எங்கள் நெடும் பயணம், கண்ணுக்குள் விரிகிறது அந்த நெடுவழிப்பாதை. எழ எழ விழுந்து, விழ விழ எழுந்து… எத்தனை இன்னல்கள், எத்தனை சவால்கள், எத்தனை அழுத்தங்கள், எத்தனை குழிபறிப்புகள்… எல்லாவற்றையுமே எகிறிக் கடந்து எழ எழ விழுந்து… விழ விழ எழுந்து…

திரும்பிப் பார்க்கின்றோம் –

இரத்தத்தையும், சாம்பர்மேடுகளையும், சவப்பெட்டிகளையும் தமிழனுக்குத் தந்தவர்களின் தலைவாசல்களுக்கு – கண்ணீரையும், கதறலையும், துன்பப்படுவதென்றால் எப்படி இருக்குமென்பதையும் தமிழன் திரும்பவும் பரிசளித்து…

திரும்பிப் பார்க்கின்றோம் –

தேடிப்போய்க் கையேந்தி நின்ற தமிழனை அடித்து விரட்டியவர்களை, தேடி வந்து கையேந்தி வந்து தமிழனிடம் "அடிக்காதீர்கள்" என இரக்க வைத்து…

திரும்பிப் பார்க்கின்றோம் –

வீழ்ந்து போய்க் கிடந்த தமிழனின் வரலாறு எங்களுக்குத் தந்த ஒரு தலைவன், எழுச்சியாய் நிமிரும் புதியதோர் வரலாற்றைத் தமிழுக்கு தந்து நிற்க…

திரும்பிப் பார்க்கின்றோம் –

ஆகா…! என்ன ஒரு ஆச்சரியம்…! எங்களையே அசத்திவிட்ட அதிசயம்…! நம்ப முடியாமலல்லவா இருக்கின்றது… எப்படி இது நிகழ்ந்தது…? பிரமிக்க வைக்கிறதே…! நினைக்கையில் உயிர் சில்லிடுகின்றது… நாங்கள் பார்த்துக்கொண்டிருக்க, எங்கள் கண்களுக்கு முன்னாலயே… இது ஒரு கால மாற்றமா? இல்லை.

இது மாற்றப்பட்ட காலம்!

திரும்பிப் பார்க்கின்றோம் –

இந்தப் புதுயுகத்தின் பிரசவத்திற்காக எங்கள் தேசம் செலுத்திய விலைமதிப்பற்ற பெறுமதி…

ஒன்றா… இரண்டா… அத்திவாரக் கற்களாக, தாங்கும் தூண்களாக, உச்சியின் முகடுகளாக, முகடுகளின் கிரீடமாக, கிரீடத்தில் பதித்த முத்துக்களாக… தேசத்தின் நிர்மாணிப்பிற்காக நாங்கள் இழந்த இரத்தக்கனிகள்… 6,912+…

சாதாரண சகவாழ்வின் பற்றுதல்களை உதறியவர்கள்; தனிப்பட்ட சுய வாழிவின் இலட்சியங்களைத் துறந்தவர்கள்; இனிய இளமை வாழ்வின் கனவுகளை மறந்தவர்கள்; தங்கள் அறிவு, ஆற்றல்கள், திறமைகள் அனைத்தையும் தாயக மண்ணுக்காய்த் தந்தவர்கள் மக்களின் விமோசனத்திற்காக மரணத்திற்குள் வாழ்ந்தவர்கள்.

போர்முனைகளிலும் அவற்றுக்கு அப்பாலும் நாங்கள் சாதித்த ஒவ்வொரு மகத்தான வெற்றிக்காகவும், உயிர்த்துடிப்போடு உழைத்து விழிமூடிய எங்கள் நெஞ்சினிய நண்பர்கள்.

தமிழீழத்தை – தமிழனுக்கென்றோர் தனியரசை – தமிழினத்தின் தன்னாட்சியை – மட்டுமே, ஆத்மார்த்தமான தாகமாகத் தங்களது ஆன்மாவில் சுமந்தவர்கள்; அதற்காகவே வாழ்ந்தார்கள் – போராடினார்கள்; வீழ்ந்தார்கள்.

45 ஆண்டுகளாக இறுமாந்து கொண்டிருந்த சிங்கள தேசத்தின் பேரினவாதச் சிந்தனைக்கு, தாயக மண்ணில் புலிகள் கொடுத்த மிகப் பெரிய அடி – 'ஒப்பறேசன் தவளை'.

அந்தக் களத்திலும் வீழ்ந்து, அந்தக் களத்திற்காகவும் வீழ்ந்து, பூநகரியில் – சரித்திர வெற்றிக்கு மகுடம் சூட்டினார்கள் எங்கள் நெருப்புக் குழந்தைகள்.

அந்த மாபெரும் களத்தில் நாங்கள் செலுத்திய விலைகளில் ஒன்று. லெப்ரினன்ற் கேணல் குணா.

• • •

குணா!

தென்மராட்சி மண் எங்கள் தந்தையர் தேசத்திற்குத் தந்த ஒரு தலைசிறந்த புரட்சிவீரன்.

தமிழீழப் போர் வானில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக மெல்லென ஒளிர்ந்த படைத்தளபதி.




பாசம்மிகு மக்களின் உள்ளங்களை ஊடுருவி, அன்போடு வீசிய குளிர்ந்த காற்று.

# இறப்பினும் மறவோம்; இலக்கினில் தவறோம்!

நாங்கள் அவனோடு இருக்க விரும்பினோம் என்பதை விடவும் அவனைப் போல இருக்க விரும்பினோம் என்பதே சரியானது.

ஐந்து அடி பத்து அங்குல உயரத்தில் அந்த அஜானபாகுவான 'இராணுவக்கட்டுடல்', சதா புன்னகைத்துக் கொண்டு குதூகலமாய்ப் பழகும் அந்த நிலவு முகம், சுருள் சுருளாகப் படர்ந்து தவழும் அந்தத் தலைமுடிகள், பார்க்கின்றவர்களை வசீகரித்துவிடுகின்ற அந்த மிடுக்கான தோற்றம், எங்களை மெய்மறந்து பார்க்க வைக்கும் ஒய்யார நடை, அளவான பேச்சு, அமைதியான சுபாவம், விரைவான செயல், பண்பான அணுகுமுறைகள்… எங்கள் கண்களுக்குள் நிறைந்து நிற்கின்றது அந்த வண்ணக்கோலம்.

பத்தாண்டுகளுக்கு முன்னர் – திருநெல்வேலித் தாக்குதலுடன் போராட்ட வளர்ச்சிப் போக்கு புதியதொரு பரிமாணத்திற்குள் பிரவேசித்த காலகட்டத்தில்தான், விஜயராஜா என்ற அந்த இருபது வயது இளைஞனும் விடுதலைப்புலியாகி வந்தான்.

கல்வயல் அவனுடைய ஊர்; ஒரு சிறிய விவசாயக் கிராமம். பச்சைப் பசேலென்ற மேலாடை அந்த நிலத்தின் சிறப்பழகு குச்சொழுங்கைகளின் புழுதியில் ஓடி, வயற்சேற்றில் விழுந்து, செல்லையா அப்புவின் காணிக்குள் இளநீருக்குப் பாய்ந்து கலைபட்டு, பன்றித்தலைச்சி அம்மன் திருவிழாவில் கூத்தடித்து, சாவகச்சேரி நகரப் பாடசாலையில் பாடப் புத்தகங்களோடு பக்கத்து வாங்குப் பிள்ளைகளையும் கவனித்து –

சின்ன வயதில் அந்த ஊர் அவனுக்குச் சொந்தம்; வளர்ந்த பின் அவன் இந்தத் தேசத்திற்குச் சொந்தம்.

புலிகள் இயக்கத்தின் வளர்ச்சிப்பாதையில் போராட்டம் எடுத்த இன்னொரு புதிய வடிவமாக பிரதேச ரீதியாக சிற்றூர்ப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு – போராட்டத்தை மக்கள் மயப்படுத்தவும் மக்களை போராட்ட மயப்படுத்தவும் – அரசியல்

வேலைத்திட்டங்கள் தொடங்கப்பட்ட ஆரம்ப காலத்தில், குணா கல்வயலிற்கு நியமிக்கப்பட்டான்.

அப்பொழுது கடமையிலிருந்தவர்களுள் சிறந்த பணியாற்றிய பிரதேசப் பொறுப்பாளர்களில் ஒருவனாக அவன் திகழ்ந்ததும், ஆனையிறவிலும் நாவற்குழியிலும் 'ஆமி' வெளிக்கிட்டதாக 'வோக்கி' அறிவித்தபோதெல்லாம் அந்தக் களங்களில் விரைந்து திறம்படச் சண்டையிட்டதும், அவனது பற்றுறுதியும், அவனது வீரமும் துணிவும் – தளபதி கேடியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான முன்னணிப் போராளிகளுள் ஒருவனாக அவனை உயரச் செய்தன.

அந்த நம்பிக்கை – இயக்கத்தின் அதி முக்கியமானதும், இரகசியமானதும், தலைவருக்குரியதுமான சில பொறுப்புக்களை அவனது தலை மேல் சுமத்தியது. ஒப்படைத்த வேலைகளில் அவன் கட்டிய ஈடுபாடும், ஓய்வற்ற கடும் உழைப்பும் – தலைவரிடத்திலும் கிட்டண்ணனிடத்திலும் பாராட்டையும் நற்பெயரையும் பெற்றுத் தந்ததுடன் – குணாவை இனங்காட்டியும் விட்டன.

கைதடியில் வெடித்த குண்டு – பொன்னம்மான், வாசுவோடு – தளபதி கேடியை எம்மிடமிருந்து பிரித்துவிட, தென்மராட்சியில் மந்தமாகிப் போன போராட்டப் பணிகளுக்கு புத்துயிர்ப்புக் கொடுத்து, மீளவும் வளர்ச்சிப்பாதையில் இட்டுச்சென்ற பெருமை குணாவைத்தான் சேரும்.

ஏற்கெனவே சண்டைகளில் அவன் நின்றவன் தானென்றாலும் நெல்லியடி வரலாற்றுக்களம் தான் அந்த வீரனுக்குச் சொல்லக் கூடிய முதற்சண்டை. இன்றைய உலகின் வியப்புக்குரியதாகி, சிங்கள தேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கும் கரும் புலிகளின் சகாப்தத்தை மில்லர் என்ற மாவீரன் இடிமுழக்கத்தோடு தொடக்கி வைத்த போது – தென்மராட்சிப் படையணிக்குத் தளபதியாக, குணா அந்தக் களத்திலிறங்கினான்.



காலச் சக்கரத்தின் சுழற்சி; இந்தியப் படையின் தரையிறக்கம் இசைந்துகொடுத்தே ஆக வேண்டியிருந்த ஒரு நிர்ப்பந்தம். மாறுபட்ட ஒரு வடிவத்திற்குள் இட்டுச்செல்லப்பட்டது போராட்டம். மாயைத் திரை கிழிந்து, உண்மை வெளிப்பட நாங்கள் காத்திருந்த நாட்கள்.

இந்தியா ஆக்கிரமித்ததற்கும் – அது சண்டையை ஆரம்பித்ததற்கும் இடைப்பட்ட அந்தக் காலம் மகா முக்கியமான, மறைமுகமான பணியொன்று அவனது மடியில் சுமத்தப்பட்டது. குணா மாடாய் உழைத்தான்.

ஆயுதங்கள் –

விடுதலைப் போராட்டத்தின் உயிர்நாடி; தேசத்தின் அசைக்க முடியாத இரும்புக் கவசம்; அன்று நாங்கள் பேசப்போன போது அவர்கள் அதைத் தூக்கினார்கள் – பின்பு நாங்கள் அதைத் தூக்கிய போது அவர்கள் பேச வருகின்றார்கள். வரலாற்றைத் தலைகீழாக்கிய நெம்புகோல்கள். படையியல் அரங்கில் போரிடும் போதும் சரி, ஆயுதங்களே தமிழனின் பலம்; ஆயுதங்களே தமிழனுக்கு 'வாழ்வு'; ஆயுதங்களே தமிழனின் 'எதிர்காலம்'. ஆயுதங்களை நாங்கள் கைவிட முடியாது – ஒருபோதுமே கைவிடப் போவதுமில்லை.

தேசத்தின் முதுகெலும்பான ஆயுதங்களை, பக்குவமாய்ப் பாதுகாக்க வேண்டிய ஒரு முக்கியமான பொறுப்பு. அன்றைய சிக்கலான சூழ்நிலையில் குணாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

எவ்வளவுக்கெவ்வளவு அது முக்கியத்துவம் வாய்ந்ததோ அவ்வளவுக்கவ்வளவு அது இரகசியம் மிக்கது; எனவே அந்தரங்கமாக மேற்கொள்ளப்பட வேண்டிய மிகமிகச் சிரமமான ஒரு செயற்பாடு அது. சில சமயங்களில்தான் அவன் அடுத்தவர்களை உதவிக்கு நாடினான். பெரும்பாலும் அவன் தனியாகவேதான். குணா சளைக்கவில்லை – சலிக்கவில்லை. இந்தியர்களின் கழுகுப் பார்வைக்கு மறைந்து – ஒழுங்கான உணவின்றி, போதுமான உறக்கமின்றி – அவன்பட்ட கஸ்டங்களை நாங்கள் பார்த்தோம் அவன் சந்தித்த துன்பமும் துயரமும் கொஞ்சமல்ல.

திலீபனை இந்தியர்கள் கொன்று, கண்ணன் தனத்தோடு இன்னும் கொஞ்சப்பேரை இந்தியர்களோடு வந்தவர்கள் கொன்று புலேந்தி அம்மான், குமரப்பா, தென்மராட்சியின் அப்துல்லாவோடு பன்னிருவரை இந்தியர்களும் சிங்களவர்களுமாகச் சேர்ந்து கொன்று... வரலாற்றுக் காற்றின் வீச்சு, மக்களில் கவிந்திருந்த மாயைப்புகையை மெல்லக் கலைத்துச் செல்ல –

1987, ஒக்ரோபர் 10.

சரித்திர நாள்.

ஓரோசையும் அற்று உறங்கிய இரவு பேரோசையோடு விடிந்தது.

'பூமாலை'யோடு வந்தவர்கள் இங்கு ஒரு 'புயற்காற்றை' வீசச் செய்தார்கள்.

அன்பில் முத்தமிட என வந்த அமைதித்திரை கிழிந்து – கண்ணில் யுத்தமிடும் வெறிகொண்டது ஆக்கிரமிப்புப் பூதம்.

'றோ' கொடுத்த தகவலின்படி திட்டம் போட்டார்கள். '750 பேருக்கு 72 மணித்தியாலங்கள்'

யாழ்ப்பாணக் கோட்டையில் ஆரம்பித்து, அம்பாறைத் திருக்கோவில் வரை வியாபித்து, மணலாற்றுக் காட்டில் 'முதல் அத்தியாய'த்தை தலைவர் முடித்துவைத்த போது – இரண்டரை ஆண்டுகளின் பின் வல்லரசுப் படைகள் மூட்டை கட்டிக் கொண்டு வெளியேறின.

போரியல் சரித்திரத்தில் பொறிக்கப்பட்ட அந்த இந்திய – புலிகள் யுத்தம். அந்த வீரனை முழுமையாக இனங்காட்டிய நெருப்பு நாட்கள்.

முற்றுகைகள் சுற்றிவளைப்புக்கள் காட்டிக்கொடுப்புகள் திடீர்ச் சண்டைகள் கலைபாடுகள் தப்பி ஓடல்கள்... எல்லாவற்றுக்கும் மத்தியில் நின்று, தென்மராட்சியில் புலிகளின் நாடித்துடிப்பாக இயங்கியவன் குணாதான்.

அவனது உறுதி, அவனது வீரம், அவனது நம்பிக்கை, அவனது வழிநடாத்தல், ஒட்டுமொத்தமாக அவனேதான் – அத்துணை நெருக்கடிகளுக்கும் மத்தியில் அங்கு புலிகளை நின்று நிலைக்கச் செய்து, தழைத்தோங்கி வளரச் செய்தான்.

'சயனைட்'டை நம்பியே விடிந்துகொண்டிருந்த அன்றைய நாட்கள்; அடுத்த காலையில் உத்தரவாதமற்றுப் பதுங்கப் போகும் இரவுகள்; மரணம் உயிரை உரசிய சமயங்களில், குப்பியைப் பிடித்துக் கொண்டு தப்பித்து மீண்ட மயிரிழைப் பொழுதுகள்; நாளுக்கு நாள் வீழ்ந்துகொண்டிருந்த அன்புத் தோழர்கள் –

## அவனோடு இருக்க நாங்கள் விரும்பியதை விடவும், அவனைப் போல இருக்கத்தான் நாங்கள் விரும்பினோம்.

கனகம் புளியடியில் பதுங்கிப்பிடித்த பகைவனின் கைகளில் கீதன் விழிகளை மூட, கல்வெளியில் ரோந்துப் படையிடம் அகப்பட்டு நகுலன் குப்பி கடிக்க, கொடிகாமத்தில் எதிர்பாராமல் மாட்டுப்பட்டு ரேகா சன்னங்களை ஏந்த, அல்லாரையில் முற்றுகைக்குள் சிக்கி புறோப்ளர், தனக்கே குண்டு வைக்க, மிருசுவில் அதிரடித் தாக்குதலில் கில்மன் களப்பலியாக, கச்சாய் வீதியில் இட்டுமுட்டாய் அகப்பட்டு நிதி வீழ்ந்துபோக, சரசாலையில் எதேச்சையாய் மாட்டிக்கொண்டு வின்சன் நஞ்சு தின்ன, பளையில் சுற்றிவளைப்பிற்குள் வேல்ராஜ் சயனைட் கடிக்க, உசனில் பதுங்கித் தாக்குதலில் அக்பர் வீழ்ந்து போக, நாவற்குழி சுற்றிவளைப்பிற்குள் அருள் குப்பி கடிக்க...

ஒவ்வொன்றாய் ஒவ்வொன்றாய் எங்கள் செல்வங்கள் விழ விழவும் குலையாத மலையாக இறுகிக்கொண்டே போனான் அந்தத் தளபதி.

நெருப்புக்கள் நின்றும் நீறாகிப்போகாமல் நிமிர்ந்த அந்த வீரன், எங்களையும் நிமிரச் செய்தான்.

வேம்பிராய்ச் சந்திக் கும்மிருட்டில், "தம்பி!" என்று சைக்கிளில் எட்டிப்பிடித்து மறித்தவன் 'பீடி'யை உறிஞ்சியபோது, வெளிச்சத்தில் பார்த்தால், சீக்கிய முகம்! சைக்கிளால் தூக்கி அடித்துவிட்டு, குணா வேலியால் பாய்ந்தோடிய போது துப்பாக்கிகள் உறுமின!

கெருடாவில் வீதியில் போனபோது எதிரே வந்தது இந்திய ஜீப்



பக்கத்து ஒழுங்கையால் மெதுவாகத் திரும்பி தப்பிப்போக முனைகையில், வந்து திரும்பிய ஜீப்பிலிருந்து முழங்கத் துவங்கியது 'பிறண்'! இந்தியர்கள் கலைத்துச்சுட, இவர்கள் வலிந்து ஓட, இளைத்து இளைத்து ஓடி முள்ளுக் கிழித்து இரத்தம் ஒழுக, இயலாமல் விழுந்த பாப்பாவையும் இழுத்துக்கொண்டு வந்து சேர்ந்தான் குணா.

பெருங்குளத்தில் ஆமி கலைக்க ஓடி அடுத்த தெருவில் ஏற, ஆமி ஜீப்பில் வந்தான்! பக்கத்துக் காணியால் ஓடி இன்னொரு வீதியால் ஏற ஆமி நடந்து வந்தான்! அருகு வீட்டுக்குள்ளால் பாய்ந்து பின்னொழுங்கையில் ஏற ஆமி குந்திக்கொண்டிருந்தான்! அடுத்த காணியால் பாய்ந்து விழுந்தடித்து ஓடி, விடயம் தெரியாமல் "என்ன மச்சா"னென்று சிரித்துக்கொண்டு வந்த கந்தண்ணையையும் இழுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான் குணா.

"நான் சாகலாம் நீ சாகலாம். ஆனால் நாங்கள் சாகக்கூடாது."

வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட அந்தக் கத்திமுனை நாட்களில், குணா இதை அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பான். அவ்வளவு தெளிவு; அவ்வளவு உறுதி.

"நாங்கள் இங்கேயே நிப்பம்; எவ்வளவு நெருக்கடி வந்தாலும் அசையாமல் போராடுவம் இடைவெளி விடாமல் நாங்கள் போராடிக்கொண்டேயிருப்பம். நாங்கள் சாகச்சாக, எங்கட இடத்திற்கு தலைவர் அடுத்தவர்களை அனுப்பிக் கொண்டிருப்பார். அதனால், நான் சாகலாம், நீ சாகாலாம்; ஆனால், ஒருபோதும் நாங்கள் சாகமாட்டோம்."

தூரத்தில் – சுற்றிவளைப்புக்கு நடுவில் – சயனைட் குப்பியும் கையுமாக நின்று 'வோக்கி'யில் தகவல் சொல்லும் தோழனுக்கும் குணா இதைத்தான் சொன்னான். சொன்னதைப்போலவேதான் வாழ்ந்தான்; போராடினான் ஒவ்வொரு புலிவீரனுக்கும் தியாகத்தை ஊட்டி, குணா இந்தியப் படைக்கெதிரான போரை நடாத்தினான்.

இழப்பக்களால் உடைந்து போகும் மானிடப் பொது விதிக்கு மாறாக, இழப்புக்களிலிருந்து உரம்பெறும் பிரபாகரனின் புது விதிக்கு, குணாவும் இலக்கணமானான்.

தளம்பியவர்களுக்கு உறுதியூட்டினான் குழம்பியவர்களுக்கு தெளிவூட்டினான் தளர்ந்து நின்றவர்களுக்கு நம்பிக்கையூட்டினான்; ஒவ்வொரு புலிவீரனுக்கும் வீரத்தையூட்டி – குணா இந்தியப் படைக்கெதிரான போரை நடாத்தினான்.

"இந்தியர்களுக்கு அடிக்கவேண்டும்; ஓயவிடாமல் அவர்களை தாக்கிக்கொண்டேயிருக்க வேண்டும் எங்கள் தாயகத்தின் நெஞ்சில் குருதி வழியச் செய்தவர்களின் மேனியில் சன்னங்கள் துளையிட வேண்டும். ஒவ்வொரு நாளும் எங்கோ ஓர் இடத்தில், ஏதோ ஒருவகையில் அவர்கள் சேதப்பட்டுக்கொண்டேயிருக்க வேண்டும். எங்கள் சொந்த விடயங்களில் தலையிட்டவர்கள் திரும்பி ஓடு மட்டும் அடித்துக் கொண்டேயிருக்க வேண்டும்." ஒவ்வொரு புலிவீரனுக்கும் வேட்கையை ஊட்டி – குணா இந்தியப் படைக்கெதிரான போரை நடாத்தினான்.

சாவகச்சேரி நகரில் துரோகக் கும்பலின் பயிற்சி முகாமை வேவுபார்க்க அனுப்பிய நடேசுவையும், பாபுவையும் நுணாவிலுக்கு அருகில் அவர்கள் பதுங்கித் தாக்கி வீழ்த்திவிட்ட ஒரு துயர நாள்.

பொறுக்கமுடியவில்லை அந்த வீரனால்! அடிக்கு அடி கொடுக்கும் வெறிகொண்டான் வேங்கை; பழிக்குப் பழியெடுக்கும் சினம்கொண்டு தேடினான். உயிர் துடித்தது! உடல் கொதித்தது! அடிபட்ட புலியாகி குணா அடி கொடுக்க அலைந்தான். செத்துப்

www.sangathamil.ca




போனவர்கள் பற்றி எரியுமுன்னர் ஐந்து துரோகிகளையாவது கொன்று, ஆயுதங்களையும் எடுக்க வேண்டும் தாக்குதலணியையும் இழுத்துக் கொண்டு, சாவகச்சேரியெங்கும் குணா அவர்களைத் தேடி அலைந்தான். துயரம்! ஆவேசம்! ஆத்திரம்! 'எம் 16' இன் 'பிஸ்ரர் கிறிப்'பில் பற்றியிருந்த கைகள் துறுதுறுத்துக்கொண்டிருந்தன.

'வேல்சினிமா' முகாமிலிருந்த ஈ. பி. ஆர். எல். எவ். காரர்களுக்கு சேதி போனது. "எங்களுக்கு அடிக்க குணா தேடிக் கொண்டு திரியிறானாமடா…!" இறுமாந்து வெளிக்கிட்டது ஒரு கூட்டம். தெருவில் போன வந்தோரையெல்லாம் பிடித்தடித்து, "நாங்கள் நிக்கிறமெண்டு குணாவிட்ட சொல்லுங்கோடா" என்று அட்டகாசம் செய்தது. சொல்லிச் சொல்லி அடித்து அனுப்பிக் கொண்டு கூட்டம் வந்துகொண்டிருந்தபோது –

பெருங்குளம் சந்தியில் வைத்து விழுந்தது நெருப்படி! ஓடஓடக் கலைத்துக் கலைத்துக் குடுத்தனர் புலிகள். 2 மைல் தூரம்! 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' யென்று தலைதெறிக்க ஓடியது வந்த கும்பல். முகாமின் வாசல்வரை துரத்தித் துரத்தி அடித்து ஐந்து பேரைக் கொன்று ஆயுதங்களை எடுத்து வந்து, நடேசுவுக்கும் பாபுவுக்கும் பக்கத்தில் அடுக்கி வைத்து அஞ்சலி செய்த பின்னர்தான் – வீரர்களை அடக்கம் செய்ய குணா அனுமதி தந்தான்; அமைதியானான்.

நுணாவிலிலிருந்து கனகம்புளியடிக்கு ரோந்து போன ஒரு பெரிய படையணியை வழிமறித்து – திருப்பி அடித்துக் கலைத்த ஒரு நீளச் சண்டை புத்தூர்ச் சந்தியிலிருந்து வேம்பிராய்க்கு நகர்ந்த இன்னொரு பெரிய படையணியை இடைமறித்துத் துரத்தி அடித்து, பலத்த உயிர் – பொருட் சேதத்தை உண்டாக்கி முகாம் வாசல்வரை கலைத்த இன்னொரு நீளச்சண்டை போன வந்தோரையெல்லாம் பிடித்து அடித்துக்கொண்டு மட்டுவிலிலிருந்து நுணாவிலுக்கு ரோந்துபோன ஒரு படையணியை எதிர்த்துத் தாக்கி, ஆயுதங்கள் எடுத்து மீண்ட ஒரு சண்டை சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம்போன படைவண்டித் தொடர்மீது 9ஆம் கட்டையில் வைத்து அடித்து, 9 பேரைக் கொன்ற தாக்குதல்… அவன் செய்தவை கொஞ்சமல்ல.

ஆனாலும் குணா பாவம். ஏனென்றால், அவன் செய்து முடித்த சண்டைகளைவிட, செய்ய முனைந்தும் முடியாமல்போன சண்டைகள்தான் நிறைய. அது ஒரு பெரிய பாதிப்பாக, கடைசி வரைக்கும் அவனுக்குள் இருந்துகொண்டு தானிருந்தது.

சண்டை பிடிக்க வேண்டும்; ஆயுதங்கள் எடுக்க வேண்டும்; ஆயுதங்களை எடுப்பதற்காக சண்டை பிடிக்க வேண்டும். அது ஒரு ஆறாத வெறி; தீராத தாகம்.

எத்தனையோ இடங்களில் வேவு பார்த்தான்; எத்தனையோ தடவைகள் ஏற்பாடுகள் செய்தான்; எத்தனையோ இடர்பாடுகளுக்குள் தாக்குதல் அணிகளை நகர்த்தினான்; எத்தனையோ இலக்குகளை நோக்கி வியூகம் அமைத்தான்.

அவனது துரதிர்ஷ்டம். ஏதோ ஒரு 'இடையூறு', 'இடையூறாய்', இடையூறாய்' வந்து 'இடையூறை' ஏற்படுத்திவிட, அவனது கனவுகளெல்லாம் கனவுகளாகவே போய்விட்டன.

கட்டைக்காடு திடீர் அதிரடித் தாக்குதலைத் தவிர, பெரிய சண்

# "நான் சாகலாம்; நீ சாகலாம்; ஆனால் – நாங்கள் சாகக்கூடாது"

டைகளை நடாத்தும் வாய்ப்பு எதுவும் அந்த வீரனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் தனக்குக் கிடைத்த ஒரு கிடைத்தற்கரிய வாய்ப்பாகத்தான், அவன் பூநகரியைக் கருதினான்.

குணா பூநகரிக்குப் புறப்படும்போது தனது எண்ணங்களையெல்லாம் ஈடேற்றும் ஆசையைச் சுமந்து கொண்டல்லவா போனான்! மாதக்கணக்கில் பயிற்சி எடுத்து, அல்லும் பகலும் பட்ட கஸ்டங்களின் விளைச்சலைத் தேடி, மகிழ்ச்சியோடல்லவா அவன் புறப்பட்டான். மேனி சிலிர்த்து, உயிரிறுகி நின்று, கைகளைப் பற்றி – "குணா சாதிக்கப்போறானடா மச்சான்" என்றல்லவா சொல்லிவிட்டுச் சென்றான். திரும்பி வருவானென நாங்கள் பார்த்திருந்தோமே… வெற்றிபெற்றென் மைந்தன் ராஜ நடைபயின்று வருவானென, தென்மராட்சி மண் காத்திருந்ததே…!

ஆனால் குணா!… எங்கள் உயிர் நண்பனே… ஒரு ரவை கூடச்சுட முடியாமல் நீ வீழ்ந்து போனாயாமேயய்யா! அந்தச் சேதி வந்தெங்கள் செவிகளில் மோதி முழங்கிய போது, எப்படியய்யா நாங்கள் தாங்குவோம்? ஆயுதங்களோடு மீண்டு வந்து தென்மராட்சிக்குப் பெருமை சேர்ப்பேன் என்றவனே…! ஆளே வராமல் விட்டுவிட்டாயேடா குணா!

இந்தியப் போர்க் காலத்தில், உனது பொறுப்பிலிருந்த ஆயுதங்கள் ஒவ்வொன்று ஒவ்வொன்றாய் போனபோது நீ பட்ட வேதனை. எம் ஆயுதங்களை இந்தியர்கள் கைப்பற்றிய போது நீ துடித்த துடிப்பு, அவற்றை நினைத்து நினைத்து இருப்புக் கொள்ள முடியாமல் நீ பட்ட அவஸ்தை. நாங்கள் சிரித்துக் கதைக்கிறபோது எம்மோடு சேராமல் ஒதுங்கிப் போயிருந்து அதைப்பற்றியே யோசித்துக்கொண்டிருக்கின்ற உன் மன நிலை… அதையெல்லாம் அவ்வளவு கெதியாக நாங்கள் மறந்து விடுவோமா குணா?

உனது மனதறிந்த தலைவர் உன்னை மணலாற்றுக்குக் கூப்பிட்டதும், ஆறுதல் வார்த்தைகளால் உன்னை அமைதிப் படுத்தியதும், தளர்ந்து போய்விடாமல் உற்சாகம் ஊட்டியதும், "பறிகொடுத்ததில் துவண்டு போகாமல் பறித்தெடு குணா" உன்று ஊக்கப்படுத்தியதும், தோள்களில் தட்டி அவர் வழியனுப்பி வைத்துவிட மகிழ்ச்சியோடு நீ திரும்பி வந்ததும், அந்த வேட்கையோடேயே நீ நேற்றுவரை அலைந்ததும்… எங்களுக்குத் தெரியாதவையாடா குணா?

இப்போது ஆயுதங்களை அள்ளி வந்து குவித்துவிட்டு பார்த்து



மகிழ்கின்றோமேயய்யா… எங்களோடு மகிழ நீ ஏனடா வராமல் போனாய்?

குணா! எங்கள் செல்வமே! கண்திறந்து பாரனடா… உந்தன் மீது விழுந்து விழுந்து கதறி அழுகின்றார்கள் நீ நேசித்த மக்கள். அவர்களால் நம்ப முடியவில்லை; அவர்களால் தாங்க முடியவில்லை; ஏதேதோ எல்லாம் சொல்லிக் கதறுகிறார்கள். எங்களது பிள்ளையா வீழ்ந்து போனான்…? அவர்கள் கதறுகிறார்களடா… இலக்கு வைத்து இந்தியர்கள் உன்னை வளைத்த போது, பொக்கிளிப்பானில் நீ சுருண்டு கிடக்கையில் தங்கள் இறகுகளுக்குள் வைத்துப் பாதுகாத்த அதே மக்கள்… உனக்காக ஆமி பார்த்த கண்களைப் பாரடா, உனக்காகச் சோறூட்டிய கைகளைப் பாரடா, உனக்காக அடிவாங்கிய உள்ளங்களைப் பாரடா… "எமது மக்களே எமது பலம்" என்றவனே! எங்கள் உயிரினிய நண்பனே குணா…! எங்களுக்குள் ஒருவனாய்; தளபதியாய்; சகதோழனாய் எங்களோடு நீ வாழ்ந்த நினைவுகளில் மூழ்கி உள்ளம் நொருங்கிப்போனதய்யா…! இந்தியர்

காலத்தில் – உனது வெல்வாக்கால, உனது நற்பெயரால், உனது திறமையால் எத்தனை தடவைகள் நாங்கள் தப்பி மீண்டோம். நீதானேயய்யா எங்களைப் பாதுகாத்தாய்… எங்களை விட்டுப் போயி விட்டாயா குணா?

நினைவிலழியாத அந்த யுத்த நாட்கள்!

தமிழ்ச்செல்வனுக்குப் பக்கத்துணையாக நின்று குணா, இந்தியாவுக்கு எதிரான போரை நடாத்திக்கொண்டேயிருந்தான் இந்தியர்கள் குணாவைக் குறிவைத்து படையை நகர்த்திக் கொண்டேயிருந்தார்கள்.

அவன் அவர்களுக்குப் பெரிய தலையிடி; இந்தியப் படையாட்களின் தூக்கத்தை கலைக்கும் பயங்கரக் கனவுகளில் பேயுருவில் அவன் வருவான். நிம்மதி கெட்டது; அவன் அவர்களுக்குப் பெரியதொரு பிரச்சினையாகினான் அவர்களால் சமாளிக்கவே முடியவில்லை.

நவீன சந்தை மாடியிலேறி காவலரணுக்குக் குண்டடித்து விட்டு இறங்கி ஓடிய சிறுவனைத் துரத்திப்பிடித்து அடித்து நொருக்க – “எறியச் சொல்லி குணா அண்ணை தந்தவர்”

நள்ளிரவில் மறைந்து, ஊர்ந்து, முகாமிற்கு முன்னால் சுவரில் போஸ்டர் ஒட்டுபவனைக் கண்டு, பதுங்கிச் சென்று பாய்ந்து பிடித்து அடித்து விசாரிக்க – “ஒட்டச் சொல்லி குணா அண்ணை தந்தவர்.”

காவலரணுக்கு முன்வீதியால் கனதரம் போய் வந்தவரை சாதுவாகச் சந்தேகப்பட்டு, பிடித்துக்கொண்டு போய் அடித்து முறித்த போது – “பார்த்து வரச்சொல்லி குணா அனுப்பிவிட்டது.”

தாக்கிவிட்டுப் புலிகள் தப்பிப்போய்விட்ட அடுத்த நிமிடத்தில் ஊரையே வளைச்சு எல்லோரையும் பிடித்து செம்மையாகச் சாத்துகிற போது – “குணாதான் முன்னுக்கு நிண்டு சுட்டது.”

குணா நிற்பதாய் சேதி கிடைத்து, ஆயிரமெனப் படையை நகர்த்தி, சந்துபொந்தெல்லாம் சல்லடை போட்டு, ஊரையே திரட்டிப் பள்ளியில் குவித்து, அவன் இல்லை எங்கும் என்று நிம்மதியாய் மூச்சுவிட்டுத் தகவல் சாதனத்தை முடுக்க, புலிகளின் அலைவரிசையில் – “பரணி பரணி – குணா… இப்பதான் புட்டும் கோழிக்கறியும் முடிச்சிட்டு இருக்கிறம்;நல்ல பிடி.”

மக்களுக்குள் அவன்; கடலில் வாழும் மீன்.

இந்தியர்கள் எதைச் செய்தும், குணாவை எதுவும் செய்ய முடியவில்லை.

அந்தப் பற்றைக்காடுகள், குச்சொழுங்கைகள், குடிசனங்கள், எங்கள் ஆட்காட்டி குருவிகளும், அன்புக்கினிய நாய்களும் கூட… கண்ணுக்கு இமையாகி அவனை காத்தன.

கூரைக்குள் தூங்கவிட்டுக் காவலிருப்பார் கிழவர். 3 மணிக்கே எழுந்து புட்டுக்கு மா குழைப்பாள் ஆச்சி. பருப்பு ஊறவிட்டு வெங்காயம் மிளகாய் வெட்டத் துவங்குவாள் அக்கா. தேநீருக்கு தண்ணீர் வைப்பாள் தங்கை. 4 மணிக்கு பெரியவர் மனமில்லாமல் தட்டியெழுப்ப – முகம் கழுவி, தேநீர் பருகி, சாப்பிட்டு இருளோடு இருளாக இருளுக்குள்ளேயே அலுவல் முடித்து, மூத்தவன் பின்னால் பார்க்க, இளையவன் பின்னால் பார்க்க – பக்கத்து வேலியால் ‘பிள்ளைகளை’ அனுப்பிவைக்கும் போது, அடுத்த சந்தியில் நாய்கள் அகோரமாகக் குரைக்கத் துவங்கும். அந்த இந்திய மணம் மெல்ல மெல்ல காற்றைக் களங்கப்படுத்தும். ஊர் உறையும். நெஞ்சு விறைக்க கதவுகளைப் பூட்டிக்கொண்டு வீட்டார் முடங்குவார்கள். வீதிப் படலையை இந்தியச் சப்பாத்து உதைத்து திறக்கும் சத்தம் கேட்கும்…!

குணாவுக்குச் சோறு ஊட்டியவர்கள். குணாவுக்கு மருந்து கொடுத்தவர்கள். குணாவுக்கு படுக்கை போட்டவர்கள், குணாவுக்கு படுக்கை போட்டவர்கள், குணாவுக்குப் பாதை பார்த்தவர்கள், குணாவுக்குக் காவல் இருந்தவர்கள்… தேடித் தேடித் பிடித்துச் சென்று, இந்தியன் அடித்து நொருங்கிக் கந்தல் துணியாக்கி, “அடுத்த தடவை சூடுதான்” என்று வீட்டுவாசலில் போய்விட்டுப் போகவும் –

அன்றிரவு ஆடடித்துக் கறியாக்கி, அவனுக்குக் காவிக்கொண்டு போனார்கள் அவனுடைய மக்கள்.

கல்வயலில் கலைத்துக் கொண்டு வந்த இந்தியர்களுக்குத் தப்ப இவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். நாலுபக்க வீதிகளாலும் எதிரி வளைத்துக் கொண்டிருந்தான். அந்த வீடுதான் வசதிப்பட்டது. வழமையாகப் படுக்கவைக்கப்பட்டிருக்கும் பாட்டி முற்றத்தில் – கட்டிலில் கிடந்தாள். உடலியக்கம் நின்று போன ஆச்சி வானத்தைப் பார்த்தபடியேதான் எப்போதும் கிடப்பாள் அசைவற்றவள். கிழவி கண்டுவிட்டால் சிக்கல் என்று வேலிக்கரையோடு மெல்ல ஊர்ந்து, யாருக்கும் தெரியாமல் வீட்டுக்குள் புகுந்து, அங்கொரு மூலைக்குள் பதுங்கிவிட – மொய்த்துக் கொண்டு நுழைந்தார்கள் இந்தியர்கள். கிழவியை அவர்கள் மிரட்டுவதும், ஏதோ பதில்கள் அவள் சொல்வதும், திரும்பவும் அவர்கள் உறுக்குவதும், பிறகும் அவளேதோ கூறுவதும் கேட்டது. ‘நல்லகாலம்… கிழவி காணேல்ல. அது கண்டிருந்து தெண்டால் இண்டைக்கு நாசமறுப்பத்தான்’ மணித்தியாலங்கள் போயின. வெளியில் எட்டிப் பார்ப்பதும் சிக்கல். இவர்கள் யோசித்துக்கொண்டிருக்க, முற்றத்தில் படுத்திருந்தபடியே கிழவிதான் சொன்னாள் – “தம்பியவை வெளியில வாருங்கோடா, ஆமி போயிட்டான் போல கிடக்கு.”

இரவுபோய்ப் படுத்த மீசாலை வீட்டில் விடிந்துவிட்டது. அறைக்குள் நான்கு பேர். கிணற்றடியில் இரண்டுபோர். காட்டிக்கொடுத்தவன், வீட்டுக்குள்ளேயே இந்தியர்களைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டான். எட்டித்தொடும் தூரத்தில் எதிரிகள் துவக்கெடுத்துச் சுடமுடியாத அண்மை மயிர்கூச்செறியும் கணப்பொழுதுகள். குப்பிகள் வாய்களிற்குள் செருக, “அடித்து விழுத்திக் கொண்டு பாயுங்கோடா!” – கத்தினான் குணா. திகைத்த இந்தியர்கள் மலைத்து நிற்க, நடுவீட்டுக்குள்ளேயே கைச்சண்டை. மோட்டரைத் தூக்கி கூர்க்காவுக்கு அடித்த அம்மா என்ற வீரனுக்கு கை கழன்று போக, இந்தியன் எஸ். எல். ஆரினால் அடித்து இன்னொருவனுக்கு மண்டை உடைந்து போக, கட்டிக் குளித்த சாறம் முள்ளுக் கம்பியில் கிழிந்து அடுத்தவன் ‘ஒன்றுமே இல்லாமல்’ ஓட, ஒரு வழியாக எல்லாரையும் சேர்த்துக் கொண்டு வந்து சேர்ந்தான் குணா. வீட்டாரைப் பிடித்து அள்ளி முகாமிற்குக் கொண்டு போய்விட்டார்கள் இந்தியர்கள்.



“எமது மக்களே எமது பலம்” என்றான் அவன் “எமது குணாதான் எமக்குக் காவல்” என்கிறார்கள் அவர்கள்.

விடுதலைப் புலிகளின் ராஜதந்திரக் காய் நகர்த்தல் இந்தியப் படையை இங்கிருந்து நகர்த்த – வெடி முழக்கங்களோடு தொடங் கியது சிறீலங்காவுக்கு எதிரான இரண்டாவது போர்.

தென்மராட்சிக் கோட்ட சிறப்புத் தளபதியாக இப்போது அவன்.

இந்தியர் காலத்தில் – நாவற்குழியிலிருந்து இயக்கச்சி வரை ஒவ்வொரு குறுந்தெருவினூடும் மக்களிடம் அவன் நடந்தான் பின்பு எங்களின் காலத்தில் – அதே சந்துபொந்துகளெங்கும், அதே மக்களைத் தேடி அவனது ‘பஜரோ’ சில்லுகள் உருண்டன. அன்றுவரை அவனைப் பாதுகாத்த மக்களை, அன்றிலிருந்து அவன் பாதுகாத்தான்.

போர்முனைகளில் இராணுவ வியூகங்களை நெறிப்படுத்திய அந்தத் தளபதி, ஊர்மனைகளில் அபிவிருத்தித் திட்டங்களை ஒழுங்குபடுத்தினான்.

வறிய சனங்களுக்கு வேலைவாய்ப்புக்கள், இடம் பெயர்ந்தவர்களுக்கு குடியிருப்புக்கள், வேலையிழந்தவர்களுக்கு தொழிற்சாலைகள் – பண்ணைகள், பாலர் பாடசாலைகள், சமூக மேம்பாட்டு வேலைப்பாடுகள் பாரபட்சம் பாராமல் – ஏற்றத்தாழ்வு காட்டமால் – அந்தச் சமூகத்தினை உயர்த்த அவன் எல்லாவகையிலும் உழைத்தான்.

அனைத்து இடங்களிலும் அவனுக்குத் துணைநின்ற மக்களுக்காக, அனைத்து வகையிலும் அவன் பாடுபட்டான்.

1991 ஆம் ஆண்டு, சர்வதேசப் பிரசித்தி பெற்ற இரு பெரும் போர்கள் உலகத்தைக் கவர்ந்தன. ஒன்று, 27 நாடுகளைக் கூட்டுச்சேர்த்துக் கொண்டு அமெரிக்கா, தனித்து நின்ற ஈ·ராக்கிற்கு அடித்த ‘பாலைவனப்புயல்’; அடுத்தது முப்படைகளும் சேர்ந்து திரண்டு வந்து தாக்கியபோது, புலிகள் தனித்து நின்று எதிர்த்து மோதிய ஆனையிறவுச் சமர்.

தமிழீழம் எந்தக்காலத்திலும் சொல்லிப் பெருமைப்பட முடியும்.

அரவாரமான ஏற்பாடுகள். தூக்கமற்றுப் போனான் குணா.

போராளிகளுக்கு சிறிது ஆறுதல் கிடைத்த போதும் – தளபதிகளுக்கு ஓய்வே இல்லை.

அந்தப் பெருந் தளத்தை முற்றுகையிட்டு – இறுக்கி – அதன் முகாம்களைப் படிப்படியாகத் தாக்கி அழிக்கும் மூலத் திட்டம்.

ஆரம்பித்த நான்காம் நாளே வெற்றிலைக்கேணித் தரையிறக்கத்துடன் சமர் இருவேறு பரிமாணங்களைப் பெற்றது.

ஆனையிறவில் தாக்குதற் போர்முறை வெற்றிலைக்கேணியில் தற்காப்புப் போர்முறை.

இருமுனைகளில் சமர்; நிறுத்தமற்ற தொடர் சண்டைகள்.

சமராடிக் காயப்பட்டுப் போனவர்கள். காயம் மாற்றித் திரும்பவும் களத்திற்கு வர வேண்டியிருந்த போர் அரங்கு.

1991 யூலை 27 ஆம் நாள்.

தடை முகாம் பகுதி மீதான இரண்டாவது தாக்குதல் தொடுக் கப்பட்ட ஒரு நள்ளிரவு. குணாவின் கட்டளையின் கீழ் அந்த முயற்சி எடுக்கப்பட்டபோது, சூழ்ந்து நகர்ந்த தாக்குதல் அணிக ளுக்குத் துணையாய் பிரதான வீதியால் முன்னேறிய எங்கள் கவசவாகனத்தின் தொடர்பு அறுந்துவிட, அதிலிருந்த சராவிட மிருந்து பதிலில்லை; அருகிலிருந்த சொனியிடமிருந்து தொடர் பில்லை; கூடப்போன குகதாசும் கதைக்கவில்லை... என்ன நடந்தது...? குணா குழம்பிப்போனான். தன்னிலை மறந்த அந் தத் தளபதி 'ரி56'உம் கையுமாக களத்திற்குள் இறங்கினான். சண்டை வீரர்களோடு தானுமொரு வீரனாக - பொறி கக்கும் துப்பாக்கியுடன் பிரதான வீதி ஓரமாக - அவன் கவச வண்டியை நொருக்கவென எதிரி ஏவிய 'கனன்' பீரங்கிக் குண்டு வெடித்துச் சிதற, சிதறிய குண்டின் ஒரு சிறு துண்டு குணாவின் மூக்கில் துளைத்து உள்ளே போனது. பக்கத்திலிருந்தவர்கள் பலவந் தமாய் இழுத்த போதும் வரமறுத்து - மூக்காலும் வாயாலும் இரத்தம் ஓட ஓடச் சண்டையிட்டு சோர்ந்து... துவண்டு... செயலிழந்து வீழ்ந்தவனை, அதன் பின்னர்தான் தோழர்கள் தூக்கி எடுத்து பின்னால் கொண்டுவந்தார்கள்.

மருத்துவமனைக்குப் போக மறுத்துவிட்டு ஆனையிறவிலேயே கிடந்தான்.

அருகினில் குண்டு வீழ்ந்து வெடிக்கும் அதிர்ச்சிக்கெல்லாம், குருதி பெருக்கெடுத்து ஓடிக்கிடந்த போதும் களத்திலிருந்து செல்ல மறுத்துக் கொண்டிருந்தவனை - பொட்டம்மான் கடுமை யாக உத்தரவிட்டு 'அம்புலன்சில்' வற்புறுத்தி ஏற்றி அனுப்பி வைத்தார்.

1992, மார்ச் 5 ஆம் நாள்.

கறுக்காய்வெட்டைப் பகுதியில் ஆமி வெளிக்கிட்ட ஒரு உற்சாக மான காலைப்பொழுது; காவலரணிலிருந்த வீரர்கள் எதிர் கொள்கிறார்கள். பெருந்தொகையான படையினர் போர்க் கலங் களின் அகோரமான தாக்குதல்; களத்தில் நின்ற எம் வீரர்கள் கடும் எதிர்ப்பைச் சந்தித்தனர்.

தனது சிறு குழுவுடன் ஏதோ அலுவலாக எங்கோ போய்க்கொண்டிருந்த குணாவுக்கு 'வோக்கி' சேதியைச் சொல்ல, விரைந்த 'பஜரோ' ஆனையிறவுக்குத் திசைமாறியது.

இப்படி நடக்குமென்று எதிரி எதிர்பார்த்திருக்கவே மாட்டான். முன்னேறியவர்களை முற்றுகையிட்டு ஒரு பாய்ச்சல். குறுகிய நேரத்தில் மூர்க்கத்தனமான அதிரடி. 20 பேர்வரையில் கொல் லப்பட்ட, வீழ்ந்தவர்களையும் ஆயுதங்களையும் போட்டுவிட்டு, அவர்தம் தோழர்கள் தப்பினோம் பிழைத்தோம் என மண் கிண்டினார்கள்.

1992, மே 28 ஆம் நாள்.

'பலவேகய - 2'

எதிரி கட்டைக்காட்டிலிருந்து ஆனையிறவுக்குப் படையெடுத் தான்.

ஆனையிறவும் மூடி, பூநகரியும் மூடிப்போக, கொம்படியே தஞ்சமென்று மக்கள் போய்வந்துகொண்டிருக்க - பாதைக்கு குறுக்கே பகைவன் போட்ட 'படைவேலி'.

குடாநாட்டு முற்றுகைக்காய் அவன் செய்த முதற்கட்ட அசைவு.

நாட்கணக்கான சமர்; தொடர் சண்டை; களத்தின் முன் முனையை வழிநடாத்தியபடி குணா.

குலையக் குலைய குழுக்களை ஒழுங்குபடுத்தி, எதிரி நகர நகர புதிதாய் அரண்கள் அமைத்து, துப்பாக்கிக்கு துப்பாக்கி நிலை யிடம் காட்டி, டார்சினின் ஆர்.பி.ஜி. 'டாங்கி'யை நொருக்க பக்கத் தில் வைத்து இலக்குக் காட்டி கடைசிவரைக்கும் - களத்தில் நின்றவன்... பீரங்கிக் குண்டுக்கு உடல் பிய்ந்து வீழ்ந்தான்.

பதறப்படாமல்... நிதானமாக... 'வோக்கி' யில் ரூபனை அழைத்து... அருகில் வரச்சொல்லி... 'எம் 16' ஐக் கொடுத்தவன் - மருத்துவமனையில்தான் கண் திறந்தான்.

1992 கார்த்திகை 24 அம் நாள்.

பலாலிப் பெருந்தளத்தின் கிழக்குப் பாதுகாப்பு வியூகம் உடைத் தெறியப்பட்ட புகழ்பூத்த தாக்குதல்.

"குறுகிய நேரத்திற்குள் நடந்து முடிந்த கொடிய யுத்தம்" என சிங் களப் படைத்துறைப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க வர்ணித்த போர் அரங்கு.



முன்னணிச் சண்டைக் குழுக்களுக்குள் குணா சேர்க்கப் படவில்லை.

நீண்ட தாக்குதல் வலையத்தில் மகளிர் படையணிக்கு ஒதுக்கப் பட்ட ஒரு பகுதியில், பின் கள வேலைகளே அவனிடம் கொடுக் கப்பட்டிருந்தன.

தாக்குதல் ஆரம்பித்த சொற்ப நேரத்தில், எதிரியின் அரண்களை வீழ்த்தி உள்ளே நுழைந்த பெண் போராளிகள் முன்னேறிக் கொண்டிருந்த வேளை -

அவர்களைப் பின்பக்கத்தால் வளைத்துக் கொண்டான் பகைவன்.

சுற்றிவர எதிரி; நடுவுக்குள் எம்மவர்கள் - அவர்கள் வசமாகச் சிக்கிக்கொண்டிருந்தார்கள்.

நிலைமை மோசமாகிவிட்டதைக் குணா கண்டான்; சூழ்நிலை பிசகி விட்டதை உணர்ந்தான்; அது - தானே முடிவெடுக்க வேண்டிய தருணம் என்பதை விளக்கினான்.

உடனடியாகத் தனது குழுவைத் தயார்படுத்திச் சண்டைக்குள் இறங்கினான் குணா. ஆவேசப்பாய்ச்சல் அசாதாரண வேகம் வளைத்து நின்ற எதிரியைத் தகர்த்தெறிந்து நுழைந்தது புலிக ளின் சேனை.

கைப்பற்றிய ஆயுதங்களை, களமாடிய துப்பாக்கிகளை, காயப் பட்டு வீழ்ந்தவர்களை, களப்பலியானவர்களை... எல்லாரை யுமே, எல்லாவற்றையுமே இழுத்து இழுத்துக் கொண்டு வந்து வெளியில் போட்டது அவன்தான்.

1993 செப்ரெம்பர் 29ஆம் நாள்.

குணாவும், அவனது தென்மராட்சிப் படையணியும் - பூநகரிக்குள் பாய பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த போது, பகைவன் - கிளாலியைப் பிடிக்க முன்னேறினான். நோக்கம் பெரியது என்பதால் பயிற்சி பிற்போட முடியாததாகவும் - முக்கிய மானதாகவும் இருந்தது. 'யாழ்தேவி'யை புலோப்பளையில் தடம் புரட்டிய புகழ்பெற்ற தாக்குதலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட படையணிகளுக்குள், அவனது படை செர்க்கப்படவில்லை.

"எனது பிரதேசத்தில் எதிரி படையெடுக்கிறான்; நாம் போக முடியாதுள்ளது." குணாவால் தாங்க முடியவில்லை... இருப்புக் கொள்ளாமல் தவித்தான்... அந்தரப்பட்டான்; சாப்பாட்டை மறந் தான். தூக்கமில்லாமல் எழுந்து திரிந்ததை நாங்கள் பார்த் தோம். அந்தச் சமரில் களமாட முடியவில்லையே என்று உண் மையிலேயே வேதனைப்பட்டான். எந்த நேரமும் 'வோக்கி'யை எடுத்து நிலைமையைக் கேட்டுக்கொண்டேயிருந்தான். அந்த இரண்டு நாட்களும் அவன் துடித்த துடிப்பு இருக்கிறதே...! அதை வெளியாட்களால் புரிந்து கொள்ள முடியாது.

1993 கார்த்திகை 10ஆம் நாள்.

'ஒப்பறேசன் தவளை'




மனித சாதனைகள் பதிவு ஏட்டில் - பொன் எழுத்துக்களால் பொறித்து வைக்கப்படவேண்டிய ஒரு மகத்தான போர்ச் சாதனை.

அனைத்துலக படைத்துறை வரலாற்றில் புலிகள் இயக்கம் படைத்த இன்னொரு இராணுவ விந்தை.

படையியலின் பலத்தை வைத்து அரசியலில் பேரம்பேச முனை வோருக்கு, புலிகள் விடுத்த பூகம்ப எச்சரிக்கை.

போர்முறையானது இருவகைப்படுகின்றது. ஒன்று, 'மரபுவழி யுத்த முறை'; அடுத்தது, 'கெரில்லா ( கரந்தடி ) யுத்த முறை'. சர்வ தேசப்புகழ் பெற்ற கெரில்லாப் போர் முறையில், பிரபாகரன் உலகிற்கு அறிமுகப்படுத்திய நுட்பமான ஒரு புதுவடிவப் படை நகர்த்தல் பூநகரி வெற்றியின் தந்திரோபாயம்.

சுற்றுவேலியில் பகைவன் பார்த்துக் கொண்டு காவலிருக்க, புலிகள் நடுவீட்டில் தீ மூட்டிய அதிசயம் நிதழ்ந்தது.

பயிற்சி! இடையறாப் பயிற்சி! தொடர் பயிற்சி! நீண்ட கடும் பயிற்சி! - விடுதலைப்புலிகளின் படைவீரர்கள், ஒரு மாபெரும் வெற் றியை ஈட்டிவரத் தங்களையே வருத்தினார்கள் உருக் கினார்கள்.

அந்த நாள் வந்தது -

"நீங்கள் ஒவ்வொருவருமே என்னுடைய பிள்ளைகள்! எனது ஒரு பிள்ளையைக்கூட நான் அநாவசியமாக இழக்கத் தயாராக இல்லை! அதனால் - அசுர வேகத்தில் முன்னேறி - நீங்கள் வீழ்த்தப்பட முன்னர் எதிரிகளை வீழ்த்தி - வெற்றிக்கனியைத் தட்டிப்பறியுங்கள்!"

போரிடும் படைகளின் தளகர்த்தராய் நின்று, தேசியத் தலைவர் வழியனுப்பினார்.

குணாவின் கையில் மின்னியது ஒரு வெள்ளிச் சங்கிலி. அது இரவு நகர்வுக்கு பொருத்தமில்லாதது; எதிரிக்கு இனங்காட்டி விடக்கூடியது. அருகில் வந்த தளபதி சொர்ணம், "உந்த மணிக்கூட்டைக் கழற்றித்தந்துவிட்டுப் போவன் குணா" என்ற போது -

திடீரென என்னவோபோல ஆகினான்; முகம் வாடியது; உண் மையிலேயே கண்கள் கலங்கின் தளபதி புரியாமல் விழித்தார். குணா சொன்னான், "இதை நான் ஒரு நாளுமே என்ர கையில யிருந்து கழற்றுறேலையண்ணை - தலைவர் தந்தது..." சொல்லி விட்டுக் குனிந்து மணிக்கூட்டைப் பார்த்தான்; கழட்டிக் கோல்சருக்குள் வைத்தான்.

ஒளியற்ற இருள்...! நிலவற்ற வானம்...! கார்முகில் பன்னீர் தெளித்து வாழ்த்தியது.

உறங்கிக்கொண்டிருந்த தேசத்தை நாளை உவகையோடு துயிலெழுப்ப, மரணம் விளையாடும் களத்தை நோக்கி நகரத் தொடங்கினர் புலிகள் -

சண்டைக் களம் அபூர்வமானது. நினைத்துப் போவது நடக்காமல் போகும் நடந்து விடுவது நினையாததாய் இருக்கும்.

கும்மிருட்டு! தவறவிட்ட பாதையை பின்னர் சரிபடுத்தி வேவு வீரன் இடத்தைக் காட்டினான். குணா ஆணையிட்டான்! முன் னணித் தாக்குதற் குழுக்கள் அரண்களை உடைத்துக் கொண்டு பாய்ந்தன! ஆவேசமான தாக்குதல்! வீழ்த்தப்பட்ட அரண்களின் ஊடு, பிரதான தாக்குதல் அணியோடு குணா முன் னேறினான். எதிர்பாராத விதமாக - தாக்கப்பட்ட அரண்களி லிருந்து பின்வாங்கிய எதிரி, பிரதான அணிக்கு பக்கவாட்டில் வந்து பின்பக்கத்தால் தாக்கினான். மினிமி ஜீ . பி . எம். ஜீ கள் ரவைகள் அள்ளிப் பொழிந்தன. முன்னால்போன குணா, பின்னால் அடிவிழத் திகைத்து, 'என்ரபொடியன்...!' என்று திரும்பி ஓடிவந்து தாக்க முயல...! ஏங்கள் குணா...!

பூநகரி வெற்றியின் முதற் களப்பலியாய் சன்னங்கள் சல்லடை யாக்க வீழ்ந்தான் எம் வீரன்!

ஓ! எங்கள் குணா...! தமிழீழப் போர் வானின் நம்பிக்கை நட்சத்திரமாய் மெல்லென ஒளிர்ந்த படைத்தளபதியே...! ஒவ் வொருவரினதும் உயிரினை ஊடுருவி இதமாக வீசிய குளிர் காற்றே... முற்றுகையில் முன்னின்றாய் - முதற் சாவு நீ கண்டாய்... போய்விட்டாய்!

நாங்கள் நடக்கின்றோம்.

அதே குச்சொழுங்கை... அதே தோட்டவெளி... அதே தென்னந் தோப்பு... அதே வழித்தடம்... சுதந்திரத்தின் சிகரத்தை நோக் கிய எங்கள் நெடும் பயணம்!

நினைவுப்பகிர்வு: தி.இனியவன்

விடுதலைப்புலிகள் இதழ் தை, 1995.




# யாழ். பல்கலைக்கழகத்தில் செஞ்சோலைப் படுகொலையின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஆகத்து 15, 2024

செஞ்சோலை படுகொலையின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.



குறித்த நிகழ்வு இன்று (14) பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கொல்லப்பட்டவர்களின் உருவப்படங்களுக்கு பல்கலைக்கழக மாணவர்களால் சுடரேற்றி, மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.





நினைவேந்தலில் பல்கலைக்கழக மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவு - வள்ளிபுனம், இடைக்கட்டு பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் 2006 ஆம் ஆண்டு தலைமைத்துவ பயிற்சிக்காக சென்றிருந்த மாணவர்கள் மீது சிறிலங்கா விமானப்படை நடத்திய தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் 53 பேர் உட்பட 61 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேசத்தில் வாழும் மக்கள் போராட்டம்!

ஆகத்து 15, 2024

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேசத்தில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒன்றிணைந்த சமூக மட்ட அமைப்பின் ஏற்பாட்டில் பிரதேச பொது மக்கள் இன்று (15) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்றது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், தமிழ் கல்வி அபிவிருத்தி ஒன்றியம், சமூக மட்ட அமைப்புக்கள் கலந்துகொண்டிருந்ததை பார்க்க முடிந்தது.

இந்த மதுபானசாலை ஆயித்தியமலை பகுதியில் திறக்கப்பட விருப்பதாகவும் இது திறக்கப்பட்டால் சமூக கலாசார சீர்கேடுகள், சமூக விரோத செயற்பாடுகள் அப்பகுதியில் இடம்பெறும் எனவும், பாடசாலை மாணவர்கள் பாதிப்புக்குள்ளாவார்கள் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

“மட்டக்களப்பின் அபிவிருத்தி மதுபானசாலையா”, “அழிக்காதே அழிக்காதே கலாசாரத்தை அழிக்காதே”, “வேண்டாம் வேண்டாம் மதுபானசாலை வேண்டாம்” போன்ற கோசங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் அரசாங்க அதிபர், மதுவரித் திணைக்கள அதிகாரி போன்றோருக்கான பிரதியிடப்பட்ட மகஜர் ஒன்று மண்முனை மேற்கு பிரதேச செயலாளரிடம்



கையளிக்கப்பட்டது.

# யாழ். வலி வடக்கில் 34 வருடங்களின் பின் மக்கள் சென்று வழிபட சிறீலங்கா இராணுவத்தினர் அனுமதி!

ஆகத்து 16, 2024

யாழ்ப்பாணம் வலி வடக்கு நகுலேஸ்வரம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஆலயத்திற்கு சுமார் 34 வருடங்களுக்கு பின்னர் மக்கள் சென்று வழிபட இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தினுள், அமைந்துள்ள கிருஸ்ணர் ஆலயத்திற்கு செல்லவே இன்றைய நாள் வெள்ளிக்கிழமை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய நாள் வெள்ளிக்கிழமை முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இவ் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து, அப்பகுதியில் வசித்த மக்கள் இன்றைய நாள் ஆலயத்திற்கு சென்று வழிபட்டு பொங்கல் பொங்கினதுடன், ஆலய சூழலில் சிரமதான பணிகளையும் முன்னெடுத்தனர்.

அப்பகுதிகளில் இருந்து சுமார் 34 வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்த எம்மை மீள எமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்காத நிலையில், நாம் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தான் வாழ்கிறோம்.

எமது ஆலயத்திற்கு வெள்ளிக்கிழமைகளில் வரவே தற்போது அனுமதி வழங்கியுள்ளனர்.

மிகவிரைவில் எம்மை எமது சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், ஆலயத்தை புனரமைத்து, தினமும் வழிபட அனுமதிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.



















# படுகொலை செய்யப்பட்ட இளைஞனுக்கு நீதி கோரி மல்லாவியில் பாரிய ஆர்ப்பாட்டம்!

ஆகத்து 16, 2024

மறுநாள் கனடா செல்ல தயாரான நிலையில் கடந்த 29.07.2024 அன்று காணாமல் போன நிலையில் மல்லாவி வவுனிக்குளம் பகுதியிலிருந்து மறுநாள் சடலமாக மீட்கப்பட்ட மல்லாவி யோகபுரம் பகுதியினை சேர்ந்த ஆனந்தராசன் சஜீவன் என்ற இளைஞனின் மரணத்திற்கு நீதி கோரி மல்லாவி பகுதியில் பொதுமக்கள், பொது அமைப்புக்கள், மற்றும் வர்த்தக சங்கம் என்பன இணைந்து பாரிய அளவிலான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை இன்று காலை மேற்கொண்டிருந்தன.







19 நாட்களாகியும் குறித்த இளைஞனின் படுகொலைக்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை என்பதுடன், பொலிசாரின் விசாரணைகள் மந்தகதியில் நடப்பதாக கூறியும், துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கூறியே பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் இன்று குறித்த போராட்டம் முன்னேடுக்கப்பட்டிருந்தது.

மல்லாவி மத்திய பேரூந்து நிலையத்தில் ஆரம்பமாகிய பேரணி மல்லாவி பொலிஸ் நிலையம் வரை சென்றிருந்தது பின்னர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஒன்று கூடி ,

“சசீவன் மரணத்திற்கு நீதி வேண்டும்”
“கொலையாளிகளை நீதியின் முன் நிறுத்து”
“விசாரணைகளை துரிதப்படுத்தி நீதியை பெற்று தா”
“எமது நண்பனின் மரணத்திற்கு நீதி வேண்டும்”
“வஞ்சகரின் சூழ்ச்சிக்கு முடிவில்லையா”
“எமது பிள்ளைக்கு நீதி வேண்டும் ”

போன்ற எதிர்ப்பு சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தவர்கள் கோஷமிட்டனர்.

இதேவேளை குறித்த போராட்த்திற்கு ஆதரவாக இன்றைய நாள் மல்லாவி பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தமையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மல்லாவி பொலிஸ் நிலையம் முன்பு ஒன்று கூடி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை, சம்பவ இடத்திற்கு வருகை தந்த மல்லாவி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அவர்கள், குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும், இளைஞனின் படுகொலைக்கான நீதியினை தான் பெற்று தருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டிருந்தவர்களிடம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை குறித்த காலப்பகுதிக்குள் துரித கதியில் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தா விடின் பாரியளவிலான போராட்டம் ஒன்றினை தாம் மேற்கொள்வோம் என்றும், சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தினையும் தாம் முன்னெடுப்போம் என்றும் எச்சரித்து, பொலிஸ் பொறுப்பதிகாரியிடமும், வருகை தந்திருந்த பாராளுமன்ற அரசியல் பிரமுகர்களிடமும் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.














# வெற்றிக்காக போட்டியிடவில்லை தமிழர்களின் ஒற்றுமையை பலப்படுத்தவே போட்டியிடுகிறேன்!

## தமிழ் பொது வேட்பாளரான பா. அரியநேந்திரன்

ஆகத்து 16, 2024

தேர்தலில் வெற்றிப் பெறுவதற்காக போட்டியிடவில்லை, தமிழ் மக்களின் ஒற்றுமையை ஒரு சக்தியாக இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் காண்பிப்பதற்காகவே போட்டியிடுகிறேன் என தமிழ் பொதுவேட்பாளரான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் வியாழக்கிழமை (16) இடம்பெற்ற வேட்புமனு கையளிப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சிங்கள அரச தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை, கடந்த கால பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்துள்ளன. இதன் காரணமாகவே இம்முறை தனித்து போட்டியில் இறங்கியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாங்கள் பேச்சுவார்த் தையில் ஈடுபடவில்லை. தமிழ் பொது கட்டமைப்பின் ஒரு தரப் பினர் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார்கள். யோசனைகள் முன்வைக்கப்பட்டு அவை பரிசீலிக்கப்படுகிறது.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெகு விரைவில் வெளியிடுவோம். அத்துடன் தேர்தல் பிரச்சாரங்களையும் முன்னெடுப் போம். இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஒத்துழைப்பை எதிர் பார்த்துள்ளோம். எமது வெற்றி அரசுக்கு ஒரு எடுத்துக்காட் டாக அமையும் என்றார்.



# எம் கையாலேயே எம் கண்களைக் குருடாக்கும் தென்னிலங்கை அரசியல் சக்திகள்!

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

ஆகத்து 17, 2024

எம்மவர்களைக் கொண்டே எம்மைப் பிரித்தாண்டு எமது ஒற்றுமையை சிதைத்து, எமது அபிலாசைகளைக் குழிதோண்டிப் புதைத்து எம்மீது மீண்டும் ஒடுக்குமுறைகளை மேற்கொள்வதற்கு எம்மிடமே ஆணை பெறுவதற்கு தென்னிலங்கை அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றனர்.

எனவே நாம் விழிப்புடன் இருந்து எம்மை பலியிடத் துடிக்கும் சக்திகளைப் புறந்தள்ளி அவர்களின் விருப்பம் நிறைவேறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரெஸ் பிரேமச்சந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்.

இதுகுறித்து சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

2024 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக அதன் முக்கிய வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸாநாயக்க போன்றோர் அடிக்கடி வடக்கு - கிழக்குக்கு வருவதும் அங்குள்ள பல்வேறு கட்சிகளையும் தனிநபர்களையும் சந்தித்துப் பேசுவதும் இப்பொழுது கிரமமாக நடைபெற்று வருகின்றது.

இதற்கு மேலதிகமாக தமிழர் தரப்புகளை கொழும்புக்கு வருமாறு அழைத்து அவர்களைச் சந்திக்க விரும்புவது ஒருபுறமும், சுமந்திரன் மற்றும் சாணக்கியன் போன்றோர் இவர்களைத் தேடித்திரிந்து சந்திப்பது இன்னொருபுறமுமாக அரசியல் நகர்த்தலில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக சுமந்திரன் அண்மைக்காலங்களில் மீண்டும் மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதும் அவற்றைப் பெரிய செய்தியாகப் பத்திரிகைகளுக்குக் கொடுப்பதும் பத்திரிகைகளும் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கப்போகிறார் என்ற சாரப்பட கருத்துகளை எழுதுவதும் இப்பொழுது நடைபெற்று வருகின்றது.

2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து தமிழர் தரப்பில் ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்குள் பல சுற்றுப் பேச்சுகள் நடைபெற்றன. அதன் பிரகாரம் ஒரு தமிழ் பொதுவேட்பாளருக்கான தேவை இருக்கின்றது என்பதை எமது கூட்டணி ஏற்றுக்கொண்டது.

அதேசமயம் தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள சிவில் அமைப்புகளும் இவ்வாறான ஒரு தேவை இருப்பதை தமது கலந்துரையாடல்கள் மூலம் உறுதிப்படுத்தின. அதன் பின்னர் இருதரப்பினரும் இணைந்து தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதுடன் பொதுவேட்பாளரை நிறுத்துவது என்ற இலக்கை நோக்கி முன்னேறினர்.

இந்தக் காரணங்களினால் அச்சமடைந்துள்ள தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை எப்படியாவது பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கில் பல முனைகளிலும் காய்நகர்த்தல்களை மேற்கொள்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சுமந்திரன் தனிநபராக தனது கட்சியினரின் ஒப்புதலோ அல்லது தமிழ் மக்களின் ஒப்புதலோ இல்லாமல் தான் ஜனாதிபதியுடன் பேசுகிறேன் என்று கூறுவதும் 13 ஐ அவர் முழுமையாகத் தந்துவிடப்போகிறார் என்று சாரப்பட கருத்துகளை வெளியிடுவதும் தேர்தலில் மக்களை பிழையான பாதைக்கு இட்டுச்செல்வதற்கான ஒரு முயற்சியாகும்.

தமிழ் மக்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த ஜனாதிபதித்தேர்தல் களத்தைப் பாவிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்பதே தமிழர் தரப்பின் நோக்கமாகும். ஆனால் அதனை எதிர்த்து நிற்பது போன்ற தோற்றத்தைக் காட்டி நிற்கும் சுமந்திரன் தமிழ் பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவை முன்னிறுத்தியே இந்த பேச்சு வார்த்தைகளை நடாத்தி வருகின்றார்.

சுமந்திரனுக்கு பேச்சுவார்த்தைகள் தொடர்பாக குறைந்தபட்ச அனுபவங்களாவது இருக்கும் என்று நான் கருதுகின்றேன். மஹிந்த ராஜபக்ச தரப்புடன் 17 சுற்றுப்பேச்சுகள் நடாத்தப்பட்டு அவை எவ்வாறு தோல்வியில் முடிந்தது என்பது அவருக்குத் தெரியும். இதேபோன்று நல்லாட்சி காலத்தில் இதே ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் புதிய அரசியல் சாசனத்திற்காக நான்கு வருடங்கள் பேசி அது எவ்வாறு தோல்வியில் முடிந்தது என்பதும் அவருக்குத் தெரியும். அதன் பின்னர், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் அனைவரும் தயாரா என்று கேட்டபொழுது மஹிந்த ராஜபக்ச உட்பட அனைவரும் அதற்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

ஆனால் அதன் பின்னர் அது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதே காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு - கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடக்கும் வரை ஒரு இடைக்கால சபையை உருவாக்கும்படியும் அதற்கான முழு ஏற்பாடுகளையும் அவருக்கு சமர்ப்பித்தும்கூட அது தொடர்பாகவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்ற சமயத்திலும், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர் இலங்கை வந்தபோதும் 13 ஐ முழுமையாக நிறைவேற்றும்படி வற்புறுத்தியும்கூட எதுவும் செய்யவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் விக்கிரசிங்கவினால் அரசியல் சாசனத்தில் காணப்படும் 13 ஆவது திருத்தத்தில் உள்ள ஒருபகுதியைக்கூட நிறைவேற்றுவதற்கு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாத நிலை



யில், சுமந்திரன் போன்றோர் தொடர்ச்சியாக ரணிலை சந்திப்பதும் மாகாணசபை அதிகாரங்கள் அனைத்தையும் அவர் கொடுப்பார் என்பது போன்ற அறிக்கையை வெளியிடுவதும் தமிழ் மக்களை தவறான பாதைக்கு வழிநடத்தும் ஒரு முயற்சியாகும்.

முன்னர் 13 ஐ முற்றுமுழுதாக எதிர்த்து நின்ற சுமந்திரன் இப்பொழுது 13 தான் ஏதோ பெற்றுக்கொடுப்பதுபோல் படம் காட்டுவதும் தமிழ் மக்கள் அரசியல் ஞானசூன்யங்கள் என்றும் அவர்களுக்கு எதுவும் புரியாது என்ற பாணியில் நடந்துகொள்வதும் அவரது அறிவு முதிர்ச்சியின்மையின் வெளிப்பாடாகும்.

கொரோனா காலத்திற்குப் பின்னர் நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து அடைந்துவிட்டது என்ற சூழ்நிலையில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி நிறுத்தப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி இப்பொழுது தான் விரும்பும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் தான் விரும்பியவாறு ஒதுக்கும் நிலையைக் காணமுடிகின்றது. இதன்மூலம் தமிழ் மக்களின் வாக்குகளை இலகுவாகப் பெற்றுவிடலாம் என்று ரணில் கனவு காண்பதாகவும் தோன்றுகின்றது.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் ஜெனிவாவிலும், நியூயார்க்கிலும் சுமந்திரனின் நடவடிக்கைகள் என்பது தமிழ் மக்களது கோரிக்கைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் எதிராகவே இருந்திருக்கின்றது. இனப்படுகொலை நடக்கவில்லை என்று கூறுவதும் யுத்தக்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்துவிட்டது என்று கூறுவதும் தொடர்ந்து அரசாங்கத்திற்கு கால அவகாசத்தைப் பெற்றுக்கொடுப்பதிலும் அவர் முன்னின்று செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவை அனைத்தையும் புரிந்துகொள்வதினூடாக நாம் ஏன் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்குவது என்ற முடிவை எடுத்தோம் என்பதை உணர்ந்துகொள்ள முடியும். தமிழ் மக்கள் நீண்டகாலமாக இலங்கை அரசியலை கண்காணித்து வருபவர்கள். அவர்களை ஏமாளிகள் என்றோ இலகுவாக ஏமாற்றிவிடலாம் என்றோ நினைப்பது மடைமைத்தனமானது என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் நீர் ஆதாரமாக உள்ள குளங்கள் காணாமல் போகும் நிலை!

ஆகத்து 19, 2024



கிளிநொச்சி மாவட்டத்தில் முக்கிய நீர் ஆதாரமாக உள்ள குளங்கள் பெருமளவில் ஆக்கிரமிக்கப்படுகின்றமை அம்பலமாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான முக்கிய நீரேந்து மையமான கிளிநொச்சி குளமும் மண் நிரப்பி ஆக்கிரமிக்கப்படுகின்றமை அம்பலமாகியுள்ளது.

இதனிடையே கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான 8 பாரிய நீர்ப்பாசன குளங்களும், கமநல சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான 465 சிறிய குளங்களும் காணப்படுகின்றன என கிளிநொச்சி மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் கமநல சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான 464 சிறிய குளங்களில் 126 குளங்களே தற்போது பயன்பாட்டில் உள்ளன. மிகுதி 339 குளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன. அல்லது காணாமல் போய்விட்டன.

எஞ்சிய 126 குளங்களிலும் பல வருங்காலத்தில் காணாமல் போய்விடும் நிலைமையே காணப்படுகிறது. குளங்கள் காணாமல் போக போக நல்ல நிலத்தடி நீரும் காணால் போகிறது அதன் விளைவுகளே பல கிராமங்கள் காணாமல் போயிருகின்றன. எதிர்காலத்தில் இன்னும் பல கிராமங்கள் காணாமல் போகுமென சுற்றுச்சூழல் ஆர்வலர் முருகையா தமிழ் செல்வன் அம்பலப்படுத்தியுள்ளார்.

www.sangathamil.ca

# முள்ளிவாய்க்காலில் பொதுச்சுடரினை ஏற்றி பிரச்சார நடவடிக்கையை ஆரம்பித்த தமிழ் பொதுவேட்பாளர்!

ஆகத்து 18, 2024

ஜனாதிபதி வேட்பாளார் அரியநேந்திரன் இன்றையநாள் (18.08.2024) மாலை 3 மணியளவில் முள்ளிவாய்க்காலில் பொதுச்சுடர் ஏற்றி ஜனாதிபதி தேர்த்தலுக்கான முதலாவது பிரச்சாரத்தினை ஆரம்பித்து வைத்துள்ளார்.



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் நெருங்கிவரும் நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது வெற்றிக்காக மக்கள் மத்தியில் பிரச்சார நடவடிக்கைகளை உத்தியோக பூர்வமாக முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவுதூபிக்கு பொது சுடரேற்றி வழிபட்டு தமிழ் மக்கள் சார்ந்து தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதி தமிழ் வேட்பாளர் அரியநேந்திரன் மற்றும் அவரோடு இணைந்து உறுப்பினர்கள் தேர்தலுக்கான முதலாவது பிரச்சாரத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

குறித்த அகவணக்கத்தின் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் துளசி, சமூக செயற்பாட்டாளரும் அரசியல் ஆய்வாளருமான நிலாந்



தன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# நல்லூர் கந்தனை வழிபட்ட தமிழ் பொது வேட்பாளர்!

ஆகத்து 18, 2024

தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேந்திரன் நல்லூர் ஆலயத்திற்கு இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை காலை சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

அதனை தொடர்ந்து நல்லூர் ஆலயத்திற்கு சென்று வழிப்பாட்டில் ஈடுபட்டதுடன், நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்தும் ஆசி பெற்றனர்

தொடர்ந்து ஏனைய மத ஸ்தலங்களுக்கு சென்று வழிபட்டதுடன், ஏனைய மத தலைவர்களிடமும் ஆசி பெற்றனர்





# தந்தை செல்வாவின் நினைவிடத்தில் மலர்வணக்கம்!

ஆகத்து 18, 2024

தமிழ் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் இன்றையநாள் ஞாயிற்றுக்கிழமை தந்தை செல்வா நினைவுத் தூபியில் மலர் வணக்கம் செலுத்தினார்.



தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.






இதன்போது தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி முன்றலில் போராட்டம்!

ஆகத்து 20, 2024




கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம் எமக்கு உண்மையும் நீதியும் வேண்டுமென கோரியும் கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப் புதை குழிகளுக்கு நீதி விசாரணை கோரியும் காணாமல் போனோர் அலுவலகம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வுகள் மீதான மேற்கொள்ளும் அச்சுறுத்தல் செயற்ப்பாடுகளை கண்டித்தும் மாபெரும் போராட்டம் ஒன்று இன்று (20) கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி முன்றலில் இடம்பெற்றது



முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட் டவர்களின் உறவுகளினால் ஏற்ப்பாடு செய்யப்பட்ட குறித்த போராட்டத்தில் வடக்கு கிழக்கின் பல்வேறு மாவட்டங்களினை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உற வினர்கள் அரசியல் பிரமுகர்கள் சமூக செயற்ப்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர்

உண்மையை மௌனமாக்காதே: கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் சாட்சிகளை அச்சுறுத்தாதே! கொக்குத் தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி: சிறீ லங்கா இராணுவமே பொறுப்புக்கூற வேண்டும்! OMP ஒரு ஏமாற்று வேலை: காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி இல்லை!, கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் இலங்கை இராணுவத்தின் பங்கை அம்பலப்படுத்துங்கள்! வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது அன்புக்குரியவர்களை எங்கே கொன்று புதைத்தீர்கள்? உள்ளிட்ட பல்வேறு கோசங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்



















"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்

# சரணடைந்தவர்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்களா?

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

ஆகத்து 20, 2024

சரணடைந்தவர்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்களா? என கஜேந்திரன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தினரால் நேற்றைய தினம் (20) கொக்குத் தொடுவாய் மனித புதைகுழி முன்பாக "கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம், எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும்" என கூறி போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே கஜேந்திரன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கொக்குத்தொடுவாயில் கடந்த வருடம் யூலை மாதம் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த இடம் பொலிசாருடைய நீதிமன்றத்தினுடைய, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு அகழ்வுப் பணிகள் இடம்பெற்று 52 உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. அனைத்துமே தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்களினுடையது என்பதுதான் எங்களுடைய நம்பிக்கை.

அந்த அகழ்வு பணியின்போது, பல தகட்டு இலக்கங்கள், விடுதலைப் புலிகளுடைய அடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற தகட்டு இலக்கங்கள் மற்றும் அவர்களுடைய உடல்களில் துப்பாக்கி சன்னங்கள் பாய்ந்ததற்கான தடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

அவர்களுடைய கைகள் கட்டப்பட்ட நிலையில் இருந்ததாகவும் இங்கே அம்மாக்கள் கூறியிருக்கின்றார்கள். முன்பக்கமாகவும், பின்பக்கமாகவும் சப்பாத்து நூல்கள் மூலமாக கட்டப்பட்டிருக்கின்றன. 52 உடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலே எங்களைப் பொறுத்தவரையிலே இங்கே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் அம்மாக்கள் கூறியது போன்று ஒன்றில் முள்ளிவாய்க்கால் முடிவிலே வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்த முன்னாள் போராளிகள், அவர்களோடு சென்ற மனைவிகள், பிள்ளைகள் அதனை விட, இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள், ஓமந்தை பகுதியிலும் மற்றும் வவுனியா தடுப்பு முகாமிலும் இராணுவத்தினரால் தேடி, தேடி கைது செய்யப்பட்டு கடத்தப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்கள் இவ்வாறு பல்லாயிரக்கணக்கானவர்கள், காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு சரணடைந்தவர்கள் அல்லது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்களா? என்கின்ற ஒரு சந்தேகம் இருக்கிறது. ஏனென்றால், ராஜ்சோமதேவ அவர்கள் கூற முற்படுவது போன்று இது 1994, 1995ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரிய சடலங்களாக இருக்கலாம் என்றால் அவர்கள் கூற முற்படுவது போன்று மணலாற்றிலே ஒரு யுத்தம் நடைபெற்றிருந்தது.

அதில் கணிசமான போராளிகள் வீரச்சாவடைந்திருந்தார்கள். அது அவர்களுடைய உடல்கள் தான் என கூறுவதாகவே அவர்களுடைய கதை இடம்பெற்றிருந்தது. அவ்வாறாயின் கைகள் கட்டப்பட்டதற்கான வாய்ப்புகள் இல்லை.

இறுதிப் போரிலே சரணடைந்தவர்கள்தான் சித்திரவதைக்கு பிற்பாடு கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது எங்களுடைய சந்தேகம்.

இங்கே தாய்மார் குறிப்பிட்டது போன்று அந்த சீருடைகள் பழுதடைந்து உக்கி, இறந்து போகாமல் இருந்திருக்கிறது என்று சொன்னால் அது மிக அண்மையிலேதான் புதைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த வகையிலே இது 2009ஆம் ஆண்டு சரணடைந்தவர்கள் அல்லது கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை, கொன்று புதைத்திருக்கிறார்கள் என்பது எங்களுடைய சந்தேகம்.

இந்த பிரதேசம் 1984ஆம் ஆண்டு விமானங்கள் மூலம் துண்டுப்பிரசுரம் போடப்பட்டும், நேரடியாக ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டும் பலவந்தமாக மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தார்கள். வெளியேற்றப்பட்ட பிறகு இந்த பிரதேசம் முழுமையாக இராணுவத்தினுடைய கட்டுப்பாட்டிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது. யுத்தம் முடிகின்ற வரையில் இந்த பகுதியிலே மிகப்பெரிய இராணுவதளம் இருந்தது. முழுமையாக இராணுவ கட்டுப்பாட்டிலே இருந்திருந்தது.

ஆகவே இங்கே விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டில் இது 1984ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒரு நாள் கூட இருந்ததில்லை. அவ்வாறு இருக்கிற போது இராணுவ கட்டுப்பாட்டிலே இராணுவ முகாமுக்கு அருகே அதனுடைய முன்னரங்கத்திலே இந்த புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்றால் இதற்கு நிச்சயமாக இலங்கை இராணுவத்தினர்தான் முழுமையாக பொறுப்புக்கூற வேண்டும்.

இவ்வாறான நிலைமையிலே அரசியல் மயப்படுத்தப்பட்டு இனவாதப்படுத்தப்பட்டு, ஊழல் நிறைந்ததாக இருக்கிற இலங்கை காவல்துறை, இலங்கை நீதித்துறை மற்றும் ஏனைய திணைக்களங்கள் சம்பந்தப்பட்ட அனைத்து திணைக்களங்களுமே அரசியல் மயப்படுத்தப்பட்டு இனவாதம் மயப்படுத்தப்பட்டு, ஊழல் மயப்படுத்தப்பட்டு, தமிழர்களுக்கு எதிரானதாக இருக்கின்ற நிலையிலேயே தமிழர்கள் ஒரு சில திணைக்களங்களிலே, பொறுப்பான பதவிகளில் இருந்தாலும் அவர்களால் சுதந்திரமாக செயற்பட முடியாது.

இந்த இடத்திலே கிராமசேவையாளர் கூட கொடுத்த அறிக்கையிலே பல விடயங்கள் தெரியாது என்றுதான் கூறப்பட்டிருப்பதாக அறியக்கூடியதாக இருக்கிறது. அப்படி என்றால் இங்கே ஒரு சுதந்திரமான, சுயாதீனமான செயற்பாட்டை நாங்கள் எதிர்பார்க்க முடியாது. ஆகவே, நாங்கள் உள்ளக பொறிமுறை விசாரணையை முற்றுமுழுதாக நிராகரிக்கிறோம். வலிந்து



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக அந்த மக்களுடைய கோரிக்கையாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிவது தொடர்பாக ஒரு முழுமையான சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான மரபணு பரிசோதனை கூட சர்வதேச சமூகத்தால் பொறுப்பெடுக்கப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும். உள்ளக பொறிமுறைகளில் நம்பிக்கை இல்லை. உள்ளக நீதி கட்டமைப்புகள் மீதும் நம்பிக்கை இல்லை.

இங்கே பிரதேசங்களில் இருக்கின்ற நீதிபதிகள் தமிழர்களாக இருந்தாலும் கூட இலங்கை அரச கட்டமைப்பு என்பது இனவாத மயப்படுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே இலங்கை அரச கட்டமைப்புக்குள் உள்ளக பொறிமுறைக்குள் முன்வைக்கப்படுகின்ற எந்தவொரு நீதி பொறிமுறையையும் நாங்கள், ஏற்றுக் கொள்வதற்கோ நம்புவதற்கோ தயாராக இல்லை.

ஒரு முழுமையான சர்வதேச, பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் மீள மீள வலியுறுத்துகிறோம். இங்கே அம்மா ஒருவர் குறிப்பிட்டது போன்று இந்த அகழ்வுப் பணிகள் வெளிப்படை தன்மையோடு நடத்தப்படவில்லை.

ஊடகவியலாளர்களுக்கு இந்த அகழ்வுப்பணிகள் நடைபெறும் போது தொடர்பாக அவர்கள் அவதானிக்கக்கூடியதற்கான வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அடாவடிகள் கையாளப்பட்டிருக்கிறது. அதில் ஒரு சில தமிழர்களை வைத்துக்கொண்டே ஊடகவியலாளர்கள் அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். உறுக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறான செயற்பாடு நடைபெற்றிருக்கிறது.

இவ்வாறான செயற்பாட்டினை நாங்கள் ஒரே கண்துடைப்பாகவே பார்க்கின்றோம். உள்ளக விசாரணை செயற்பாட்டை முற்றாக நிராகரித்து சர்வதேச விசாரணையை நாங்கள் வலியுறுத்துகிறோம் என மேலும் தெரிவித்தார்.

# பொது வேட்பாளருக்கே ஆதரவு!

## மூத்த போராளி பசீர் காக்கா

ஆகத்து 21, 2024

இறுதியுத்தம் முடிந்து 15 வருடங்களாகிவிட்டது. பேச்சுவார்த்தை, பேசுதல் என்பவற்றை தொடர்ந்து கேட்டு காது புளித்துப்போய்விட்டது. தமிழரின் ஆறாம் அறிவைக் கேள்விக்குட்படுத்தும் விதத்தில் புதுப்புது விளக்கங்களைக் கேட்டாயிற்று. எனவே, நாம் இனி அடுத்த கட்டத்தை ஜனநாயக வழியில் மேற்கொள்வோமென மூத்தபோராளி "காக்காண்ணை", என்று அறியப்பட்ட முத்துக்குமார் மனோகர் அழைப்பு விடுத்துள்ளார்.



யாழ்.ஊடக அமையத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேலும் கருத்து வெளியிடுகையில் மாவீரர் அறிவிழியின் தந்தையாக எனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றேன்.

அண்ணர் அரியநேத்திரன் 1984ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அவரது சொந்தக் கிராமமான அம்பிளாந்துறையில் அறிமுகமானவர். போராட்ட பங்களிப்பு காரணமாகவே 2004 பொதுத் தேர்தலில் போட்டியிடத் தேர்வானவர்களில் ஒருவராக அவரது பெயர் கிளிநொச்சியிலிருந்து அறிவிக்கப்பட்டது. இறுதி யுத்தத்தின் பின்னர் நெருக்கடிகளின் மத்தியிலும் மாவீரர் நினைவேந்தல்களை எப்படியோ தொடர்ச்சியாகச் செய்து வந்தவர்.




தமிழ்த் தேசியம் என்பதை வெறும் எதிர்ப்பரசியல் என்று கொச்சைப்படுத்தியவர்களும் உண்டு. ஆனால், எம்மை யார் என உணரவைத்து உணர்வோட்டத்தில் ஒன்றிக்கலக்க வைத்த விடயம் அது. எல்லாவிதத் தடைகளையும் துரோகங்களையும் தாண்டி தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் முன்னோக்கிச் செல்வோம். புலம்பெயர் உறவுகளும் தாயகத்திலுள்ளோரும் கைகோர்த்து அதனை சாத்தியமாக்குவோம் எனவும் பசீர் காக்கா அழைப்பு விடுத்துள்ளார்.

# கொக்குத்தொடுவாய் பகுதியில் மேலும் பல இடங்களில் புதைகுழிகள்!

## முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

ஆகத்து 21, 2024

கொக்குத்தொடுவாய் பகுதியில் பல இடங்களில் புதை குழிகள் இருக்கிறது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் இன்றையதினம் (20.08.2024) கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி முன்பாக கொக்குதொடுவாய் மனித புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம், எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும் என கூறி போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்து.

குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விடயமானது ஆரம்பத்திலே நீதிமன்றத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போது பலராலும் வைக்கப்பட்ட கோரிக்கை சர்வதேச பொறிமுறையோடு சர்வதேசத்தினுடைய கண்காணிப்பே வேண்டும்.

யாழ் பல்கலைக்கழக தொல்லியல் பீட துறையினை சேர்ந்த மாணவர்களோ, பேராசிரியர்களோ இந்த கண்காணிப்பில் பார்வையிடுதலில் இருக்க வேண்டும். அந்த கோரிக்கைகள் பலவாறாக முன் வைக்கப்பட்டது. இருந்தும் இவை நடைமுறைப்படுத்தப்பட்டதாக இல்லை. இரண்டு, மூன்று நாட்கள் பரமு புஷ்பரட்ணம் ஐயா அவர்கள் வந்திருந்தார். ஆனால் அவரும் பின்னர் வரவில்லை

ஏனோ தெரியவில்லை. இருந்தாலும் எங்களுக்கு இந்த உள்ளக பொறிமுறையில் நம்பிக்கை இல்லை.

இலங்கை அரசாங்கமானது எத்தனையோ படுகுழிகளை இலங்கை அரசாங்கத்தினுடைய பார்வையில், கண்டு பிடிக்கப்பட்டும் ஒன்றுக்கும் நீதியான, நேர்மையான வகையில் அறிக்கைகள் வரவில்லை.

1984 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கர்நாட்டுக்கேணி ஆகிய 6 கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்த மக்களும் இடம்பெயர்ந்து 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தான் மீள்குடியேற்றப்பட்டார்கள். இப்படி இருக்கும் போது இப் பிரதேசம் இராணுவ பிரதேசமாக இருந்தது.

2009 ஆம் ஆண்டு கையளிக்கப்பட்ட, உறவுகள் வட்டுவாகலில், கடலில், முகாமில் என்று பலவாறு கையளிக்கப்பட்ட உறவுகள், சரணடைந்தவர்கள் இந்த புதைகுழியில் அகப்பட்டிருக்கலாம் என்பது மக்களுடைய நம்பிக்கை. எங்களுடைய நம்பிக்கை.

அப்படி இருக்கும்போது அகழ்வை செய்து இப்போது முடிந்து விட்டது என கூறிகின்றார்கள். கொக்குத்தொடுவாய் பகுதியில் பல இடங்களில் இப்படிப்பட்ட புதை குழிகள் இருக்கிறது என்பது இந்த மக்களுடைய கருத்து. ஆனால் இதற்கான ஒரு நீதி கிடைக்கவில்லை.



உள்ளக பொறிமுறையிலே மக்கள் யாருக்குமே நம்பிக்கை இல்லை. யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை முழு பொய்யுரைப்பவர்களாகத்தான், பொய்களை பேசி வருகின்றார்கள் அறிக்கை இடுகின்றார்கள். தமிழ் மக்களுக்கான நியாயமான எந்த ஒரு கருத்துக்களும் வழங்கப்பட்டதா? என பார்க்க வேண்டும். எங்களுக்கு தேவை சர்வதேச பொறிமுறையூடாக நீதி கிடைக்க வேண்டும்.

எத்தனை தாய்மார் குழந்தைகளை தேடி, பிள்ளைகளை தேடி இறந்து விட்டார்கள். இப்படியான நிலைமையில் அவர்களுடைய ஏக்கம், அவர்களுடைய கண்ணீர், இவற்றிற்கு பதில் கூறியே ஆக வேண்டும். எங்களை ஏமாற்ற வேண்டாம். ஆனால் சர்வதேசம் நிச்சயமாக கண்காணித்து நியாயமான தீர்ப்புகளை வழங்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# சர்வஜன வாக்கெடுப்பு தேவை என தமிழ் பொது வேட்பாளர் நேரடியாக கேட்க வேண்டும்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம்

ஆகத்து 24, 2024

சர்வஜன வாக்கெடுப்பு தேவை என தமிழ் பொது வேட்பாளர் நேரடியாக கேட்க தவறின் , பொது வேட்பாளருக்கு எதிராக நாம் செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம் . கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பொது வேட்பாளரை முன் நிறுத்தி என்ன கோரிக்கையை முன் வைக்க போகிறோம் என்பதே முக்கியம். இன பிரச்னைக்கு இதுவரை தீர்வு இல்லை. அது இனியும் கிடைக்கப் போறதில்லை.

எனவே தமிழ் மக்களாகிய நாம் இலங்கைக்குள் எமக்கு தீர்வு இல்லை என்பதனை சர்வதேச சமூகத்திற்கு சொல்ல வேண்டும்.

நாங்கள் தேசியம் தாயகம் சுயநிர்ணய உரிமை பற்றி தந்தை செல்வா காலத்தில் இருந்து பேசி வருகிறோம்

அதனால் தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என்பதனை தமிழ் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் இன்று கட்சிகள் அதனை தீர்மானிக்க முயல்கின்றன. தமிழ் மக்களுக்கு என்ன தேவை என்பதனை பொது வாக்கெடுப்பு மூலமே அறிய முடியும்

பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டியது சர்வதேச சமூகம். ஆனால் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் பொது வாக்கெடுப்பாக அமையாது. அதனை பயன்படுத்தி எமது கோரிக்கையை நாம் சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

மக்கள் தமக்கு எது தேவை என்பதனை அவர்கள் தீர்மானிப்பார்கள். வாக்கெடுப்புக்கள் எதுவும் இல்லாமல், இதான் இவர்களுக்கு தேவை என கட்சிகள் முடிவெடுக்க முடியாது.

எனவே சர்வஜன வாக்கெடுப்பு வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்க வேண்டும். அவ்வாறான கோரிக்கை இல்லாமல் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் அர்த்தம் இல்லை.

கேட்க வேண்டியதை கேட்காது, ஒளித்து மறைத்து தமிழ் பொது வேட்பாளர் செயற்படுவராயின் நாம் கடுமையாக அதனை எதிர்ப்போம்.

தேர்தல் அறிக்கையில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அதில் ஒளித்து மறைத்து விடயங்கள் சொல்லப்பட்டால் நாம் கட்சியை கூட்டி , என்ன முடிவெடுக்க வேண்டும் என தீர்மானிப்போம்

தமிழரசு கட்சிக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் சவால் விடுகிறேன். சுயநிர்ணய உரிமை என்பதனை எப்படி பிரயோகிக்க போகிறீங்க ? வாக்கெடுப்பு இல்லாமல் அந்த மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதனை நீங்கள் எப்படி தீர்மானிப்பீர்கள் ?

அவர்கள் ஏமாற்றிக்கொண்டே இருக்கிறார்கள் நாங்களும் தொடர்ந்து ஏமார்ந்து கொண்டு இருக்க முடியாது. ஏமாற்றுக்கள் போதும் என மேலும் தெரிவித்தார்.

அவர்கள் ஏமாற்றிக்கொண்டே இருக்கிறார்கள் நாங்களும் தொடர்ந்து ஏமார்ந்து கொண்டு இருக்க முடியாது. ஏமாற்றுக்கள் போதும் என மேலும் தெரிவித்தார்.

# பொதுவேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்!

## யாழ்ப்பாண வணிகர் கழகம்

ஆகத்து 28, 2024

தமிழர்களின் ஒற்றுமை, சுயாட்சி, மற்றும் சுயநிரணய கோரிக்கையை நிலைநிறுத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொதுவேட்பாளரான பா.அரியநேந்திரனை ஆதரித்து எமது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றி உலகமெல்லாம் ஒலிக்க சங்கு சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என யாழ்ப்பாண வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
JAFFNA CHAMBER OF COMMERCE

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாண வணிகர் கழகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ் வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசு இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக சித் தரித்து அதற்கான முழு வேலைத்திட்டத்தையும் சுதந்திரத்திற்கு பின் 1948 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்திக் கொண்டு வருகிறது.

தமிழ் மக்கள் தங்கள் தாயகமான வடக்கு, கிழக்கைப் பாதுகாத்து உரிமையோடு வாழ்வதற்காக கடந்த 75 வருட கால நீண்ட எமது போராட்டம் இன்னும் வெற்றிபெறவில்லை.

தமிழ் தலைமைகள் எமது உரிமையை நிலைநாட்டவும், சமாதானத்தை நிலை நிறுத்துவதற்கும் எடுத்த முயற்சிகள் அத்தனையும் இன்றுவரை சிங்களத்தலைவர்களினால் நிராகரிக்கப்பட்டு உதாசீனப்பட்டுள்ளன.

இந்திய. இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ஆகக் குறைந்த அதிகாரமான 13 ஆம் அரசியலமைப்பு திருத்தத்தைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தாமை.

பேச்சுவார்த்தை என்ற ரீதியில் காலத்தை கடத்தி தட்டிக் கழிக்கப்பட்டு தந்தை செல்வா தொடக்கம் சம்பந்தர் வரை ஏமாற்றியுள்ளார்கள்.

நாம் இந்த நாட்டின் பூர்வீக குடிகள். வடக்கு. கிழக்கு தமிழர்களுடைய தாயகம் நாம் தனித்துவமானவர்கள் எமக்கு சுய நிர்ணய உரிமையுண்டு எமது நிலம், மொழி, கலை, கலாசாரம். பண்பாடு போன்றன பாதுகாக்கப்பட வேண்டும்.

அதற்கு பூரண சுயாட்சி அதிகாரம் எமது பகுதிக்கு தேவை என்பதை முன்னிறுத்தி தமிழ் மக்கள் தங்கள் கோரிக்கைக்கான சர்வஜன வாக்கெடுப்பாக இந்த தேர்தலை எதிர்கொண்டு அதற்கான அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

இதன் மூலம் இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் நாம் இன்னும் எமது உரிமைப்போராட்டத்தில் உறுதியாக இருக்கின்றோம் என்பதை அடையாளப்படுத்த முடியும்.

இந்த ஜனாதிபதித்தேர்தலை தமிழ்மக்களின் விடிவுக்காக ஜனநாயக முறையில் புதிய அணுகுமுறையாக இதை அணுகி எமது உரிமைகளை வென்றெடுக்க புத்திசாதுரியமாக நடந்து இதனை அணுகுவதே சிறந்த தீர்மானமாக அமையும்.

இந்த முயற்சிக்கு வடக்கு, கிழக்கில் செயற்படும் தமிழ்தேசியம் சார்ந்த அனைத்துக்கட்சிகளும், வடக்கு, கிழக்கில் செயற்படும் அத்தனை பொது அமைப்புக்களும், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் அத்தனை தமிழ் பேசும் மக்களும் தமிழ் பொது வேட்பாளருக்கு தங்கள் பேராதரவை வழங்கி வாக்குகளை செலுத்த வேண்டும்.

அத்துடன் தென்னிலங்கை கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும், தென்னிலங்கை வேட்பாளர்களுக்கும், தென்னிலங்கை கட்சிகளுக்கு ஆதரவு வழங்கும் வடக்கு, கிழக்கை சேர்ந்த கட்சிகளும், தென்னிலங்கை தலைவர்களுடன் தனிப்பட்ட நட்பு வைத்துள்ளோர், மாற்றுக்கருத்துள்ளோர் தங்கள் நிலைப்பாட்டை மாற்றி தமிழ் இனத்தின் விடிவிற்காக தமிழ் மக்களின் ஜனநாயக முறைப்படி நடைபெறும் உரிமைக்கான அங்கீகாரத்திற்கு தங்கள் பேராதரவை வழங்க வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பில் வேண்டிநிற்கின்றோம் என்றுள்ளது.

# யாழ். வட்டுக்கோட்டையில் 400 வருடங்கள் பழமையான சிவன் ஆலயம் மீளுருவாக்கம்!

ஆகத்து 23, 2024

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 400 வருடங்கள் பழமையான சிவன் ஆலயம் மீளுருவாக்கம் செய்யும் பணி ஆரம்பிக்கபட்டுள்ளது.



அழிவடைந்த நிலையில் அடையாளம் காணப்பட்ட வட்டுக்கோட்டை துணைவி ஆலயத்தினை மீளுருவாக்கம் செய்யும் பணி , யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட்ணம் தலைமையில் நேற்றைய நாள் (22) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ் ஆலயத்தின் எஞ்சிய பாகங்களையும் அத்திவாரங்களையும் அழிபாடுகளையும் கொண்டு இவ்வாலயமானது கற்பகிரகம், அந்தராளம், முன்மண்டபம், துணைக்கோவில்கள், சுற்றுமதில், மடங்கள், கேணி என்பவற்றை கொண்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்த முடிகின்றது.

இவ்வாலயத்தின் கற்பக்கிரகத்தின் பின்புறத்தில் பொறிக்கப்பட்ட கிரக சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயமானது 400 வருடங்கள் பழமைவாய்ந்த ஆலயமென்பதுடன் ஆலயத்தின் பெயர் பிரகேதீஸ்வரர் என்பதனையும் இக் கல்வெட்டில் இருந்து உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

மிகத் தொன்மையான எமது முன்னோர்களின் வழிப்பாட்டுத் தலமான இவ்வாலயம் பல ஆண்டு காலம் கவனிப்பார் இன்றிக் காணப்பட்ட நிலையில் அதனை மீள்உருவாக்கம் செய்வதற்கு நீண்ட காலம் முயற்சி எடுக்கப்பட்டது.

இந் நிலையில் தற்போது அமெரிக்கா புலம் பெயர் தமிழர் ஒருவர் ஆலயத்தினை பழைய நிலைக்கு மீள் உருவாக்கம் செய்வதற்குரிய நிதியுதவியினை வழங்கியுள்ளார்.



அதன்டிப்படையில் இவ்வாலயத்தினை பழைய நிலைக்கு மீள் உருவாக்கம் செய்வதற்குரிய திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாண மரபுரிமைய மையத்தினரால் இவ் வாலயம் மீளுருவாக்கம் செய்யப்படவுள்ளது.



மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தலைமையில் நடைபெற்ற சம்பிரதாயபூர்வமாக ஆரம்ப நிகழ்வில் ஆலயத்திற்கு நிதி உதவி அளிக்கவுள்ள புலம்பெயர் தமிழருடன், தொல்லியல் திணைக்களகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் பந்துலு, இவ்வாலயத்தினை மீளுருவாக்கம் செய்யும் முக்கிய பணியில் இருக்கும் கபிலன், துஸ்யந்தி , யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உறுப்பினர் பார்த்திபன், மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீட முன்னாள் உத்தியோகத்தர் நாக ஜெயக்குமார் உட்பட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# தமிழ் மக்களுக்கு காலம் இட்ட கட்டளையே பொது வேட்பாளர்!

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

ஆகத்து 24, 2024

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் முடிவு வரைக்கும் தமிழ்த் தேசிய உணர்வோடு தேசமாகத் திரண்டிருந்த தமிழ் மக்கள் யுத்தத்தின் பின்னர் சிதறடிக்கப்பட்டார்கள். அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் பிரதேசம், சாதியம், சமயமாக தமிழ்த் தேசியம் துணடாடப்பட்டு வருகிறது. இவற்றால் அரசியல் ரீதியாகத் தமிழினம் மிகவும் பலவீனமாகத் பின்தள்ளப்பட்டுள்ளது என தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இதனைக் கருத்திற்கொண்டே தமிழ் மக்களைத் தேசமாக மீண்டும் திரளச் செய்து அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் வெளிப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். இந்த முடிவு காலம் இட்ட கட்டளை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளராக போட்டியிடும் பா. அரியநேத்திரனுக்கும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதானிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை (24) நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் நடைபெற்றது. இதற்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு கோட்பாட்டு ரீதியான முடிவு. இதனைப் புரிந்துகொள்ள விரும்பாதவர்கள் வெல்ல முடியாத தேர்தலில் எதற்காக போட்டி என்று விதண்டாவாதம் புரிகிறார்கள். எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையாக சிங்கள மக்களைக் கொண்ட இலங்கை தீவில் தமிழன் ஒருபோதும் ஜனாதிபதியாக வர முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும்.

பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வெற்றிபெற முடியாது. ஆனால், தமிழ் மக்களை மீளவும் தேசமாகத் திரளச் செய்வதில் அவர் வெற்றி பெறுவார்.

தென்னிலங்கை வேட்பாளர்களிடையே நான்குமுனைப் போட்டி நிகழும் நிலையில் பொதுவேட்பாளர் தங்களின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். இதனால் பொதுவேட்பாளரை நிறுத்தியுள்ள தரப்புகளுடன் பேச வருமாறு அழைப்புக்கு மேல் அழைப்பு விடுக்கிறார்கள்.

அதே சமயம் அவர்களுடன் நேரடியாகவும் பின்கதவாலும் தொடர்புகளைப் பேணிவருகின்ற தமிழ் அரசியல்வாதிகளின் மூலம் பொதுவேட்பாளருக்கு எதிரான மூர்க்கத்தனமான கருத்துகளும் பரப்பப்பட்டு வருகின்றன. பொதுவேட்பாளர் துரொகியாகக் கூடச் சித்திரிக்கப்படுகிறார்.




பொது வேட்பாளர் பற்றித் தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்த்த பின்பே முடிவெடுக்கலாம் என்றும் அவர்களுடன் பேரம் பேசலாம் என்றும் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கூறிவருகின்றார்கள்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான குறைந்தபட்ச தீர்வையேனும் ஆட்சி அதிகாரங்களில் இருந்த போது கூடச் செய்ய விரும்பாத தென்னிலங்கை தலைமைகளுடன் தேர்தல் நேரத்தில் பேச முற்படுவது அவர்களின் வெற்றி வாய்ப்பை உறுதி செய்வதற்கான ஒரு உத்தியே ஆகும். பொது வேட்பாளருக்கு எதிரான பரப்புரைகளின் பின்னால் உள்ள கபடத்தனங்களை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# கிளி. பெரியகுளம் காணிகளில் சிறீலங்கா காவல்த் துறை ஒத்துழைப்புடன் சட்டவிரோத மணல் அகழ்வு!

ஆகத்து 25, 2024

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட பெரியகுளம் கனகராயனாற்றுப் பகுதியில் உள்ள பல ஏக்கர் காணிகளில் பொலிஸாரின் முழுமையான ஒத்துழைப்போடு சட்டவிரோத மணல் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகராயன் ஆற்றினை அண்டிய பெரிய குளம் பகுதியிலும் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் சுமார் 25 அடி ஆழத்துக்கும் மேலாக அதிகளவில் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதேசத்தில் தொடர்ந்து மணல் அகழ்வுப் பணிகள் இடம் பெறுவதாக பொதுமக்கள் பல்வேறு முறைப்பாடுகளை அளித்து வருகின்றனர்.

இந்த பகுதியில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பாக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரால் பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டபோதும் இதுவரை மணல் அகழ்வை கட்டுப்படுத்த பொலிசார் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.



மணல் அகழ்வு இடம்பெறும் பகுதிகளை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் முரளிதரன் மற்றும் பிரதேச செயலாளர் ரீ.பிருந்தாகரன் ஆகியோர் இன்றைய தினம் (25) நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்துவதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

# யாழ். கோப்பாய் இருபாலை கற்பகவிநாயகர் ஆலயம் முன்பாக இயங்கும் (OFNIR LOGSTICS) வாகன சுத்திகரிப்பு நிலையமும்; பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பும்!

## பிரதேச வாழ் மக்கள்

ஆகத்து 27, 2024

இச் சுத்திகரிப்பு நிலையமானது 2005ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் முழு மூச்சாக ஆரம்பித்த நபர் பிறதொரு நபருக்கு அதிகார பூர்வமற்ற முறையில் பிறி தொரு மலேசிய வாழ் தமிழருக்கு விற்பனை செய்துள்ளர். இது ஆள்மாறட்டமோசடி செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளது. கள்ள உறுதி வரையப்பட்டு, களவான கையொப் பங்களுடன், வாங்கியவரும் எதுவும் பார்க்காமல், விற்றவரும் முழு ஆள் மாறாட்டம் செய்ப்பட்டுள்ளது. இக்காணியானது விற்றவருடையதுமல்ல. ஆனால் முற்று முழுவதுமாக களவான முறையிலும் இலங்கை அரசையும், காணி உரிமையாளரையும் ஏமாற்றும் வகையில் சகல ஆவணங்களும் போலியாக தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இத்தனை தயரிப்புக் களையும் மிகவும் கச்சிதமாக செய்து கொடுத்த வழக்கறிஞர் திருமதி. பத்மலோஜினி என்பவரே ஆவார் என அறியப் படுகிறது.



இதில் இவ்வளவு இலகுவாக இலங்கை அரசை ஏமாற்றக் கூடிய வகையில் அங்கு இயங்கும் வழக்கறிஞர்களும் சரி, அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சரி இவ்வாறான பாரிய ஆள்மாறட்ட செயற்படுகளுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதே தெட்டத் தெளிவாக தெரிகிறது.

விடயம் என்னவெனில் இவ்வாகன சுத்திகரிப்பு நிலையமானது தற்போது பாரிய சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தடி நீர்ப்பிரச்சனை மற்றும், 10 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை பிரசேதம், மேலும் அப் பிரதேச மக்களின் குடிநீரையும் பாதிப்படைய செய்து வருகிறது.

இங்கு வாகனங்களில் இருந்து எடுக்கப்படும் கழிவு எண் ணையும் (Oil), வாகனங்கள் கழுவும் கழிவு நீரும் அருகி லுள்ள குளத்திலும் பின்னால் உள்ள வெற்றுக் காணியிலும் ஊற்றப்பட்டுக் கொண்டிருப்பதே முக்கிய காரணம். உண்மை யில் இவை அனைத்தும் மீள் சூழற்சிக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

இதற்கான அரச பொறுப்பு நிறுவனங்களான மத்திய சூழல் அதிகாரசபை, சுகாதார அமைச்சு அலுவலகம், நீர்வள சபை ஆகிய அமைச்சுக்கள் எவ்வாறு இன் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியது என்பதே மிக முக்கிய கோள்வியாகும்.

மக்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் நிலத்தடி நீரையே நம்பி வாழும் மக்கள், விவசாய நிலங்கள், நெற் பயிர்ச் செய்கை, தாவரங்கள் அனைத்துமே இந்த நிறுவனத்தினால் தொடர்ந்து பாதிக்கப்படுகிறது. இந்தப் பகுதியில் இந்நிறுவனத்தினால் பாரிய நீண்டகால சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டுக்கொண்டிருக் கிறது எனப்தே மிகவும் உண்மையாகம். அத்துடன் ஆதாரத் துடனே இக்குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அப்பிரதேச மக் களால் முன்வைக்கப்பட்டுள்ளது. உண்மையில் இன் நிறு வனம் அவ்விடத்தில் இல்லாம் மூடுவதற்கு யாழ். மாவட்ட அரச ஊழியர்களும், பொலிசாரும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பிரதேச வாழ் மக்கள் ஆத்திரமும் அதிருப்தியும் அடைய ஆரம்பித்து விட்டார்கள். மேலும் இப்பிரச்சனை



எதுவிதபேதங்களையும் கடந்து பொது மக்களின் நலன் என்கின்ற நோக்கில் "தீர்வு" ஒன்று மட்டுமே இலக்கு என்ற நோக்கில் அணுகப்பட வேண்டும். ஏனெனில் நீர் என்பது அனைவருக்கும் பொதுவானதும் அனைத்திற்கும் இன்றி யமையது.

மண்ணில் ஊற்றப்படும் கழிவு இயந்திர ஒயிலால் இன்று மட்டுமல அடுத்த 50-100 வருடங்களுக்கு அப்பிரதேசத்தில் நெற்செய்கையாக இருந்தாலும், பயிர்ச்செய்கையாக இருந் தாலும் நிச்சயமாக பாதிக்கப்படவே செய்யும். ஆகவே இன்



நிறுவனம் உடனடியாக மூடப்படவேண்டும் என்பதில் எந்த விதமான பரிவும் அரச அதிகாரிகள் காட்டக் கூடாது என்பதே அப்பகுதிமக்களின் கருத்தாகவுள்ளது.

அத்துடன் எவ்வாறு மலேசிய வாழ் தமிழ் மக னுக்கு விற்பனை செய்யப் பட்டது. அனைத்து ஆவ ணங்களும் விற்கப் பட்டவரால் போலியக தயாரிக்கப்படு வழக் கறிஞராலும் மற்றும் அரச அதிகாரிகளாலும் கையொப்பமிடப்பட்டு விற் கப்பட்டுளதாக தெரி விக்கப் படுகிறது.

ஆகவே மக்களின் நீ ண்டகால நலன் கருதியும், மண்ணின் வளம் கருதியும், வருங் கால சந்ததியின் நலன் கருதியும், நீர் வளம் மற்றும் நிலவளத்தையும் காப்பதற்காகவும் இன் நிறு வனம் உடனடியாக மூடப்படவேண்டும் என் பதே அப்பகுதி மக்களின் அவா.

மேலும் அரச அதிகாரிகளை ஏமாற்றி ஆள்மாறாட்டம் செய்து ஆவணங்கள் மோசடி செய்து அனைவரையும் ஏமாற்றிய வர்களை பொலிசாரும், நீதிபதிகளும் கடுமையான நடவடிக்கை எடுத்து காணியின் உரித்தாளரிடம் ஒப்படைப்பு செய்ய ணேடும். விரைவான நடவடிக்கை விரும்பத்தக்கது.

பாக்கியநாதன் - சிறீகுமார் என்பவரே மோசடி ஆவணங் களுடன் இன் நிறுவனத்தை வாங்கியவராக தெரிய வருகிறது.

# யுத்தத்தின் பின்னராக இலங்கையில் மோதலைத் தூண்டும் முக்கிய காரணியாக காணிகள்!

ஆகத்து 22, 2024

யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதன் பின்னரான இலங் கையில் மோதலுக்குத் தூண்டுதலளிக்கும் மிகமுக்கிய காரணி யாகக் காணிப்பிரச்சினை காணப்படுவதாகவும், இதற்கு உடனடியாகத் தீர்வுகாணத்தவறும் பட்சத்தில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் தீவிரமடைவதுடன், நல்லிணக்கத் தைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் பாரிய பின்னடைவு ஏற்படும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் எச்சரித்துள்ளது.

நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துவரும் நில அபகரிப்புக்கள் மற்றும் அவை அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற் படுத்தியிருக்கும் தாக்கங்கள் பற்றி விரிவான விளக்கத்தையும், இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய பரிந்துரைகளையும் உள்ளடக்கி மாற்றுக்கொள் கைகளுக்கான நிலையத்தினால் 'இலங்கையில் காணிப்பிரச் சினையின் குறுக்குவெட்டு (ஒன்றுக்கொன்று தொடர்புடைய) போக்கு' எனும் தலைப்பில் 95 பக்க அறிக்கையொன்று வெளி யிடப்பட்டுள்ளது.

'இலங்கையில் யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வரு டங்களின் பின்னரும் இனங்களுக்கு இடையிலான பிளவுகள் தொடர்வதுடன், யுத்தத்துக்கான அடிப்படைக்காரணிகள் இன் னமும் களையப்படவில்லை. அதன் ஓரங்கமாக பல தசாப்தகால காணிப்பிரச்சினை யுத்தத்தின் பின்னரும் தொடரும் அதே வேளை, இவ்விடயத்தில் பல்வேறு வழிமுறைகளில் நிகழும் அரச தலையீடுகள் நல்லிணக்க செயன்முறையில் பின் னடைவை ஏற்படுத்தக்கூடியவாறான பிளவுகளைத் தோற்று வித்துள்ளன.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வட, கிழக்கு மாகா ணங்களில் அதிகாரங்களில் சமத்துவமற்ற நிலையைத் தோற் றுவிப்பதற்கு காணிகள் பயன்படுத்தப்பட்டுவந்திருப்பதுடன், தற்போது இப்பகுதிகளில் மேலோங்கிவரும் 'ஊடுருவல் போக்கு' அப்பகுதி மக்களிடையே அச்சத்தை விதைத்திருக்கிறது' என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் பதிவாகி, தற்போதும் தொடர்ந்துவரும் காணிப்பிரச்சினைகள் குறித்து தனித்தனியாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வறிக்கையில் விபரிக்கப்பட்டிருக்கும் காணிப்பிரச் சினைகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், அதன் பின்னணியில் பரந்துபட்ட அளவிலான சட்ட மற்றும் கொள் கைசார் கரிசனைகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ஆட்சியியல் நிர்வாக மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளல், மோதலுக்குத் தூண்டுத லளிக்கும் காரணிகளைக் களைதல், அவசியமான சட்ட மறு சீரமைப்புக்களை மேற்கொள்ளல், காணி அபகரிப்புக்களால் எதிர்மறையான பாதிப்புக்களுக்கு உள்ளானோருக்கு உரிய வாறான இழப்பீட்டை வழங்கல் ஆகிய நடவடிக்கைகளை முன் னெடுக்கவேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது.

# தமிழீழத் தலைநகர் திருகோணமலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம்!

ஆகத்து 30, 2024

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினத்தை முன்னிட்டு திருகோணமலையிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்கள் இன்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டங்களை நடாத்தியுள்ளன.

திருகோணமலையில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த உறவுகள் கலந்து கொண்டதுடன் பன்னாட்டு சமூகத்தின் நீதிக்கான தலையிடலை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

திருகோணமலை கடற்கரையில் இடம்பெற்ற போராட்டத்தில் கிழக்கின் மூன்று மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி முன்னெடுத்திருந்தனர்

இதனிடையே போராட்டத்தை தடுக்க இலங்கை காவல் துறையினர் பலத்த முயற்சி எடுத்தனர். அப்போது அங்கே ஏற்பட்ட குழப்ப நிலையில் செயற்பாட்டளரான இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.



எனினும் அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக திருகோணமலை கடற்கரையில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த போராட்டக்காரர்கள் போராட்டத்தை தொடர்ந்த நிலையில் பின்னர் இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டி சர்வதேச விசாரணை வேண்டும் என வலியுறுத்தி பேரணி இடம்பெற்றிருந்தது.







# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம்!

ஆகத்து 30, 2024

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்கள் இன்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டங்களை நடாத்தியுள்ளன.

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய அனைத்து மாவட்டங்களில் இருந்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கையில் தீச்சட்டிகளை ஏந்தியபடி பேரணியில் பங்கெடுத்திருந்தனர்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் இன்று காலை 11 மணியளவில் ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, காங்கேசன்துறை வீதி ஊடாக பயணித்து கோட்டை முனியப்பர் கோவிலடியை அடைந்துள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டி சர்வதேச விசாரணை வேண்டும் என வலியுறுத்தி பேரணி இடம்பெற்றிருந்தது.





















# சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது நாளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி யாழ். பல்கலைக்கழக சமுகம் கவனயீர்ப்பு போராட்டம்!

ஆகத்து 30, 2024

சிறீலங்கா அரச படைகளால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினால் கவனயீர்ப்பு போராட்டம், அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் நாளினை முன்னிட்டு வாயில் கருப்புத் துணிகளை அணிந்தவாறு 30.08.2024 (வெள்ளிக் கிழமை) அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் ஊழியர் சங்கம் என்பவற்றின் பங்கேற்புடன் நடைபெற்ற குறித்த கவனயீர்ப்பில் மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பங்கேற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

2009 இறுதி ஈழப் போருக்கு முன்னர் இருந்து தொடங்கிய வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்களிற்கு, இத்தனை ஆண்டுகளாகியும் தொடர்ந்து அலைக்கழிக்கப்படும் எங்கள் தாய் மாருக்கும், உறவுகளுக்கும் உரிய நீதி எதையும் வழங்கிடாது தொடர்ந்து காலதாமதங்களாலும், பொய் வாக்குறுதிகளால் வஞ்சித்து எங்கள் கூட்டு மனவலுவினை வீழ்த்தி எம்மை உதிரிகளாக்க முயலும் பன்னாட்டு சமூகங்களுக்கும் சிங்கள - பௌத்த பேரினவாத ஒடுக்குமுறை சிறீலங்கா அரச கட்டமைப் பிற்கும் தமிழ் மக்களின் கூட்டு ஒருமைப்பாட்டினையும் எத்தனை ஆண்டுகளானாலும் எங்கள் தலைமுறைகளின் குரல்கள் ஒலித்துக் கொண்டேயிருக்கும் என்பதை உணர்த்துவதற்கும் இக் கவனயீர்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.









# அம்பாறையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம்!

ஆகத்து 30, 2024

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டமானது இன்று தம்பிலுவில் மத்திய சந்தையில் இடம்பெற்றது.

இப் போராட்டமானது அம்பாறை மாவட்டம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க தலைவி தம்பிராசா செல்வராணி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நீதி கேட்டு பலவருடங்களாக போராட்டத்தில் ஈடுபடும் வடக்கு கிழக்கு வலிந்துவலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளினால் எட்டு மாவட்டங்களிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் போராட்டத்தின் ஒரு பகுதியாக இன்றைய நாள் அம்பாறை மாவட்டத்தில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



மேலும் இவ் போராட்டத்தில் கலந்துகொண்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் என் பிள்ளைகள் எங்கே? எனவும், என் குழந்தைகளை தேடி நீதி கேட்ட எங்கள் எங்கள் உயிர்கள் மாய்கின்றது, சர்வதேசத்தை ஏமாற்றும் வகையில் சிறீலங்கா அரசினால் உருவாக்கப்பட்டுள்ள்ள் OMP, TRC போன்ற பொறிமுறைகள் வேண்டாம் எனவும் உயிருடன் பிடித்து செல்லப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச நீதியே வேண்டும் என்றும் கோசங்கள் எழுப்பி வலியுறுத்தினர்.








# தமிழரசுக்கட்சியின் திருகோணமலை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு!

ஆகத்து 30, 2024

தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிப்பதாக திருகோணமலை தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் தலைமையில் திருகோணமலை தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் வியாழக்கிழமை (29) காலை 10.00 மணியளவில் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் நீண்ட விவாதம் இடம்பெற்றிருந்தது. இதன் பின்னர் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து சங்கு சின்னத்திற்கு வாக்களிப்பதற்கு தாம் விரும்புவதாகவும் குறித்த முடிவை மத்திய செயற்குழுவிற்கு அறிவிக்குமாறும் கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

குறித்த கலந்துரையாடலில் முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களினால் எடுக்கப்பட்டுள்ள முடிவு தொடர்பாக எதிர்வரும் 1ஆம் திகதி இடம்பெறவுள்ள கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் தெரியப்படுத்துவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சி ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை முடிவினை அறிவிக்காத நிலையில் வேட்பாளர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்ட பின்னர் அவற்றை பரிசீலித்து முடிவினை அறிவிக்கலாம் என தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உள்ளிட்ட



தரப்பினர் தமிழ் பொதுவேட்பாளருக்கு வெளிப்படையாகவே ஆதரவினையும் தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவரகளின் உறவினர்களின் போராட்டத்துக்கு தடைகோரி நீதிமன்றை நாடிய பொலிசார்!!

ஆகத்து 30, 2024

இன்று வெள்ளிக்கிழமை (30) யாழ்ப்பாணத்தில் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தினத்தை அடையாளப்படுத்தி வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு தடை விதிக்க கோரி யாழ்ப்பாண தலைமையக பொலிசார் யாழ். நீதவான் நீதிமன்றில் விடுத்த வேண்டுகோளை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நிராகரித்துள்ளது.

இந்த தடையுத்தரவு விண்ணப்பத்திற்கான வழக்கு விசாரணை நேற்று வியாழக்கிழமை (29) யாழ். நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற வேளையிலேயே நீதிமன்றம் பொலிசார் செய்த விண்ணப்பத்தினை நிராகரித்துள்ளது.

யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி இளங்கோதைக்கும் அவரோடு இணைந்தவர்களுக்கு எதிராகவும் இந்த தடையுத்தரவு வழங்குமாறு பொலிசார் நீதிமன்றை நாடிய நிலையில் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகி தமது தரப்பு நியாயங்களை முன்வைக்குமாறு யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி இளங்கோதைக்கு யாழ் நீதவான் நீதிமன்று அழைப்பாணை அனுப்பியிருந்தது.

இதற்கு அமைவாக நேற்று இடம்பெற்ற வழக்கு விசாரணையில் யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி உள்ளிட்டவர்கள் ஆஜராகி தமது போராட்டத்தின் நியாயப்பாட்டையும் தமக்குள்ள உரிமையையும் மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இந்த வழக்கில் தடைகோரி விண்ணப்பம் செய்த பொலிசார் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம் பிரிவு 69 கீழாக தற்போது தேர்தல் காலமாக இருப்பதனால் வேட்பு மனு தாக்கல் செய்த காலத்திலிருந்து தேர்தல் முடியும் வரையிலான காலம் வரையில் பேரணிகள் ஊர்வலங்களை செய்யமுடியாது என்றும் மற்றும் தேர்தல் காலமாக இருப்பதால் இந்த பேரணிக்கு பாதுகாப்பு வழங்க உரிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இல்லாமல் இருப்பதனாலும் தற்போது நல்லூர் உற்சவ காலம் என்றபடியினாலும் இன்று வெள்ளிக்கிழமை (30) எதிர்கட்சி தலைவர் சஜித் பங்குபற்றும் கூட்டம் யாழில் இடம்பெறவுள்ளதாலும் மேலும் நடக்கவுள்ள இந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பேரணியால் அரசியல் தலையீடுகள் நடைபெறலாம் எனவும் கலகங்கள் ஏற்படலாம் எனவும் குற்றம் ஒன்று நிகழலாம் என்றும் சமாதான குலைவான நிலைமை ஒன்று தோன்றலாம் என கோரி இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் பேரணிக்கு தடைவிதிக்குமாறு மன்றில் தமது சமர்பணத்தை செய்தனர்.

பொலிசாரின் இந்த விண்ணப்பத்துக்கு எதிராக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் மன்றில் முன்னிலையாகி தமது வாதங்களை முன்வைத்த சிரேஸ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் மற்றும் அம்பிகா சிறீதரன் சட்டத்தரணி சங்கர் ஆகியோர் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம் பிரிவு 69 கீழாக மூன்று விதமான ஊர்வலங்களை நடாத்துவதற்கு விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி தமது சமர்பணங்களை செய்திருந்தனர்.

அதாவது, தேர்தல் அறிவிக்கப்படுள்ள காலங்களில் வருகின்ற மே 01 ஆம் திகதி வருகின்ற தொழிலாளர் பேரணி மற்றும் சமய சம்மந்தமான ஊர்வலங்கள் பொது நோக்குடன் சமூக நோக்கத்திலான ஊர்வலங்கள் செய்ய முடியும் என்றும் இன்று ஆகஸ்ட் 30 நடைபெறவுள்ள பேரணி சமூக நோக்கத்திலான பொது விடயம் என்றும் இதற்கு எதிராக பொலிசார் தடையுத்தரவு கோரா முடியாது என்றும் ஒன்றுகூடுவதற்கான உரிமை அடிப்படை அரசியல் உரிமை என்றும் இதனை அனுபவிப்பதை பொலிசார் தடை செய்ய முடியாது என்றும் அத்தோடு உற்சவம் நடைபெறுகிறது என்பதை காரணம் காட்டியோ அரசியல் கட்சி ஒன்றின் கூட்டம் ஒன்று இடம்பெறுகின்றது என்பதை காரணம் காட்டியோ அல்லது எதிர்காலத்தில் குற்றம் ஒன்று நிகழலாம் என்பதை காரணம் காட்டியோ பொலிசார் இந்த தடையுத்தரவு கோர முடியாது என வாதங்களை முன்வைத்தனர்.

இதனடிப்படையில் நீதவான் நீதிமன்று தனது கட்டளையில் பொலிசாரால் செய்யப்பட்ட தடையுத்தரவு கோரிய விண்ணப்பத்தை சாதகமாக பரிசீலிக்க முடியாது என்றும் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல்கள் சட்டம் பிரிவு 69 A இன் கீழாக சமூக நோக்கத்திலான பேரணிகளை தடை செய்ய முடியாது என்றும் அதற்கு ஜனாதிபதி தேர்தல்கள் சட்டத்தில் விதிவிலக்கு வழங்கப்படுள்ளது என்பதை சுட்டிக்காட்டியதோடு பேரணியை தடை செய்யக்கோரிய பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்திருந்தது.

மிக நீண்ட நேரமாக இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் மிகவும் சிறப்பான முறையில் தமது வாதங்களை முன்வைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் நீதி கோரிய பேரணிக்கு சட்ட ரீதியிலான உரிமையை நீதிமன்றின் ஊடாக உறுதிப்படுத்தியிருந்தனர்.



1 of 3

நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

1. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி
சிவபாலன் இலங்கோதேவி (5969910118 V),
இல 01, பண்டாரிக்குளம் வீதி, நல்லூர்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற வழக்கிலக்கம் :- AR/768/24

தங்களுக்கெதிராக யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் பரிசோதகரால் இன்றையதினம் (2024.08.27) தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு பேரணி மற்றும் ஆர்ப்பாட்டமொன்று 2024.08.30ஆந் திகதி இடம்பெறவுள்ளமை பற்றி குறிப்பிட்டு, அந்த பேரணியை தடை செய்யக் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இது தொடர்பில் தங்கள் தரப்பு நிலைப்பாட்டினை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில், 2024.08.29ஆந் திகதியன்று மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

எனவே, தங்கள் தரப்பு வாதத்தினை நேரடியாகவோ, சட்டத்தரணி ஊடாகவோ மேற்கொள்ள 2024.08.29ஆந் திகதியன்று முற்பகல் 09.30மணிக்கு மன்றில் தோன்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

இவ்வறிவித்தலை தலைமைப் பொலிஸார் ஊடாக சேவிக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

மன்றின் கட்டளைப்படி,

பதிவாளர்
Registrar
Magistrate's Court
Jaffna



27 AUG 2024

தற்போது இலங்கை தேர்தல் ஆணைக்குழுவால் 1981ம் அண்டின் 15ம் இலக்கமுடைய ஜனாதிபதியை தெரிந்தெடுக்கும் தேர்தலொன்று பிரகடனம் செய்யப்படதன் பின்னர் 1981ம் அண்டின் 15இலக்க 69ம் பிரிவில் குறிப்பிட்டுள்ளதற்கமைய வேட்புமனு தாக்கல் செய்த தினததிலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கும் காலப்பகுதி வரை சமய ஊர்வலங்கள் மட்டும் நடாத்தப்பட முடியும் என்றும், இவ்வாறான எதிர்ப்பு பேரணிகள் நடாத்தப்படவோ அல்லது முன்னின்று செயற்படுத்துவது அல்லது பங்கேற்பது முடியாதென்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது, எமது உரிமைகளை நடைமுறைப்படுத்தும் பொது அது சில கட்டுப்பாட்டு விதிகள் உள்ளது 1978 அந்த பிரிவினை மீறுவதானது குற்றம் என்பதுடன் கௌரவ நீதவான் முன்னிலையில் சுருக்கமுறையற்ற விசாரணை இடம்பெற்று பின்னர் குற்றவாளியாக காணும் பட்சத்தில் தண்டனை வழங்க கூடிய குற்றமொன்றாகும் என மேற்படி பிரிவு கூறுகின்றது. அதற்கமைய ஸ்ரீ லங்கா அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் குடிமக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தியுள்ளதுடன். அதை செயற்படுத்த வேண்டிய முறையை சட்டத்தில் தெளிவாக காண்பித்துள்ளது, அதற்கமைய இவ் காலபகுதியில் இது போன்று சட்ட விரோத பேரணிகள் மற்றும் கூட்டங்கள் நடாத்தப்படுவது மற்றும் அவற்றை ஏற்பாடு செய்வது அல்லது பங்கு பற்றுவது குற்றமொன்றாகும் என்பதுடன் பொலிஸ் மற்றும் இக்கூட்டத்தை கலைக்கும் வேளை பொலிசார் மற்றும் ஏற்பாட்டார்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட இடமுள்ளது, அத்துடன் இது போன்ற எதிர்ப்பு பேரணிகள் மற்றும் ஊர்வலமொன்று நடாத்தப்படு தொடர்பாக பொலிசாருக்கு அச்சங்கத்தினால் அறிவித்தலோ அல்லது அனுமதியோ பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன் இது போன்ற செயற்பாடுகளை செய்யும் பொது அதற்குரிய பாதுகாப்பு வழங்குவதற்கு பொலிசாரின் ஆளணி போதாமல் உள்ளது, அத்துடன் இது போன்ற நடவடிக்கைகள் செய்யும் போது பொது மக்களின பொது அமைதி சமாதானத்திற்கு பாதிப்பு ஏற்படுவதுடன் பொது போக்குவரத்து மற்றும் அரச உடமைகளுக்கும் பாதிப்பு ஏற்பட இடமுள்ளதால் இவ் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி மற்றும் ஏற்பாட்டாளர்கள் மற்றும் பங்குபற்றுவர்களுக்கு இச் செயற்பாடுகலிருந்து விலகியிருக்க கட்டளையொன்றை வழங்குமாறு கனம் மன்றத்திடம் கௌரவத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நீதிமன்ற கட்டளை வழங்கப்பட வேண்டியவர்கள் -

01.வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி சிவபாலன் இலங்கோ தேவி ( 5969910118 V ) - இல 01 பண்டாரிக்குளம் வீதி நல்லூர் யாழ்ப்பாணம் உள்ளிட்ட அதற்கு பங்குபெறும் நபர்களுக்கும்...

தலைமை பிரதான பொலிஸ் பரிசோதகர்,
தலைமை பொலிஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்
2024.08.27

TRUE COPY
Registrar
Magistrate's Court
Jaffna



வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கபட்டோர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எதிர்ப்பு பேரணி மற்றும் ஆர்ப்பாட்டமொன்று 2028.08.30ம் இடம்பெறவுள்ளமை பற்றி கனம் மன்றுக்கு அறிக்கை செய்து தடை உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கனம் மன்றத்திடம் கேட்டுக்கொள்ளல்

Police 54
(U 4 Orig. & Dup.
S. T. & E) 0309

No.

இலங்கைப் பொலிஸ்
SRI LANKA POLICE

Serial Number of Station Report
VPN TR
2024.08.27
Dated at
Information Book page & para.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டம்
CODE OF CRIMINAL PROCEDURE ACT, No. 15 OF 1979

அத்தியாயம் III - குற்றவியல் நடவடிக்கை முறை
Chapter III – Criminal Procedure

27 AUG 2024
MAGISTRATE'S COURT

AR/768/24

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமை பிரதான பொலிஸ் பரிசோதகர் பி.பொ.பசம்லி பலிஹேன ஆகிய நான்

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின தலைவி இளங்கோதேவி என்பவர் சங்கத்தின் உறுப்பினர்கள் 50 பேரை ஒன்றுக்கூட்டி 2024.08.30ம் திகதி நேரம் 10.00 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலிருந்து முனியப்பர் கோவில் வரை யுத்த காலகட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை தேடித்தரும்படி கேட்டு அரசுக்கு எதிராக எதிர்ப்பு கால்நடை பேரணி மற்றும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்த ஏற்பாடு செய்துள்ளதாக புலனாய்வு மற்றும் ஏனைய அறிக்கைகளின் பிரகாரம் எமக்கு தெரிய வந்துள்ளது, அதற்கமைய இது தொடர்பாக சட்ட நடவடிகளை எடுக்கும்படி யாழ்ப்பாணம் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்ப்பாணம் பிரதி பொலிஸ் அதிபரால் எனக்கு தொலைபேசி தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இது உண்மை சம்பவமா என்பது தொடர்பாக அறிவதற்கு என்னால் விசாரணையொன்றை மேற்கொண்டதுடன் அது உண்மைத் தகவலென்றும் அதை முன்னின்று செயற்படுத்தும் அச் சங்கத்தின் தலைவி இளங்கோதேவி என்பவர் தொடர்பாக தகவல் திரட்டியதுடன் ஊர்வலம் இடம்பெறவுள்ளமை உண்மையென உறுதி செய்யப்பட்டது, ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான சட்டத்தின்

Here insert name and rank of informants to Court.

TRUE COPY
Registrar
Magistrate's Court
Jaffna




# கனடா அடிமை தொழிலை ஊக்குவிப்பதாக குற்றச்சாட்டு!

## ஐ.நா அறிக்கை

ஆகத்து 15, 2024

கனடிய அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தற்காலிக வெளிநாட்டு பணியாளர் திட்டமானது. மரபு ரீதியான அடிமைத்துவத்தை ஏற்படுத்தும் பின்னணியை உருவாக்கியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட அறிக்கையாளர் கடந்த ஆண்டு கனடாவிற்கு விஜயம் செய்து தொழிலாளர் உரிமைகள் தொடர்பில் ஆய்வு நடத்தி இருந்தார்.

தொழிலாளர்கள் தங்களது உரிமைக்காக குரல் கொடுப்பதனை முடக்கும் வகையிலான சட்டங்கள் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு தற்காலிக பணியாளர் திட்டத்தின் கீழ் கனடாவில் பிரவேசிக்கும் ஒருவர் தொழில் தருணரினால் பணிநீக்கம் செய்யப்பட்டால் நாடு கடத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளாகின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெளிநாட்டு தற்காலிக பணியாளர் திட்டமானது தொழிலாளர் நலன்களை முடக்கும் வகையில் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல்வேறு வழிகளில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் இந்த திட்டம் காணப்படுவதாக சுட்டி கட்டப்பட்டுள்ளது.

நீண்ட நேரம் பணியாற்றுவதற்காக கொடுப்பனவு வழங்காமை, போதிய அளவு இடைவேளை வழங்காமை, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யாமை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் தொழிலாளர்கள் உரிமை முடக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தொழில் தருணர்கள் பாலியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும், வாய்மொழி மூலமாகவும் பணியாளர்களை துன்புறுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பணியாளர்களுக்கு சுகாதார வசதிகளை பெற்றுக் கொள்ள உரிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சில பணியாளர்கள் வலி நிவாரணிகளை பயன்படுத்தி பணிக்கு திரும்ப வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.



பணியாளர்களுக்கான வீடமைப்பு வசதிகள் கழிவறை வசதிகளும் போதுமான அளவு வழங்கப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இந்த திட்டத்தின் கீழ் பணியாளர்கள் எண்ணிக்கை 88 விதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், வெளிநாட்டு தற்காலிக பணியாளர்களது உரிமைகள் உறுதி செய்யப்படவில்லை எனவும் அடிமைத்துவ வாழ்க்கையை வாழ நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஒன்ராரியோவின் 2024-25 இற்கான முதல் காலாண்டு நிதியில் எதிர்பாராதளவில் 2.4 பில்லியன் டொலர்கள் மீதம்!

ஆகத்து 15, 2024

2024-25ஆம் ஆண்டுக்கான ஒன்ராரியோவின் முதல் காலாண்டு நிதிநிலையில் முந்தைய கணிப்பை விட 2.4 பில்லியன் மீதமாகவுள்ளது எதிர்பாராத உற்சாகத்தை அளித்துள்ளது. உறுதியான பொருளாதார வளர்ச்சியும் நிதி மேலாண்மைத்துவமும் ஏற்படுத்திய இவ்வாரோக்கியமான மாற்றம் முந்தைய கணிப்புகளிலிருந்து பெருமளவில் வேறுபடுகிறது.

அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் இது பற்றி குறிப்பிடும் போது, "நிதி தொடர்பான எங்கள் பொறுப்பான அணுகுமுறை நிதிநிலையில் உறுதித்தன்மையை வெளிக்காட்டுவது மட்டுமல்லாமல் அத்தியாவசிய சேவைகளில் முதலீடு செய்யவும் இடமளிக்கிறது. வீட்டுவசதி, சுகாதாரம், உட்கட்டமைப்புப் போன்றவற்றில் இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றும் அதே வேளையில், அனைவருக்கும் பாதுகாப்பான எதிர்காலத்தை எங்கள் இம்மீதப்படுதல் எடுத்துக்காட்டுகிறது" எனக் கூறினார். மேலும், குடியிருப்பாளர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அடிப்படை முதலீட்டுடன் நிதி மேலாண்மையை சமப்படுத்துவதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்துவதை இவ்வறிக்கை எடுத்துக் காட்டுகிறது.



# சிறுவர் நலக் கொடுப்பனவு திட்டம் தொடர்பில் கனடா அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிவிப்பு!

ஆகத்து 21, 2024

கனடாவில் சிறுவர் நலக் கொடுப்பனவு தொடர்பில் அரசாகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

சிறுவர் நலக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக அறிவித்துள்ளது. கனடிய சிறுவர் நலன்புரித் திட்டம் இது தொடர்பில் அறிவித்தல் வெளியிட்டுள்ளது.

கடந்த மாதம் சிறுவர் நலன்புரி கொடுப்பனத் தொகை அதிகரிக்கப்பட்டது.

பண வீக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டது.

பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் பெற்றோருக்கு ஏற்படக்கூடிய பொருளாதார சுமைகளை கவனத்திற் கொண்டு அரசாங்கம் இவ்வாறு உதவி வழங்குகின்றது.

கனடாவில் வதியும் 18 வயதுக்கும் குறைந்த தகுதியான பெற்றோருக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

6 வயதுக்கும் குறைந்த ஒவ்வொரு பிள்ளைக்கும் 648.91 டொலர்களும், 6 வயது முதல் 17 வயது வரையிலான ஒவ்வொரு பிள்ளைக்கும் 547.50 டொலர்களும் வழங்கப்பட உள்ளது.

குடும்பத்தின் தேறிய வருமானத்தின் அடிப்படையில் சிறுவர் நலன்புரி உதவு தொகை நிர்ணயக்கப்பட உள்ளது.




# கனடாவின் பணவீக்கம் 2.5 வீதமாக வீழ்ச்சி!

ஆகத்து 21,, 2024

கடந்த 2021ம் ஆண்டின் பின்னர் பதிவான மிகக் குறைந்தளவு பணவீக்க வீதம் கடந்த மாதம் பதிவாகியுள்ளது.

கனடாவின் ஆண்டுப் பணவீக்க வீதம் கடந்த மாதம் 2.5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

பணவீக்க வீழ்ச்சியானது எதிர்வரும் செப்டம்பர் மாதம் மற்றுமொரு வட்டி வீத குறைப்பிற்கு வழியமைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உயர் வட்டி வீதம் மற்றும் உலக விநியோகச் சங்கிலி சாதக மாற்றம் போன்ற காரணிகளினால் பொருளாதாரம் சாதக நிலையை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



www.sangathamil.ca

# கடந்தகால மீறல்கள் மறக்கடிக்கப்படமுடியாதவை என்பதற்கான நினைவுச்சின்னமாக தமிழினப் படுகொலை நினைவுத்தூபி திகழும்!

## கனடாவின் சுதேசிய உறவுகள் அமைச்சர் ஹறி ஆனந்தசங்கரி

ஆகத்து 17, 2024

இலங்கையின் கடந்தகால மீறல்கள் ஒருபோதும் மறக்கப்பட முடியாதவை என்பதற்கும், எமது மீண்டெழும் தன்மைக்கு மான நிலையான சின்னமாக பிரம்டனில் நிர்மாணிக்கப் படவுள்ள தமிழினப்படுகொலை நினைவுத்தூபி திகழும் என கனடாவின் சுதேசிய உறவுகள் அமைச்சர் ஹறி ஆனந்தசங்கரி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.




கனடாவின் ஒன்டாரியோவில் உள்ள பிரம்டன் நகரில் தமிழினப்படுகொலை நினைவுத்தூபியை அமைப்பதற்கு வியாழக்கிழமை (15) அடிக்கல் நாட்டப்பட்டது.

இதுகுறித்து இந்த நினைவுத்தூபியை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கிய பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் அவரது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக் கிறார்.

அப்பதிவில் தமிழினப்படுகொலையினால் பாதிக்கப்பட்ட 100,000 க்கும் மேற்பட்டோரை நினைவுகூரும் நோக்கில் இந் நினைவுத்தூபி நிர்மாண நடவடிக்கையை முன்னெடுத்திருப் பதற்காக கனேடியத் தமிழர்களின் தேசிய பேரவை, பிரம்டன் தமிழர் அமைப்பு மற்றும் பிரம்டன் தமிழ் சிரேஷ்ட பிரஜைகள் அமைப்பு ஆகியவற்றுக்கு நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட் டிருக்கிறார்.

'இலங்கை அரசாங்கத்தினால் சிறுவர்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் வன்புணரப்பட்டனர். கிராமங்கள் பாரிய மனிதப் புதைகுழிகளாக மாற்றப்பட்டன. இனப்படுகொலை அரசாங்கத் தினால் காவு வாங்கப்பட்ட இந்த அப்பாவி உயிர்களை நாம் ஒருபோதும் மறக்கமாட்டோம்' எனவும் அவர் அப்பதிவில் தெரிவித்திருக்கிறார்.

'தமிழர்களின் கனடாவுக்கான பயணம் என்பது எமது தேசிய கதையின் ஓரங்கமாகும். இலங்கை அரசாங்கத்தினால் கட்ட விழ்த்துவிடப்பட்ட வன்முறைகளின் விளைவாக நாட்டைவிட்டு வெளியேறிய தமிழர்களுக்கு ப்ரையன் மல்ரொனி தலைமையி லான அரசாங்கம் கனடாவின் கதவுகளைத் திறந்துவிட்டது.

அதேபோன்று ஸ்டீபன் ஹார்பர் தலைமையிலான அரசாங்கம் இலங்கை தொடர்பில் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொண்டதுடன் இலங்கையில் நடைபெற்ற பொதுநல வாயக்கூட்டத்தொடரைப் புறக்கணித்தது. ஒன்ராரியோவின் ஃபோர்ட் அரசாங்கம் தமிழினப்படுகொலையை பாடசாலை மாணவர்களின் பாடவிதானத்தில் உள்ளடக்கியது. ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசாங்கம் தமிழினப்படுகொலை நினைவேந்தல் நாளை அங்கீகரித்து ஏற்றதுடன், இலங் கையின் போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக பயண மற்றும் சொத்துத்தடைகளை விதித்தது' எனவும் மேயர் பற்றிக் பிரவுன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.



மேலும் நீதியையும், நல்லிணக்கத்தையும் அடைந்துகொள் வதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டி யிருப்பினும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பொறுப் புக்கூறலை உறுதிப்படுத்துவதைப் புறந்தள்ளும் மிகமோசமான இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தொடர் போராட்டத்தில் கனடா எப்போதும் முன்நிற்கும் எனவும் அவர் உறுதியளித் துள்ளார்.

அதேவேளை இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள கனடாவின் சுதேசிய உறவுகள் அமைச்சர் ஹறி ஆனந்த சங்கரி, 'எமது கூட்டிணைவு மற்றும் உறுதிப்பாடு என்பவற்றுக்கான வலு வான அடையாளமாகத் திகழக்கூடியவகையில் பிரம்டனில் தமிழினப்படுகொலை நினைவுத்தூபியை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு மேமாதம் 18 ஆம் திகதியை தமிழினப்படுகொலை நினைவேந்தல் நாளாக அங்கீகரித்த முதலாவது தேசிய பாராளுமன்றம் என்ற வரலாற்று முக்கியத்துவத்தையும் கனடா உரித்தாக்கியிருக் கின்றது' எனத் தெரிவித்துள்ளார்.

# தொற்றுக்கள் தொடர்பில் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பெற்றோருக்கான விசேட அறிவுறுத்தல்!

ஆகத்து 24,, 2024

கனடாவில் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் பெற்றோருக்கு விசேட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.



விடுமுறை காலம் முடிந்து பிள்ளைகள் பாடசாலைக்கு திரும்ப உள்ள நிலையில் நோய் தொற்றுகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தட்டம்மை இருமல் போன்ற நோய்களுக்கு தடுப்பூசி ஏற்றிக் கொள்வது பொருத்தமானது என அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது.

தடுப்பூசிகளினால் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய நோய்களி லிருந்து தங்களது பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ள பெற் றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

கனடாவிலும், உலகம் முழுவதிலும் தற்பொழுது தட்டம்மை போன்ற நோய்கள் பதிவாகி வரும் நிலையில் இந்த அறி வுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளுக்கு தடுப்பூசி ஏற்றுவது முக்கியமானது என கனடிய பொதுசுகாதார அதிகாரி டாக்டர் திரேசா டேம் தெரிவித்துள்ளார்.



உங்களது பிள்ளைகள் அனைத்து விதமான தடுப்பூசிகளையும் ஏற்றிக் கொண்டுள்ளனர் என்பதனை நீங்கள் உறுதி செய்து கொள்ளுங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

நியூ பிரவுன்ஸ்விக் போன்ற பகுதிகளில் அதிக அளவில் சிறு வர்கள் இருமல் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கனடிய வருமான முகவர் நிறுவனம் சேவை நேரத்தை அதிகரிப்பதாக அறிவிப்பு!

ஆகத்து 25, 2024

கனடாவின் வருமான முகவர் நிறுவனம் விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

வரி செலுத்துவோருக்கு கனடியர்களுக்கு கூடுதல் சேவையை வழங்கும் நோக்கில் கூடுதல் நேரம் சேவையை வழங்க தீர்மானித்துள்ளது.

கனடிய வருமான முகவர் நிறுவனத்தை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள விரும்புவார்களின் நலன் கருதி இவ்வாறு சேவை நேரத்தை நீடிப்பதாக அறிவித்துள்ளது.

வரி செலுத்துபவர்களின் கோரிக்கைக்கு அமைய இந்த சேவை நேர நீடிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமையான பணி நேரத்தை விடவும் கூடுதல் அளவு நேரம் சேவை வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நேர வலய மாற்றங்களினால் சில வாடிக்கை யாளர்களினால் வருமான முகவர் நிறுவனத்தை தொடர்பு கொள்ள முடியாது உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒருவர் ஒரு நகரில் இருந்து மற்றுமொரு நகருக்கு குடிபெயரும் போது அந்த புதிய நேர வலயத்தின் ஊடாக வருமான முகவர் நிறுவனத்தை தொடர்பு கொள்வதில் இடர்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளது.

இந்த அசௌகரியத்தை தடுக்கும் நோக்கில் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 6:30 மணி முதல் இரவு 11 மணி வரையும் சனிக்கிழமைகளில் காலை ஏழு முப்பது மணி முதல் இரவு 8 மணி வரையிலும் சேவை வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய நேர மாற்றத்தின் ஊடாக கனடாவின் அனைத்து




பிராந்தியங்களில் வாழும் வாடிக்கையாளர்களுக்கு சம சந் தர்ப்பம் வழங்கப்பட முடியும் என வருமான முகவர் நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# தமிழக செய்திகள்



## சிறீலங்கா கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 17 பேர் இந்திய நாடு திரும்பினர்!

ஆகத்து 15, 2024

இராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற ஜஸ்டின் ரெய்மெண்ட் ஹெறின் ஆகியோருக்குச் சொந்தமான 3 விசைப் படகுகளை யூலை 23ம் தேதி அன்று நெடுந்தீவு பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது எல்லை தாண்டிய குற்றச்சாட்டின்பேரில் சிறீலங்கா கடற்படையினர் கைது செய்யப்பட்டனர்.

3 படகுகளிலிருந்த காளீஸ்வரன் 22 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன்பிடித்தல் தடை செய்யப்பட்ட வலைகளை பயன் படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

ஆகஸ்ட் 6-ம் தேதியன்று ஊர்காவல்துறை நீதிமன்றம் 22 மீனவர்களில் 19 மீனவர்களை விடுதலை செய்தும் 3 விசைப் படகு ஓட்டுநர்களான காளீஸ்வரன் கருப்பையா ஜெகன் ஆகிய மூவருக்கு அபராதமும் தலா ஒரு ஆண்டு சிறை தண்டனையும் விதித்து உத்தரவிட்டது. விடுதலை செய்யப்பட்ட 19 மீனவர்களில் தீபன் சுதாகரன் ஆகிய இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் மீதமுள்ள 17 மீனவர்கள் மட்டும் புதன்கிழமை மாலை கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு புதன்கிழமை இரவு சென்னைசென்றடைந்தனர்

பின்னர் மீனவர்கள் 17 பேரும் மீன்வளத் துறையினர் மூலம் தனி வாகனம் மூலம் இராமேசுவரத்துக்கு இன்று (ஆக.15) அழைத்து செல்லப்பட்டனர்.



## நாகையில் இருந்து காங்கேசன்துறைக்கு கப்பல் சேவை தொடங்கியது!

ஆகத்து 17, 2024

இந்தியா-இலங்கை இடையே நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக கடந்த ஆண்டு (2023) அக்டோபர் மாதம் 14-ந்தேதி 'செரியாபாணி' என்ற பெயரில் பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது. ஆனால், வடகிழக்கு பருவமழை காரணமாக அதே மாதம் 23-ந்தேதி கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு மீண்டும் 'சிவகங்கை' என்ற பெயரில் கப்பல் இயக்க முடிவு செய்யப்பட்டு, அதற்காக அந்தமானில் இருந்து 'சிவகங்கை கப்பல்' நாகை துறைமுகத்திற்கு கடந்த வாரம் வந்தது.

இந்த கப்பலுக்கான சோதனை ஓட்டம் கடந்த சில நாட்களுக்கு முன்பு நடந்து முடிந்தது. அதனைத் தொடர்ந்து, இன்று காலை பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது. இந்த சிவகங்கை பயணிகள் கப்பலை புதுச்சேரி மந்திரி நமச்சிவாயம், நாகை மாவட்ட கலெக்டர் ஆகாஷ், செல்வராஜ் எம்.பி. ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து, 44 பயணிகளுடன் நாகை துறைமுகத்தில் இருந்து கப்பல் புறப்பட்டது. நாகையில் இருந்து இன்று காலை புறப்பட்ட பயணிகள் கப்பல் காங்கேசன் துறைக்கு மதியம் 2 மணிக்கு சென்ற டையும். மறுமார்க்கமாக நாளை (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு இலங்கை காங்கேசன் துறையில் இருந்து புறப்பட்டு மதியம் 2 மணிக்கு நாகை துறைமுகம் வந்தடையும். பின்னர், நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணிக்கு நாகை துறைமுகத்தில் இருந்து புறப்படும் கப்பல் காங்கேசன் துறைக்கு மதியம் 12 மணிக்கும், மறுமார்க்கமாக அதேநாள், மதியம் 2 மணிக்கு காங்கேசன் துறையில் இருந்து புறப்பட்டு மாலை 6 மணிக்கு நாகை துறைமுகத்திற்கு கப்பல் வந்தடையும். இந்த சிவகங்கை கப்பலில் 123 சாதாரண இருக்கைகள், 27 பிரீமியம் இருக்கைகள் என மொத்தம் 150 இருக்கைகள் உள்ளன. ஒருவழி பயணத்திற்கு பிரிமியம் இருக்கைக்கு ரூ.7 ஆயிரத்து 500 கட்டணமும், சாதா இருக்கைக்கு ஜி.எஸ்.டி.யுடன் ரூ.5 ஆயிரமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த கப்பலில் ஒரு நபர் 25 கிலோ எடை கொண்ட லக்கேஜ் வரை எடுத்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி கப்பலில் சாம்பார் சாதம், தயிர் சாதம், நூடுல்ஸ் உள்ளிட்ட துரித உணவுகளை கட்டணத்துடன் பெற்றுக்கொள்ள உணவக வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



பயணிகள் சிரமம் இன்றி பயணிக்க அனைத்து வகையான நடவடிக்கைகளும் செய்யப்பட்டுள்ளது. பல மாதங்களுக்கு பிறகு மீண்டும் நாகை-கங்கேசன்துறைக்கும் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது அப்பகுதி மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

## மருத்துவர்கள் பாதுகாப்பை மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும்!

### பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ்

ஆகத்து 17, 2024

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தனி காவல் நிலையம் அமைக்க வேண்டும். பட்ட மேற்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அவர்களுக்கான பணி நேரத்தை இயன்ற அளவுக்கு குறைக்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்துக்கு நீதி கேட்டு, நாடு முழுவதும் மருத்துவர்கள் இன்று (ஆக.17, சனிக்கிழமை) காலை முதல் 24 மணிநேர வேலை நிறுத்தத்தைத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் பாமக தலைவர் அன்புமணி இராமதாஸ் இன்று (சனிக்கிழமை) தனது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள அறிக்கையில், "கொல்கத்தாவில் ஆர்.ஜி.கர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 9-ஆம் தேதி பணியில் இருந்த முதுநிலை மருத்துவ மாணவி சிலரால் கொடூரமான முறையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டதும், அதைத் தொடர்ந்து அங்கு இரு நாட்களுக்கு முன் நிகழ்ந்த வன்முறைகளும் அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கின்றன. மனிதத் தன்மையற்ற மிருகத்தனமான இந்த செயல்கள் மன்னிக்க முடியாதவை.

முதுநிலை பயிற்சி மருத்துவருக்கு நேர்ந்த கொடூரத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்திருக்கும் நிலையில், கடந்த புதன்கிழமை இரவில் மருத்துவர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த போது ஆர்.ஜி.கர் மருத்துவமனைக்குள் நுழைந்த வன்முறை கும்பல் ஒன்று அங்குள்ள பொருட்களை சூறையாடியதுடன், மருத்துவர்களையும், காவல்துறையினரையும் தாக்கியுள்ளது. ஒரு கட்டத்தில் காவல்துறையினர் கண்ணீர்புகை குண்டுகளை வீசி வன்முறை கும்பலைக் கலைக்கும் அளவுக்கு நிலைமை மோசமடைந்திருக்கிறது.

உயிர்காக்கும் மருத்துவர்கள் கடவுள்களைப் போன்றவர்கள். அவர்களை வணங்க வேண்டிய கைகளால் பாலியல் வன்கொடுமை, படுகொலை, கொலைவெறித் தாக்குதல்களை நடத்துபவர்கள் கண்டிப்பாக மனிதகுலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது. பயிற்சி மருத்துவரை பாலியல் வன்கொடுமை செய்து கொன்றவர்கள் யார்? வன்முறையில் ஈடுபட்டவர்கள் யார்? என்பதை இதுவரை மேற்குவங்க காவல்துறையும், மத்தியப் புலனாய்வுத்துறையும் கண்டுபிடிக்காதது மருத்துவர்களிடையே அச்சத்தை அதிகரித்திருக்கிறது.

மருத்துவர்களின் பணி என்பது உன்னதமானது என்பதைக் கடந்து மிகவும் கொடுமையானது. முதுநிலை மருத்துவம் பயிலும் மருத்துவர்கள் தொடர்ந்து 36 மணி நேரம் பயிற்சி மருத்துவராக பணியாற்ற வேண்டும். இதுவே கடுமையான மன உளைச்சலையும், உடல் சோர்வையும் அளிக்கக் கூடிய செயலாகும். அவர்கள் ஒரே இடத்தில் அமர்ந்து பணி செய்ய முடியாது. பரந்து விரிந்த அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனைகளில் பல இடங்களுக்கு அவர்கள் சென்று நோயாளிகளுக்கு மருத்துவம் அளிக்க வேண்டும். அதிக எண்ணிக்கையில் பெண்கள் முதுநிலை மருத்துவம் பயிலக் கூடிய இன்றைய சூழலில் இரவு நேரப் பணிகள் என்பவை பாதுகாப்பற்றவையாகவே உள்ளன.

கொல்கத்தா ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் நிகழ்ந்த கொடுரங்கள் குறித்து சில நாட்களுக்கு பேசி விட்டு, வேறு பெரிய சிக்கல் வெடித்ததும் இதை மறந்து விடக் கூடாது. கொல்கத்தா பெண் மருத்துவரை பாலியல் வன்கொடுமை செய்து கொன்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி தூக்குத் தண்டனை பெற்றுத்தர வேண்டும். மருத்துவர்களை அச்சுறுத்தும் வகையில் வன்முறையில் ஈடுபட்ட கும்பலையும், அவர்களின் பின்னணியில் இருப்பவர்களையும் கைது செய்து தண்டிக்க வேண்டும்.



இவை அனைத்திற்கும் மேலாக அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் பணியாற்றும் மருத்துவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் வாய்ப்பிருந்தால் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தனி காவல் நிலையம் அமைக்க வேண்டும். பட்ட மேற்படிப்பு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அவர்களுக்கான பணி நேரத்தை இயன்ற அளவுக்கு குறைக்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்." என்று வலியுறுத்தியுள்ளார்.

# தமிழ் நாட்டில் 25 சுங்க சாவடிகளில் கட்டணம் உயர்வு!

ஆகத்து 24, 2024

தமிழ்நாடு முழுவதும் உள்ள 25 சுங்கச்சாவடிகளில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் பயனீட்டாளர் கட்டணத்தை உயர்த்த உள்ளதால், தேசிய நெடுஞ்சாலைகளில் பயணம் செய்வது செப்டம்பர் 1-ந் தேதி முதல் விலை அதிகரிக்க உள்ளது. வாகனத்தின் வகையைப் பொறுத்து ஒரு பயணத்திற்கான கட்டணம் ரூ.5 முதல் ரூ.150 வரை உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகளின் கூறியதாவது,

சலுகை ஒப்பந்தத் தின்படி கட்டண உயர்வு ஆண்டுதோறும் அமலுக்கு வருகிறது.

தேசிய நெடுஞ்சாலைகள் கட்டணம் (விகிதங்கள் மற்றும் வசூல் நிர்ணயம்) விதிகள், 2008-ன் படி மொத்த விற்பனை விலைக் குறியீட்டின் அடிப்படையில் சுங்கச்சாவடி கட்டணம் உயர்த்தப்பட்டது. தற்போது மாநிலத்தில் 67 செயல்பாட்டு சுங்கச்சாவடிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 25 சுங்கச்சாவடிகளில் மட்டும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 1 -ந் தேதி பயனர் கட்டணம் மாற்றியமைக்கப்படுகிறது. அதன்படி, அனைத்து வகை வாகனங்களுக்கும் சுங்கச்சாவடிகளில் 5 முதல் 7 சதவீதம் வரை இந்த உயர்வு இருக்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

தமிழ்நாட்டில் உள்ள சுங்கச்சாவடிகள் மூலம் 2023- 2024-ல் ரூ.4,221 கோடி வசூலித்துள்ளது. இது 2022- 23ல் வசூலான ரூ.3,817 கோடியை விட 10 சதவீதம் அதிகம். மாநில வாரியாக வசூலிக்கப்பட்ட கட்டணங்களில் தமிழ்நாடு 5வது இடத்தில் உள்ளது.

உத்தரபிரதேசம் வசூலில் நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது. 6,961 கோடி, இராஜஸ்தான் ரூ.5,954 கோடி, மகாராஷ்டிரா ரூ.5,352 கோடி மற்றும் குஜராத் ரூ. 4,781 கோடி வசூலிக்கப்பட்டது. தமிழகத்தில் எல் அண்ட் டி கிருஷ்ணகிரி தோப்பூர் சுங்கச்சாவடியில் அதிகபட்சமாக ரூ.269 கோடி வசூலித்து உள்ளது. கிருஷ்ணகிரி சுங்கச் சாவடியில் ரூ.257 கோடி வசூலித்து 2-வது இடத்தில் உள்ளது.




# ஓசூர் டாட்டா ஆலையில் 80 % பணிகள் தமிழர்களுக்கு வழங்கப்படுவதை அரசு உறுதிசெய்ய வேண்டும்!

## பாமக நிறுவனர் இராமதாஸ்

ஆகத்து 28, 2024

ஓசூர் டாட்டா மின்னணு ஆலைக்கு உத்தராகண்ட் மாநிலத்திலிருந்து பணியாளர்கள் நியமிக்கப்படுவதை தமிழக அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் டாட்டா ஆலையில் 80% பணிகள் தமிழர்களுக்கு வழங்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். தமிழகத்தில் தனியார் நிறுவன வேலைகளில் 80% பணிகள் தமிழர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என பாமக நிறுவனர் இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.








இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாட்டின் ஓசூர் பகுதியிலும், கர்நாடகத்தின் கோலார் பக்தியிலும் செயல்பட்டு வரும் டாட்டா மின்னணு நிறுவனத்தின் ஆலைகளில் பணியாற்ற உத்தராகண்ட் மாநிலத்திலிருந்து 4,000 பெண்கள் தேர்வு செய்யப்படவிருப்பதாக டாட்டா நிறுவனம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் ஏராளமான இளைஞர்களும், இளம்பெண்களும் வேலை கிடைக்காமல் வாடிக்கொண்டிருக்கும் நிலையில், அவர்களின் வேலைவாய்ப்பைப் பறிக்கும் வகையில் பிற மாநிலங்களிலிருந்து ஊழியர்களை இறக்குமதி செய்வது கண்டிக்கத்தக்கது.

உத்தராகண்ட் மாநில திட்டக்குழுவிடம் டாட்டா குழுமம் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள தேசிய தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம், தேசிய தொழில் பழகுனர் ஊக்குவிப்புத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையிலும், உத்தராகண்ட் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக அம்மாநில முதலமைச்சர் புஷ்கர் தாமி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக டாட்டா நிறுவனம் தெரிவித்துள்ளது.

உத்தராகண்ட் மாநில இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் டாட்டா நிறுவனத்தின் நோக்கத்தைக் குறை கூற முடியாது. அதே நேரத்தில் தமிழ்நாட்டு இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களுக்கு கிடைக்க வேண்டிய வேலைவாய்ப்புகளை இன்னொரு மாநிலத்திற்கு தாரை வார்ப்பதை அனுமதிக்க முடியாது. அவ்வாறு செய்வதற்கு டாட்டா நிறுவனத்திற்கு உரிமையும் இல்லை.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரை அடுத்துள்ள ஜி.எம்.ஆர் தொழிற்பூங்காவில் தான் டாட்டா மின்னணு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இதற்காக டாட்டா நிறுவனத்திற்கு மானிய விலையில் 500 ஏக்கர் நிலம் உட்பட பல்வேறு சலுகைகளை தமிழக அரசு வழங்கியுள்ளது. இதற்கெல்லாம் காரணம் டாட்டா நிறுவனத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லை. மாறாக, டாட்டா மின்னணு நிறுவனம் தமிழ்நாட்டில் ஆலை அமைத்தால், அதன் மூலம் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மாநில உற்பத்தி மதிப்பு அதிகரிக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அதிக அளவில் வேலை கிடைக்கும் என்பதால் தான்.

ஓசூரில் டாட்டா மின்னணு நிறுவனத்தின் ஆலையை அமைப்பதற்காக அந்த நிறுவனத்திற்கும் தமிழக அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி 21-ஆம் நாள் முந்தைய அதிமுக ஆட்சியில் கையெழுத்திடப்பட்டது. அதன்படி, ரூ.4684 கோடியில் அமைக்கப்படும் டாட்டா மின்னணு ஆலையில் 18,250 பேருக்கு வேலை வழங்கப்பட வேண்டும்.

அவற்றில் குறைந்தது 80% வேலைவாய்ப்புகள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டால், 14,600 வேலைகள் தமிழர்களுக்கு கிடைக்கும் அதன் மூலம் அவர்களின் குடும்பங்கள் பொருளாதார தன்னிறைவு பெறும் என்பது தான் இத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்து கொள்வதன் நோக்கம் ஆகும். ஆனால், அதற்கு மாறாக தமிழகத்திடமிருந்து சலுகைகளைப் பெற்றுக் கொண்டு வெளி மாநிலத்தவருக்கு வேலை வழங்குவது என்பது தமிழகத்தை சுரண்டும் செயலாகும். இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

ஓசூர் டாட்டா மின்னணு ஆலைக்கு வெளிமாநிலத்திலிருந்து பணியாளர்கள் வரவழைக்கப்படுவது இது முதல் முறையல்ல. இதற்கு முன் கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஜார்க்கண்ட் மாநிலத்திலிருந்து 1800 பேர் ஓசூர் டாட்டா ஆலைக்காக தேர்வு செய்யப்பட்டனர். அப்போது அவர்களுக்கு மத்திய பழங்குடியினர் நல அமைச்சராக இருந்த அர்ஜுன் முண்டா தலைமையில் விழா எடுக்கப்பட்டு, தொடர்வண்டி மூலம் தமிழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஜார்க்கண்ட் மாநிலத்தவருக்கு ஓசூர் டாட்டா ஆலையில் வேலை வழங்கப்படுவதை அப்போதே பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாக எதிர்த்தது.

அதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் அறிக்கை வெளியிட்ட அப்போதைய தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, ஓசூர் டாட்டா ஆலையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 5500 பேருக்கு வேலை வழங்கப் பட்டிருப்பதாகவும், ஆலை தொடங்கப்படும் போது ஆலையின் மொத்த வேலைவாய்ப்புகளில் 80% தமிழர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்வதாக டாட்டா நிறுவனம் தெரிவித்திருப்பதாகவும் கூறியிருந்தார். ஆனால், அன்றைய தேதி வரை டாட்டா ஆலையில், 1993 பேருக்கு மட்டும் தான் வேலை வழங்கப் பட்டிருந்தது.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு 80% வேலை வாய்ப்பு, அதாவது 14,600 வேலைகள் வழங்கப்பட வேண்டும் என்றால், அதன்பின் முழுக்க முழுக்க தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும் தான் வேலைக்கு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். மாறாக, உத்தரகாண்டில் இருந்து பணியாளர்களை தேர்வு செய்வதன் மூலம் தமிழர்களுக்கான வேலைவாய்ப்புகளை டாட்டா மறுப்பது உறுதியாகியுள்ளது.

தமிழ்நாட்டில் அமைக்கப்படும் ஆலைகளில் தமிழர்களுக்கு வேலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது தமிழக அரசின் கடமை ஆகும். ஆனால், டாட்டா நிறுவனத்திடம் பேச்சு நடத்தி, அந்நிறுவனத்தின் வேலைவாய்ப்புகளை தமிழர்களுக்கே வழங்க உறுதி பெறப்பட்டிருப்பதாக தெரிவித்த தமிழக அரசு, அதை உறுதி செய்வதற்கு பதிலாக உத்தரகாண்ட்டில் இருந்து பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களின் நலனை விட, தொழிலதிபர்களின் நலனைத் தான் தமிழக அரசு முக்கியமாக கருதுகிறது என்பதையே இது காட்டுகிறது. திமுக ஆட்சிக்கு வந்தால், தமிழ்நாட்டில் தனியார் நிறுவன வேலைவாய்ப்புகளில் 75% தமிழர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் சட்டம் இயற்றப்படும் என்று மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்திருந்தார். அந்த வாக்குறுதியை இதுவரை நிறைவேற்றாததற்கு தொழிலதிபர்கள் மீதான பாசம் காரணம் போலும்.

ஓசூர் டாட்டா மின்னணு ஆலைக்கு உத்தராகண்ட் மாநிலத்திலிருந்து பணியாளர்கள் நியமிக்கப்படுவதை தமிழக அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் டாட்டா ஆலையில் 80% பணிகள் தமிழர்களுக்கு வழங்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். தமிழகத்தில் தனியார் நிறுவன வேலைகளில் 80% பணிகள் தமிழர்களுக்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும் சட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

www.sangathamil.ca

# உலக செய்திகள்

## குரங்கம்மை: அவசர நிலையை அறிவித்துள்ளது உலக சுகாதார அமைப்பு!

ஆகத்து 15, 2024

ஆபிரிக்காவில் குரங்கம்மையால் (Mpox) இதுவரை 500க்கு மேற்பட்டவர்கள் இறந்துள்ளனர் அறிக்கைகள் வெளிவந்துள்ளன. இதனால் குரங்கம்மை ஏனைய ஆபிரிக்க நாடுகளுக்கும் பரவக்கூடும் என்ற அஞ்சம் எழுந்துள்ளதால் ஆப்பிரிக்க சுகாதார அதிகாரிகள் அதிக தடுப்பூசிகளுக்கு வேண்டுகோள்



விடுத்துள்ளனர்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் வைரஸின் புதிய பதிப்பு வெளிவந்துள்ளது மற்றும் ருவாண்டா, புருண்டி மற்றும் மத்திய ஆப்பிரிக்க குடியரசு உள்ளிட்ட அண்டை நாடுகளுக்கு வேகமாக பரவியுள்ளது .

இதையடுத்து உலக சுகாதார அமைப்பு நேற்றுப் புதன்கிழமையன்று Mpox பரவுவதை உலகளாவிய பொது சுகாதார அவசர நிலை என்று அறிவித்தது.

குரங்கம்மை வைரஸ் ஆனது நெருங்கிய தொடர்புகள் மூலம் பரவக்கூடும். இதன் அறிகுறிகள் காய்ச்சல் மற்றும் தோலில் அதிக புண்களை ஏற்படுத்தும்.

நடப்பு ஆண்டில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் என 13 நாடுகளில் குரங்கம்மை கண்டறியப்பட்டு உள்ளது. இவற்றில் காங்கோ நாட்டில் 96 சதவீதம் அளவுக்கு பாதிப்புகளும் மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

கொங்கோவில் 524 பேர் பலியாகி உள்ளனர். 14 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன என்




றும் தெரிவித்து இருந்தது.

நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய விசயம். இந்த வைரசானது ஆப்பிரிக்காவை கடந்து பரவ கூடிய ஆற்றல் படைத்துள்ளது என்பது அதிக வருத்தத்திற்குரியது என்று உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் ஜெனரல் டெட்ரோஸ் தெரிவித்தார்.

## இசுரவேலின் தாக்குதலில் இது வரையில் 40,000 பாலஸ்தீனியர் பலி!

### காஸாவின் சுகாதார அமைச்சு

ஆகத்து 15, 2024

இசுரவேலிய தாக்குதல்களில் இது வரையில் 40,000க்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் 92,401 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்தோடு அதிகமானவர்கள் இசுரவேலின் தாக்குதல்களில் கட்டிட இடிபாடுகளில் சிக்கி காணாமல் போயுள்ளனர். காஸாவில் கொல்லப்பட்ட மொத்த எண்ணிக்கையில் (33 சதவீதம்) 16,456 க்கும் அதிகமானோர் - குழந்தைகள் என்றும் (18.4 சதவீதம்) 11,088 பேர் பெண்கள் எனவும் 8.6 சதவீதம் பேர் வயதானவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காஸாவில் கடந்த 10 மாதங்களாக நடைபெறும் போரில் கல்லறைகள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் உயிரிழக்கும் தங்களின் அன்புக்குரியவர்களை அடக்கம் செய்ய இடமில்லாமல் தவித்து வருகின்றனர் பாலஸ்தீனியர்கள். அத்தோடு முடிந்தவரை கொல்லைப்புறங்கள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள், உடைந்த கட்டிடங்களின் படிக்கட்டுகளுக்கு அடியில், சாலையோரங்களில் இறந்தவர்களின் உடல்களை அவர்களின் உறவினர்கள் புதைத்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

பாலஸ்தீன எழுத்தாளர் யூஸ்ரி அல்கோல் "காசாவின் தலைவிதி அதன் தெருக்கள், பூங்காக்கள் மற்றும் வீடுகளுடன் ஒரு பெரிய கல்லறையாக மாறுவது போல் தெரிகிறது, அங்கு உயிருடன் இருப்பவர்கள் தங்கள் முறைக்காகக் காத்திருக்கிறார்கள்" என்று எழுதியுள்ளார் அக்டோபர் 7 அன்று ஹமாஸ் இசுரவேல் மீது நடத்திய தாக்குதல்களின் போது இசுரவேலில் 1,139 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 200 க்கும் மேற்பட்டோர் சிறைபிடிக்



கப்பட்டனர். அவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## 2030க்குள் சீனா 500 தொடக்கம் 1000 அணு குண்டுகளைத் தயாரிக்கும்!

### அமெரிக்கா

ஆகத்து 21, 2024

ரஷ்யா, வட கொரியா மற்றும் குறிப்பாக சீனாவின் அச்சுறுத்தல்கள் குறித்து அமெரிக்காவின் அதிகரித்து வரும் கவலையை அடுத்து சீனாவை மையமாக வைத்து அணுசக்தி மூலோபாயத்



திட்டம் ஒன்றுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் அங்கீகாரம் அளிக்கிறார் என நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டது.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் சீனாவின் வளர்ந்து வரும் வளர்ச்சி அச்சுறுத்தலாகவே பார்க்கிறது. அதனை அடியோடு அழிக்க எந்த எல்லைக்கும் செல்லத்தயாராக உள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் சீனா தனது அணு ஆயுதங்களின் அளவை 500 முதல் 1,000 வரை அதிகரிக்கக்கூடும் என்று பென்டகன் நம்புகிறது. அதே நேரத்தில் ரஷ்யாவில் தற்போது 4,000 அணு ஆயுதங்கள் உள்ளன என அமெர்காவின் ஆயுதக் கட்டுப்பாட்டு சங்கத்தின் நிர்வாக இயக்குனர் டேரில் கிம்பால் கூறியுள்ளார்.

2035 ஆம் ஆண்டில் சீனாவின் இராணுவம் தொடர்ந்து வளரும் என்று வெளிப்படுத்தியுள்ளது. பெய்ஜிங்கின் மூலோபாயம் ரஷ்யாவுடனான வரம்பற்ற கூட்டாண்மையை அதன் வளர்ச்சிக்கு அடிப்படையாக கருதுகிறது.



இந்நிலையில்தான் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் இந்த ஆண்டு மார்ச் மாதம் ஒரு இரகசிய மூலோபாய அணுசக்தி திட்டத்திற் பச்சைக்கொடி காட்டினார். து முதல் முறையாக, சீனாவின் அணு ஆயுதங்களை விரிவாக்குவதில் கவனம் செலுத்துவதற்கான வாஷிங்டனின் மூலோபாயத்தை மறுவடிவமைத்தது தி நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்தது.

# இலங்கையைக் கண்காணிப்பதற்கு ஆணையைப் புதிப்பியுங்கள்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

ஆகத்து 27, 2024

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட கண்காணித்தல் மற்றும் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான ஆணையை எதிர்வரும் செப்டெம்பர்மாதக் கூட்டத்தொடரின்போது மீளப்புதுப்பிக்குமாறு மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகளிடம் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பின்னணியில், இலங்கையின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரத்தில் மிகமோசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சமகாலப்போக்குகள் உள்ளடங்கலாக நாட்டின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கினால் கடந்த வாரம் விரிவான அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பான தமது நிலைப்பாடு மற்றும் இலங்கை விவகாரத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்படவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை என்பவற்றை உள்ளடக்கிய மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரால் வெளியிடப்பட்ட புதிய அறிக்கையில் அடிப்படை சுதந்திரங்கள் சார்ந்து இலங்கை பல்வேறு புதிய அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்திருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2022 இல் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியின் விளைவாக வறுமை மட்டம் இரு மடங்கினால் அதிகரித்துள்ளது.

நாட்டிலுள்ள மொத்தக் குடும்பங்களில் கால்பங்கு குடும்பங்கள் உணவுப்பாதுகாப்பின்மை நெருக்கடிக்கு முகங்கொடுத்திருப்பதாக ஐ.நா மதிப்பிட்டுள்ளது. ஊழல் மோசடிகள் மற்றும் முறையற்ற பொருளாதார நிர்வாகம் தொடர்பான பொறுப்புக்கூறலும், ஜனநாயக மறுசீரமைப்புக்களும் இன்னமும் பெருமளவுக்குப் பூர்த்திசெய்யப்படவில்லை எனவும் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட கண்காணித்தல் மற்றும் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான பொறிமுறைக்கான ஆணையை மீளப்புதுப்பிக்குமாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்புநாடுகளிடம் உயர்ஸ்தானிகர் வலியுறுத்தியுள்ளார்.

அதனை நாம் மீளவலியுறுத்தும் அதேவேளை, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் மேற்குறிப்பிட்ட ஆணையை மீளப் புதுப்பிப்பதற்கு உறுப்புநாடுகள் ஒத்துழைப்ப வழங்கவேண்டும் எனக் கோரிக்கைவிடுக்கின்றோம் என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இலங்கையில் அடிப்படை சுதந்திரத்திற்கு மேலும் அச்சுறுத்தல்கள்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவின் பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி

ஆகத்து 28, 2024

இலங்கையில் அடிப்படை சுதந்திரத்திற்கு மேலும் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளமை ஐநா உயர்ஸ்தானிகரால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவின் பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் "இலங்கை அரசாங்கம் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளதாக சர்வதேச நாடுகளுக்கு காட்ட முயற்சிக்கப்படுகின்றது.

இலங்கையில் அடிப்படை சுதந்திரத்திற்கு மேலும் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளமை ஐநா உயர்ஸ்தானிகரால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை மேற்கோள்காட்டி, 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் வறுமை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரங்களின்படி தற்போது மூன்றில் ஒரு பங்கு மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மனித உரிமைகள் தொடர்பான உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில், மனித உரிமைகள் நிலைமையை ஆராய்வதில் பல்வேறு முறைகள் மூலம் ஏற்பட்டுள்ள தடைகளை ஆராய சர்வதேச சமூகத்தின் தலையீட்டிற்கான தற்போதைய பிரேரணை புதுப்பிக்கப்பட வேண்டும் என்று சபையின் உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் அமர்வில், தற்போதுள்ள தீர்மானத்தை புதுப்பிப்பதற்கு மேலதிகமாக, இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கடந்தகால துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசாங்க விமர்சகர்களுக்கு எதிராக அதிகாரிகள் புதிய அடக்குமுறைச் சட்டங்களைத் தேடி மிரட்டல் மற்றும் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.




இலங்கையின் 1983-2006 உள்நாட்டுப் போரின் போது நடந்த கடுமையான துஷ்பிரயோகங்களுக்கு அரசாங்கம் பொறுப் பேற்க மறுக்கிறது.

"நாட்டின் சமீபத்திய பொருளாதார நெருக்கடியின் மூல காரணங்களில் ஒன்றான ஊழல், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் நிர்வாகத் தோல்விகள் ஆகியவற்றிலும் இந்த வேரூன்றிய தண்டனையின்மை வெளிப்படுகிறது" என்று ஐநா அறிக்கை கூறுகிறது.

"பொலிசார் மற்றும் பாதுகாப்புப் படையினரால் தவறாக நடத்தப்படுவது தொடர்கிறது" என்றும் அறிக்கை கண்டறிந்துள்ளது.

ஜனவரி 2023 மற்றும் மார்ச் 2024 இற்கு இடையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 21 சட்டத்திற்கு புறம்பான கொலைகள், 26 தடுப்பு காவலில் ஏற்பட்ட மரணங்கள் மற்றும் 1,342 தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுப்புக்காவல்களை பதிவு செய்தது.

"கடத்தல், தன்னிச்சையான தடுப்புக்காவல், சித்திரவதை, தவறாக நடத்துதல் மற்றும் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் தமிழ் இனத்தைச் சேர்ந்த தனிநபர்களுக்கு எதிராக நடத்தப்படும் பாலியல் வன்முறை" போன்ற சமீபத்திய குற்றச்சாட்டுகளை ஐநா ஆய்வு செய்துள்ளது.

தமிழர்களுக்கு எதிராக அரசாங்கம் பல முறை பயங்கரவாத சட்டத்தைப் பயன்படுத்தியுள்ளது.

வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் ஐ.நா அல்லது வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் தொடர்பு கொண்டதற்காக பழிவாங்கலை எதிர்கொள்கின்றனர்.

போதைப்பொருள் எதிர்ப்பு பிரச்சாரத்தில் 121,957 பேரை அதிகாரிகள் தடுத்து வைத்துள்ளனர்.

ஆயிரக்கணக்கானவர்களை இராணுவத்தால் நடத்தப்படும் "புனர்வாழ்வு" மையங்களுக்கு அனுப்பியுள்ளனர்" என்றும் மீனாட்சி கங்குலி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

www.sangathamil.ca

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


AR
GROUP
ARASAN
RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


சங்கத்தமிழ்
இறுதி வணக்கம்
மானிட உரிமைக்குரல்
விராஜ் மெண்டிஸ்
சிறிலங்கா - யேர்மனி
01.04.1956 - 16.08.2024
தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் நியாயக்கோட்பாடுகளையும், தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்களது போரியற்சித்தாந்தங்களையும் ஏற்று, தமிழின அழிப்பிற்கான நீதித்தேடலில் உறுதியோடு பணியாற்றியமைக்காக இவரிற்கு எமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்
"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"
TAMIL EELAM
அனைத்துலகத் தொடர்பகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# உயிரிலும் உன்னதமானது

# எமது உரிமை
# எமது சுதந்திரம்
# எமது கௌரவம்

**-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -**



"எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது; வீர காவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவையெல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள். ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி; தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி; உலகத்தின் மனச் சாட்சியைத் தீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது?

திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் மண்ணுக்காக இறந்தான்; உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆனமா கலங்கும். ஆனால், நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன்; அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை; காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்துகொண்டிருக்கிறான்.

தமிழீத் தேசியத் தலைவரின் "எனது மக்களின் விடுதலைக்காக" என்ற நூலில் இருந்து.



மரகதம் வைரம் முத்து
புஷ்பராகம் மாணிக்கம் பவளம்
வைடூரியம் நீலம் கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
ல்ஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD Navien
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000




தமிழீழ விடுதலைப்புலிகளின்
Liberation Tigers Of TAMIL EELAM
மகளிர் படையணி
தொடங்கப்பட்ட நாள்
- 18.08.1985




Build Your Dream Home
SABESAN
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour Wind resistance
Termite Proof
Compare Traditional Building Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்தபடி மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா? அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# பொங்கும் தமிழாக மட்டுமல்லாது பொங்கும் தமிழர்களாகவும்...

*- புதவை இரத்தினதுரை*

எவனெவனோ
எதையெதையாயினும்
சொல்லிப்போகட்டும்.
நீ தொடர்ந்து பயணம் செய்க
உன் இலக்கு நோக்கி.
பயணவழி நாட்கள் சுகமானதல்ல.
வதை நிரம்பியது
வலி நிறைந்தது.
விடுதலை பெறுவதென்பது
பூப்பறிப்பதல்ல,
புல்லாங்குழல் வாசிப்பதுமல்ல
உயிர் விதைத்து முன்னேறுவது.
விலங்கறுக்க விரும்பாத மனங்களுக்கு
போராட்டம் சுமையானது.
தப்பித்துக் கொள்ளும் தங்களை
நியாயப்படுத்த
அடிக்கடி ஏதேனும் அலட்டுவர்.
கணக்கிலெடுக்காதே.
அவர்களால் முடிந்ததெல்லாம்.
போராட்டத்தை கொச்சைப்படுத்தும்
கதைகளும்,
சில கவிதைகளும்,
ஓரிரண்டு கட்டுரைகளும் மட்டுமே.
நாய்கள் குரைக்கட்டும்
தொடர்ந்து நடப்பீர்.
நிலவை நோக்கியல்லவா பயணம்?
சின்னப் பொறிமூட்டுங்கள் கண்ணில்
அது பெருநெருப்பாய் எரியட்டும்.
சிறுவிரலால் ஒரு துளிசிந்து
அது கடலாய்பரந்து அலையெற்றட்டும்.
உம்மால் முடியும்
பூமிப்பந்தையே நெம்பக் கூடிய ஈழத்தமிழரல்லவா.
நிமிர்ந்தெழுவீரானால்
நிச்சயம் முடியும் உம்மால்.
வல்லமை மிக்க வலியரே!
பொல்லாச் சுழிகிடந்தது போதும்
இழிவகற்ற எழுந்துகொள்வீர்.
"பொங்கு தமிழ்" என்று
இங்கொரு அக்கினிக்குஞ்சைப் பிரசவித்தோம்.
இன்று அகலச் சிறகுவிரித்துவந்து
கனடாவில் தரையிறங்கியுள்ளது
சாம்பலிலிருந்து உயிர்ப்புப்புறும் பீனிக்ஸ் பறவை.
திசையெங்கும் விடுதலைத்தீ மூட்டவல்ல
திறன் படைத்தது இது.
கனடியத் தமிழரே!
காலம் உமக்கொரு பணியளித்து காத்திருக்கிறது.
ஈழத்தமிழரிடம் இன்னும் அதிகமாய் எதிர்பார்க்கும்.
பொங்குதமிழன்று
"இராணி யூங்கா" வில் எழும்
குரலும்,
உயரும் கரங்களும்
புதிய செய்தியொன்றைப் பிரகடனம் செய்யட்டும்.
உலகெங்கும் பரந்தாலும் ஒன்றானோம்,
ஒரு குடையின் கீழே இன்றானோம் என்று
இருட்திரை கிழித்து எழுட்டும் வைகறை வெளிச்சம்.
ஈழத்தமிழர் அகதிகளல்லர்,
அனாதைகளும் அல்லர்,
வயிற்றுப் பிழைப்புக்காக
வந்திறங்கியவரும் அல்லர்.
எமக்கொரு தாய்மடி உண்டு
எலிவளையானாலும் தனிவளையாக
இருந்தோம் நாம்
இந்த வெள்ளைக்காரர் வந்திறங்கும் வரை.
வந்தவந் போகும் போது
இருந்தவனிடம் கொடுத்தேகினான்
அன்றிருந்து அந்தரித்துப் போனோம்.
ஏதிலிகளாக எல்லாநட்டுத் தெருக்களிலும்
அலையும் விதியென்றாச்சு எமக்கு.
மறாணும் இந்நிலை
மாற்றணும் இந்நிலையை.
கனடியத் தமிழர்களே!
காலம் இப்போது உம்கையில் அடைக்கலமென
வந்துளது
எடுத்து முத்தமிட்டபடி முன்னேறுங்கள்.
பொங்கு தமிழன்று "இராணி பூங்கா" வில்
கடலாய் திரள்வீர்
கனலாய் எழுவீர்.
ஒன்றானோம் நாங்கள் ஒரு கொடியில் பூவானோம்
என்றெழுந்து
வையப்பரப்புக்கு வாயடைக்கச் செய்யுங்கள்.
இராணி பூங்காவுக்கு
உங்கள் பிள்ளைகளையும் கூட்டிச் செல்வீர்
சின்னப் பூக்களின் நெஞ்சில்
தாயக நேசிப்பைப் பதியம் வைப்பீர்.
ஒரு யூதனைப் போல,
ஒரு சிக்கியனைப் போல
ஊரின் நினைவுகளுடன் ஒன்றச் செய்யுங்கள்.
வாழும்நாடு வேறெனினும்
தாயின்மடி தமிழீழம்தான்.
நீ எங்கேனும் சென்று விழுதிறக்கு
வேரைமட்டும் இங்கிருந்து வெட்டிவிடாதே.
எங்கள் துயருரைக்க,
பட்ட சோகத்தைச் சொல்ல,
உயிர் விதைத்து செய்யும் வேளியை விளக்க
பொங்கு தமிழை வசப்படுத்திக் கொள்வீர்.
அறிந்தவரே அறியாத பெருநெருப்பாய்
கனன்று கிடக்கிறது விடுதலைத்தீ
நீரூற்ற அணையாத நெருப்பிது.
பாதிதூரம் கடந்த பயணத்தில்
கொஞ்சம் காலாற இருக்கிறோம்.
காலாறுவதைக் கரைந்து போவதாக எண்ணி
சீண்டிப் பார்க்கின்றனர் சிலர்.
வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு.
கனடாவின் இராணி பூங்காவில்
பொங்கு தமிழன்று புயலே மையம் கொள்ளும்.
நாங்கள் தமிழர்கள்
தமிழரிலும் ஈழத்தமிழர்கள்.
ஒன்றே கொடி
ஒருவனே தலைவன்
பொங்கும் தமிழர்களாகப் புறப்படுவீர்.
எதிர்காலம் எம் பக்கம்.

24.09.2004 அன்று கனடிய தமிழ் வானொலி ஒலிபரப்பிய கவிதை






# ஆனையிறவுப் போர்

# விடுதலைப் போராட்ட வரலாற்றின் கடக்க வேண்டிய நெருப்பேரி!




தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆனையிறவுப் போர் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றது. இதன் முக்கியத்துவத்தை பரந்த, நீண்ட விடுதலைப் போரிலிருந்து தனிமைப்படுத்தியோ, ஆனையிறவு முகாம் தொடர்பான ஒரு குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கையாகக் (Operation) குறுக்கியோ பார்க்க முடியாது. கெரில்லாப் போர் முறைக்கும், முழுமையான மரபுப் போர் முறைக்கும் இடைப்பட்டதான அரைமரபுப் போர்முறையில் தொடர்ச்சியான தாக்குதல்கள் மூலம், ஆனையிறவு இராணுவ முகாமை அகற்றுதலே விடுதலைப் புலிகளின் போர்த் தந்திர மாக இருந்தது.

விடுதலைப் போரின் வெற்றிக்காக ஆனையிறவு முகாம் விரை வில் அகற்றப்படவேண்டியது. விடுதலைப் புலிகளின் போர்த் தந் திரோபாயத் திட்டத்தில் மிக அவசியமான கட்டமாக இருந்தது. ஆனையிறவு முகாம், யாழ்ப்பாணக் குடாநாட்டையும், வடபகுதி யின் ஏனைய பரந்த நிலப்பரப்புக்களையும், அடர்ந்த விரிந்த, கெரில்லாப் போராட்டத்திற்கு வசதியான பருவகால மழைக் காடுகளையும் இணைக்கின்ற இடத்தில் யாழ்ப்பாண ஏரியின் தென்கரையில் அமைந்துள்ளது. தரை மார்க்கமாக யாழ்ப் பாணக் குடாவையும், ஏனைய தமிழீழப் பகுதிகளையும் துண் டிக்கும் கேந்திர முக்கியத்துவம், ஆனையிறவு இராணுவ முகாமிற்கு உண்டு. தவிர, யாழ்குடாநாடு, முல்லைத்தீவு ஆகிய பிராந்தியங்களின், கிழக்குக் கடற் பகுதிகளில் சிறீலங்கா கடற் படையானது நடமாட்டங்களையும், ரோந்துகளையும், விநி யோகங்களையும், போர் நடவடிக்கைகளையும் புரிவதற்கும், விடுதலைப்புலிகளின் கடல் நடமாட்டத்தை உணவு, ஆயத தளபாட, எரிபொருள் விநியோகங்களை, இந்தியாவுடனான கடல் செலவுகளைக் கண்காணிப்பதற்கும், கட்டுப்படுத்து வதற்குமான, கடற்தளமாகவும் ஆனையிறவு முகாமின் விஸ் தரிப்பு விளங்கக் கூடியது. முன்னர் காலங்களில், சுங்கத் தடையாக இருந்த இம் முகாம், இந்திய இராணுவம் இருந்த காலத்தில் பலப்படுத்தப் பட்டும், பல நூறு யார்களுக்கு விஸ்தரிக் கப்பட்டும், கெலிமேடைகள் அமைக்கப்பட்டும் உறுதியான, நிரந்தர, வெற்றி கொள்ளக் கடினமான தளமாக நீண்டகாலக் கண்ணோட்டத்தில் அமைக்கப்பட்டது. இந்திய இராணுவ வெளியேற்றத்தின் பின்னர் இம்முகாம் மேலும் பலப்படுத் தப்பட்டு, ஒரு பற்றாலியன் படையினரைக் கொண்டதாகவும், முன்னிலைக் காவலரன்களை, பங்கர்களை, கண்ணிவெடி வயல்களைக் கொண்டதாகவும், ஆக்கப்பட்டது. ஆனையிறவு முகாமை சுற்றியுளள் பரந்த வெளிப்பகுதிகள் முகாமை நெருங் குவதற்கு கடினமான நில அமைப்பைக் கொடுத்தன. பனை மரங்களைக் கொண்ட வெளியான பகுதிகளும், பெரும்பாலான காலங்களில் வற்றிப் போய்க் கிடக்கும் கடல் ஏரிகளும், உப் பளங்களும், முகாமிலிருந்தும், விமானங்களில் இருந்தும் கண் காணிப்பதற்கும், தாக்குதல் செய்வதற்கும், வசதியை அளித் தன. அதேவேளை, முகாம் சுற்றி வளைக்கப்பட்டால், தென் பகுதியிலிருந்தும், ஏனைய வடக்குக் கிழக்கு இராணுவ தளங் களில் இருந்தும் உதவிப் படைகளை, உணவு, தளபாட விநி யோகங்களைக் கடற்படையினர் கடல்மார்க்கமாக செய்வதற் கான அனுகூலத்தைக் கொண்டதாகவும் ஆனையிறவு முகாம் காணப்பட்டது.

1991 யூலை மாதம் ஆரம்பம் முதல் ஆனையிறவு முகாம் மீதான, முற்றுகை, இறுக்கப்படவும், அதன் மீதான தாக்குதல் உக்கிரப்படுத்தப்படவும் செய்யப்பட்டது. மன்னார் சிலாபத்துறை முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது தரைப் படை, கடற் படை, ஆகாயப்படை ஆகியவற்றிற்கு எதிராக பரந்த வெளிகளில் நடைபெற்ற சண்டைகளின் போது பெற்ற அனுபவமும், திடீர்ப் பதுங்கு குழிகளை அமைத்துச் சண்டையிடுவதில் அடைந்த திற மையும் ஆனையிறவு முகாம் மீதான் தாக்குதலுக்கு தூண்டுத லாக அமைந்தன. மேலும், விடுதலைப் புலிகள் அண்மையில், அதிநவீன விமான எதிர்ப்புப் பீரங்கிகளைக் கைவரப் பெற்றதும் ஒரு காரணம் எனலாம். ஆகாயத் தாக்குதல்களை நடத்துவதற் கும், தரைப்படைகளின் நகர்வைப் பாதுகாத்து உதவுவதற்கும், காயம் பட்டவர்களை அகற்றுவதற்கும், விநியோகங்களுக்கும்,



புதிய உதவிப்படைகளை விரைவாக கொண்டுவந்து குவிப் பதற்கும் கெலிக்கொப்டர்களும் விமானங்களும் பயன்பட்டு வந்தன. இதுவரை காலமும், 2000, 3000 அடி உயரத்திற்குச் சுடக்கூடிய 50 கலிபர் துப்பாக்கிகளைப் பயன்படுத்திய விடு தலைப் புலிகள், 7000 அடி வரை சுடக்கூடியதும், தொடர்சியாக ஒரே நேரத்தில் பல் துப்பாக்கிகள் இயங்கக் கூடியதுமான பீரங்கி வகைகளைப் பெற்றதும் ஆனையிறவு முகாம் தாக்குதலுக்கு உந்துதலை அளித்த காரணமாக இருந்துள்ளது. வன்னிச் சண்டையின் போது விழுத்தப்பட்ட 2 கெலிகள், அப்பகுதியில் போரின் போக்கை மாற்றியது குறிப்பிடத் தக்கது.

நூற்றுக் கணக்கில் அருள் ரைபிள் கிரனைட்டுக்களையும், பசீலன் 2000, பசீலன் 5000 மோட்டார்களையும் றொக்கட் ஏவும் கிரனைட்டுக்களையும் முகாமிற்குள் செலுத்தி, முகாமைச் சின்னாபின்னமாக்கிய விடுதலைப் புலிகள், படிப்படியாக முகாமைச் சுற்றி வளைத்து, நெருங்கத் தொடங்கினர். திடீர்ப் பதுங்கு குழிகளை அமைத்தும், மரங்களின் பின்னால் நிலை எடுத்துப் போரிட்டும் முன்னேறினர். கண்ணிவெடி வயல் களைக் கடப்பதற்காக, கவசவாகனங்களாக மாற்றம் செய்யப் பட்ட புல்டோசர்களையும், உழவு இயந்திரங்களையும், பெங் களூர் ரோபிடோ என்ற நீளக் குழாய்க் குண்டுகளையும் பயன்படுத்தினர். முகாமிற்குள் விநியோகங்களை வீசவோ, முகாமிற்குள் இறந்த, காயம்பட்டவர்களை அகற்றவோ முடி யாது கெலிக்கொப்டர்கள் திணறின. 5000 அடிக்கு மேலேயே கெலிக்கொப்டர்களும், விமானங்களும் பறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வளவு உயரத்தில் இருந்தவாறு சுடத லோ, குண்டுகளை வீசுதலோ, சாத்தியமான காரியமாகப் படவில்லை. தரைப்படைக்கு உதவுவதற்காக அதி உயரத்தில் இருந்து இறங்கி வந்த விமானங்களும், கெலிக்கொப்டர்களும் கடும் தாக்குதலுக்கு உள்ளாகின. 2 கெலிக்கொப்டர்களும், 1 ஆகாயப்படை விமானமும், மோசமான காயங்களுக்கு உள் ளாகியோ, சேதமாக்கப்பட்டோ விரட்டியடிக்கப்பட்டன. விடு தலைப் புலிகள், முகாமிலிருந்து 200 யார் தூரத்திற்கு நெருங்கி வந்திட்ட வேளையில், தரைமார்க்கமானதும், ஆகாயமார்க்க மானதுமான உதவி கிடைக்காத நிலையில் கடல்வழி ஆன மார்க்கத்தை அதிகூடியளவு பயன்படுத்த சிறீலங்கா அரசின் ஆயுதப்படைத் தலைமைப்பீடம் தீர்மானித்தது.

8000 க்கும் மேற்பட்ட படையினர், ஆனையிறவிலிரருந்து 8 கி.மீற்றர் தொலைவிலுள்ள, யாழ் குடாநாட்டின் கிழக்குக் கரையிலுள்ள வெற்றிலைக்கேணியில் தரை இறக்கப்பட்டனர். போர்க் கப்பல்கள், பீரங்கிப் படைகுகள், வேகப்படகுகள், வள் ளங்கள், டிங்கிகள், என்று 50 க்கு மேற்பட்ட கடற்படைக் கப் பல்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த இராணுவ நடவடிக்கை பலவேகய என்று பெயரிடப்பட்டு மேஜர் ஜெனரல் டென்ஸில் கொபேக்கடுவவின் தலைமையில் ஒப்புவிக்கப்பட்டது. அவ ருக்கு உதவியாக, யாழ்ப்பாண தளபதியான விஜயா விமல ரத்னா அனுப்பப்பட்டார். கவசவாகனங்கள், பவல் வாகனங்கள், பீரங்கிகள், ட்ரக் வண்டிகள், உழவு இயந்திரங்கள் என்று பலவகை கனரக வாகனங்களும் இறக்கப்பட்டன. ஆனையிற வின் வீழ்ச்சி வடபகுதி முழுவதின் வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதை உணர்ந்த அரசாங்கம், அதனை எப்பாடுபட்டாயினும் உடனடியாக தடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தது. விடு தலைப் புலிகளின் விடுதலைப் போர்முறைத் திட்டம், வடபகுதி






முழுவதையும் முதலில் விடுதலை செய்யப்பட்ட பிரதேசமாக்கி அங்கு தமது நிலையை உறுதிப்படுத்திய பின்னர் படிப்படியாக கிழக்கு பகுதியை மீட்டெடுத்தல் என்பதாகவே காணப்பட்டது. விடுவிக்கப்பட்ட வடபகுதி, சிறந்த அடித்தளமேடையாகக் கருதப்பட்டது. எனவே இச்சண்டை, ஒரு முகாமிற்கு எதிரான சண்டை என்ற நிலையிலிருந்து. முழு அளவிலன போர் என்ற பரிமாணத்தை எடுத்தது. அதிகூடிய இராணுவ எண்ணிக்கை பலம், போர்க்கருவிகள் பலம், கூடிய வெடிமருந்து சக்தி (Fire Power) ஆகியன மூலம் ஆனையிறவு முகாமின் வீழ்ச்சியை தடுக்க அரசாங்கம் முனைந்தது.

இப்பாரிய படை எடுப்பை எதிர்கொள்ள விடுதலைப் புலிகள் முடிவு செய்தனர். அதேவேளை, 800 க்கு மேற்பட்ட இராணுவத்தினரை உள்ளடக்கியும், கடந்த சில மாதங்களாக, ஆயதங்களாலும், வெடிமருந்துகளாலும், உணவுப்பொருட்களாலும் நிரப்பப்பட்டும், கனரக வாகனங்களையும், பீரங்கிகளையும் உடையதாயும், நன்கு அரண் இடப்பட்டும் இருந்த ஆனையிறவு முகாமைக் கைப்பற்றி, புலிக்கொடியினை ஏற்ற விடுதலைப் புலித்தலைமைப் பீடம், 4000 க்கு மேற்பட்ட விடுதலை வீரர்களை அங்கு குவித்தது. சிறீலங்கா அரசாங்கம் திருகோணமலை, மட்டக்களப்பு, அனுராதபுரம், கொழும்பு, குடாநாடு ஆகியவற்றிலிருந்து உதவிப் படைகளைப் பெற்றது போல், விடுதலைப் புலிகளும், உதவிப் படைகளை பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைத்தனர். விடுதலைப் புலிகளின் ஆண், பெண் பிரிவினர் வீராவேசமாக போரிட்டனர். கரும்புலிகளின் தற்கொலைத் தாக்குதல்களும், பெருந் தொகையாகக் குவிக்கப்பட்ட இராணுவத்தினரிடை நடாத்தப்பட்டு, பாரதூரமான அழிவுகளை ஏற்படுத்தின. தளபதி பால்ராஜின் தலைமையில், ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் நடாத்தப்பட்டது. தளபதி பால்ராஜ், அதிநுட்பமான போர்த் தந்திரோபாயங்களை வகுத்து, அவற்றைத் திறம்பட நடத்தி முடிப்பவர் என்று பேர் எடுத்தவர். அதேவேளை, கடற்கரையில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கையும், தடைப்படுத்தும் நடவடிக்கையும், பல்வேறு தலைமைகளின் கீழ் நடாத்தப்பட்டன. விடுதலைப் புலிகளின் விசேட கொமாண்டோப் பிரிவினர், தளபதி சொர்ணத்தின் தலைமையில், இராணுவ விசேடப் பணிக்கான கொமாண்டோக்களோடு, கடற்கரையில் மோதி, பலதடவைகள் இராணுவ பலத்தை அழித்து பின்வாங்கி ஓடச் செய்தனர். விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பின் விளைவாக, 8000 க்கு மேற்பட்ட படையினரின் நகர்தல், இராணுவ அதிகாரிகள் வர்ணித்தது போல அங்குலம் அங்குலமாகவே இருந்தது. கண்ணிவெடியில் சிக்கி பலர் கால்களை இழந்தனர். ஸ்னைப்பர் தாக்குதலில் பலர் இறந்து போயினர். நேரடி மோதல்களின் விளைவாக நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்னர். 1000 க்கு மேற்பட்ட இராணுவத்தினர், ஆனையிறவு முகாமிற்கு உள்ளேயும், கடற்கரைப் பகுதியிலும் கொலையுண்டனர். பல அதிகாரிகள் பலியாகினர். அதேயளவு தொகையினர் படுகாயம் அடைந்தனர். கொழும்பு வைத்திய சாலைகள் நிரம்பி வழிந்தன. 100 க்கு மேற்பட்ட அம்புலன்ஸ் வாகனங்கள் அவசர சேவைக்கு அமர்த்தப்பட்டன. 10 ம் திகதி ஆரம்பித்த இந்தப் பாரிய இராணுவ நடவடிக்கையின் போது, 24 நாட்களின் பின்னர், அரசபடைகள், முகாமின் கிழக்குப் பகுதியை உடைத்து உள்நுழைந்தாக அரசாங்கம் அறிவித்துள்ளது. “ஆவர்கள் உள்நுழைந்து ஆனையிறவு முகாமுக்குள் அல்ல; தங்களது சவச்சாலைக்குள்” என்று விடுதலைப் புலிகளின் பேச்சாளர் இதனை வர்ணித்துள்ளால். அங்கு சுற்றி வளைப்பில் அகப்பட்டிருக்கும் 800 இராணுவத்தினரை மீட்பதற்காக அல்ல; இவர்களும் அப்பொறிக்குள் அகப்படுபதற்காகவே சென்றுள்ளனர். “சிறீலங்கா அரசின், இராணுவ சாகசம் பெரும் அழிவில் முடியப்போகின்றது” எனவும் அப்பேச்சாளர் அன்று தெரிவித்துள்ளார்.





ஆனையிறவு முகாமின் கிழக்குப் பகுதி முற்றுகையை விடுதலைப் புலிகள் தளர்த்தியது. உத்திரீதியான தந்தர நகர்வு என்றே கருதவேண்டும். முகாமின் தெற்கு, வடக்கு, மேற்குப் புறங்களில் முகாமின் வெளிப்புறத்தில், நேருக்கு நேரான கைகலப்புகள் இடம்பெற்றுதுடன௱ . கடும் சண்டைகள் நடைபெறுகின்றன. இதுவரை விடுதலைப்புலிகளின் தரப்பில் 400க்கு மேற்பட்டோர் களத்தில் வீரமரணம் அடைந்துள்ளனர். அன்றைய நிலையில் கெலிகொப்டர்கள் இறங்கமுடியவில்லை. சிறீலங்காவின் 8000 இராணுவத்தினரும் மீண்டும் பெரும் அழிவுகளுடன் வந்தவழியே வெற்றிகரமாக பின்வாங்க வேண்டும். அல்லாது போனால் பொறிக்குள் அகப்பட்ட எலிகளைப் போல் அங்கே முழுவதுமாக அழிகப்படுவர். அல்லது சரண் அடையவேண்டும். ஒரே மார்க்கமான கடல் வழிப் பாதையைத் தடைசெய்வதற்கும், கடற்படையினரோடு மோதுவதற்கும் கடற்புலிகளின் பெரும் அணி கிழக்கு கடற்கரையோரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த நிலையில், உதவிப் படைகளோ, விநியோகங்களோ, தடைப்படுத்தப்பட்ட நிலையில், ஆனையிறவு முகாமின் வீழ்ச்சியோ, அங்கு அகப்பட்டிருக்கும் இராணுவத்தினர் அழிக்கப்படுவதோ நிச்சயமாயினும், எப்போது என்பதே கேள்விக்குறியாக இருந்தது. விடுதலைப் புலிகளின் பேச்சாளர் குறிப்பிட்டது போல் ஆனையிறவுக்கான சண்டை முடியவில்லை; இது எமது மண்ணில் சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பின் முடிவுக்கான ஆரம்பமானது. 22.04.2000 ஆம் ஆண்டு ஆனையிறவுப் படைத்தளம் தமிழீழ விடுதலைப்புலிகளால் வெற்றிகொள்ளப்பட்டது.

# இலங்கையில் வலிந்து காணாமல் போனவர்களின் குடும்பங்கள் துன்புறுத்தப்படுகின்றனர்!

## மனித உரிமை கண்காணிப்பகம்

30.08.2024

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து துன்புறுத்துவதாக சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம்சாட்டியுள்ளது.



சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பாதுகாப்புப் படையினர் கண்காணிப்பு மிரட்டல் பொய்யான குற்றச்சாட்டுகள் வன்முறை மற்றும் தன்னிச்சையான கைதுகள் மூலம் குடும்பங்களை தொடர்ந்து துன்புறுத்துகின்றனர்.

ஆகஸ்ட் 29 2024 அன்று திருகோணமலையில் உள்ள நீதி மன்றம் ஆகஸ்ட் 30 அன்று பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினத்தைக் குறிக்கும் வகையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஊர்வலம் நடத்துவதைத் தடை செய்யுமாறு பொலிசாரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டது.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அன்றாட வேதனையை அனுபவிக்கிறார்கள். இதற்கு காரணமான அரச அமைப்புகள் அவர்களை மௌனமாக்க முயற்சி செய்கின்றன என என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான துணை இயக்குநர் மீனாட்சி கங்குலி கூறினார். “நூற்றுக்கணக்கான தாய்மார்கள் மனைவிகள் மற்றும் பலர் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியாமலேயே காலமானார்கள், மேலும் பலர் நீதியைப் பார்க்க அவர்கள் வாழ மாட்டார்கள் என்ற அச்சத்தை வெளிப்படுத்துகிறார்கள்.”என அவர் தெரிவித்தார்.

உலகில் அதிகளவானவர்கள் பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று, (இடதுசாரி ஜேவிபி கிளர்ச்சி (1987-89) மற்றும் அரசாங்கத்திற்கும் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (1983-2009) இடையிலான உள்நாட்டுப் போரின் போது காணாமல் போனவர்கள்). இலங்கை அதிகாரிகள் பல தசாப்தங்களாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தலைவிதியை வெளிப்படுத்தவோ அல்லது அதற்குப் பொறுப்பானவர்கள் மீது வழக்குத் தொடரவோ மறுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் சர்வதேச விசாரணைகளிற்கு வேண்டுகோள் விடுக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், குறிப்பாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் செயற்படுபவர்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது துன்புறுத்தப்படுவது குறித்து தெரிவித்திருந்தார்.

ஐக்கிய நாடுகளுடன், இராஜதந்திரிகள் உட்பட சர்வதேச செயற்பாட்டாளர்களுடன் ஈடுபாட்டை கொண்டுள்ள காணாமல் போனவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது, துன்புறுத்தப்படுவது குறித்து தெரிவித்திருந்தார்.

கடந்த ஜனவரி உட்பட சமீபத்தில் பாதுகாப்பு படையினர் இழைத்த ஆட்கடத்தல், கண்மூடித்தனமான தடுத்துவைப்பு, சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் குறித்தும் மனித உரிமை ஆணையாளர் ஆராய்ந்தார்.

காணாமல்போகச் செய்யப்படல் போன்ற விடயங்களுக்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட ஆண்களே அனேகமாக இவ்வாறான துன்புறுத்தல்களை எதிர்கொண்டனர்.

மே மாதம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வடக்கு மற்றும் கிழக்கு இலங்கை முழுவதும் காணாமல் போனவர்களின்



உறவினர்களை சந்தித்தது.

பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களின் மனைவிகள் அல்லது தாய்மார்கள். அவர்கள் தொடர்ந்து துஷ்பிரயோகங்களின் மாதிரியை விவரித்தனர். ஆர்ப்பாட்டங்களில் கைது செய்யப்பட்ட பின்னர் பலர் நீதிமன்ற நடவடிக்கைகளை எதிர்கொள்கின்றனர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான பொலிஸ் வன்முறையின் விளைவாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மூவர் உட்பட.

2009ஆம் ஆண்டு இராணுவத்திடம் சரணடைந்த தனது கணவரின் கதி என்னவென்பதை அறிவதற்காக போராடும், பிரச்சாரம் செய்யும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் பொலிஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு விசேட அதிரடிப் படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு அமைப்புகளின் தொடர்ச்சியான கண்காணிப்பில் இருப்பதாக நம்புவதாகக் கூறினார். இராணுவம். தன்னைப் பற்றிய தகவல்களுக்கு அண்டை வீட்டாருக்கு பணம் கொடுக்க முன்வருவதாகவும் அவளை சமூகத்திலிருந்து தனிமைப்படுத்த வடிவமைக்கப்பட்ட தந்திரங்களில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

தன்னை பற்றி தகவல்களை பெறுவதற்காக அண்டை வீட்டாரிற்கு இராணும் பணம் வழங்க முன்வந்ததாக தெரிவித்த அவர் தன்னை சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தவே இந்த நடவடிக்கை என தெரிவித்தார்.






# 09.09.1990 சத்துருக்கொண்டான் இனப்படுகொலை

மட்டக்களப்பு நகரிலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் வடக்குத் திசையில் சத்துருக் கொண்டான் கிராமம் அமைந்துள்ளது. சத்துருக் கொண்டான் எல்லைக் கிராமங்களாக திராய்மடு, அரசையடி போன்ற கிராமங்கள் அமைந்துள்ளன. சிறிய குளத்தின் கீழ் வயல் நிலங்களை உள்ளடக்கி இக்கிராமம் அமைந்துள்ளது.

1990களின் ஆரம்பத்தில் உள்நாட்டு யுத்தம் மீண்டும் தீவிரமடைந்ததனைத் தொடர்ந்து சத்துருக்கொண்டானில் பாரிய இராணுவ முகாமினை சிறீலங்கா இராணுவத்தினர் அமைத்தார்கள். இதனால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், கோயில்களிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்தார்கள். இவ்வாறு தஞ்சமடைந்த மக்களை மீண்டும் அவர்களின் வீடுகளில் சென்று குடியமருமாறு இராணுவத்தினர் கூறியதனைத் தொடர்ந்து, மக்கள் தங்களின் வீடுகளில் குடியமர்ந்தார்கள். இராணுவத்தின் கூற்றை நம்பிய தத்தமது வீடுகளில் வசிக்க வந்த மக்களனைவரும் கைது செய்யப்பட்டார்கள்.




கைது செய்யப்பட்டவர்களில் எண்பத்தைந்து பேர் பெண்கள். இவர்களை முகாமிலிருந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் பாலியல் வல்லுறவிற்குற்படுத்திபின், அவர்களின் மார்பகங்கள், கை, கால் போன்றவற்றினை வெட்டி மிக மோசமான முறையிற் சித்திர வதை செய்து படுகொலை செய்தார்கள். கைது செய்யப்பட்ட ஐந்து குழந்தைகள் உட்பட அறுபத்தெட்டுச் சிறுவர்களையும் மோசமான சித்திரவதைகளின் பின் சுட்டுக்கொலை செய்ததுடன், பதினேழு பேரளவிலான ஆண்களின் அங்கங்களை வெட்டிச் சித்திரவதை செய்து படுகொலை செய்தார்கள். மொத்தமாக இருநூற்றைந்து பேர் இச்சத்துருக்கொண்டான் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்.




இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்களில் இருபத்தொரு வயதான கந்தசாமி கிருஸ்ணகுமார் மட்டுமே காயங்களுடன் தப்பி வந்து சம்பவத்தினை வெளிப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மக்கள் அமைப்பு சம்பவத்தினை வெளிப்படுத்தியது. ஆனால் இராணுவத்தினர் இவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறவில்லை எனத் தெரிவித்ததுடன், மக்கள் அமைப்பின் தலைவரான அருணகிரிநாதன் அவர்களை மிரட்டி இவ்வாறான சம்பவம் ஒன்று நடைபெறவில்லை என எழுத்து மூலம் பொய் அறிக்கையினைத் தருமாறு வற்புறுத்தினர். இதனையடுத்து மக்கள் அமைப்பின் தலைவர் தனது பதவியினைத் துறந்தார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இ.நாகம்மா - வீட்டுப்பணி - 26
02. இ.தீபா - 10
03. இ.ஜெகதீசன் - 10
04. ஜி.குமுதினி - 12
05. ஜி.நேசம்மா - 25
06. ஜி.தேவராசி - 27
07. ஜி.சந்திரியா - 19
08. ஜி.சீனித்தம்பி - 70
09. ஜி.வனிதா - 12
10. ஈ.ஜீவநாதன் - 30
11. யு.மரியமுத்து - வீட்டுப்பணி - 33
12. யு.கோபிக்கண்ணன் - 12
13. யி.சீனித்தம்பி - -
14. உ.காளிமுத்து - சுயதொழில் - 55
15. உமைத்தம்பி – 70
16. நல்லையா இரமச்சந்திரன் - சுயதொழில் - 44
17. க.நல்லையா - சுயதொழில் - 72
18. க.சுரேஸ்கரன் - 11




19. கந்தன் இளையதம்பி - 55
20. கமலா - 09
21. கணபதிப்பிள்ளை தங்கமுத்து - சுய தொழில் - 46
22. பி.கந்தசாமி - 29
23. பி.கமலநாதன் - 09
24. பி.கவிதா - 12
25. பி.தமேந்தினி - 04
26. பி.ஆச்சிமுத்து - 76
27. பி.பொன்னம்மா - 70
28. பி.சந்தனம் - 37
29. பி.சிறிலட்சுமி - 18
30. பி.வினோதினி - 12
31. பி.வசந்தி - 23
32. பிரபா - 02
33. ரி.டிலானி - 05
34. ரி.நந்தினி - 16
35. ரி.நாதன் - 12
36. ரி.நாகேஸ்வரி - 37
37. ரி.நிதர்சினி - 12
38. ரி.குகன் - 10
39. ரி.கிருபாகரன் - 03
40. ரி.கணமணி - 32
41. ரி.கண்ணன் - 25
42. ரி.பூபாலப்பிள்ளை - 65
43. ரி.பரம்சோதி - 37
44. ரி.பிரதீபன் - 05
45. ரி.தில்லையம்மா - 63
46. ரி.மகாலட்சுமி - 31
47. ரி.மலை - 55
48. ரி.ஜெயக்காந்தன் - 10
49. ரி.ஜெகன் - 09
50. ரி.மோகனச்சந்திரன் - 27
51. ரி.செல்வா - 07
52. ரி.சிறி - 28
53. ரி.விஜயகுமார் (குமரன்) - 08
54. ரி.விஜயலட்சுமி - 29
55. ரி.வசந்தி - 01
56. ரி.ராசேந்திரன் - 04
57. ஐ.முருகன் - 65
58. வை.தங்கம்மா - 38
59. வைரமுத்து அற்புதவடிவேல் - சுய தொழில் - 46
60. த.கணபதிப்பிள்ளை - 50
61. தம்பிப்பிள்ளை 72
62. தம்பிஜயா கிருபைரத்தினம் - சுயதொழில் - 50
63. ம.செல்வநாயகம் - 55
64. மு.ராமையா - 70
65. ஆர்.கமலராஜ் - 11
66. ஆர்.நேசம்மா - 62
67. ஆர்.சுதாகரன் - 10
68. ஆர்.விஜி - 08
69. ஆர்.வசந்தி - 15
70. அழகையா நாகரெட்ணம் - வீட்டுப்பணி - 16
71. அழகையா மஞ்சுளா - வீட்டுப்பணி - 14
72. அழகையா சௌந்திரராஜன் - மாணவர் - 12
73. ஜெ.விஜயலட்சுமி - 10
74. ஜெ.ரமணி - 02
75. கே.மூத்ததம்பி - 79
76. கே.இளையதம்பி - 55
77. கே.ஈழன் - 15
78. கே.நாகரட்ணம் - 40
79. கே.நல்லையா - 72
80. கே.நல்லம்மா – 66
81. கே.கரிகரன் - 08
82. கே.கதிர்காமத்தம்பி - 75
83. கே.கதிர்காமத்தம்பி - 68
84. கே.குமுதா - 23
85. கே.கமலன் - 06
86. கே.கீதா - 12
87. கே.கிருஸ்ணபிள்ளை - 14
88. கே.கண்ணன் - 10
89. கே.பாக்கியம் - 46
90. கே.தாரணி - 04
91. கே.தம்பையா - 65
92. கே.தங்கம்மா - வீட்டுப்பணி - 75
93. கே.தங்கவேல் 26
94. கே.அரசம்மா - 60
95. கே.நேசம்மா - 48
96. கே.சதீஸ் - 04
97. கே.சியாமளா - 13
98. கே.சின்னமுத்து - 66
99. கே.சிவதர்சன் - 05
100. கே.சவுந்தரம் - 38
101. கே.விமலா - 02
102. கே.வசிகலா - 13
103. கே.ராசாத்தி - 12
104. கே.ரமேஸ்கரன் - 07
105. பெரியதம்பி சுயதொழில் 75
106. தேவி - 32
107. செபஸ்லின் செல்வநாயகம் - கூலித் தொழில் - 45
108. வேணுராஜ் - 25
109. லெட்சுமி - சுயதொழில் - 48
110. ஞா.சௌந்தரராயன் - 26
111. சாந்திமதி - தனியார்தொழில் - 20
112. சாமித்தம்பி அழகையா - கூலித்தொழில் - 34
113. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை - சுய தொழில் - 68
114. சீனி கோபால் - 57
115. சித்திராதேவி - 29
116. சிவதர்சினி - 04
117. வி.நல்லையா - 27
118. வி.பூமணி - 45
119. வி.யோகிவடிவேல் - மாணவர் - 06
120. வி.சர்மிளா - மாணவர் - 08
121. வி.சாந்திமதி - 20
122. வி.லட்சுமி - 48
123. இரட்ணராஜா ருக்தி - 06
124. ஏ.ஜீவா - 15
125. எ.உமைத்தம்பி - 70
126. ஏ.நவரட்ணம் - 45
127. ஏ.மஞ்சுளா - 18
128. ஏ.ஆத்தப்பிள்ளை - 72
129. ஏ.அழகையா - 10
130. ஏ.அருள் - 09
131. ஏ.பொன்னுத்துரை - 62
132. ஏ.சுதா - 09
133. ஏ.சீத்தா - 18
134. எஸ்.இந்திராணி - 10
135. எஸ்.ஜீவமலர் - 25
136. எஸ்.நாகதேசி - 12
137. எஸ்.நிர்மலா - 13
138. எஸ்.நல்லையா - 45
139. எஸ்.கந்தசாமி - 29
140. எஸ்.காசிபதியர் - 60
141. எஸ்.கஜேந்தினி - 02
142. எஸ்.கவிதா - 09
143. எஸ்.குணரட்ணம் - 33
144. எஸ்.பாலிப்போடி - 62
145. எஸ்.பிரியா - 03 மாதம்
146. எஸ்.புண்ணியமூர்த்தி - 13
147. எஸ்.தங்கம்மா - 57
148. எஸ்.தங்கேஸ்வரி - 24
149. எஸ்.தவகுணேஸ்வரன் - 25
150. எஸ்.மகேஸ்வரி - 28
151. எஸ்.மலர் - 09
152. எஸ்.அழகையா - 50
153. எஸ்.யோகராசா - 14
154. எஸ்.நேசம் - 52
155. எஸ்.பொன்னம்பலம் - 55
156. எஸ்.பொன்னம்மா - 24
157. எஸ்.தெய்வானை - 45
158. எஸ்.செல்வராசா - 31
159. எஸ்.ஞானேஸ்வரி - 38
160. எஸ்.சபாபதிப்பிள்ளை - 70
161. எஸ்.சுரேஸ் - 02
162. எஸ்.சறோசாதேவி - 28
163. எஸ்.சின்னப்பிள்ளை - 35
164. எஸ்.சின்னத்தம்பி - 27
165. எஸ்.சீவரத்தினம் - 12
166. எஸ்.வடிவேல் - 65
167. எஸ்.விஜயன் - 01
168. எஸ்.வினோதரன் - 05
169. எஸ்.வள்ளிப்பிள்ளை - 75
170. எஸ்.ராசலிங்கம் - 58
171. எஸ்.ரவீந்திரன் - 21
172. எய்.நாகரெட்ணம் - சுயதொழில் - 45
173. எய்.சுதா - மாணவர் - 09
174. என்.இராசம்மா - 70
175. என்.குமுதினி - 18
176. என்.பாக்கியம் - 66
177. என்.பாலாத்தை - 70
178. என்.பிரேமா - 18
179. என்.பிரதீபன் - 05
180. என்.தர்சினி - 06
181. என்.தீபன் - 09
182. என்.ஜெகன் - 12
183. என்.சொர்ணம்மா - 44
184. என்.வேணுதாஸ் - 03 மாதம்
185. என்.வேணுராஜ் - 04 மாதம்
186. என்.ஞானரத்தினம் - 32
187. என்.சித்திராதேவி - 22
188. என்.சிவதர்சன் - 25
189. எம்.பாக்கியம் - வீட்டுப்பணி - 53
190. எம்.பரமேஸ்வரி - 32
191. எம்.சைலயா - 07
192. எம்.வைரமுத்து - 55
193. எம்.துளசி - 04
194. எம்.பெரியதம்பி - 75
195. எம்.தேவகி - 25
196. எம்.சுபோசினி - 12
197. எம்.சிவஞானம் - 35
198. எம்.விஜயன் - 19
199. எம்.ராசா – 24

சன்றனர். கொண்டுசெல்லப்பட்ட இருபத்து மூன்று இளைஞர்களும் கடும் சித்திரவதைகளினால் உயிரிழந்தார்கள். 12.09.1990 அன்று சித்திரவதையினால் உயிரிழந்த அனைவரது உடல்களையும் தம்பிலுவில் கிராமத்தில் ஒரே குழியினுள் போட்டுப் புதைத்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி செல்வராசா - 30
02 கனகசூரியர் கோபாலசிங்கம் - 28
03 கனகரத்தினம் தங்கவேல் - 19
04 கந்தப்போடி புஸ்பராசா - 23
05 காசிப்பிள்ளை சிவகுமார் - 31
06 குழந்தைவேல் பொன்னுத்துரை - 26
07 குலசேகரம் செல்வநாயகம் - 26
08 கணபதிப்பிள்ளை நேசதுரை - 22
09 குணரத்தினம் முரளிதரன் - 21
10 குணரத்தினம் சுதாகரன் - 23
11 துரையப்பா நடேசன் - 23
12 தம்பிமுத்து பாக்கியராசா - 27
13 தம்பிராசா விவேகானந்தன் - 22
14 மயில்வாகனம் பரமேஸ்வரன் - 27
15 ஆறுமுகம் நடேசன் - 29
16 வெள்ளைப்பொடி தவராசா - 23
17 ஞானப்பிரகாசம் யூவானில் - 22
18 சதாசிவம் தங்கத்துரை - 23
19 சிவநாதபிள்ளை தங்கத்துரை - 23
20 வீரக்குட்டி தங்கவேல் - 27
21 வரதராசன் வரதீஸ்வரன் - 20
22 இராசமாணிக்கம் தியாகராசா - 23
23 ஏகாம்பரம் தமிழ்வாணன் - 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வந்தாறுமூலைப்படுகொலை 05,23.09.1990

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக் களப்பு அமைந்துள்ளது. இம் மாவட்டத்தில் வந்தாறுமூலைக் கிராமத்தில் கிழக்குப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இலங் கையிலுள்ள பதின்மூன்று பல்கலைக்கழகங் களில் கிழக்குப் பல்கலைக்கழகமும் ஒன் றாகும். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மூவா யிரம் மாணவர்கள் வரை ஆண்டு தோறும் கல்வி கற்கிறார்கள்.

இவர்களில் ஏறக்குறைய ஐநூறு முதல் எழு நூறு வரையான பட்டதாரிகள் ஆண்டு தோறும் வெளியேறுகின்றார்கள். இப்பல் கலைக்கழகத்தில் கலை, வர்த்தகம், முகா மைத்துவம், விஞ்ஞானம், பௌதீகவியல், கணினி, இசை, நடனம் போன்ற பல்வேறு துறைகள் தமிழ்மொழி மூலம் கற்பிக்கப் படுகின்றன.

1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து மட்டக் களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் பொது மக்கள் மீது சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்கின. இதன் விளைவாகப் பொதுமக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்தார்கள்.

உலகத்தில் பல்கலைக்கழகங்கள், வைத்திய சாலைகள் பாடசாலைகள் வணக்கத்தலங்கள் போன்றவற்றில் பொதுமக்கள் தங்களைப் பாது காப்பதற்காகச் தஞ்சமடைவது வழக்கமாகும்.

அவ்வாறே கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் பொதுமக்கள் தஞ்சமடைந்தனர். 05.09.1990 அன்று சத்துருக்கொண்டான் .ராணுவ முகாமி லிருந்து பெருந்தொகையான இராணுவத் தினர் வாகனங்களில் பல்கலைக் கழகத்திற்கு வந்து பல்கலைக்கழகத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த இளைஞர்களில் 158 பேரைக் கைதுசெய்து கைகள், கால்கள் கட்டி இராணுவ வாகனங்களில் ஏற்றி, எல்லை யோரக் கிராமங்களுக்குக் கொண்டு சென்று, துப்பாக்கிகளால் சுட்டும், ஏனைய கூரிய ஆயு தங்களினால் தாக்கிப் படுகொலை செய்தனர்.

23.09.1990 இல் மீண்டும் கிழக்குப் பல் கலைக்கழகத்திற்கு வந்த இராணுவத்தினர் அங்கு தஞ்சமடைந்திருந்த 16 பொதுமக்களை கைதுசெய்து கொண்டு சென்று, முதல் நாள் போன்றே இவர்களையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமது உயிர் களைப் பாதுகாப்பதற்காக தமது வீடுகள், சொத் துக்கள் உட்பட அனைத்து உடமைகளையும் இழந்து மூன்றுவேளை உணவினை ஒழுங் காக உண்ண முடியாமல் அகதிகளாக இருந்த பொதுமக்களில் இருநூற்றி இருபத்தாறு பேர் இராணுவத்தினரால் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். அத்துடன், பலர் காணாமல் போனார்கள்.




இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இளையதம்பி பாக்கியநாதன் - தொழிலாளி - 22
02. இராசையா ஜெயநாதன் தொழிலாளி 35
03. இராசையா டேவிட் - சாரதி - 34
04. இராசதுரை கனகசபை - கடற்றொழில் - 18
05. நாகராசா ரகுநந்தன் - தொழிலாளி - 27
06. நடராசா ஜோச்ஸ்ரான்லி - அரசஊத்தி யோகத்தர் - 39
07. நடேசன் சுப்பிரமணியம் - சுயதொழில் - 29
08. நவரத்தினம் பிரியதர்சினி - 5
09. நல்லதம்பி மகேந்திரன் - தொழிலாளி - 28
10. நல்லதம்பி நாகராசா - சுயதொழில் - 25
11. கந்தையா கதிரவேல் - தொழிலாளி - 20
12. கந்தையா தவராசா - தொழிலாளி - 18
13. கந்தையா ஆனந்தரெட்ணம் - கடற் றொழில் - 28
14. கந்தையா செல்வராசா - தொழிலாளி - 28
15. கந்தப்போடி ஜெயசீலன் - தொழிலாளி - 19
16. கந்தப்போடி செல்வராசா - தொழிலாளி - 45
17. கந்தசாமி நவரெட்ணம் - சுயதொழில் - 19
18. கந்தசாமி சிறிஸ்கந்தராசா - சுயதொழில் - 24
19. கதிராமப்போடி பரமேஸ்வரி - வீட்டுப்பணி - 31
20. கணேசன் தியாகராசா - தொழிலாளி - 24
21. கிருஸ்ணப்பிள்ளை முருகேசு - தொழி லாளி - 24
22. கருணாகரன் அருணாசலம் - தொழி லாளி - 29
23. கணபதிப்பிள்ளை தங்கத்துரை - சுய தொழில் - 25
24. கணபதிப்பிள்ளை முருகையா - தொழி லாளி - 18
25. பூபாலப்பிள்ளை தெய்வேந்திரமூர்த்தி - அரசஊழியர் - 33
26. பஞ்சாசரம் நடராசா - தொழிலாளி - 25
27. வைரமுத்து புஸ்பராசா - சுயதொழில் - 40
28. வைரமுத்து தர்மலிங்கம் - சுயதொழில் - 60
29. தாமோதிரம் வள்ளிப்பிள்ளை - விவசாயம் - 77
30. தம்பிஜயா ஜெகன் - தொழிலற்றோர் - 11
31. தம்பியப்பா வினாயகமூர்த்தி - சாரதி - 26
32. தம்பிமுத்து பீதாம்பரம் மாணவர் 18
33. மார்க்கண்டு மகேந்திரன் - தனியார் தொழில் - 19
34. மாமாங்கம் சண்முகநாதன் - கடற் றொழில் - 18
35. மாரியப்பா தமிழ்செல்வன் - மாணவர் - 15
36. முத்தையா கந்தசாமி - மாணவர் - 19
37. முத்துப்பிள்ளை தருமலிங்கம் - தொழி லாளி - 69
38. மூத்ததம்பி சின்னமுத்து - தொழிலற்றோர் - 70
39. முத்துலிங்கம் மோகனசுந்தரம் - கடற் றொழில் - 27
40. மகேந்திராஜா சிலக்சனா - தொழிலற்றோர் - 6
41. அமிர்தலிங்கம் ஜெயசங்கர் - சுயதொழில் - 36
42. அழகிப்போடி குமார் - மாணவர் - 21
43. அழகையா யோகராசா - தொழிலாளி - 19
44. அருமைத்துரை விமலன் - தொழிலாளி - 18
45. அருமைத்துரை இன்பம் - சுயதொழில் - 18
46. அருணாச்சலம் சின்னத்தம்பி - கடற் றொழில் - 44
47. ஆறுமுகம் கந்தலிங்கம் - சுயதொழில் - 30
48. ஆறுமுகம் கிருபாமூர்த்தி - தொழிலாளி - 26
49. ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை - தொழி லாளி - 22
50. ஆறுமுகம் விவேகானந்தன் - தனியார் தொழில் - 29
51. அல்போன்ஸ் நெல்சன் - மாணவர் - 18
52. ஜோசப் சுந்தரலிங்கம் - தொழிலாளி - 33
53. ஜோசப் சிவகுமார் - தொழிலாளி - 16
54. கே.கனேஸ்வரி - தனியார்தொழில் - 26
55. கே.சீதேவி - தொழிலற்றோர் - 5
56. கோ.மகேந்திரன் - சுயதொழில் - 27
57. சோமலிங்கம் வாசகன் - அரசஊழியர் - 70
58. செல்லையா உதயநாதன் - விவசாயம் - 28
59. செல்லையா சுப்பிரமணியம் - சுயதொழில் - 59
60. செல்வராசா உதயகுமார் - சுயதொழில் - 31
61. செல்வராசா நவரெத்தினம் - தொழிலாளி - 27
62. வெள்ளைச்சாமி கண்ணையா - விவ சாயம் - 45
63. வேலுப்பிள்ளை பாக்கியராசா - சுய தொழில் - 32
64. வேலுப்பிள்ளை யோகன் - சுயதொழில் - 30
65. வேலுப்பிள்ளை ராசு - தொழிலாளி - 22
66. ஞானமூர்த்தி கதிர்காமத்தம்பி - தனியார் தொழில் - 20
67. சுப்பையா பாலசுப்பிரமணியம் - சுய தொழில் - 40
68. சுப்பையா எட்மன் - சுயதொழில் - 19
69. சதாசிவம் குபேரன் - சுயதொழில் - 19
70. சி.சரோசாதேவி - தனியார்தொழில் - 25
71. சின்னப்பு யோகராசா - சுயதொழில் - 28
72. சின்னத்துரை புஸ்பராசா - கடற்றொழில் - 22
73. சின்னத்தம்பி யோனாஸ் - சுயதொழில் - 35
74. சின்னராசா ராஜேந்திரம் - மாணவர் - 23
75. சீனித்தம்பி பிள்ளைநாயகம் - தொழிலாளி - 22
76. சித்திரவேல் சதாநந்தகுமார் - மாணவர் - 16
77. சிதம்பரப்பிள்ளை தணிகாசலம் - அரச ஊழியர் - 40
78. சிவகுரு நடராசா - சுயதொழில் - 37
79. சிவசுப்பிரமணியம் கிருபாகரன் - மாணவர் - 21
80. சிவலிங்கம் செல்லத்தம்பி - சுயதொழில் - 21
81. சண்முகம் செல்வரெத்தினம் - மாணவர் - 6
82. வீரக்குட்டி பாலகப்பொடி - தொழிலாளி - 55
83. எ.காசுபதி - தொழிலாளி - 74

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக் கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இந்துமதி - மாணவர் - 15
02. புலேந்திரன் சாந்தமேரி - கடற்றொழில் - 04
03. தம்பிப்பா குழந்தைவேல் - சுயதொழில் - 25
04. தங்கராசா பிரபானந்தராசா - சுயதொழில் - 27
05. சீ.சம்புரணநாதன் - சுயதொழில் - 27
06. சித்திரவேல் மணிமேகலை - தொழி லாளி - 18

இச்சம்பவத்தில் காணாமல்போனவர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. இராஜேஸ்வரி ரஞ்சன் - தொழிலாளி - 27
02 இராசநாயகம் சிவலோகநாயகி - அரச ஊழியர் - 17
03. ந. கிருபாகரன் - தொழிலாளி - 22
04. கந்தையா முத்துவடிவேல் - தொழிலாளி - 17
05. குட்டியாண்டி இராமசாமி - மாணவர் - 22
06. தம்பியப்பா சகாயராசா - தொழிலாளி - 25
07. மாடசாமி சங்கர் - மாணவர் - 22
08. செல்வநாயகம் ஜெயராசா - விவசாயம் - 21
09. சா.வினோராஜ் - மாணவர் - 22
10. சாமுவேல் யோகேந்திரன் - தொழிலாளி - 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கைதடி கிருசாந்தி படுகொலை 07.09.1996



கிருசாந்தி - ராசம்மா - பிரனவன்

யாழ் குடாநாட்டின் தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடிக் கிராமம் அமைந்துள்ளது. யாழ் நகரப் பகுதியிலிருந்து கிழக்குப் புறமாக யாழ். - கண்டி வீதி வழியாக ஏறக்குறைய ஐந்து மைல் தொலைவில் இக்கிராமம் அமைந்துள்ளது.

கைதடிச் சந்தியிலிருந்து வடக்குப் புறமாக இருநூறு யார் துாரத்தில் கிருசாந்தியின் வாழ்விடம் உள்ளது. இயற்கை எழில் கொண்டதும், பெரும்பகுதி விவசாயப் பகுதியாகவுமுள்ள கைதடிக் கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்த குமாரசாமி இராசம்மா தம்பதியினர் பிரசாந்தி, கிருசாந்தி, பிரணவன் ஆகிய மூன்று பிள்ளைகளோடு தமது வாழ்க்கையினை நடத்தி வந்தார்கள்.

தந்தையார் குமாரசாமி 1984 தை மாதம் காலமானதும், தாயின் அரவணைப்பிற் பிள்ளைகள் வாழ்ந்து வந்தார்கள். தந்தையின் இழப்பின் பின் மூத்த புதல்வி பிரசாந்தி க.பொ.த உயர்தரம் வரை கல்விகற்று, உயர்கல்வி கற்பதற்கு வசதிகளற்று உறவினர்களின் உதவியுடன் கொழும்பில் சிறிது காலம் தங்கியிருந்து கணினிக் கல்வி கற்றுப் பின்னர் வெளிநாடு செல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்து வெளிநாடு சென்றார்.

குமாரசாமி இராசம்மா தம்பதிகளின் இரண்டாவது மகளான கிருசாந்தி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றுவந்தார். கல்விப் படிப்பில் க.பொ.த சாதாரண பிரிவில் திறமை சித்தியடைந்ததும், க.பொ.த உயர்தரப் பிரிவில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்று வந்தார். இளைய மகன் பிரணவன் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் சாதாரண பிரிவில் கல்வி பயின்று கொண்டிருந்தார்.

1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞானத்துறையில் கல்வி பயின்று வந்த கிருசாந்தி முதல் நாள் நடந்த இரசாயனவியற் பாடத்தினை திறம்பட எழுதியிருந்தார். இப்பாடத்திற்குரிய பெறுபேறு முதல் தரம் எனப் பின்னர் தெரியவந்தது. 07.09.1996 அன்று நடந்த இரண்டாவது பாடம் இராசாயனவியல் பகுதி ஒன்று பரீட்சையை எழுதியிருந்தார். அன்றையதினம் தனது உற்ற நண்பி ஜனாநந்தினி கணநாதனின் மரணச் சடங்கிற்குச் சென்று விட்டு மதியம் 01:30 மணியளவில் கண்டி வீதி வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தார் அவ்வேளை செம்மணி வெளியருகில் யாழ் நகரை வரவேற்கும் வரவேற்பு வளைவு அமைந்துள்ள இடத்தில் காவலரணிலிருந்த இராணுவத்தினர் கிருசாந்தியை வழிமறித்து நாற்பத்தைந்து நிமிடங்களாக விசாரித்துக்கொண்டிருந்தார்கள்.

கிருசாந்தி காவலரணில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்ட உறவினர் தாயாரிடம் சென்று சம்பவத்தினைத் தெரியப்படுத்தியிருந்தார். மதியம் 02:30 மணியளவில் சம்பவத்தினைக் கேள்வியுற்ற தாயார் இராசம்மா அயலவரான கிருபாமூர்த்தியின் உதவியுடன் சம்பவ இடத்தினை நோக்கி விரைந்தார். இதன் பின்னர் தமது படிப்பினை முடித்து வீடு திரும்பிய கிருசாந்தியின் தம்பியார் பிரணவனும் சம்பவத்தினை அறிந்து தயாருக்குப் பின்னால் சென்றார். தாயார் இராசம்மா குமாரசாமி, இளைய சகோதரன் பிரணவன் மற்றும் அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்தபோது தடுத்து வைத்து விசாரிக்கப்பட்ட கிருசாந்தியைக் காணவில்லை. செம்மணி வீதியில் அமைந்திருந்த இராணுவ காவலரணிற் கேட்டபோது தாங்கள் யாரையும் கைது செய்யவில்லை எனக் குறிப்பிட்டார்கள். இதைத் தொடர்ந்து தாயார் சுண்டுக்குளி பாடசாலை மற்றும் மரணச்சடங்கு நிகழ்ந்த ஜனாநந்தினி கணநாதன் வீட்டிற்கு சென்று விசாரித்தபோது, கிருசாந்தி வந்து போனதாகக் கூறினார்கள். மீண்டும் தாயார் கிருசாந்தி தடுத்து வைக்கப்பட்டு விசாரிதத் இடமான செம்மணிப் பகுதிக் காவலரணில் கடமையிலிருந்த படையினரிடம் விசாரிக்கச் சென்ற பின்னர் இவர்களும் காணாமற்போனார்கள்.



1996ஆம் ஆண்டு நடுப்பகுதியில் யாழ்குடா முழுவதையும் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்த பின்னர் மாலை 6மணியுடன் ஊரடங்கு உத்தரவு அமுலிலிருந்தது. இவ்வாறான நெருக்குவாரங்களிற்குள் மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.




கிருசாந்தி குமாரசாமி

இதனால் 07.09.1996 அன்றைய தினம் கிருசாந்தியைத் தேடிச் சென்ற தாயார், தம்பியார், அயலவர் ஆகியோர் மாலை நேரம் ஆகியும் வீடு திரும்பவில்லை. ஆயினும் ஊரடங்கு உத்தரவால் உறவினர்களால் உடனடியாக விசாரிக்க முடியாதிருந்தது. மறுநாள் 08.09.1996 காலை கிருசாந்தி குடும்பத்தினரது உறவினர்களான ஆறுமுகநாதன், கோடீஸ்வரன் ஆகியோரும் கிருபாமூர்த்தியின் மனைவியான புவனேஸ்வரியும் தமது குடும்ப உறவினர்களைத் தேடி அதே இராணுவ முகாமிற்குச் சென்று விசாரித்தபோது, அப்படி இங்கு யாரையும் கைது செய்யவில்லை எனத்தெரிவித்தார்கள். பின்னர் யாழ். மனித உரிமை ஆணைக்குழு, யாழ் காவற்றுறை நிலையம் போன்ற இடங்களில் முறைப்பாடுகள் செய்தார்கள். இருந்தபோதும் அவர்களது மனம் கேட்காது மீண்டும் சம்பவம் நிகழ்ந்த செம்மணிக் காவலரணிலிருந்த இராணுவத்தினரிடம் கேட்டபோது "நாங்கள் யாரையும் கைது செய்யயவில்லை எனினும் மாலை நேரம் வந்து பாருங்கோ" என்றனர். இதைக்கேட்ட உறவினர்கள் கிருசாந்தி குடும்பத்தினருக்கு ஏற்பட்ட நிலை தமக்கும் ஏற்பட்டு விடுமோ எனப் பயந்து மாலைவேளை அங்கு செல்லவில்லை. தொடர்ந்தும் மனித உரிமைகள் ஆணைக்குழு, காவற்றுறை நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்தார்கள்.

உறவினர்கள் எடுத்த முயற்சியின் பயனாக சம்பவதினதத்திலிருந்து நாற்பத்தைந்தாம் நாள் இராணுவத்தின் ஐநூற்று இருபத்தோராம் பிரிகேட் படைப்பிரிவு அதிகாரிகள் உறவினர்களை விசாரணைக்காக அழைத்தார்கள். இதில் ஆறுமுகநாதன், புவனேஸ்வரி, கோடீஸ்வரன் ஆகியோர் சென்றிருந்தனர். விசாரணைகளில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களெனக் கருதப்பட்ட இராணுவத்தினர் ஆறு பேரையும் அழைத்து விசாரித்தபோது, கிருசாந்தி குடும்பத்தினர் உயிருடன் இல்லை என்ற செய்தி உறவினர்களிடம் கூறப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு இராணுவத்தினரும் இரண்டு காவற்றுறையினரும் சம்பவம் நிகழ்ந்த இடத்தினையும், புதைகுழியையும் காட்டுவதாக ஒப்புக்கொண்டனர். யாழ். வரவேற்பு வளைவு அமைந்துள்ள பகுதியிலிருந்த செம்மணிக் காவலரணிலிருந்து நூறு யார் துாரத்தில் நாயன்மார்கட்டு வீதியிலுள்ள மதகு அருகில் புதைகுழி அமைந்திருந்தது. கிருசாந்தியும் தாயாரும் ஒரு புதைகுழியிலும், பிரணவன் மற்றும் அயலவர் கிருபாமூர்த்தி இன்னொரு புதைகுழியிலுமாகக் கிடந்தனர். நான்கு அடி ஆழத்தில் உருக்குலைந்து, சிதைந்து, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் சடலங்கள் காணப்பட்டன. கிருசாந்தியின் தாயார் அணிந்த சேலை, மூக்குக்கண்ணாடி, செருப்பு என்பன ஒரு பொலித்தீன் பையில் புதைகுழியினுள் கிடந்தது.

கிருசாந்தி படையினரால் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டும் கழுத்துப் பகுதி கயிற்றினால் நெரித்துக் கொல்லப்பட்டிருந்தார். பின்பு, தோண்டி எடுக்கப்பட்ட சடலங்கள் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று, பின்னர் கொழும்புக்கு அனுப்பப்பட்டன. அங்கு மரபணுப் பரிசோதனை யாவும் பூர்த்தியான பின்னர் அடக்கம் செய்யப்பட்டன. கிருசாந்தி குடும்பத்தினர், கிருபாமூர்த்தி ஆகியோரின் உயிரிழப்புத் தொடர்பான வழக்கு உறவினர்களால் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தொடர் விசாரணைகள் மூன் சந்தேகத்தின் பேரிற் கைதுசெய்யப்பட்ட ஆறு இராணுவத்தினரும் குற்றங்களை ஒப்புக்கொண்டதன் பேரில் குற்றவாளிகளென அடையாளங் காணப்பட்டார்கள்.




குற்றவாளிகளென அடையாளங் காணப்பட்டவர்களில் ஒருவரான "லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ச" கிருசாந்தி மற்றும் குடும்பத்தினர் மீதான தகவல்களை வழங்கியதுடன், மேலும் செம்மணிப் பகுதியில் அமைந்த வயல் நிலங்களில் மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில் இரவு நேரங்களில் கொண்டுசென்று புதைக்கப்பட்ட சடலங் களில் முன்நூறு, நாநூறு பேரது சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களையும் அடையாளப்படுத்த முடியுமெனவும் வாக்குமூலம் அளித்தார். இதன்மூலம் யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் பலரது நிலைகளை இப் புதைகுழிகளிலிருந்து அறிய முடிந்தது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. குமாரசாமி இராசம்மா - உப அதிபர் - 59
02. குமாரசாமி கிருசாந்தி - மாணவி - 18
03. குமாரசாமி பிரணவன் - மாணவன் - 16
04. சிதம்பரம் கிருபாமூர்த்தி - எழுதுனர் - 38

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# செம்மணிப் புதைகுழிகள் 1996

யாழ். குடாநாட்டில் 1996 நடுப்பகுதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதியில் காணாமற்போனவர்களின் நிலை...? யாழ். மாவட்டத்தின் நல்லூர்ப் பிரதேசத்தில் அரியாலைக் கிராமம் அமைந்துள்ளது. அரியாலைக் கிராமத்திலுள்ள செம்மணிப் பகுதி யாழ் நகரத்திலிருந்து யாழ்.-கண்டி வீதி வழியாக ஏறக்குறைய நான்கு கிலோமீற்றர் தூரத்தில் யாழ் நகரை வரவேற்கும் வளைவுக்கல் பகுதியில் அமைந்துள்ளது.

1994இல் புதிதாக ஆட்சியினைப் பொறுப்பேற்ற சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் மனித உரிமைகளை நிலைநாட்டுவதாக கூறி கடந்த காலங்களில் காணாமற்போனவர்கள் புதைக்கப்பட்ட தென்னிலங்கையிலுள்ள சூரியகந்த புதைகுழிகள் போன்ற புதைகுழிகளை விசாரணைக்குட்படுத்தியது.

1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொண்பதாம் திகதி புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்தன.

அதனைத்தொடர்ந்து “சமாதானத்திற்கான போர்” என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

முதற்கட்டமாக 1995 இன் இறுதிகளில் யாழ் நகரையும், 1996 இன் நடுப்பகுதிகளில் யாழ் குடாநாடு முழுவதனையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.

1995இன் பிற்பகுதியில் பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கி ஆரம்பிக்கப்பட்ட “றிவிரெச” இராணுவ நடவடிக்கையினால் நான்கு இலட்சத்து ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் யாழ்ப்பாணம் வலிகாமப் பிரதேசத்திலிருந்து ஓரிரு நாட்களில் செம்மணி வீதி, கோப்பாய் வீதி வழியாக யாழ் மாவட்டத்தின் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்ற பின்னர் யாழ். நகரத்தை இராணுவத்தினர் கைப்பற்றினர். 1996 சித்திரை மாதம் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளான தெனமராட்சி, வடமராடச்சி போன்ற பிரதேசங்களையும் இராணுவதத்தினர் கைப்பற்றினர் புலம் பெயர்ந்தவர்களும், வடமராட்சி, தென்மராட்சி மக்களுமாக யாழ் குடாநாட்டு மக்களில் ஐம்பது வீதமான மக்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்ல மிகுதி ஐம்பது வீதமானவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டிற்குட் சென்றார்கள். 1996ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் யாழ்குடா முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் இராணுவத்தினர் கொண்டு வந்தனர்.



“சமாதானத்துக்கான போர்” மூலம் இராணுவத்தினர் யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் யாழ் நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்தபோது குடாநாட்டில் கைதாவோர், காணாமற்போவோர் பட்டியல் நாள்தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான பாலியற் துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப்புகளும் அதிகரித்தன. 1996 நடுப்பகுதிக்குப் பின்னான ஆறு மாதக் காலப்பகுதியில் யாழ்பாணத்தில் காணாமற்போனோர் பட்டியல் எழுநூறிற்கு மேல் அதிகரித்தது. யாழ். குடாவில் காணாமற்போன இளைஞர், யுவதிகளினது பெற்றோர்கள், உறவினர்கள் ஒன்று சேர்ந்து “கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம்” என்ற அமைப்பை உருவாக்கி இன்றுவரை போராட்டம் நடத்தி வருகின்றனர்.

காணாமற்போனவர்களின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தினாலும் சர்வதேச அழுத்தத்தினாலும் அன்றைய சனாதிபதி சந்திரிக்கா பண்டாரா நாயக்கா குமாராதுங்க இராணுவத்தினராற் கைது செய்தபின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரிகக் இராணுவ உயர் அதிகாரிகளைக் கொண்ட ஆணைக்குழுவினை அமைத்தார்.

1997இன் நடுப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட பனாங்கொடை, பந்துல குணவர்த்தன ஆகிய இராணுவ உயரதிகாரிகளைக் கொண்ட குழு விசாரணையை மேற்கொண்டது. பாதுகாப்புஅமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு மூன்று தடவைகள், நான்கு தடவைகளென மாறி மாறி விசாரணைகளை நடத்தியும் கைதா னோர், காணாமற்போனவர் தொடர்பாக இன் றுவரை எந்தவிதமான இறுதியான தீர்வும் உறவினர்களுக்கு வழங்கப்படவில்லை.

1996 செப். ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப ்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவமுகாமிற்குச் சென்ற தாயாரான இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினராற் படுகொலை செய்து புதைக்கப்பட்டனர்.

கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு உயிரிழுந்தது தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்களிலில் லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச விசாரணையின் போது கீழ்வருமாறு வாக்குமூலம் அளித்தார்.

“யாழ்குடாநாட்டில் பரவலாக கைதுசெய்து காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள்



மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் இரவில் எடுத்துச்செல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு. முந்நூறு, நானூறு பேரை புதைத்த புதைகுழிகளை என்னால் காண்பிக்க முடியும்” என்றார்.

1999ஆம் ஆண்டில் “லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச” வினால் செம்மணியில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் செம்மணிப் புதைகுழிகள் வவுனியா மாவட்ட நீதவான் இளஞ்செழியன், றுகுணு பல்கலைக் கழக மருத்துவப்பீட பேராசிரியர் நெரியல்ல, மற்றும் சட்டத்தரணிகளான கேசவன், இளங்கோ, பரமராஜா, பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் முன்னிலையில் தோண்டப்பட்டன. இச் செம்மணிப்பகுதியில் அமைந்த அரி யாலை கொட்டுக் கிணற்றடி, தயா கட்டடம் அமைந்துள்ள பகுதி, செம்மணிவளைவுப் பகுதியென புதைக்கப்பட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டது.

முதற்தடவையாக புதைகுழி தோண்டும்போது பதினொரு எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை யாழ் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுப் பிரேதபரிசோதனையின் பின் பதினாறு வயதுக்கும் முப்பத்தைந்து வயதுக்கும் உட்பட்டோரினதென அடையாளங் காணப்பட்டது. இதன்போது சைவ மத அந்தணர் ஒருவர் சாளி மோட்டார்சைக்கிளுடன் புதைக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் முதல் கட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது தடவை தோண்டுவதற்கு முன்பாக அப்பகுதியின் பல இடங்களில் இரவு நேரங்களில் மக்கள் செல்வதை இராணுவம் தடைசெய்தது. மேலும் அவ்வேளையில் அப்பகுதியில் வாகனங்கள் அதிகளவில் நடமாடியதை மக்கள் அவதானித்தாத்கள். பின்னர் இரு வாரம் கழிந்த நிலையில இரண்டாவது புதைகுழி தோண்டும் பணி ஆரம்பமாகியது. ஆறு எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றில் ஒன்று பெண்ணினுடையதும் மிகுதி ஆண்களினுடையவை யென அடையாளங்காணப்பட்டன.

இத்துடன் செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் பணிகளை இடைநிறுத்தினார்கள். இன்றுவரை செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக எந்தவிதமான இறுதி முடிவினையும் நீதித்துறை மேற்கொள்ளவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-2008)
















## Chemmani Map



# மந்துவில் படுகொலை 15.09.1999



முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு அருகில் மந்துவில் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்து மக்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் மந்துவில் சந்தியில் பொது நிறுவனங்கள், வியாபார நிலையங்கள், சிறிய சந்தை, கோயில், தேவாலயம் என்பன அமைந்துள்ளன. மந்துவிற் கிராம மக்கள் நாளாந்த தேவைகளிற் பெரும்பாலானவற்றை இங்கே பூர்த்திசெய்து வாழ்ந்து வந்தனர்.

15.09.1999 அன்று வழமைபோல குழந்தைகள், இளையவர், முதியவரென பலதரப்பட்டவர்களும் சந்திக்குத் தமது தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வந்திருந்தனர். காலை 10.25 மணியளவில் விமானப் படையின் இரண்டு “கிபீர்” குண்டுவீச்சு விமானங்கள் முல்லைத்தீவு வான்பரப்பினூடாக பறந்து வந்து மந்துவிற் பகுதியை பத்து நிமிடங்களாக வட்டமிட்டு மக்கள் கூடி நின்ற மந்துவில் சந்தைப் பகுதிமீது குண்டுத் தாக்குதலை நடத்தின.

விமானத் தாக்குதலில் சம்பவ இடத்தில் பன்னிரண்டு பொதுமக்கள் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் சில அவ்விடத்திலும், வீதியிலும், பற்றைக்குள்ளும், கிணற்றுக்குள்ளும் தூக்கி வீசப்பட்டிருந்தன. இறந்தவர்களின் உடல்கள் சிதைந்த நிலையிலிருந்தன. படுகாயமடைந்திருந்தவர்களை அப்பகுதி மக்கள் வாகனங்களில் ஏற்றி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார்கள். இதில் பத்திற்கும் மேற்பட்டவர்கள் அன்று மாலையே உயிரிழந்தனர். இச்சம்பவத்தின் போது நாற்பதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். வியாபார நிலையங்கள், பயன்தருமரங்கள், கால்நடைகள் போன்ற பல லட்சம் பெறுமதியான சொத்துக்களும் அழிந்தன.

இச்சம்பவத்தில் கணவரை இழந்த்த சுப்பிரமணியம் சரஸ்வதி கூறும்போது, “எனது கணவர் காணியில் கிடைக்கும் தேங்காய்களைக் கொண்டு சென்று மந்துவில் சந்தியில் விற்றுவிட்டு வருவார். சம்பவ தினமன்றும் பத்துத் தேங்காய்களை விற்றுவிட்டு சாமான்கள் வாங்கி வரவென்று போனார். கிபிர் விமானங்கள் சந்திப் பகுதியில் குண்டுகளைப் போட்டதென்று அறிந்தவுடன், தகப்பனைத் தேடி மகன் பிறேமன் போனார். நான் என்ன நடந்ததோ என்று தெரியாமல் பயத்துடனிருந்தேன். மகன் போன போது வேலிக் கரையில் நாடியைப் பொத்திப் பிடித்தபடி படுத்




திருந்தாராம். உடனே வீதியில் வந்த மோட்டார் சைக்கிளை வாங்கி புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு ஏற்றிக்கொண்டு போகும் போது இடை நடுவிலே இறந்து விட்டார். ஏற்கனவே எனது ஆறாவது மகன், 1985 ஆம் ஆண் டு சிறீலங்கா இராணுவப் பிரச்சனைக்குப் பயந்து, வவுனியாவில் இருந்த மூத்த மகனின் வீட்டில் இருந்து பத்தாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த வேளை, 1985ம் ஆண்டு வைகாசி மாதம் இருபதாம் திகதியன்று வவுனியா ஆச்சிக்குளம் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தற்போது பதின்நான்கு ஆண்டுகளின் பின்னர் எனது கணவரையும் சிறீலங்கா விமானப்படையினர் குண்டு வீசிக் கொன்றுள்ளனர்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சின்னையா ஜெயபாலசிங்கம் - சுய தொழில் - 37
02. சண்முகம் கிருபாகரன் - தொழிலாளி - 22
03. சவிரி யோன் விவசாயம் - 52
04. சங்கரப்பிள்ளை செல்வமாணிக்கம் - தொழிலற்றோர் - 70
05. ஞானசேகரம் இலட்சுமிப்பிள்ளை - வீட்டுப் பணி - 43
06. ஜெயராமன் சந்திரகுமார் - தனியார் தொழில் - 20
07. அலன்றோஸ் கொண்டியூசியஸ் - கடற்றொழில் - 19
08. அந்தோனிப்பிள்ளை - தனியார்தொழில் -
09. ஆறுமுகம் ஜெயராமன் - 50
10. சின்னையா ஜெயபாலசிங்கம் - விவசாயம் - 37
11. பாக்கியநாதன் றீற்றம்மா - வீட்டுப்பணி - 56
12. தனராஜ் ஜெனோவி - வீட்டுப்பணி - 24
13. வேதநாயகம் செபஸ்தியாம்பிள்ளை - கடற்றொழில் - 52
14. துரைசிங்கம் சபாநாயகம் - மாணவன் - 21
15. இராசநாயகம் உதயகுமார் - கடற்றொழில் - 20
16. இராசேந்திரம் சத்யகுமார் - தனியார் தொழில் -25
17. குணசிங்கம் ஜெயச்சந்திரன்- சுயதொழில் -33
18. கணபதிப்பிள்ளை சத்தியபாமா - தொழிலாளி - 25
19. கனகசபை மிதிலா - வீட்டுப்பணி - 26
20. அன்ரனிலியோ கிறிஸ்ரிஸ்புளோரன்ஸ் - வீட்டுப்பணி - 54
21. செல்லையா ஆறுமுகம் - 59
22. கணபதிப்பிள்ளை யோகராசா - 36
23. அன்ரனிதவராசா திரேசம்மா - 50
24. அன்ரனிலியோ மெல்றோஸ் - 24
25. சின்னத்தம்பி தம்பு - 55
26. ஜெயமஸ் ஜெயசங்கர் - 33
27. பத்மராசா ஜெனிற்றா - மாணவி - 15
28. சந்திரசேகரம் சயந்தினி - மாணவி - 12
29. தம்பையா சுப்ரமணியம் - விவசாயம் - 67

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூ.பேதுறுப்பிள்ளை - 80
02. இ.தனேஸ்வரி - 55
03. இ.மகேஸ்வரி - 55
04. நா.அருந்தவமலர் - 52
05. நாகலிங்கம் - 45
06. க.தங்கையா - 48
07. கனகையா - 43
08. கந்தையா நாகலிங்கம் - 35
09. கந்தையா வள்ளிப்பிள்ளை - 70
10. கதிரேசு தேவராசா - 39
11. கி.அன்னலட்சுமி - 61
12. கிருஸ்ணபிள்ளை அன்னலட்சுமி - 51
13. குணசிங்கம் - 50
14. குணரத்தினம் நிறஞ்சன் - மாணவன் - 09
15. பால்ராஜ் பாசமலர் - 27
16. பாலசிங்கம் பால்ராஜ் - சுயதொழில் - 29
17. பத்மராஜா மதியமலர் - தொழிலாளி - 40
18. பி.மரியமலர் - 52
19. பீற்றர்கென்றிலோல் லோறன்சியா - 18
20. சைலன் குழந்தை 03
21. த.பாலசிங்கம் - 66
22. த.தனுசா - குழந்தை - 03
23. த.தேவராசா - 39
24. தி.தர்சினி மாணவி 17
25. தியாகராசா தர்சினி - மாணவி - 17
26. தியாகராசா செல்வராணி - 44
27. ம.தனராஜ் - 20
28. மயில்வாகனம் - 45
29. மகாலிங்கம் தனராஜா - 29
30. மரியநாயகம் - 48
31. முத்துசாமி - 48
32. முத்துசாமி கோழிமனசாமி - 48
33. அ.,ருதயராசா - 20
34. அ.மரியசோபனா - 23
35. அ.விதுசன் - 35
36. அன்ரன் பெனடிற் - 51
37. அலன்றோஸ் மரியநாயகி - 40
38. ஜெ.ஜெயசங்கர் - 30
39. ஜெ.சரஸ்வதி - 50
40. ஜெயசங்கர் விமல்ராஜ் - மாணவி - 06
41. ஜெயராமு சரஸ்வதி - 50
42. ஜெயராமன் - 60
43. யோன் நான்சி - 19
44. கே.தவசீலன் - 19
45. கே.மேனகா மாணவன் 18
46. கோபாலகிருஸ்ணன் பத்மாவதி - 45
47. பொ.வள்ளிப்பிள்ளை - 90
48. பெர்னான்டோ அன்ரலிவின்சன் - 35
49. பெரியதம்பி நடராசா - கடற்றொழில் - 51
50. தெ.மரியமலர் - 68
51. சே.மரியம்மா - 68
52. சேதுப்பிள்ளை - 80
53. செல்லையா சந்திரசேகரம் - சுயதொழில் - 27
54. செல்லத்துரை மகேஸ்வரி - 46
55. ச.யோகராணி - 41
56. ச.லோகிதா - 15
57. ச.சர்மிலா - 23
58. சின்னத்தம்பி கந்தசாமி - 37
59. சீனியர் சிவநாதன் - 18
60. சிவகுரு சூரியமூர்த்தி - கடற்றொழில் - 33
61. சிவானந்தம் சுதாகரன் - 19
62. சிவநேசன் அழகேஸ்வரி - வீடடுப்பணி - 29
63. சிவசுப்பிரமணியம் கம்சநந்தினி - வீட்டுப் பணி - 21
64. சுசிதரன் சூட்டி - 29
65. சரஸ்வதி - 50
66. சற்குணன் யோகராணி - 41
67. ராஜா சஜீபன் - குழந்தை - 03

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சிலாவத்துறைப் படுகொலை 02.09.2007

2007இல் சிறீலங்கா இராணுவத்தினரின் மன்னார் மீதான வலிந்த தாக்குதலின் விளைவாக சிலாவத்துறையைச் சேர்ந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கினர். இவ்வாறு ஓடிக்கொண்டிருந்த 13 குடிமக்களை ஏற்றிக்கொண்டு வான் ஒன்று சிறீலங்கா இராணுவத்தினரின் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானது. இச்சம்பவம் 2007 செப்ரெம்பர் 02ஆம் நாள் இடம் பெற்றது. இராணுவத்தின் மத்தியில் எற்பட்ட இம்மோதலின்போது கொல்லப்பட்ட பொது மக்களின் உடலம் இரண்டு நாட்களாக அகற்றப்படவில்லை. பழுதடைந்த உடலம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவால் மன்னார் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒரு தந்தை, தாய், 04 வயது மகனும் உள்ளடங்குவார்கள்.

இதிலிருந்து மூன்று வாரங்களின் பின்னர் செப்ரெம்பர் 26ஆம் நாள் வணபிதா நீக்கிலாப்பிள்ளை பாக்கியரஞ்சித் இவ்வாறானதொரு கிளைமோர்த்தாக்குதலில் இதற்கு அருகாமையிலுள்ள இடத்தில் வைத்துக் கொல்லப்பட்டார். அவர் அப்பொழுது தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உணவு விநியோகம் செய்து கொண்டிருந்தார். இதில் அவரது உதவியாளரும் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. யேசுதாசன் எலிசபெத் - 42
02. ஜெயராஜ் ஒஸ்கார் - 20
03. கிருக்ஷ்ணபாலன் - 25
04. மணியம் ஜெயராஜ் - 50
05. ஜோன்ஸ் -
06. நாகமுத்து சரோஜர - 60
07. புகேந்திரன்
08. புவி சுவேதா - 04
09. செல்வகுமார் - 24
10. செல்வகுமார் பிரின்ஸி, 25
11. செல்வராசா ராகுலன், 04

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)








**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**




JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
PTR
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com

# தொல்லியல் சுவடுகள்...

# இலங்கைத் தமிழரின் பூர்வீகத்தை அடையாளப்படுத்தும் உடுத்துறை நாணயங்கள்!



கலாநிதி ப. புஷ்பரட்ணம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

ஈழத்தமிழரின் பூர்வீக வரலாறு பற்றிய நீண்ட காலக்கருத்துக்களும், நம்பிக்கைகளும் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து இன்று பலராலும் பல நிலையிலும் ஏற்கப்பட்டு வருவதனைக் காணமுடிகிறது. இதற்கு அண்மைக்க காலத்தில் தென்னிலங்கையிலும், வட இலங்கையிலும் பெருங்கற்கால மட்பாண்டச் சாதனங்கள், எழுத்துப் பொறிப்புடன் கூடிய நாணயங்கள் போன்ற நம்பகரமான தொல்பொருட் சின்னங்கள் முக்கிய காரணம் என்பதில் ஐயமில்லை. இலங்கையில் பண்டுதொட்டு வாழ்ந்து வரும் தமிழ், சிங்கள மக்களது வரலாறு பௌத்த மதத்தை அடியொற்றி எழுந்தபாளி இலக்கியங்களை அடிப்படை மூலாதாரமாகக் கொண்டே நீண்ட காலமாக ஆராயப்பட்டு வந்துள்ளது. ஆனால் இப்பாளி இலக்கியங்களோடு முதன் முதலாகத் தொல்லியற் சின்னங்களையும் பயன்படுத்தி இலங்கை வரலாற்றை ஆராய முற்பட்ட பெருமை ஐரோப்பியருக்கு உரியது. ஆயினும் அவர்களது ஆரம்பகாலத் தொல்லியல் பற்றிய பார்வை பாளி இலக்கியங்கள் கூறும் சிங்கள மக்களது வரலாற்றை நியாயப்படுத்த உதவிய அளவிற்கு தமிழர் தொடர்பான வரலாற்று உண்மைகளை வெளிப்படுத்த உதவவில்லை என்றே கூறவேண்டும். இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இலங்கைத் தமிழர் பற்றி ஆராய்ந்த பலரும் பாளி இலக்கியங்களோடு அவ்வப்போது கிடைத்த கல்வெட்டுக்கள், நாணயங்கள் போன்றவற்றையும் தமது ஆய்வுக்குரிய முக்கிய சான்றாதாரங்களாகப் பயன் படுத்தத் தவறவில்லை. ஆயினும் அவர்களில் பலர் பாளி இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள தமிழர் வரலாறு பற்றிய பாரம் பரிய நம்பிக்கையின் தாக்கத்தாற் போலும் அத்தொல்பொருட் சின்னங்களைத் தமிழ்நாட்டிலிருந்து வந்து போன தமிழருக்குரிய சான்றாகப் பார்த்த அளவிற்கு இலங்கையில் வாழ்ந்துவரும் தமிழருக்குரிய சான்றாக ஆராய்ந்து பார்க்கத் தவறிவிட்டனர் என்றே கூற வேண்டும்.

ஆயினும் அண்மைக்க காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்கள் முன்னையகால வரலாற்றுப் பார்வையில் இருந்து விலகி தமிழகத்திற்குச் சமமான காலத்திலேயே தமிழர்கள் இலங்கையை தமது தாய் நாடாகக் கொண்டு வாழ்ந்துள்ளார்கள் என்பதைத் தெளிவாகக் கோடிட்டுக்காட்டி வருகின்றன. தமிழகத்தில் தமிழ் மொழி, தமிழ் எழுத்து, தமிழ் பண்பாடு தொடர்பான சான்றுகள் எக்காலப் பகுதியிலிருந்து கிடைக்கின்றனவோ ஏறத்தாழ அதே காலத்தில் இலங்கையிலும் கிடைக்கின்றன. இந்த ஒற்றுமை தமிழகத்தவர் தமிழ் மொழிபேசும் மக்களாக இங்கு வந்து போக முன்னரே இலங்கைத் தமிழர்களின் மூதாதையினர் இந் நாட்டில் வாழ்ந்துள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றனர். இதில் தமிழக செல்வாக்கு என்பது புராதன காலத்திலிருந்து ஒருபக்க உறவாக இருக்காது இருபக்க உறவாக இருந்து வந்ததை அண்மையில் தமிழகத்தில் கொடு மணல், அழகன்குளம், பூம்புகார் போன்ற இடங்களில் கிடைத்த ஈழத்தமிழர் தொடர்பான சான்றுகள் எடுத்துக் காட்டுக்கின்றன.

இத்தகைய கருத்து மாற்றச் சூழலில் இலங்கைத் தமிழர்கள் பண்டு தொட்டு நாணயங்களை வெளியிட்டு வந்துள்ளார்கள் என்ற உண்மை அறியப்பட்டுள்ளமை இக்கருத்து மாற்றத்தை மேலும் பலமடையச் செய்யதுள்ளது என்பதில் ஐயமில்லை. இலங்கைத் தமிழர்கள் பண்டைய காலத்தில் நாணயங்கள் வெளியிட்டுள்ளார்கள் என்ற கருத்தை முன்வைக்கும் போது இக்கருத்தை ஏன் முன்னைய வரலாற்றாசிரியர்கள் முன்வைக்கவில்லை என்ற எதிர்வாதம் பல மட்டத்திலிருந்து எழுப்பப்பட்டுவதையும் காணமுடிகிறது. இந்த விவாதத்தில் ஒருவித நியாயத்தன்மை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளும் அதே வேளை, அதில் இலங்கைத் தமிழரின் வரலாற்று உண்மைகள் வெளிவருவதை மறுக்க, மழுங்கடிக்க வேண்டும் என்ற உள்நோக்கமும் அடங்கியிருப்பதையும் நாம் உணர்கிறோம். ஆகவே முன்னர் வெளிவராத உண்மைகள் எப்படி இப்போது மட்டும் வெளிவருகின்றன என்பதற்குரிய காரணங்களை இவ்விடத்தில் எடுத்துக் கூறுவது எனது முதற் கடமையாகும்.

### வரலாற்றாய்வில் தமிழர் நாணயங்கள்

ஒரு இனத்தின் அல்லது ஒரு நாட்டின் தொன்மையான மொழி, எழுத்து, மதம், கலை, குடியிருப்பு, அரச உருவாக்கம், அரச வம்சம், மன்னன், ஆள்புலம், பொருளாதாரம், அயல்நாட்டுத் தொடர்பு போன்றவற்றை அறிய உதவும் நம்பகத் தன்மை வாய்ந்த தொல்லியற் சான்றுகளுள் பண்டைய காலத்தில் புழக்கத்திலிருந்த நாணயங்களை நம்பகரமான வரலாற்று ஆதாரமாகப் பயன்படுத்தும் மரபு முதலில் ஐரோப்பியரிடையே கி.பி. 18ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்டது. காலப்போக்கில் இம்மரபு ஆசிய நாடுகளுக்கும் பரவியது. பிரித்தானியர் ஆட்சியில்தான் அவர்களது நிர்வாகத்தில் பங்கு கொண்ட ஆங்கிலேயரும், பிற நாட்டவரும் தமிழகத்திலும், இலங்கையிலும் பயன்பாட்டிலிருந்த பண்டையகால நாணயங்களைச் சேகரித்து அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை அக்காலத்தில் வெளிவந்த தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சஞ்சிகைகளில் பிரசுரித்திருந்தனர். அதில் இலங்கையில் கிடைத்த நாணயங்களில் பல சிங்கள மன்னர்களால் வெளியிடப்பட்டவை எனவும் ஏனையவை இந்திய, கிரேக்க, உரோம் போன்ற நாடுகளில் இருந்து வர்த்தகத் தொடர்பால் வந்தவை எனவும் விளக்கம் கூறப்பட்டுள்ளது. அந்த விளக்கமே அண்மைக்காலம் வரை ஏற்கப்பட்டும் வந்துள்ளது.

1950களின் பின்னர் இலங்கைத்தமிழர் வரலாற்றை பல்கலைக்கழக மட்டத்தில் விரிவாக ஆராய்ந்தோர் இலங்கையில் முதலாவது தமிழரசு கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியதென்ற கருத்தை உறுதியாகக் கொண்டிருந்ததால் இலங்கையில் கிடைத்த கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் நாணயங்களால் அறியப்பட்ட மொழி, எழுத்து, மதம், கலை பற்றியசான்றுகள் இலங்கையோடு தமிழகத்திற்கிருந்த பாரம்பரிய உறுவுகளுக்குரிய சான்றுகளாக நோக்கப்பட்டன. மேலும் இலங்கையோடு தமிழகத்திற்கிருந்த பாரம்பரிய உறவுகளுக்குரிய சான்றுகள் இலங்கையில் கிடைத்த நாணயங்களை தமிழகத்தில் ஆட்சி புரிந்த எந்த வம்சம் வெளியிட்டிருக்கலாம் என்பதை ஆராய்வதில் புலமை காட்டிய நம்நாட்டு ஆய்வாளர்கள் அவற்றை தமிழகத்தில் கிடைத்த நாணயங்களோடு ஒப்பிட்டு அதன் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து அதில் ஈழத் தமிழருக்கு ஏதாவது பங்கிருந்திருக்குமா என ஆராய்ந்து பார்க்க முற்படவில்லை. அதில் நம்பிக்கையும் கொண்டிருக்கவில்லை. மாறாக ஐரோப்பியரது நாணயக் கண்டுபிடிப்புக்களும், விளக்கங்களுமே உண்மையான முடிவாக இருக்கும் என நம்பப்பட்டது. அப்படிப் பார்ப்பதே தரமான ஆய்வாக இருக்கும் என்ற எண்ணமும் இருந்தது. இன்று இருந்து வருகிறது. இதில் உள்ள முரண்பாடான விடயம் என்னவென்றால் இலங்கைத் தமிழர் வரலாறுபற்றிய ஆய்வுக்கு இலங்கை நாட்டவர் நாணயங்களைப் பயன்படுத்திய அளவிற்கு சமகாலத்தில தமிழக வரலாற்றை ஆராய்ந்தவர்கள் அதையொரு முக்கிய சான்றாகப் பயன்படுத்த முற்படவில்லை. அவ்வாறு பயன்படுத்துமளவிற்கு தமிழக நாணயங்கள் பற்றி தெளிவும், விளக்கமும் தமிழ்நாட்டு வரலாற்றாய்வாளர்கள் மத்தியில் தோன்றியிருக்கவும் இல்லை.

ஆனால் இன்று தமிழக வரலாறு பற்றிய ஆய்வானது முற்றிலுமாக மாறிவிட்டது. கடந்த மூன்று தசாப்தகாலமாக தமிழகத்தில் பல வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆகழ்வாய்வாலும், தொல்லியல் மேலாய்வாலும் பெருமளவு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை நுணுக்கமாக ஆராயப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக இதுவரை ஐரோப்பியராலும் பிறநாட்டவராலும் தமிழக நாணயங்கள் பற்றிக் கூறப்பட்ட கருத்துக்களில் பல தவறுகள் உண்டு என்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டு வருகின்றன. இந்த கருத்து மாற்றத்திற்கு தமிழக தினமலர் தேசிய நாளிதழ் பிரதம ஆசிரியரும், தலைசிறந்த இந்திய நாணயவியலாளருமான இரா. கிருக்ஷ்ண மூர்த்தி, சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியற் பேராசிரியர் ப. சண்முகம், முன்னாள் தமிழ்நாடு தொல்லியற்துறை இயக்குனர்களான கலாநிதி இரா. நாகசாமி, நடன காசிநாதன், முன்னாள் தினமணி தேசிய நாளிதழ் பிரதம ஆசிரியர் திருஞான சம்பந்தன், பிரபல நாணயவிளலாளர்களான டுவ்பே, மிக்நர், மற்றும் தமிழக மத்தியில் இன்று நன்கு அறிமுகமாகிவரும் இளம் நாணயவியலாளர் அளக்குடி சீதாரமான போன்றோரது அரிய கண்டுபிடிப்புக்களும், ஆய்வுகளும் முக்கிய காரணம் என்பதில் சந்தேகமில்லை. இவர்களது கண்டுபிடிப்புக்களே இலங்கையில் கிடைத்த தமிழர் நாணயங்கள் பற்றிய முன்னைய கருத்துக்களை மீள்வாசிப்புக்கு உட்படுத்த உதவிய காரணங்களில் ஒன்றெனத் துணிந்து கூறலாம்.

சங்க காலத் தமிழகம் தென்னாசியாவில் தொன்மையான மொழி, எழுத்து, இலக்கிய வடிவம் கொண்ட நாடு என்ற பெருமைக்குரியது. ஆயினும் இக்காலத்தில் நாணயங்கள் வெளியிடப்பட்டதா என்ற வாதப், பிரதிவாதம் நீண்ட காலமாக இருந்து வந்தது. பீடுப்பே போன்ற ஆய்வாளர்கள் இக்காலத்தில் ஆட்சி புரிந்த மூவேந்தர்கள் முன்னைவத்திருந்தாலும் பண்டமாற்று நிலவி அக்காலத்தில் நாணயங்கள் பயன்படுத்தப் படவில்லை என்ற கருத்தையே பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி உட்படப் பலரும் கொண்டிருந்தனர். ஆனால் அண்மைக்காலத்தில் சங்ககாலத்தில் சிறப்புற்றிருந்த தலைநகரங்கள், துறைமுகங்கள், வர்த்தகமையங்கள் போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இக்காலத்தில் ஆட்சி புரிந்த மூவேந்தர்கள் மட்டுமன்றி குறுநில மன்னர்கள் கூட முத்திரை நாணயங்களையும் வார்ப்பு நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர் என்ற உண்மை தெரியவந்துள்ளது. இந்நாணயங்கள் பலவற்றில் மன்னர் பெயரும், வம்சப் பெயரும், சமயச் சின்னங்களும்




பொறிக்கப்பட்டிருப்பதைக் கொண்டு தமிழகத்தில் தொன்மையான மொழி, எழுத்து, மதம், கலை, பண்பாடு போன்ற



இலங்கைத் தமிழரிடையே பண்டுதொட்டு நாணயம் வெளியிடும் மரபு இருந்து வந்ததென்கருத்தை உறுதியான முடிவாக்கியது. இக் கண்டுபிடிப்பானது முன்னைய நாணயக் கண்டுபிடிப்புக்களைவிட இலங்கைத் தமிழரின் பண்டைய கால வரலாற்றைப் புதிய கோணத்தில் பார்க்க வழிவகுத்ததென்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இவை தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற கிராமத்தில் வீட்டுக்கான அத்திவராரம் வெட்டும் போது கண்டுபிடிக்கப்பட்டதாகும். இவற்றை முதலில் கண்டுபிடித்த அவ்வூர் மக்கள் அவற்றைத் தனியார் வர்த்தகமையத்தில் விற்க முற்பட்டபோது அது பற்றிய செய்தி நாணயவியலாளர் ராஜா விக்கிரமசிங்கா அவர்களுக்குத் தெரியவந்தது. பின்னர் அவர் மக்களிடம் இருந்து அவற்றைப் பெற்று பொபே ஆராய்ச்சி என்பவருடன் இணைந்து அந்நாணயங்கள் பற்றி விரிவான ஒரு நூலை வெளியிட்டார்கள். அந்த நூலில் பிரசுரிக்கப்பட்ட பெரும்பாலான நாணயங்கள் இற்றைக்கு 2300 வருடங்களுக்கு முற்பட்டதென்பதை அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்தமைதி கொண்டு உறுதிபடக் கூறமுடியும். இதில் பொறிக்கப்பட்டுள்ள பெரும்பாலான பெயர்கள் பிராகிருத மொழியில் அமைந்திருந்தாலும் அவற்றுள் இரண்டில் தமிழ்ப் பெயர்கள் இருக்கலாம் என்பதை அவர்கள் குறிப்பிடத் தவறவில்லை. ஆனால் பின்னர் அந்நூலில் உள்ள நாணயங்களின் புகைப்படங்களை ஆராய்ந்த போது பல நாணயங்கள் தமிழில் எழுதப்பட்டிருந்தமை தெரிய வந்தது. அவற்றுள் உதிரன், மகாசாத்தான், கபதிகஜபன், தஜபியன் போன்ற பெயர்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. இப்பெயர்களின் பின்னொட்டு “அன்” என்ற விகுதியில் முடிவதால் இது தமிழில் ஆண்மகனைக் குறிக்கிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் உடுத்துறை என்ற இடத்தில் கிடைத்துள்ள சில தமிழ் நாணயங்கள் மேலும் ஈழத் தமிழர் வரலாற்றிற்குப் புது வெளிச்சமூட்டுவதாக உள்ளன.

தொடரும்…

நன்றி: எரிமலை

அம்சங்கள் இன்று ஆதாரபூர்வமாகத் தெரியவந்துள்ளது. இந்த அரிய வரலாற்றுண்மைகளை ஆய்வுலகுக்குத் தெரியப்படுத்தியவர்களுள் இரா. கிருக்ஷ்ணமூர்த்தி அவர்களுக்கு முக்கிய பங்குண்டென்பதில் எந்த ஐயமும் இல்லை. இன்று சங்க காலம் பற்றி ஆராயும் ஒருவர் இரா. கிருக்ஷ்ணமூர்த்தியின் கண்டுபிடிப்புக்களைப் புறக்கணித்துவிட்டு ஆய்வைப் பூர்த்தி செய்ய முடியாது எனக்கூறும் அளவுக்கு அவரது கண்டுபிடிப்புக்கள் தமிழக வரலாற்று ஆய்விலும் ஆழமான இடத்தைப் பெற்றுள்ளன. இவற்றினூடாக தெரியவந்த உண்மைகள்தான் சங்க காலத்திற்குச் சமமான காலத்தில் இலங்கைத் தமிழரிடையே அரச உருவாக்கமும், நாணய வெளியீடும் இருந்ததை உறுதிப்படுத்துவதோடு, அவர்களிடையே ஒரு தனித்துவமான பண்பாடு அக்காலம் தொட்டு தோன்றி வளர்ந்ததையும் அடையாளப்படுத்த முடிகிறது.

தமிழகத்தில் சங்க காலம் தொட்டு கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரை வெளியிடப்பட்ட நாணயங்களில் அக்கால அரசியல் பண்பாட்டு விழுமியங்களை அடையாளம் காட்டும் சின்னங்கள், குறியீடுகள் பொறிக்கப்பட்டிருப்பது ஓர் முக்கிய அம்சமாகும். தில் நாணயங்களை வெளியிட்ட அரச வம்சத்தின் குலச் சின்னத்தை நாணயத்தின் பின்புறத்தில் பொறிப்பது முக்கிய அம்சமாகப் பின்பற்றப்பட்டுள்ளது. அதில் சோழருக்குப் புலியும், பாண்டியருக்கு மீனும், சேரருக்கு அம்பும் வில்லும், மலையமானுக்கு ஆற்றுச் சின்னமும் முக்கிய குலக் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிற்காலத்திற்குரிய சில நாணயங்களில் குலக்குறியுடனும், குலக்குறி இல்லாமலும் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்குச் சான்றுகள் உண்டு. அவ்வாறான நாணயங்களில் பெரும்பாலும் மன்னனின் அல்லது அரச வம்சத்தின் பெயர் பொறிக்கப்படுவது வழக்கமாகும்.

ஆனால் இலங்கையில் கிடைத்த தமிழ் அம்சங்களை ஆராய்ந்து பார்க்காது அனைத்து தமிழ் நாணயங்களும் தமிழ் நாட்டுடனான தொடர்பால் வந்தவை என்ற கருத்தையே கூறி வந்துள்ளனர். அவ்வாறு கூறுவதற்கு இன்னொரு காரணம் இலங்கைத் தமிழர் வரலாற்றுக்கு நாணயங்களை ஒரு ஆதாரமாகப் பயன்படுத்தியவர்களில் பலர் அந்த நாணயங்களை நேரில் பார்த்தோ அல்லது அவற்றை கள ஆய்வில் கண்டுபிடித்து ஆராய முற்படவில்லை. மாறாகப் பிறர் கண்டுபிடித்து கூறிய கருத்தையும், நூல்களில் பிரசுரிக்கப்பட்ட புகைப் படங்களையும் அடிப்படையாகக் கொண்டே தமது கருத்தை வெளியிட்டனர். அவ்வாறு வெளியிடும் போதுகூட அவற்றைத் தமிழகத்தில் கிடைத்த நாணயங்களோடு ஒப்பிட்டுப் பார்த்ததாகவும் தெரியவில்லை.

இந்நிலையில் 1989-1993 காலப்பகுதியில் பூநகரி உள்ளிட்ட வன்னிப்பிராந்தியத்திலும், 1994 இல் தென்மராட்சி வட்டாரத்திலும் 2000க்கு மேற்பட்ட தமிழ் நாணயங்கள் கள ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் பெரும்பாலானவை பூநகரி வட்டராத்தில் இருந்து பெறப்பட்டன. இவ்வளவு எண்ணிக்கையுடைய தமிழ் நாணயங்கள் இலங்கையின் பிற வட்டாராங்களில் இதுவரை கிடைக்கவில்லை. இந்நாணயங்களில் தமிழக நாணயங்களை ஒத்த குலக்குறியீடுகளோடு, சின்னங்களோடு அல்லது வம்சப் பெயரோ காணப்படவில்லை.

அத்துடன் அவற்றின் வடிவமைப்பு, அழகு, தொழில் நுட்பம் என்பன முற்றிலும் தமிழகத்தில் கிடைத்த நாணயங்களில் இருந்து வேறுபட்ட இலங்கை நாணய மரபை ஒத்ததாகக் காணப்படுகின்றன. அதை உறுதிப்படுத்தும் வகையில் இந் நாணயங்களை வடிவமைப்பதற்குப் பயன்படுத்திய சுடுமண் அச்சுக்கள் பல இலங்கையிலேயே கிடைத்துள்ளன. இக்கண்டுபிடிப்புக்களே இலங்கைத் தமிழர் பண்டுதொட்டு நாணயங்களை வெளியிட்டு வந்திருக்கலாம் என்ற கருத்தை முன்வைப்பதற்கு முதலில் ஆத்திவாரம் அமைத்துக் கொடுத்தது.

இக்கருத்து மாற்றத்திற்கு இன்னொரு காரணம் இலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்கள் பலவற்றைத் தமிழ்நாட்டு ஆய்வாளர்களும் ஆராய்வதற்கு வாய்ப்புக்கிடைத்தமையாகும். இதுவரை ஐரோப்பியராலும், பிறராலும் கண்டுபிடித்து அரிதாகப் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நாணயங்களைப் பார்த்த தமிழ்நாட்டு ஆய்வாளர்கள் இப்போது ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் நாணயங்களைப் பார்க்க முடிந்தது. அவர்களில் தமிழக நாணய ஆய்வில் புலமையுடைய இரா. கிருக்ஷ்ணமூர்த்தி, ஐராவதம் மகாதேவன், ஆயுமுக சீதாராமன், சங்கர், இராமன் போன்றோர் இந்நாணயங்கள் தமிழ்நாட்டு நாணயங்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டவை என்பதற்கு கூறிய காரணங்கள் எமது கருத்தை மேலும் வலுப்படுத்தியது.

இவற்றின் பின்னணியில்தான் 1989இல் புதுக்கோட்டையிலும், 1999இல் சென்னையிலும் நடந்த தொல்லியற் கருத்தரங்கில் இலங்கையில் கிடைத்த அனைத்துப் பண்டைய தமிழ் நாணயங்களும் தமிழகத்திலிருந்து சென்றவை எனக் கூறப்படும் முன்னைய கருத்துக்கள் தவறு எனவும், இலங்கையில் தமிழரின் தொன்மை தொடர்பான அண்மையில் கிடைத்த சான்றுகளின் பின்னணியில் அங்கு கிடைக்கும் நாணயங்களை நோக்கும் போது சங்க காலத்திற்குச் சமமாக அங்கு தமிழ் அரச மரபும், நாணயங்களின் பயன்பாடும் தோன்றியதென்ற கருத்தை முன்வைக்க முடிகிறது.

இக்கருத்து முன்வைக்கப்பட்ட குறுகிய காலத்திற்குள் அதை மேலும் உறுதியிட்டுக் கூறக்கூடியபல தமிழ் நாணயங்கள் தென்னிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கண்டுபிடிப்பு






# 37ஆம் ஆண்டு வீரவணக்கம்

## 37th Year Veeravanakkam





**கேணல் சங்கர்**

வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்
18.09.1949 - 26.09.2001

### ஐந்து அம்ச கோரிக்கைகள்:-

1. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் இருப்போர் விடுதலை செய்யப்பட வேண்டும்.
2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக்குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேணடும்.
3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
4. வடக்கு கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும்.
5. இந்திய அமைதிப் படையின் மேற்பார்-வையில் ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்படுவதோடு தமிழ் கிராமங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் குடியிருக்கும் இராணுவம், பொலிஸ் வெளியேற வேண்டும்.

SEPT 26

### "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்"



ஈகைச்சுடர்

Thileepan

## லெப். கேணல் திலீபன்

### இராசையா பார்த்தீபன்

ஊரெழு, யாழ்ப்பாணம்

27.11.1963-26.09.1987

இந்திய அரசிடம்
5 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து
15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரை
12 நாட்கள் நீராகாரம் அருந்தாமல்
உணவு தவிர்ப்பு போராட்டம் நடத்தி
ஈகைச்சாவை தழுவிக்கொண்டார்

### Demand as follows:-

1. All Tamils detained under the Prevention of Terrorism Act should be released.
2. The colonization by Sinhalese in Tamil areas under the guise of rehabilitation should be stopped.
3. All such rehabilitation should be stopped until an interim government is formed
4. The Sri Lankan Government should stop opening new Police Stations in the Northeastern Province.
5. The Sri Lanka Army and Police should withdraw from schools in Tamil Villages & the weapons given by the the Indian Government to 'Home Guards' should be withdrawn

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

## The thirst of the Tamils is the Homeland of Tamileelam

# பொதுவேட்பாளர் விடயத்தில் தமிழர் தேசத்துக்கான அரசியல் தீர்வினை மக்களே தீர்மானிக்க வேண்டும்!

**நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன்**

28.08.2024

இலங்கை ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி தமிழர் பொதுக்கட்டமைப்பினால் முன்னிறுத்தப்பட்டுள்ள பொதுவேட்பாளர் விடயத்தில், தமிழர் தேசத்துக்கான அரசியல் தீர்வினை மக்களே தீர்மானிக்க வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கட்சிகளும் ஒவ்வொரு வகையான தீர்வுத்திட்டங்களை நிலைப்பாடாக கொண்டிருக்கலாம். ஆனால் தேசமாக மக்களே தாம் எந்த அரசியல் ஏற்பாட்டக்குள் வாழ வேண்டும் என்பதனை தீர்மானிப்பவர்கள்.

அந்தவகையில் பொதுவாக்கெடுப்பு எனும் ஜனநாயகப் பொறிமுறையூடாக மக்கள் அதனை தீர்மானிக்கின்ற வகையில் அரசியல் தீர்வுக்கான செயல்வழிப்பாதையினை தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தும் தமிழர் பொதுக்கட்டமைப்பு முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன், இது சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்படப்ட மனித உரிமையாகும் எனவும் குறித்துரைத்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் ஓர் தேசிய இனம் என்பதனை அடிப்படையாக கொண்டு, தமிழர்களுடைய திரட்சியை, தனித்துவத்தினை, தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையினை, தமிழர்களுடைய ஆட்புநிலப்பரப்பினை உலகிற்கு எடுத்துக் காட்டுகின்ற ஓர் விடயமாக தமிழர் பொதுவேட்பாளர் என்ற விடயத்தினை வரவேற்கின்றோம்.

தமிழர் தேசத்தனை பிரதிபலிக்கின்ற வகையில் தமிழர் பொது வேட்பாளரை முன்னிறுத்துவதனால், சிங்கள தேசத்தின் தென்னிலங்கை வேட்பாளர்கள் எவரும் தேர்தலின் முதற்சுற்றில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பில்லை.

எனவே அவர்கள் இரண்டாவது சுற்றுக்கு தள்ளப்படுவார்கள். இவ்வேளை தமிழர்களின் சம்மதத்துடனோ அல்லது பங்களிப்புடனோ அல்லாமல் சிங்கள நலன்சார்ந்து உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசியலமைப்பு சட்டமானது, தமிழர்களை கட்டுப்படுத்தாது என்ற செய்தியினையும் உலகிற்கு எடுத்துக் காட்டும் வகையில், தமிழர்கள் 2ஆம் சுற்றுத் தேர்தலை புறக்கணிப்பதும் பொருத்தமானதாக இருக்கும்.

இதேவேளை, தமிழர் பொது வேட்பாளரை முன்னிறுத்துவதனால் தென்னிலங்கை தரப்புடன் பேரம்பேச முடியும் என்ற கருத்து தமிழ் அரசியல் கட்சித்தலைவர்கள் பலர் கூறுகின்றனர். ஆனால் ஈழத் தமிழர் விவகாரத்தில் தென்னிலங்கை தரப்பினர் எழுத்திலோ, அல்லது வாக்குறுதியாகவோ எதுவாயி னும் அவர்களால் நடைமுறைப்படுத்த முடியாது.




காரணம் சிங்கள தேசத்தின் யதார்த்தம் என்பது சிங்கள பேரினவாதத்தினால் இனநாயகப்படுத்தப்பட்ட அரசியல் கலாச்சாரம் அதற்கு அனுமதிக்காது என்பது வரலாறாகவுள்ளது.

தமிழர் தரப்பு பலமாக இருந்த அக்காலத்தில் 2004ம் ஆண்டு இலங்கையின் தேர்தல் களத்தில் தமிழ் தேசியக் கூட்டடைமப் பினை களமிறக்கிய தமிழீழ விடுதலைப் புலிகள், அத்தேர்தலை ஒரு கருவியாக கையாண்டனரே அன்றி, சிங்கள தரப்புடன் பேரம் பேசுவது நோக்கமாக இருக்கவில்லை என்பதனையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஆக்கிரமிப்பு உள்ளாகியுள்ள தமிழர் தேசத்தில் இத்தேர்தலை, தமிழர்கள் ஒரு கருவியாகவும் ஓர் களமாகவும் பாவித்து நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான செயற்பாட்டை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்துவதற்கு தமிழர் பொதுவேட்பாளரை பயன்படுத்த வேண்டும்.

மகிந்த ராஜபக்ச ஆட்சியினை நீக்கம் செய்யும் நோக்கில், நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரில் மைத்திரியை ஆட்சிக் கதிரைக்கு கொண்டுவருவதற்கு, சர்வதேச சக்திகள் தமது நலன்களுக்காக தமிழர்களின் வாக்குகளை கருவியாக பயன்படுத்திக் கொண்டதனையும் நம் நினைவிற் கொள்ள வேண்டும்.

சர்வதேச சக்திகள் தமது பூகோள புவிசார் நலன்களுக்காக தமிழர்களை பாவிக்கின்றார்களே அன்றி, தமிழர்களை ஓர் தரப்பாக ஏற்றுக் நடப்பதில்லை.

1977ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினை அடிப்படையாக கொண்டு தமிழர்கள் ஓர் தேசமாக மக்கள் கொடுத்த ஆணைக்கு மாறாக செயற்பட முடியாது.

அந்தகையில் எந்த அரசியல் ஏற்பாட்டுக்குள் வாழ வேண்டும் என்பதனை தேசமாக மக்களே தீர்மானிக்கின்ற வகையில், பொது வாக்கெடுப்பினை முன்னிறுத்தி இலங்கையின் இன்றைய ஜனாதிபதி தேர்தல் களத்தினை தமிழர் தரப்பு கையாள வேண்டும்.

அதேவேளை இத்தேர்தல் காலத்தில் ஜெனீவாவில் கூடவிருக்கின்ற ஐ.நா மனித உரிமைச் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் வரவிருக்கின்ற தீர்மானத்தில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துகின்ற வகையில் ஜெனீவாக் களத்தினையும் தமிழர் தரப்பு கையாள வேண்டும் எனவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.



# எங்களிடம் எஞ்சியிருக்கும்

# ஒரே ஆயுதம் வாக்குகள் மட்டும்தான்

## இம்முறையாவது இலக்குத் தவறாது பிரயோகிப்போம்





ஜனாதிபதித் தேர்தல் – 2024

தமிழ்ப் பொதுவேட்பாளர்

# பா.அரியநேத்திரன்

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு

# தமிழ் மக்கள் வழிகாட்டுவார்கள்!

24.08.2024



“யாழ்ப்பாணம் இப்பொழுது வழிகாட்டியுள்ளது” இவ்வாறு 1931 ஆம் ஆண்டு எழுதியவர் பிலிப் குணவர்த்தன. இப்பொழுது பிரதமராக உள்ள தினேஷ் குணவர்த்தனவின் தகப்பன் அவர். ஒரு இடதுசாரியாக இருந்தவர். 1931ஆம் ஆண்டு இலங்கைத் தீவின் முதலாவது தேர்தல் நடந்த பொழுது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிய, யாழ்ப்பாணம் வாலிப காங்கிரஸ் தேர்தலை பரிஷ்கரிக்குமாறு மக்களைக் கேட்டது. காந்தியின் செல்வாக்குக்கு உள்ளாகிய யாழ்ப்பாணம் வாலிப காங்கிரஸ் இலங்கை தீவுக்கு முழு சுயாட்சி வேண்டும் என்று கேட்டு அத் தேர்தலைப் புறக்கணித்தது.

அப்புறக்கணிப்பை தென்னிலங்கையில் உள்ள இடதுசாரிகள் பெருமளவுக்கு ஆதரித்தார்கள். அவ்வாறு ஆதரித்த இடதுசாரிகளில் ஒருவராகிய பிலிப் குணவர்தன அது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்பொழுது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இக்குறிப்பு யாழ்ப்பாணம் யுத் காங்கிரசைப் பற்றி கலாநிதி சீலன் கதிர்காமர் எழுதிய நூலில் காணப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணம் வாலிப காங்கிரசை பின்பற்றி தேர்தல் புறக்கணிப்பை ஆதரித்த தென்னிலங்கை இடதுசாரிகள் கடைசி நேரத்தில் குத்துக்கரணம் அடித்து தேர்தலில் பங்குபற்றினார்கள் என்பது வேறு கதை.

யாழ்.வாலிப காங்கிரசின் அழைப்பை ஏற்று யாழ்ப்பாணம் பெருமளவுக்கு வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்துக்கு வெளியில் ஓரளவுக்கு வாக்களிப்பு நடந்தது. வாலிபக் காங்கிரஸ் அவ்வாறு தேர்தலை புறக்கணித்தது சரியா பிழையா என்ற விவாதத்தில் இப்பொழுது இறங்கத் தேவையில்லை. ஆனால் கடந்த நூற்றாண்டில் இலங்கைத் தீவின் முதலாவது தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிய ஒரு இளைஞர் அமைப்பு “ப்ரோ ஆக்டிவாக” – செயல் முனைப்பாக ஒரு முடிவை எடுத்துப் புறக்கணித்தது என்பதுதான் இங்கு முக்கியமானது. காலனித்துவ அரசாங்கம் நடாத்திய முதலாவது தேர்தலை தமிழ்த் தரப்பு எவ்வாறு செயல்முனைப்போடு அணுகியது என்பதற்கு அது ஒரு எடுத்துக்காட்டு.

அங்கிருந்து தொடங்கி கடந்த சுமார் 83 ஆண்டுகால இடைவெளிக்குள் தமிழ்த் தரப்பு அவ்வாறு தேர்தல்களை செயல் முனைப்போடு கையாண்ட மேலும் ஒரு சந்தர்ப்பம் எதுவென்றால், அது 2005ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலாகும்.

அப்பொழுது வன்னியில் ஒரு கருநிலை அரசை நிர்வகித்த விடுதலைப்புலிகள் இயக்கம் அந் தேர்தலை புறக்கணிக்குமாறு அழைப்பு விடுத்தது. அவ்வாறு தேர்தலை புறக்கணிப்பதன் மூலம் ரணில் விக்ரமசிங்கவுக்கு கிடைக்கக்கூடிய வாக்குகளை தடுப்பதே அந்த பகிஷ்கரிப்பின் நோக்கமாகும். ஏனென்றால் அப்பொழுது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஆட்சியில் இருந்தது. அந்த அரசாங்கம் நோர்வையின் அனுசரணையோடு ஒரு சமாதான முயற்சியை முன்னெடுத்து வந்தது. சமாதான முயற்சியை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தருமர் பொறியாகவே பார்த்தது. எனவே அதில் இருந்து வெளிவருவதற்கு ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க வேண்டும் என்று அந்த இயக்கம் சிந்தித்தது. அதன் விளைவாக தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழ் மக்களுக்கு கோரிக்கை விடுத்தது.

தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்திருந்தால் அவர்கள் தனக்கே வாக்களித்திருந்திருப்பார்கள் என்று ரணில் விக்ரமசிங்க இப்பொழுதும் நம்புகின்றார். தன்னுடைய வெற்றியைத் தடுத்து மஹிந்த ராஜபக்சவை ஆட்சிக்கு ஏற்றியதன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானத்தை முறிக்க விரும்பியது என்றும் அவர் நம்புகிறார்.

அத்தேர்தலில் விடுதலைப்புலிகள் இயக்கம் அதாவது தமிழ்த் தரப்பு எடுத்த முடிவானது முன்பு யாழ்ப்பான வாலிப காங்கிரஸ் எடுத்த முடிவு போலவே செயல்முனைப்பானது. தேர்தலை தமிழ்நோக்கு நிலையில் இருந்து தந்திரோபாயமாக அணுகுவது.

அந்த பகிஷ்கரிப்பின் விளைவுகள் தமிழ் அரசியலின் மீது மட்டும் தாக்கத்தைச் செலுத்தவில்லை. அதற்குமப்பால் தென்னிலங்கை அரசியல், இந்த பிராந்திய அரசியல் என்று பல்வேறு பரிமாணங்களில் அந்த பகிஷ்கரிப்பின் விளைவுகள் அமைந்தன. அவற்றின் தொடர்ச்சிதான் இப்பொழுதுள்ள அரசியலும்.

இவ்வாறு தென்னிலங்கையில் இருந்து அறிவிக்கப்படும் ஒரு தேர்தலை செயல்முனைப்போடு அணுகும் மூன்றாவது முயற்சிதான் தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற கருத்துருவம் ஆகும்.

கடந்த 83 ஆண்டுகளிலும் மீண்டும் ஒரு தடவை தமிழ்த் தரப்பு ஒரு தேர்தலை நிர்ணயகரமான விதங்களில் எதிர்கொள்ளும் ஒரு முடிவு இது. முன்னைய இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழ்த் தரப்பு தேர்தலைப் புறக்கணித்தது. ஆனால் இம்முறை தமிழ்த் தரப்பு தேர்தலில் பங்குபற்றுகின்றது. அதன்மூலம் தமிழ் மக்களை ஒன்று திரட்ட முயற்சிக்கின்றது. தமிழ் மக்களை ஒரு திரண்ட அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவதன்மூலம் தமிழ் மக்களுடைய பேரபலத்தை அதிகப்படுத்தி, இனப்பிரச்சினை தொடர்பான மேடைகளில் தமிழ் மக்களை ஒரு திரண்ட சக்தியாக நிறுத்துவது தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற கருத்துருவத்தின் முதல் நிலை நோக்கமாகும். தமிழ் மக்களை அகப்பெரிய திரட்சியாக மாற்றினால் அது பேச்சுவார்த்தை மேசையிலும், நீதி கோரும் மேடைகளிலும் தமிழ்மக்களை பலமான சக்தியாக மாற்றும். அந்த அடிப்படையில்தான் ஒரு பொது வேட்பாளர் நிறுத்தப்படுகின்றார்.

அந்த முடிவு தென்னிலங்கை வேட்பாளர்களின் மீது எவ்வாறான தாக்கத்தை செலுத்தியுள்ளது என்பதற்கு ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தரப்பைப் பேச அழைத்ததில் இருந்து விளங்கிக் கொள்ளலாம்.

ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தென்னிலங்கையில் மட்டுமல்ல தமிழ் பகுதிகளிலும் ஒரு பகுதி அரசியல்வாதிகளும் விமர்சகர்களும் கடுமையாக எதிர்ப்பைக் காட்டி வருகிறார்கள். தென்னிலங்கையில் யாரெல்லாம் தமிழ் வாக்குகளை கவர விரும்புகிறார்களோ அவர்கள் அனைவரும் பொது வேட்பாளரைக் கண்டு பதட்டமடைகிறார்கள்.

அவர்களுடைய தமிழ் முகவர்கள் எஜமானர்களை விட அதிகமாக பதறுகிறார்கள். தமிழ் வாக்குகள் கிடைக்கவில்லை என்றால் தமது தென்னிலங்கை எஜமானர்கள் திருப்தியூட்டும் வெற்றிகளைப் பெறத் தவறி விடுவார்கள் என்று அவர்களுக்கு பதட்டம். ஆனால் தமது தென்னிலங்கை எஜமானர்கள் தமிழ் மக்களுக்கு எதைத் தருவார்கள் என்பதனை அவர்களால் இன்று வரை தெளிவாகக் கூற முடியவில்லை.

கடந்த வாரக் கட்டுரையில் கூறப்பட்டதுபோல, அவர்களில் யாருமே சமஸ்டியைத் தரப்போவதில்லை. அப்படி என்றால், அவர்கள் தரக்கூடிய சமஸ்டிக்கு குறைவான வாக்குறுதிகளை நம்பித்தான் அவர்களுக்கு வாக்களிக்க வேண்டும். அதாவது கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகளை தந்து விட்டு அவற்றை மீறிய, அல்லது உடன்படிக்கைகளை எழுதி விட்டு அவற்றை தாமாக முறித்துக் கொண்ட ஒரு தரப்பு இப்பொழுதும் வாக்குறுதியைத் தரும் என்று காத்திருப்பதை எப்படிப் பார்ப்பது? அவர்கள் வரலாற்றில் இருந்து எதையுமே கற்றுக் கொள்ளவில்லை. தத்துவஞானி ஹெகல் கூறுவது போல “வரலாற்றில் இருந்து நாம் கற்றுக் கொள்வது என்னவென்றால், மனிதர்கள் வரலாற்றிலிருந்து எதையுமே கற்றுக் கொள்வதில்லை என்பதைத்தான்.” இவ்வாறு வரலாற்றுக் குருடர்களாக இருக்கும் அரசியல்வாதிகள் பொது வேட்பாளரை நிறுத்தும் தரப்பைப் பார்த்து முட்டாள்கள் என்கிறார்கள். அது ஒரு கேலிக்கூத்து என்கிறார்கள். அது ஒரு விஷப்பரீட்சை என்கிறார்கள்.

ஆனால் அவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்கும் யாருமே இதுவரையிலும் எந்த தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் எதற்காக ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தைக் கூறவில்லை. இது ஒரு முக்கியமான விடயம். தமிழ்ப் பொது வேட்பாளர் பிழை என்று சொன்னால் தென்னிலங்கையில் உள்ள எந்த வேட்பாளர் சரி என்பதை அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் பிழை என்று சொல்பவர்கள் யாருமே இதுவரையிலும் எந்தத் தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று தெளிவான முடிவை மக்களுக்கு கூறவில்லை.

ஏன் கூறவில்லை ? ஏனென்றால் தென் இலங்கையில் உள்ள எந்த ஒரு கட்சியும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தபட்ச வாக்குறுதியைக்கூட தருவதற்குத் தயாராக இல்லை. இப்பொழுது தராத வாக்குறுதியை அவர்கள் பிறகெப்பொழுதும் தரப்போவதில்லை.

எனவே இந்த இடத்தில் தமிழ் மக்கள் தெளிவாக செயல்முனைப்போடு இரண்டு முடிவுகளில் ஒன்றைத்தான் எடுக்கலாம். ஒன்று பகிஸ்கரிப்பது அல்லது தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பது. தமிழ்ப் பொது வேட்பாளருக்குள் பாகிஸ்கரிப்பும் உண்டு. அதாவது தென்னிலங்கையில் உள்ள எந்த ஒரு வேட்பாளரையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதால்தான் தமிழ் வேட்பாளர் முன்னிறுத்தப்படுகிறார்.

கடந்த 84 ஆண்டுகளுக்குள் தமிழ் மக்கள் எடுத்த நிர்ணயகரமான ஒரு முடிவாக அதை மாற்ற வேண்டும். அதற்காக உழைக்க வேண்டும். 83 ஆண்டுகளுக்கு முன் பிலிப் குணவர்த்தன “யாழ்ப்பாணம் இப்பொழுது வழிகாட்டியுள்ளது” என்று சொன்னார். இப்பொழுது கிழக்கிலிருந்து ஒரு பொது வேட்பாளர் கொண்டு வரப்பட்டிருக்கிறார். இம்முறை வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழர் தாயகம் பொது வேட்பாளரை முன்னிறுத்துகின்றது. தமிழ்ப் பொது வேட்பாளர் அதிகரித்த வாக்குகளைத் திரட்டினால் அது தென்னிலங்கைக்கும் வெளியுலகத்துக்கும் தெளிவான கூர்மையான செய்திகளைக் கொடுக்கும். தமிழ் ஐக்கியத்தை மேலும் பலப்படுத்தும். எனவே இப்பொழுது தமிழ் மக்கள் முன்னாள் உள்ள தெரிவு இரண்டுதான். ஒன்று, தென்னிலங்கை வேட்பாளர்களுக்காக காத்திருந்து மேலும் சிதறிப் போவது. இன்னொன்று தமிழ்ப்பொது வேட்பாளரை பலப்படுத்துவதன் மூலம் முழு இலங்கைக்கும் வழிகாட்டுவது.

நன்றி: நிலாந்தன்


e Wallet
Google Play
App Store
Reward Points
Gift Card
EVRP
JOIN, SHOP, & COLLECT EVR POINTS WHILE SHOPPING WITH OUR MERCHANTS & GIFT CARDS
REWARDING YOUR EVERYDAY
MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.
Merchant Benefits
Website Template: Modern design for improved user experience.
Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
Convenient Payment Options: EV gift wallet for seamless transactions.
Comprehensive Analytics: Access full reporting and tracking online.
Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
Financial Security: Build income for future sale or retirement.
One-time Registration Fee: $199 to unlock these benefits.
And more...
Member User Benefits
Point Accumulation: Earn 4% to 60% on purchases.
Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
Networking Opportunities: Build your own shopping network effortlessly.
Exclusive Privileges: Gain mining rights worth $60.
And more...
Register Now
40
80
20
160
10
320
WWW.MYEVERYDAYSHOPPING.COM







வெடிச்சத்தங்கள் பலமாகக் கேட்டபோதும் அவன் ஒத்திகையை நிறுத்தவில்லை. அவன் அதை பெரிதுபடுத்தவும் இல்லை. ஒத்திகையில் மாணவர்களுக்கும் எந்தப் பதற்றமும் இருக்கவில்லை. ஒவ்வொரு நாளும் இப்படி வெடிச்சத்தங்கள் கேட்பது வழமையாகிவிட்டது. பருத்தியடைப்புப் பக்கமே கூடுதலாகக் கேட்கும். அந்தப்பக்கந்தான் பெரிய இராணுவ முகாம் இருந்தது. அவன் நாடகம் பழக்கிக் கொண்டிருந்தான். ஒத்திகையிலேயெ கவனமாக இருந்தான், ஒத்திகையின்பொது பிறக்கும் கலகலப்பு எல்லோரிலும் படர்ந்திருந்தது. இராணுவம் பருத்தியடைப்புப் பக்கம் கரையை அண்டுவதும் அதைமறித்து போராளிகள் அடித்துக் கலைப்பதும் உருக்குப் பழகிப் போய்விட்டது. கொஞ்சம் நேரம் வெடியோசை காற்றைப் பிளந்து வரும், ஹெலிகொப்டர் சுழன்று வெறியன்யானைபோல உறுமித்திரியும். பிறகு கொஞ்ச நேரத்தால் எல்லாம் மெல்ல மெல்ல அடங்கி ஓய்ந்துவிடும்.

கடலோரக் கிராமமாகையால் அநேகமாக நேவிக்காரனின் கண்போட் அடியும் இருக்கும். அடி கூடுதலான நாட்களில் பருத்தியடைப்பு, கரைச்சி, மேற்குத்தெரு, கிழக்குக்கரை, கேம்றேட், நடுத்தெரு, மாதாகோயிலடி, கல்லொழுங்கைச் சனங்களெல்லாம் செபஸ்தியார் கோயிலடி றோட்டால் சுருவில் பக்கமும் பாலாக்காட்டுச் சந்தியால் செருக்கன் சந்தி சப்பேதுவானாவர் கோயிலுக்கும் ஓடிப்போவார்கள். ஊர் திரண்டு தெருவில் அல்லாடும். ஹெலி உயர்ந்தால் பதற்றமும் ஓலக்குரல்களின் ஒலிப்பும் பெருகியிருக்கும்.

குழந்தைகளும் பெண்களும் அழத்தொடங்கிவிடுவார்கள் நிழல் சிறுத்த பரட்டை மரங்களின் கீழே முதியவர்கள் களைப்பாலும் கவலையாலும் சோர்ந்துபோய் குந்தி விடுவார்கள். எல்லாம் தணிந்த பிறகு, தங்கள் வீட்டிற்குத் திரும்புவார்கள். முதலில் ஆண்கள் சைக்கிளில் போவார்கள். பிறகு மெல்ல மெல்ல பெண்கள், குழந்தைகள், முதியோர்களென ஊர்திரும்பி நிரம்பிவிடும்.

அன்றும் அவன் அப்படித்தான் நினைத்தான். பெரிய அளவில் சத்தம் வரவில்லை. அவன் மாணவர்களுடன் ஒத்திகையிலேயே தீவிரமாக இருந்தான்.

வெடிச்சத்தங்கள் அடங்கவில்லை. தொடர்ந்து பெருத்துக் கொண்டு வந்தது. திடீரென சனங்கள் குழறிக் கொண்டு ஓடும் சத்தம் மதிலுக்கு மேலால் கேட்டது. சட்டென எவரையும் தெரியவில்லை. அது உயர்ந்த மதில் அவர்கள் மண்டபத்துள்ளே இருந்தார்கள். எழுந்து நின்று பார்த்தால்தான் வெளியே தெரியும் வெளியே ஒலிக்கும் சத்தத்தைக் கேட்டவுடன் மாணவர்கள் ஓட முற்பட்டார்கள். தங்களுடைய பெற்றோர் எப்படியோ தம்மைத் தேடுவார்களே என்ற குழப்பம் அவர்களை ஆட்டியது. அவன் அவர்களை அறுதல்படுத்தினான். எல்லோரையும் ஒரு மாதிரி பாடசாலையில் நிறுத்திவிட்டு தான் மாத கோவிலின் பின் பக்கத்துக்கு ஓடினான். மாதா கோவிலின் பின் கதவு பிரதான வீதியுடன் இருக்கிறது. அங்கிருந்து எல்லாவற்றையும் பார்க்கலாம். என்ன, எது என்றறியவே அவன் ஓடினான்.

சனங்கள் கீயோ மாயோவென்று ஓடிக்கொண்டிருந்தார்கள். எல்லோருடைய முகங்களிலும் பீதி. எல்லாவற்றிலும் துயரமும், களைப்பும், ஒரு முடிவற்ற பயணத்தில் தத்தளிக்கும் தவிப்பு அவர்களில். அவன் பாடசாலை வளவிற்குள் சென்று விபரத்தைக்கூறி எல்லோரையும் அனுப்பிவிட்டு திரும்பவும் கோவிலின் பின் வீதிக்கு ஓடினான்.

“பருத்தியடைப்பு கதிரேசன் கோயிலடிக்கு ஆமி வந்திட்டான்” என்று கூறியபடி ஒருவன் ஓடிப்போனான். அப்போது அந்தப் பக்கமாக பெரும் குண்டொன்று வெடித்த சத்தம் கேட்டது. எல்லோரும் சடாரெனப் படுத்துவிட்டார்கள். அவன் மாதா கோவில் சுவருடன் பாதுகாப்பு நிலையெடுத்துப் படுத்தான்.

துப்பாக்கிச் சன்னங்கள் சுருவில் மெயின் றோட்டுப் பக்கமாகச் சிதறி வீழ்ந்தன. கேம் றோட்டில் விழுந்து படுத்தவர் ஒருவர் எழுந்தவுடன் “அவங்களோட முந்தி இஞ்சை இருந்த ஈப்பிக் காறரும் சேர்ந்து வாறாக. ஒருத்தனை நான் கண்டனான்” என்று கூறிய வாறு சுருவில் வீதியால் ஓடினார்.

சிலர் திரும்பி கேம் றோட்டாலும் ஓடினர் அவன் அவர்களை மறித்தான், வந்தவர்களோ தங்கள் உடமைகள் சிலதை விட்டு விட்டு வந்துவிட்டோம் என்றபடி ஓடினார்கள். போனவர்களில் ஒருசிலர் மட்டும் சற்று நேரத்தில் திரும்பி வந்தனர்.

“எங்கட வீட்டில் ஆமி நிற்கிறான். சிலர் பிடிபட்டினம். நாங்கள் எப்படியோ தப்பி வந்திட்டம். கடவுளுக்கு நன்றி” என்றனர்.

எங்கும் ஒரே அந்தரமும் பதற்றமும் சூழ்ந்திருந்தது.



அவன் தன்னுடைய வீட்டாரைத்தேடி அன்ரனிஸ் ஒழுங்கையால் ஓடினான். கல்லொழுங்கையில் கால்கள் இடறுப்பட்டன. பலமான அடி எங்கேயோ விழுந்தது எதையும் பொருட்படுத்துவதற்கில்லை. ஒழுங்கையின் திருப்பத்தில் மிதந்தபோது அவனுடைய வீட்டு வாசலில் மனைவியும் மாமியும் நின்றனர். அவனைக் கண்டதும். “ஆமி பருத்தியடைப்பாலையும் மாட்டுக்காலையடிக்குள்ளாலையும் இறங்கிவிட்டானாம். நீங்கள் எங்கை நிண்டிட்டு வாறியள் இவ்வளவு நேரமும்” என்று கோபத்துடன் கேட்டாள் மனைவி.

அவனுக்கு வியர்த்தது நடந்ததை அவசரமாகக் கூறினான். “அவக வரக்குமுதல் செருக்கன் சந்திக்குப் போவம் வாருங்கோ” என்றாள் மனைவி. தூக்கக்கூடிய பொருட்களுடன் எல்லோரும் செருக்கன் சந்திக்குப் புறப்பட்டார்கள்.

மாமாவின் சைக்கிளில் காணி உறுதி, அடையாள அட்டைகள், கூப்பன் காட், நகைப்பெட்டி, காசு எல்லாம் அடங்கிய பை கொழுவப்பட்டிருந்தது. அவனும் மனைவியும் ஒரு சைக்கிளில் ஏறினார்கள். மகன் தன்னுடைய சிறிய சைக்கிளில் படிக்கும் புத்தகங்களுடன் வந்தான்.

வீட்டை விட்டு வர மாமி மறுத்துவிட்டாள். “நீங்கள் போங்கோ. வேணுமெண்டால் நான் பார்த்துவாறன். ஆமி இவ்வளவு தூரம் வர எங்கட பொடியள் விடமாட்டினம்” என்றாள்.

அவர்கள் புறப்பட்டபோது கிழக்குத்தெருவால் ஒருவர் களைக்கக் களைக்க ஓடி வந்தார். ஓடி வந்து கொண்டே கூறினார். “ஜெற்றியடியில ஹெலியால ஆமியை இறக்கி அவக கடற்கரையால அந்தோனியார் கோயிலடிக்கு வாறாக எட்டி ஓடுங்கோ”

ஜெற்றியடியில இருந்து கடற்கரைப்பக்கமாகப் பார்த்தால் இவர்களின் வீடு அறுநூறு மீற்றர் தூரம்தான் இருக்கும். என்ன செய்வதென்று தெரியாத அவசரமும் அந்தரமும்.

வீட்டில் நிற்கும் மாமியை எப்படி அழைப்பது? அந்தோனியார் கோவிலடியில் போராளிகள் மறித்துச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அவனுடைய மாமாவும் மகனும் சைக்கிளில் வேகமாக ஓடத்தொடங்கினார்.

அன்ரனிஸ் கல்லூலிச் சுவரால் ஆமி பாய்ந்ததை அவன் பார்த்தான் அவர்கள் ஒழுவில் வீதியால் பாலக்காட்டுச்சந்தியை அடைந்ததும் சனங்கள் அதிகமாகச் சென்றதால் செருக்கன் சந்திக்கு நடந்தே போகவேண்டியிருந்தது. மெலிஞ்சி முனைச் சனங்கள் சுருவில் தேவாலயத்துக்குப் போனார்கள்.

கரம்பொன், பருத்தியடைப்பு, கேம் றோட், மேற்குத்தெரு, கிழக்குத்தெரு, நடுத்தெரு, கல்லொழுங்கை இடைத்துச் சனங்கள் செருக்கன் சந்தி சம்பேதுருவானவர் கோவிலில் தஞ்சமடைந்தனர்.

ஹெலி தாழப்பதிந்து சுட்டது. ஹெலியிலிருக்கும் காலனுக்குத் தெரியாமல் மறைவதற்கு மரங்களுக்குக் கீழும் கோவிலின் உள்ளுக்குமாய் நிரம்பியது சனம்.

கைக்கோவில் குருசுக்கோவில் பீடம் எல்லாமே விலத்த முடியாத அளவு சனங்கள். பெரும்பாலும் எல்லோரும் கத்தோலிக்கர்கள் என்பதால் மாதாவும், யேசுவும், சூசையப்பரும் அந்தோனியாரும் செபஸ்தியாரும், சாட்டிமாதா சம்பேதுருவானவர் இவர்கள் சனங்களின் வாய்களில் அல்லாடினார்கள். செபமாலை தொடராகச் சொல்லிக் கொண்டிருந்தனர். தங்களுக்கு ஏதும் கேடு வரக்கூடாது என்பது அவர்களின் நம்பிக்கை, சிலர் ஒவ்வொரு மூலையாக ஓடியோடி குந்தினர். அதற்கிடையில் வானில் ஹெலி பறக்கையும் அதனுள் இருப்பவர்களையும், தங்கள் இருப்பிடத்துக்கு வந்த அந்த கொடு மனிதர்களையும் திட்டித்தீர்த்தனர்.

“அருள் நிறைந்த மரியாயே வாழ்க
கர்த்தர் உம்முடன்”

ஹெலியிலிருந்து சூட்டுச்சத்தம்.

“அழிவாங்கள் கொல்லுறாங்கள் இவகளை கேட்பாகளில்லையா?”

“பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே
உம்முடைய திருவயிறின் கனியாகிய
யேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே”

“ஐயோ கோவில் வாசலுக்கை குண்டு போட்டாங்கள் போல யேசுவே, பிதாவே நீர்தாமே காத்தருளும்”

இப்படி கத்தித் தொடர் செபமாலை நடந்து கொண்டிருந்தது. அவன் கோவில் வளவுக்க ஓடினான் பங்குக் குருவானவர் அவனைக் கண்டதும் “மாஸ்ரர் வாருங்கோ” செபஸ்தியார் கோவிலடி வரை போய்வரும் என்றார். அவனும் மோட்டார் சைக்கிளின் பின் ஏறிவிட்டான், பங்குக்குரு சொன்னார் “நான் பின்னுக்கு இருந்தனான் இறை வீட்டுக்கு முன்பக்கம் செல் விழுந்தது. இதன் பின்தான் வெளிக்கிட்டன்”

ஏன் போறம் சுவாமி என்று கேட்டான் அவன். எல்லாச் சனத்தையும் சம்பேதுருவார் கோவிலுக்கு வரும்படி சொல்லுவம். வழிக்கு வழி குந்தியிருக்குதுகள். அதிலை இருந்தால் கெலிக்காரன் சுட்டுப்போடுவான், குருவானவர் சொல்லி முடிய காளி கோவிலடி வரவும் சரியாக இருந்தது. அவனின் மாமியார் மூச்செறிய நடையில் வந்துகொண்டிருந்தாள். மாமியாரைக் கண்டதும் மோட்டார் சைக்கிளை நிறுத்தினார் குருவானவர். “ஆமிக்காறர் எங்கட வளவெல்லாம் வந்திட்டாக என்னை அம்மே என்று கூப்பிட்டாக, நான் சாவியை இடுப்பிலை செருகிக் கொண்டு பின் கதவாலை வெளிக்கிட்டுட்டன். சுட்டாச் சுடட்டும் எண்டு நினைச்சுக்கொண்டு கையுக்க செபமாலையை வைச்சு சொல்லிக் கொண்டு வாறன். சுவாமி ஏன் போறீகள்? அவகள் கொள்ளையா வந்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரிப்பக்கமாகவும் குளத்தடியாலையும் கொள்ளையா போறாகள். என்னைக் கூப்பிடேக்கை கொஞ்சப்பேரைப் பிடிச்சு வைச்சிருந்தவர்கள், வடக்கு றோட்டாலதான் கூடின ஆமி போறாகள்” மூச்சு விடாமல் ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்.

அவன் மாமியாரிடம் “கோவிலடிக்குப் போங்கோ வாசல் மரத்துக்குக் கீழே இருக்கினம்” என்று விட்டுப்போனான். மாமியாரின் நடையில் தளர்வு தெரிந்தது. குருவானவரும் அவனும் இன்னும் கொஞ்சத்தூரம் போய் பார்ப்பம் என்று எண்ணியவாறு போனார்கள். செபஸ்தியார் கோவிலடி சென்றதும் அங்கால் போவது சாத்தியம் இல்லையென்பது புரிந்ததும் இருவரும் திரும்பினர் சனங்கள் பசியில் இருக்கும் சாப்பாடு கொடுக்க வேணும். நாரந்தனை அல்லது சரவணைக்குப்போய் நீங்கள் தான் எடுத்துக் கொண்ட வாங்கோ.

அவனுடன் உதவிக்குச் சிலரை குருவானவர் அனுப்பினார். குருவானவர் அடிக்கடி இப்படியான நிகழ்வுகளை சந்தித்ததனால் செருக்கன் பங்கில் அரிசி, பருப்பு, பால்மா போன்றவற்றை களஞ்சியப்படுத்தியிருந்தார்.

அவன் சரவணைப் பக்கம் சென்று சிலரை கிடாரம் தரும்படி கோட்டான், சிலர் மறுத்தனர், சிலர் கொடுத்தனர் அவர்கள் அடுத்ததாக தாங்கள்தான் இடம்பெயரப் போகின்றோம் என்பது தெரியாது. கிடாரத்துடன் கோவிலக்கு வந்து சேர்ந்தான். சமையல் ஆரம்பம். சிலர் மட்டும் ஒதுங்கிப் போயினர். சமையல் நடந்து கொண்டிருந்தவேளை குருவானவர் அவனை வரும்படி அழைத்தார். திரும்பவும் காளி கோவிலடிப் பக்கம் சென்று ஆஸ்பத்திரி றோட்டிற்குத் திரும்பினார்கள். இன்னும் பொன்னாச்சி கடைச்சந்தியை ஆமி தாண்டயில்லை. எங்கட பொடியள் மறிச்சுவைச்சிருக்கிறாங்கள் போல சண்டை கடுமையா நடக்குது.

இதற்கிடையில் “எல்வ்“ றக் ஒன்று விலத்திச்சென்றது, அற்குள் கனரக ஆயுதங்களுடன் பலர் நின்றனர். அதற்குள்ளிருந்து ஒரு குரல் “மாஸ்டர் சுவாமியைக் கூட்டிக்கொண்டு திரும்பிப் போங்கோ. பொன்னாச்சி கடைச்சந்தி, ஆஸ்பத்திரி, சவக்காலை உங்கட வீட்டடி எல்லாம் நிக்கிறாங்கள்” குருவானவரின் ஏக்கம் வயது போனதுகள் சிலரை விட்டுட்டு வந்திட்டுதுகள், நான் எப்படியும் அதுகளைக் கூட்டிக்கொண்டு போக வேணும் என்பதே. என்னசெய்வத? திரும்பிப் போவதைத் தவிர வேறுவழியில்லை.

சமையலும் மூன்று மணிக்கு முடிந்தது எல்லோரையும் நிரையாக விட்டு சமைச்ச உணவைக் கொடுக்கத் தொடங்கினர், குருவானவர் பக்கத்தில் நின்றார். சிலர் மட்டும் வந்து வாங்கவில்லை. நிரையில் நின்றவர்களில் ஒருவர் சொன்னார் “பெரியவக வரமாட்டாகள்” என்று சாதி பாக்கிறார்கள் என்பது பளிச்சென்று எல்லோருக்கும் விளங்கியது.

சாப்பாடு கொடுத்துக் கொண்டிருந்த வேளை ஒருவர், இதுக்குள்ளை புது மாப்பிளை பொம்பிளைக்கு போடுங்கோ என்றார் அப்போதுதான் குருவானவருக்கு ஞாபகம் வந்தது.

அன்று காலை மாதா கோவிலில் திருமணத் திருப்பலி ஒன்று நடை பெறவிருந்த விடயம். குருவானவரிடம் அவரே மீண்டும் சொல்லத்தொடங்கினார்.

“இப்பத்தான் பொம்பிளையை மீட்டு வந்தன். பொம்பிளை பங்கருக்கை கலியாண உடுப்போட நிண்டவகளாம். மாப்பிளை இஞ்ச வந்த பிறகுதான் அவகள் வரவில்லை யெண்டிட்டு திரும்பி சண்முகநாதன் பள்ளிக்கூடத்தடியாலை கேம் றேட்டுக்கு பக்கத்துக் குப்பொய் பங்கருக்கை இருந்த பொம்பிளையைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறாக சூசையப்பர் மரியாளை எகித்திற்கு கூட்டிப்போன மாதிரி இவளை கூட்டி வந்திருகிறாக”

“ஒரு குடும்பத்தை பங்கருக்கை வைச்சு வெட்டிப்பொட்டாகளாம். யேசுநாதர் பிறந்தவுடன் மனுக்குலத்திற்கு விடிவு கிடைச்ச மாதிரி எங்கட பிள்ளையளும் எங்களுக்கு விடிவு காட்டுவார்கள்”

குருவானவர் அவனைத் திரும்பிப் பார்த்து உங்களை மாதிரிக் கொதிக்கிறார்கள் என்றார்.

“இப்பிடி எல்லாரும் கொதிக்க வேணும்” என்று அவன் சொன்னான்.

இராணுவத்தினர் வடக்கு வீதியால் மண்டைதீவு சென்றுவிட்டார்கள் என்று விசனம் கிடைத்ததும் எல்லோரும் திரும்பி ஊருக்குச் சென்றனர். அவன் குடும்பத்தாருடன் தன் வீடு சென்றான். பொருட்கள் ஏதும் இல்லாதமையைக் கண்ட அவனது மாமியாரும், மனைவியும் தலையில் அடித்து அழுதனர். அவன் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்திருந்த அருமையான புத்தகங்களெல்லாம் அப்படியே எரிக்கப்பட்டிருந்தன. அவர்களின் இரட்டைத் திருக்கல் வண்டில் ஜெற்றியடியில் நிற்பதாக அவனுக்கு ஒருவர் வந்து கூறினார். எருதுகள் எங்கே என்று தெரியாது தேடினான்.

பிறகு, கோட்டைக்குள் இராணுவத்தினர் போய்விட்டனர் என அறிந்தான். கோட்டையில் சண்டை தொடர்ந்து நடக்கிறது என்பதை விமானக்குண்டு வெடிக்கும் அதிர்வும் ஷெல் விழுந்து வெடிக்கும் அதிர்வும் வெடிக்கும் ஒலியின் உணர்வும் புரிந்து கொள்ள வைத்தன. கோட்டை மீதான போராளிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் கோட்டையில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி மண்டைதீவிற்குள் வந்துவிட்டார்கள்.

மண்டைதீவை சுடுகாடாக்கிவிட்டு வடக்கு வீதியால் ஊர்காவற்றுறையை நோக்கிப்புறப்பட்டனர் இராணுவத்தினர், இதை அறிந்த சனங்கள் திரும்பவும் சுருவில், செருக்கன், வேலணை என்று ஓடத்தொடங்கினர். ஊர்காவற்துறையை நோக்கி திரும்பியவர்கள் பொன்னாச்சி கடைச்சந்தியுடன் தங்கள் எல்லையைப் போட்டு காப்பரண் அமைத்தனர். மக்கள் அனைவரும் சுருவிலையும், வேலணையையும் மையப்படுத்தி இடம் பெயர்ந்து பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்தனர். அவன் தன் குடும்பத்தாருடன் அராலித் துறையால் யாழ்ப்பாணம் செல்வது என முடிவெடுத்து அராலித்துறை நோக்கி நடக்கலானான். அப்போது அவன் மகன் கேட்டான் “எப்ப திரும்பவும் வீட்டை வாறது” அவனின் மனைவி கூறினாள். “நீ, அப்பா, நான் ஏன் இஞ்சை இருந்த போறவங்கள் எல்லோருமே எங்கட பொடியளோட சேர்ந்து இவங்களை அடிச்சுக் கலைச்ச அண்டைக்குத்தான் திரும்பவும் வரலாம். நிம்மதியாயிருக்கலாம்” அவள் கூறிமுடிக்க அவனின் கண்களில் நீர் நிறைந்திருந்தது அது கவலையால் அல்ல, விடுதலைக்காய் இன்னல்கள் எது ஏறபட்டாலும் அதை ஏற்கும் மனநிலை இவளுக்கு வந்ததை நினைத்து.

“போட்” புறுப்பட்டது யாழ்ப்பணம் நோக்கி.

எரிமலை- செப்டெம்பர் 2001

# 2025ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை





விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.ulagavanikam.ca
thamilarvanikam@gmail.com

# சங்கும் சிலிண்டரும்!

17.08.2024



இலங்கைத் தீவின் இரண்டு சுயேட்சை வேட்பாளர்கள் நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய நிலைமைகள் வளர்ந்து வருகின்றனவா?

முதலாவது சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி. அவர் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகிறார். இலங்கைத் தீவின் தேர்தல் வரலாற்றில் ஒரு ஜனாதிபதி சுயேட்சைச் சின்னத்தில் போட்டியிடுவது இதுதான் முதல் தடவை. உண்மையில் அவர் சுயேச்சை அல்ல. தாமரை மொட்டு கட்சியின் பெரும்பாலான பகுதி அவருக்கு பின் நிற்கின்றது. அப்படிப் பார்த்தால், அவர் தாமரை மொட்டுக்களின் மறைமுக வேட்பாளர்களில் ஒருவர். தாமரை மொட்டுக் கட்சி என்பது யுத்த வெற்றிக்கு பின் எழுச்சி பெற்றது. ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை குடும்பமயப்படுத்தி நிறுவனமயப்படுத்தி கட்டியெழுப்பியதே பொதுஜன பெரமுன எனப்படும் தாமரை மொட்டுக் கட்சியாகும். ஆனால் ரணில் இப்பொழுது அதில் பெரும் பகுதியைச் சாப்பிட்டு விட்டார். இலங்கைத் தீவின் கட்சி வரலாற்றில் இறுதியாகத் தோன்றிய பெரிய கட்சியும் சிதையும் ஒரு நிலை. அதன் விளைவாகத்தான் ரணில் சுயேட்சையாக நிற்கிறார்.

ரணில் சுயேட்சையாக நிற்கிறார் என்பதற்குள் ஓர் அரசியல் செய்தியுண்டு. அது என்னவென்றால் இலங்கைத்தீவின் பிரதான கட்சிகள் யாவும் சிதைந்து போகின்றன என்பதுதான். இலங்கைத் தீவின் மூத்த கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியின் வாரிசு அவர். ஆனால் அந்தக் கட்சி சிதைந்து சஜித் பிரேமதாசாவின் தலைமையில் வேறொரு கட்சி ஆகிவிட்டது. அதுபோல இலங்கைத் தீவின் மற்றொரு பெரிய பாரம்பரிய கட்சியாகிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி சிதைந்து அதிலிருந்துதான் தாமரை மொட்டுக்கட்சி தோன்றியது. இப்பொழுது தாமரை மொட்டுக் கட்சியும் சிதையத் தொடங்கிவிட்டது.

இக்கட்சிகள் ஏன் சிதைக்கின்றன? ஏனென்றால் இலங்கைத் தீவின் ஜனநாயகம் சிதைந்து விட்டது. இலங்கைத் தீவின் ஜனநாயகம் எங்கே சிதையத் தொடங்கியது? இலங்கை தீவின் பல்லினத்தன்மையை சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் ஏற்றுக்கொள்ளத் தவறியபோதுதான். அதாவது இனப்பிரச்சினைதான் இலங்கைத் தீவின் பாரம்பரிய கட்சிகள் சிதைவதற்குக் காரணம். ஈழப் போரின் விளைவாக சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் பாரம்பரிய கட்சிகள் இரண்டுமே சிதைந்து விட்டன. அந்த சிதைவிலிருந்து தோன்றிய மற்றொரு பெரிய கட்சியும் சிதையத் தொடங்கிவிட்டது. அந்தச் சிதைவின் வெளிப்பாடுதான் அதாவது இனப்பிரச்சனையைத் தீர்க்கத் தவறினால் இலங்கைத் தீவின் ஜனநாயகம் மேலும் சிதையும் என்பதன் குறியீடு அது.

அவருடைய சின்னம் சிலிண்டர். அதுவும் ஒரு குறியீடு எந்த ஒரு சிலிண்டருக்காக நாட்கணக்கில் மக்கள் வரிசையில் காத்து நின்றார்களோ அதே சிலிண்டர்தான். அது நாட்டை பொருளாதார ரீதியாக அவர் மீட்டெடுத்ததன் அடையாளமாகக் காட்டப்படக்கூடும். எனினும் ஒரு நாட்டின் ஜனாதிபதி சுயேட்சையாகப் போட்டியிடும் அளவுக்கு நாட்டின் கட்சி நிலவரம் உள்ளது என்பதை அது காட்டுகிறது. அதாவது ரணில் ஒரு வெற்றியின் சின்னமாக இங்கு தேர்தலில் நிற்கவில்லை. சிதைவின் சின்னமாகத்தான் தேர்தலில் நிற்கின்றார்.

மற்றொரு சுயேச்சை, தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன். அவருடைய சின்னம் சங்கு. அது மகாவிஷ்ணுவின் கையில் இருப்பது. போர்க்களத்தில் வெற்றியை அறிவிப்பது. சுடச்சுட பண்பு கெடாது வெண்ணிறமாவது. தமிழ்ப் பண்பாட்டில் பிறப்பிலிருந்து இறப்புவரை வருவது. பிறந்த குழந்தைக்கு முதலில் சங்கில் பாலூட்டுவார்கள். திருமணத்தில் முதலில் பாலூட்டுவது சங்கில்தான். இறப்பிலும் சங்கு ஊதப்படும். அரியநேத்திரன் ஒரு குறியீடு. அவருடைய சின்னமும் ஒரு குறியீடு.



தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர், தமிழ்ப் பொது நிலைப்பாட்டின் குறியீடு. தமிழ்ப்பொது நிலைப்பாடு என்பது பிரயோகத்தில் தமிழ் ஐக்கியம்தான். தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக நிக்கும் ஒருவர் சுயேட்சையாக நிற்பதன் பொருள் என்ன? அவர் கட்சி கடந்து நிற்கிறார் என்றும் வியாக்கியானம் செய்யலாம். அவர் ஒரு கட்சி பாரம்பரியத்தில் வந்தவர்தான். ஆனால் அந்தக் கட்சியின் வேட்பாளராக அவர் இங்கு நிற்கவில்லை. தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளின் பிரதிநிதியாகவும் அவர் தேர்தலில் நிற்கவில்லை. அவர் ஒரு பொதுநிலைப்பாட்டின் பிரதிநிதியாக நிற்கிறார். அதை ஏனைய கட்சிகள் ஏற்றுக்கொள்கின்றன. இது ஒரு புதிய பண்பாடு. கட்சிக்காக வாக்குக் கேட்காமல், ஒரு தனி நபருக்காக வாக்கு கேட்காமல், ஒரு பொது நிலைப்பாட்டுக்காக வாக்கு கேட்பதற்கு ஒருவரை பொதுவாக நிறுத்தியிருப்பது என்பது.

அரியநேத்திரன் தமிழரசுக் கட்சிப் பாரம்பரியத்தில் வந்தவர். ஆனால் அவருடைய கட்சி பொது வேட்பாளர் தொடர்பாக இன்று வரை முடிவு எடுக்கவில்லை. கடைசியாக அந்த கட்சியின் மத்திய குழு கடந்த வார இறுதியில் கூடியபொழுதும் முடிவு எடுக்கப்படவில்லை. கட்சியின் பேச்சாளரான சுமந்திரன் அது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் பொழுது, தமிழ் அரசியலுக்கு தலைமை தாங்கும் கட்சி தங்களுடையது என்ற பொருள்பட பேசியிருக்கிறார். உள்ளதில் பெரிய கட்சி என்ற அடிப்படையில் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம்.

ஆனால் ஒரு மக்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவதாகக் கருதும் ஒரு கட்சி, அதிலும் குறிப்பாக இனஅழிப்புக்கு நீதி கோரும் ஒரு மக்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதாகக் கருதும் ஒரு கட்சியானது, எவ்வாறு தலைமை தாங்க வேண்டும்? அது எதிர்த் தரப்பின் அல்லது வெளித் தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு பதில் வினையாற்றும் அரசியலை முன்னெடுக்க வேண்டுமா? அல்லது செயல்முனைப்போடு நீதியைக் கோரும் போராட்டமாக அந்த அரசியலை வடிவமைக்க வேண்டுமா?

கட்சியின் மூத்த தலைவர் சிவஞானம் கூறுகிறார், மக்கள் முடிவெடுப்பார்கள் என்று. தலைமை தாங்குவது என்பது மக்களை முடிவெடுக்க விட்டுவிட்டு மக்களின் முடிவைக்ககட்சி பின்பற்றுவது அல்ல. கட்சி முடிவெடுத்து மக்களுக்கு வழிநடத்த வேண்டும். பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முடிவுகளை எடுத்து மக்களுக்கு வழிநடத்துவதற்குப் பெயர்தான் தலைமைத்துவம்.

ஆனால் தென்னிலங்கை வேட்பாளர்கள் எதைத் தருவார்கள் என்று அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனம் வரும் வரையும் காத்திருப்பது என்பது ஒரு போராடும் இனத்துக்கு அழகில்லை; மிடுக்கில்லை; அதற்கு பெயர் தலைமைத்துவமும் இல்லை.

பொது வேட்பாளர் விடையத்தில் தமிழரசுக் கட்சி இரண்டாக நிற்கிறது என்பதே உண்மை நிலை. ஒருமித்த முடிவு எடுக்க முடியாமலிருப்பதற்கு அதுதான் காரணம். அதாவது தலைமைத் துவம் பலமாக இல்லை என்று பொருள். தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளுக்காகக் காத்திருப்பது தலைமைத்துவப் பலவீனம்தான்.

கிடைக்கும் தகவல்களின்படி எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் 13ஆவது திருத்தத்திற்கு மேல் எந்த ஒரு தீர்வையும் தரப்போவதில்லை. தமிழரசுக் கட்சி முன்வைக்கும் சமஸ்டித் தீர்வுக்கு எந்த ஒரு தென்னிலங்கை வேட்பாளரும் தயாராக இல்லை. ஆயின், யாருடைய தேர்தல் அறிக்கைக்காக தமிழரசுக் கட்சி காத்திருக்கின்றது ? அவர்கள் சமஸ்ரியைத் தர மாட்டார்கள் என்று தெளிவாகத் தெரிந்த பின்னரும் அவர்களுக்காக காத்திருப்பது எதைக் காட்டுகின்றது? சமஷ்டி அல்லாத வேறு ஏதோ ஒன்றுக்கு இறங்கிப்போகப் போகிறோம் என்பதையா?

அவர்கள் யாருமே சமஸ்ரித் தீர்வுக்கு உடன்படத் தயாரில்லை என்றால், அதன் பின் கட்சி என்ன முடிவு எடுக்கும்? தேர்தலைப் பரிஷ்கரிக்குமா? அல்லது பொது வேட்பாளரை ஆதரிக்குமா? பகிஸ்கரிப்பது தவறு என்று ஏற்கனவே சுமந்திரன் கூறியிருக்கிறார். அப்படியென்றால் பொது வேட்பாளரை ஆதரிப்பதைத் தவிர வேறு தெரிவு இல்லை. அல்லது அவர்கள் தரக்கூடியவற்றுள் பெறவற்றை எப்படிப் பெறலாம் என்று காத்திருக்கிறார்களா? அதற்குச் சிறீதரன் அணி தயாரா?

கட்சியின் மத்திய குழு கூடுவதற்கு முதல் நாள் சனிக்கிழமை கிளிநொச்சியில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது அங்குள்ள விவசாய அமைப்புகள் அப்பொதுக் கூட்டத்தை ஒழுங்குபடுத்தின. அதில் தமிழ் மக்கள் பொதுச்சபையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இறுதியில் பேசினார். அவருடைய உரை மிகத் தெளிவாக இருந்தது. அதில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளரை நியாயப்படுத்திப் பேசினார். கடந்த மாதம் 22 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தனியார் விருந்தினர் விடுதியில் மாவை சேனாதிராஜாவை சந்தித்தது பற்றியும், மாவையிடம் கையளித்த ஆவணம் ஒன்றைப்பற்றியும் அதிலவர் குறிப்பிட்டார். அந்த ஆவணத்தில் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதைப் பற்றிய அம்சங்கள் காணப்பட்டதாகவும் அவர் கூறினார். போலீஸ் அதிகாரத்தை இப்போதைகுத்த் தர முடியாது என்றும், அடுத்த நாடாளுமன்ற தேர்தலின் பின் நாடாளுமன்றத்தில் அதை தீர்மானிக்கலாம் என்றும் ரணில் கூறியுள்ளார். அதை பதிமூன்று மைனஸ் என்று சிறீதரன் வர்ணிதார். ஆயின், தமிழரசுக் கட்சி 13 மைனசை ஒரு பேசுபொருளாக ஏற்றுக்கொள்ளத் தயாரா?

இல்லையென்றால், யாரிடமிருந்து சமஸ்ரி வரும் என்று சமஷ்ரிக் கட்சி காத்திருக்கின்றது? சமஸ்ரியை யாராவது ஒரு சிங்களத் தலைவர் தங்கத்தட்டில் வைத்துத்தருவார் என்று இப்பொழுதும் சமஷ்ரிக் கட்சி நம்புகின்றதா? போராடாமல் சமஸ்டி கிடைக்கும் என்று சமஸ்ரிக் கட்சி நம்புகின்றதா? தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவே அவ்வாறான ஒரு போராட்டந்தான் என்பதனை சமஸ்ரிக்கட்சி ஏற்றுக் கொள்கிறதா?

அக்கட்சி முடிவெடுக்காமல் தடுமாறுவதும் ஒரு விதத்தில் பொது வேட்பாளர் அணிக்குச் சாதகமானது. உள்ளதில் பெரிய கட்சி முடிவெடுக்காமல் இரண்டாக நிற்பது பொது வேட்பாளருக்கு நல்லது. ஏனென்றால் தமிழரசுக் கட்சியின் வாக்காளர்களும் உட்பட தமிழ்மக்கள் தங்களுக்குத் தெளிவான இலக்குகளை முன்வைத்து தங்களை வழிநடத்த தயாரானவர்களின் பின் திரள்வார்கள். ஏற்கனவே ஈரோஸ் இயக்கத்தின் சுயேச்சைக் குழு பெற்ற வெற்றி ஒரு மகத்தான முன்னுதாரணமாகும். அது இலங்கைத்தீவின் தேர்தல் வரலாற்றில், தமிழரசியலில் ஒரு நூதனமான வெற்றி. அந்தத் தேர்தலில் அமிர்தலிங்கம், சம்பந்தர், யோகேஸ்வரன், ஆனந்தசங்கரி உட்பட பல மூத்த தலைவர்கள் தோல்வியடைந்தார்கள். அதைவிட முக்கியமாக திருகோணமலையில் இரண்டு ஆசனங்கள் கிடைத்தன. அன்றைக்கு அந்த சுயேட்சைக் குழுவுக்குக் கிடைத்த வெற்றி தமிழ்க் கூட்டுணர்வுக்குக் கிடைத்த வெற்றி. இன்றைக்கும் தமிழ்க் கூட்டுணர்வை பிரதிநிதித்துவப்படுத்தும் அரியநேத்திரனுக்கு தமிழ் மக்கள் வாக்குகளை அள்ளிக் கொடுப்பார்களாக இருந்தால், அது தமிழ்த் தேசிய அரசியலின் போக்கை மட்டுமல்ல, இலங்கை தீவின் ஒட்டுமொத்த அரசியல் போக்கையும் தீர்மானிக்கும் வாக்களிப்பாக அது அமையும்.

நன்றி: நிலாந்தன்

# கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஷோன் ஷென் (Shaun Chen) நோக்கி முன்வைக்கப்படும் மனு!

யூலை 05, 2024

**E-5058 மனவில் கையொப்பமிடுவது எப்படி?**
**https://www.ourcommons.ca/petitions/en/Petition/Details?Petition=e-5058**

இவ்வாறாக:

★ இலங்கைத் தீவிலுள்ள தமது ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மரபுவழித் தாயகமான தமிழீழத்தில் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நீட்சியான இன அழிப்பை எதிர்கொண்டுவரும் ஈழத்தமிழர் தேச மக்களிற் புலம்பெயர்ந்த பெருந்தொகையானோருக்குப் புகலிடமாகக் கனடா விளங்குகிறது (என்பதாலும்);

★ இலங்கை அரசு ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அப்பட்டமாக மீறிவந்துள்ளது (என்பதாலும்);

★ அவ்வரசின் ஊக்கத்தோடு 1956 ஆம் ஆண்டு தொட்டு தமிழருக்கு எதிரான இனப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, அவை பெரும் படுகொலைகளாகத் தொடர்ந்து, 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஓர் இன அழிப்புப் போர் ஊடாக மெய்நடப்புத் தமிழீழம் முற்றாக அழிக்கப்படுவது ஈறாகச் சரீர (பௌதிக) இன அழிப்பு பலவேறு வழிகளில் வெளிப்பட்டுள்ளது (என்பதாலும்);

★ தமிழ் இன அழிப்பு நீட்சியான தனித்துவத் தன்மையைக் கொண்டது, ஏனெனில் இன அழிப்பின் பத்துப் படிநிலைகளும் இதில் நடந்தேறியுள்ளன, அதுவும் இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான 1948 ஆம் ஆண்டுச் சாசனத்தின் அடிப்படையில் விசாரிக்கப்படக்கூடிய ஆரம்ப நியாயாதிக்க காலம் எப்போதிருந்து ஆரம்பிக்கிறதோ அப்போதிருந்தே அவை நடைபெற்றுவருகின்றன என்பதோடு அவை (எதிர்காலத்திலும்) மீள்நிகழும் ஆபத்துக் கடுமையாக நிலவுகிறது (என்பதாலும்);

★ இன அழிப்பு என்ற குற்றச்சாட்டை ஐ.நா. விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று கனேடிய நாடாளுமன்றத்தில் 2019 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்டிருந்த பிரேரணை, ஒன்ராரியோ மாகாண சட்டவாக்க அவையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 104 ஆம் சட்டமூலம் ஆகிய இரண்டையும் இலங்கை அரசு மறுதலித்துவிட்டது (என்பதாலும்);

கீழே ஒப்பமிட்டுள்ளோராகிய கனடாவின் குடிமக்களும் வதிவிடவுரிமை கொண்டோருமான நாம் கனேடிய நாடாளுமன்றத்திடம் வேண்டிக்கொள்வது (என்னவெனில்)

**1.** கனடா தனக்குரிய இரண்டு பொறுப்புகளின் அடிப்படையில் - (முதலாவதாக, புலம்பெயர்) ஈழத்தமிழ் மரபுரிமையின் பாற்பட்ட குடிமக்களைத் தன்னகத்தே கொண்டிருக்குங் காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஓர் அரச தரப்பாகவும் (இரண்டாவதாக, நேரடியாகப் பாதிக்கப்படாவிட்டாற் கூட எந்த ஓர் அரசுக்கும் பொதுவானதாயுள்ள சர்வதேசக்) கட்டாய நியமத் தரப்புக் கடப்பாட்டை நிறைவேற்றும் பொறுப்புள்ள ஓர் அரச தரப்பாகவும் - (இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான 1948 ஐ.நா.) சாசனத்தின் ஒன்பதாம் உறுப்புரை வரையறுத்துள்ள பொறுப்பின் அடிப்படையிற் செயலாற்றி தமிழ் இன அழிப்பு மீது இலங்கைக்குரிய அரச பொறுப்பை அச் சாசனம் வழங்குகின்ற முழுமையான கால நியாயாதிக்கத்தையும் (சாசனத்தின் சட்ட அமுலாக்கம் செல்லுபடியாகும் முதலாம் நாளான 1951 ஜனவரி 12 ஆம் நாள் தொடக்கம் இற்றை நாள் வரை மட்டுமல்ல மீள்நிகழும் ஆபத்தைக் கருத்திற்கொண்டு எதிர்காலக் கரிசனையையும்) உள்ளடக்கி சர்வதேச (உலக) நீதிமன்றில் விசாரிப்பதற்குரிய வழக்குத் தொடரும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்; அத்தோடு

**2.** ஆக்கிரமிக்கப்பட்ட தாயகத்திலுள்ள (ஈழத்தமிழ்) மக்களிடையேயும் (அவர்தம்) புலம்பெயர் மக்களிடையேயும் (மேற்குறித்த இன அழிப்பில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கான பரிகார நீதியாக) சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழ அரசின் உருவாக்கத்தை முடிவுசெய்வதற்கான பொதுவாக்கெடுப்பு ஒன்றை சர்வதேச நிர்வகிப்புடன் நடாத்தக் கோருதல் வேண்டும்.




**PETITION TO THE CANADIAN GOVERNMENT**

1: TAKE SRI LANKA TO THE INTERNATIONAL COURT OF JUSTICE (ICJ) AND;

2: CALL FOR AN INTERNATIONALLY ADMINISTERED REFERENDUM OF INDEPENDENT AND SOVEREIGN STATE OF TAMILEELAM

**HOW TO SIGN?**

STEP 1: SIGN THE ELECTRONIC PETITION ON HOUSE OF COMMONS WEBSITE (https://www.ourcommons.ca/petitions/en/Petition/Details?Petition=e-5058)

STEP 2: CONFIRM SIGNATURE VIA E-MAIL



SCAN ME

## PURPOSE OF SIGNING THE PETITION e-5058

**This Petition has been revised and uploaded to ourcommons.ca to comply with the House of Commons' word count limit (adherence to the submission guidelines).*

PURPOSE OF SIGNING THE PETITION e-5058

**This Petition has been revised and uploaded to ourcommons.ca to comply with the House of Commons' word count limit (adherence to the submission guidelines).*

Canada is a diasporic home to largest number of Eelam Tamils, a nation of people without their own state, who fled their occupied traditional homeland, Tamileelam, in the island of Ceylon/Sri Lanka, facing protracted genocide over 75 years;

The Sri Lankan state has grossly violated the Right of Self-Determination of the Eelam Tamils with constitutionally entrenched clauses and amendments imposing *unitary system of government* and giving *foremost place* to a particular religion concentrating power over affairs and wealth of the island in the hands of the Sinhala ethnic community, as well as imposing the Sixth Amendment against the democratic aspiration of Eelam Tamils;

The State-sponsored physical genocide has manifested in various ways since 1956 from anti-Tamil ethnic pogroms, military and paramilitary conducted massacres, and finally, a genocidal war that ended in May 2009 in total annihilation of the de-facto Tamil Eelam administration, which remained committed to internationally brokered peace process since 2002;

The protracted nature of genocide is a unique feature of Sri Lanka's genocide and an overwhelming majority of Tamils perceive that all ten stages of genocide have occurred since the beginning of invocable temporal jurisdiction of the 1948 UN Convention on the Prevention and Punishment of the Crime of Genocide (the Genocide Convention) and the risk of recurrence remains also high post-2009;

The Sri Lankan State has disputed both The House of Commons motion passed on 19th June 2019 that called on the UN to investigate into allegations of genocide and the Legislative Assembly of Ontario enacted Bill 104;

**WE, THE UNDERSIGNED**, residents and citizens of Canada

**CALL UPON THE** Member of Parliament

**TO**

**Firstly, invoke Canada's responsibilities on two grounds – as an *injured State* party on behalf of its citizens of Eelam Tamil heritage and as a State party exercising its *erga omnes partes* obligation owed to the international community as a whole – to initiate proceedings against the Republic of Sri Lanka at the International Court of Justice to investigate that State's responsibility on Tamil genocide under the Genocide Convention's Article IX covering entire temporal jurisdiction period; and**

**secondly, to call for an internationally-administered referendum among the people of North and East descent in the island, in the diaspora and among the refugees in India and elsewhere, to decide on the creation of an independent and sovereign state of Tamil Eelam.**

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

### Background information

**Canadian citizens of Eelam Tamil diaspora origin should urge Canada to institute case against the Republic of Sri Lanka at the International Court of Justice (ICJ) to investigate Sri Lankan State responsibility on Tamil genocide, covering temporal jurisdiction of the 1948 Genocide Convention in its entirety**

Canada is a diasporic home to the largest number of exiled Eelam Tamils, who fled genocidal onslaught in their traditional homeland, which is the northern and eastern parts of the island of Ceylon/'Sri Lanka. The homeland, which was de-facto Tamil Eelam prior to May 2009 is now Occupied Tamil Eelam.

The discourse of state formation in the island severed the legal continuity of sovereignty ties with the British Queen, who continued to be the repository of Tamils sovereignty until 1972. It unilaterally abolished even the meagre constitutional safeguards in the British-given 1947 Soulbury Constitution that had also been enacted disregarding Tamil concerns.

The unitary State of Sri Lanka has constitutionally negated Tamils their collective right of Self-Determination is the mainstream and unanimous view of the Tamils. Their democratically expressed political aspiration in 1977 for the establishment of a sovereign, secular and independent Tamil Eelam as the last-resort remedy, in the last- ever free and fair democratic election in the context of democratically exercising their self-determination, has been totally denied through the 6th Amendment to the Sri Lankan constitution since August 1983.

The Eelam Tamils, who commenced a passive resistance struggle since 1930s have been systematically subjected to a series of state-sponsored genocidal pogroms since 1956 that triggered them to seek last-resort defensive warfare as thousands fled seeking security within and outside the island. During the war, there were a series of genocidal massacres committed against Tamils by the armed military and paramilitary forces of the State. When Tamils achieved diplomatic and military parity of status with the Sri Lankan State, that State allegedly decided to genocidally annihilate the Eelam Tamils, which culminated in the genocidal war of 2009.

The widespread protests in the World capitals ended futile as the International Community failed to prevent the genocide within the Responsibility to Protect (R2P) framework. The UN's investigation into its own conduct during the last months of the war admitted "systemic failure" and concluded that the "events in Sri Lanka mark a grave failure of the UN" and recommended that the UN should in future "be able to meet a much higher standard in fulfilling its protection and humanitarian responsibilities".

However, the UN Human Rights Council based discourse in Geneva has also failed to deliver justice post-2009. There has been no meaningful transition from the root causes behind the conflict even though the armed struggle was ended through the genocidal onslaught. Cultural and structural genocide continues post-2009 with high risk of recurrence of physical genocide.

Since the systematic and protracted State-sponsored genocide against Eelam Tamils in the island manifest in various ways, it is crucial to place the acts of genocide from the very beginning of invokable temporal jurisdiction of the 1948 UN Convention on the Prevention of Genocide (hereafter be cited as the Convention) and the genocidal war in 2009 in the broader context of Ceylon/Sri Lankan States conduct towards Eelam Tamils during the last 75-year-long protracted genocide.

All the ten stages of genocide have taken place and continue to take place post-2009. The protracted nature of genocide is a uniquely unique feature of Sri Lanka's genocide. "Never again" has become "time again" in the island. Unless the State-responsibility for all acts under Article III of the Convention is properly investigated by the International Court of Justice (ICJ), there is a great danger of recurrence.

Narrowing the temporal jurisdiction to 2006-2009 without considering the protracted nature of the genocide would make it challenging to establish the intention as one would be limited to infer the intent from relevant facts and circumstances of a limited scope. In addition to reasonable inference[1], there are open and clear-cut reference to establish the definitional element of intent, which is often referred to as *dolus specialis* or *specific intent.*

[1] The International Criminal Tribunal for the former Yugoslavia (ICTY) has held that genocidal intent "may, in the absence of direct explicit evidence, be inferred from" circumstantial evidence. The International Criminal Court's (ICC's) Elements of Crimes, also states, "Existence of intent and knowledge can be inferred from relevant facts and circumstances". However, the UN Human Rights Council reports on Sri Lanka have limited such inferences only towards War Crimes and Crimes Against Humanity on crimes committed in Sri Lanka during the final phase of the war, even though the former High Commissioner of Human Rights did not rule out the interpretation of plausibile genocide based on the findings in the future."That is not something that we perceive at this stage. Had we thought that acts of genocide had been committed of course we would have raised this in the findings – that is not to say that at a subsequent stage once investigations were conducted that it implausible. But for the time being that is not something that we perceive as having allegedly happened," responded UN High Commissioner for Human Rights Zeid Ra'ad Al Hussein responding to question on genocide during OHCHR press conference on OISL Report (Geneva, 16 September 2015).

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

**Open for signature**
July 05, 2024, at 10:01 A.M. (EDT)

**Closed for signature**
September 03, 2024, at 10:01 A.M (EDT)

The North-East Secretariat of Human Rights (NESOHR), which was subjected to genocidal annihilation, has extensively documented the genocidal massacres since 1956[2].

The Permanent Peoples' Tribunal (PPT) on Sri Lanka, an international opinion tribunal independent from any State or UN authority, found Sri Lanka guilty of genocide in January 2014 at its Bremen Session[3]. Apart from the crime of genocide, the Tribunal has also defined the protected group according to the Convention as the nation of Eelam Tamils.

The House of Commons has passed a motion on 19th June 2019 calling upon "the United Nations to establish an international independent investigation into allegations of genocide against Tamils committed in Sri Lanka, including during the last phase of the armed conflict in 2009". Furthermore, the Legislative Assembly of Ontario has enacted Bill 104 in 2021 proclaiming the seven-day period in each year ending on May 18 as Tamil Genocide Education Week.

The Sri Lankan State has disputed the Canadian resolution and the legislature recognition of Tamil genocide remembrance. As such, a clear dispute has already been established for the Canadian State to institute a case at the ICJ.

As the largest diasporic home country of the Eelam Tamils, Canada that has a concern for its citizens, is entitled to invoke its responsibility as an injured State as well as being entitled to invoke its obligation *erga omnes partes* as recently demonstrated by The Gambia in its case against the Myanmar State-responsibility on genocide (2022) and by South Africa in the case of Israel's crimes against Palestinians (2024). Both the cases have been accepted by the ICJ as having plausible rights to protection from genocide.

Prevention of State Responsibility under the Convention is a clearly accepted obligation stemming from the peremptory norm of general international law (jus cogens).

Professor Francis Boyle, an eminent American expert in international law at the University of Illinois College of Law, who has single-handedly won two ICJ orders for the Republic of Bosnia Herzegovina against Yugoslavia to cease and desist all acts of genocide committed against its population, has held that the genocide against Eelam Tamils must be investigated by the ICJ and that he is prepared to appear as the Chief Prosecutor. [4]

While addressing the State Responsibility at the ICJ, the most proper avenue to address the criminal responsibility would be a specifically constituted (ad hoc) International Criminal Tribunal on Sri Lanka (ICT-SL) with dedicated statutes. The International Criminal Court has limited scope of temporal jurisdiction as the ICC can only exercise jurisdiction over crimes committed after July 1, 2002 (the date that the Rome Statute went into force).

Denial of Right of Self-Determination is also widely regarded as a jus cogens norm. Canada could also initiate a separate case in the ICJ on Sri Lankan States violation of the Right of Self-Determination of Eelam Tamils.

Canada has also incorporated the obligations of the Rome Statute into its national laws when it adopted the Crimes Against Humanity and War Crimes Act (CAHWCA) on June 24, 2000.

As such it could also apply Universal Jurisdiction to prosecute any individual present in Canada for crimes listed in the CAHWCA regardless of that individual's nationality or where the crimes were committed.

However, when making representations to The House of Commons or any Canadian government authority, the Tamil diaspora activist groups should not mix jurisprudence, territorial and temporal jurisdiction and they type of courts in one and same document when initiating a particular type of action. For example, a request to initiate proceedings at the ICJ on State Responsibility at the ICJ should not be mixing criminal responsibility or universal jurisdiction. Similarly, one should also pursue ICT over ICC as both entails the route.

[2] Report by, North East Secretariat on Human Rights (NESOHR), Karadipokku Junction Kilinochchi, Sri Lanka, First Edition in Tamil - 2005, First Edition in English - 2007, Information Collected by Statistical Centre for North East (SNE)

[3] Peoples's Tribunal on Sri Lanka (PTSL), Bremen, Germany, 07-10 December 2013, Report of the findings published by the Permanent People's Tribunal (PPT) and the International Human Rights Association - Bremen (IMRV), Bremen 2014

[4] Speech at the second international conference on Tamil Nationhood and Genocide in Sri Lanka, held at Carleton University in Ottawa in May 2018.

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

www.sangathamil.ca

# 1977 தேர்தல்: தமிழீழத்துக்கு மக்கள் ஆணை!

இலங்கையின் வரலாற்றில் பலவகையிலும் முக்கியத்துவம் மிக்கது 1977ஆம் ஆண்டு நிகழ்ந்த தேர்தல். 1970 ஆம் ஆண்டு ஆட்சியிலமர்ந்த சிறிமா அரசாங்கம் 1975ஆம் ஆண்டு அடுத்த பொதுத் தேர்தலை நடத்தியிருக்க வேண்டும் ஆனால் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பைக் கொண்டு வந்து குடியர சாக பிரகடனப்படுத்தியதோடு அதிலிருந்து தான் தமது ஆட்சி காலம் அடுத்த ஐந்து ஆண்டுகாலத்துக்கு தொடரப்போவதாக அறிவித்து பதவிக்காலத்தை நீடித்துக்கொண்டது. இந்த ஏழு ஆண்டு காலத்திற்குள் மக்கள் வெறுப்பை அதிகமாக சம்பாதித் திருந்த சிறிமாவின் கூட்டரசாங்கம் 1977இல் மண் கவ்வு வதற்கான முழுத் தகுதியையும் உயர்த்திக்கொண்டிருந்தது. தமது ஆட்சிக்காலத்தின் இறுதியில் மிகவும் பலவீனமடைந்து அரசியல் ஸ்திரத்தன்மையும் இழந்துகொண்டிருந்தது சிறிமா அரசாங்கம். அந்த இடைவெளியை ஜே.ஆர் நன்றாகவே பயன்படுத்திக்கொண்டார். தேர்தல் முடிவுகளும் வரலாறு காணாத முடிவை பாடமாகத் தந்தது.



தேர்தலின் போது தான் ஒரு தர்மிஷ்ட அரசாங்கத்தை உருவாக் கப்போவதாக கவர்ச்சிகரமான பிரச்சாரத்தில் இறங்கினார் ஜே.ஆர்.ஜெவர்த்தன. தர்மிஷ்ட என்றால் “தர்மம் நிறைந்த” என்பது பொருள். குறிப்பாக சிங்கள பௌத்தர்கள் மத்தியில் அந்த கவர்ச்சிகர சொல்லாடல் நன்றாகவே ஈடுபட்டது. சுயநலம் கருதாது புத்தரது போதனைக்கும் தருமத்திற்கும் இணங்க ஆட்சிபுரிந்தால் மக்களது சம்மதமும் நிலைத்து நிற்குமென் பதையே “தர்மிஷ்டம்” என்பர். தச. ராஜ-தருமத்திற்கும், பஞ்சசீல நெறிகளுக்கும் கட்டுப்படுத்தப்பட்ட மன்னராகவே இருப்பார். பௌத்த வரலாற்று இலக்கியங்களில் அசோகனின் ஆட்சியை தர்மிஷ்ட ஆட்சி என்பார்கள். ஜே.ஆருக்குப் பின்னர் அந்த சொல்லாடலை தேர்தலில் லாவகமாகப் பயன்படுத்தியவர் 2015 இல் மைத்திரிபால சிறிசேன.

### சுதந்திரக் கட்சியின் வியூகம்

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந் நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக் கிறன என்ற விடயத்தைக் கூட நேரடியாக அங்கீகரிக்கத் தயங்கியது.

### தேர்தலுக்கு முன்னரே தமிழ் – முஸ்லிம் அரசியல்

தலைமைகளை சரிகட்டுவதற்காக 21.02.1977 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் சிறிமாவோ ஒரு கூட்டத்தைக் கூட்டி சிறுபான்மை மக்களின் நியாயமான கவலைகளை கவனத்திற் கொண்டு தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதே தமது நோக்கம் என்றார்கள். அதற்கு பதிலளித்திருந்த செல்வநாயகம் ‘தனிநாடு என்ற கோரிக்கையில் சமரசத்துக்கு இடமில்லை, ஆனால் அப்படியான தீர்வெதனையும் இடைக்கால ஏற்பாடாக ஏற்றுக் கொள்வோம் என்றார். வரப்போகும் தேர்தலுக்காக நடத்தப்படும் கபட நாடகம் என்பதை அறியாமல் இல்லை. திரும்பவும் மார்ச் 16 அன்று அடுத்த கூட்டத்தைக் கூடினர். தமிழ்மொழியின் பயன்பாடு, அதிகாரப் பரவலாக்கம் பற்றி சிறிமாவோ இறங்கி வரத்தயாராக இருந்தார். அத்தோடு பல்கலைக்கழக அனு மதிகளின் தரப்படுத்தல் முறையை மாற்றியமைக்கவும் இணங் கினார். ஆனால் தமிழ் இளைஞர்கள் சிறிமாவோவை நம்புவதற்குத் தயாராக இருக்கவில்லை. கடந்த கால நம்பிக் கைத் துரோக அனுபவப் பாடங்களின் விளைவு அது.



தந்தை செல்வாவுடன் அமிர்தலிங்கம்

### தந்தை செல்வாவின் இறுதிக் கருத்து

செல்வநாயகம் இறப்பதற்கு சரியாக ஒரு மாதத்துக்கு முன்னர் மார்ச் 26 அன்று திருகோணமலையில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் உரையாற்றும் போது,

“சிங்களத் தலைவர்களுக்கான எனது அறிவுரையானது, எங் களை எங்கள் வழியில் செல்ல விடுங்கள் நாங்கள் கசப்புணர் வினைத் தவிர்த்துவிட்டு அமைதியாகப் பிரிவோம். இது இரு தேசங்களும் சமத்துவத்தின்பால் இணங்கிச்செல்ல பெரிதும் உதவும். தமிழ் மக்களுக்கு வேறு மாற்று வழியில்லை.

> “சிங்களத் தலைவர்களுக்கான எனது அறிவுரையானது, எங்களை எங்கள் வழியில் செல்ல விடுங்கள் நாங்கள் கசப்புணர்வினைத் தவிர்த்துவிட்டு அமைதியாகப் பிரிவோம். இது இரு தேசங்களும் சமத்துவத்தின்பால் இணங்கிச்செல்ல பெரிதும் உதவும். தமிழ் மக்களுக்கு வேறு மாற்று வழியில்லை.
>
> இளைய தலைமுறையினரிடையே கசப்புணர்வு வளர்ந்து வருகிறது. அதனை இனியும் வளர விடக் கூடாது. விட்டால் அது பெரும் முரண்பாட்டில் சென்று அந்நியத் தலையீட்டின் அவ சியப்பாடு வரை செல்லும்.” என்றார்.

இளைய தலைமுறையினரிடையே கசப்புணர்வு வளர்ந்து வரு கிறது. அதனை இனியும் வளரவிடக் கூடாது. விட்டால் அது பெரும் முரண்பாட்டில் சென்று அந்நியத் தலையீட்டின் அவசியப் பாடு வரை செல்லும்.” என்றார்.

சிறிமா அரசாங்கத்தின் மேற்கத்தேய எதிர்ப்புக் கொள்கையும் ஜே.ஆரின் மேற்கத்தையே சார்புக் கொள்கையாலும் சர்வதேச நாடுகள் ஜே.ஆரின் வெற்றிக்கு பங்களித்திருந்தன. தேர்தலில் தமது வெற்றியில் சிறிதும் ஐயமுற்று இருக்கவில்லை ஐ.தே.க. “திருமதி பண்டாரநாயக்கவை நாம் இத்தேர்தலில் கட்டாயம் தோற்கடிப்போம். 100 க்கு 90 ஆசனங்களைக் கைப்பற்றி ஐக்கிய தேசிய கட்சி தனிக்கட்சி பெரும்பான்மையோடு ஆட்சி யமைக்கும்” என உறுதியாக தேர்தல் மேடைகளில் சூளு ரைத்தார்.

### தமிழீழத்துக்கு வாக்கு

இலங்கையின் தமிழர் அரசியலில் நான்கு தசாப்தத்துக்கும் மேல் கோலாச்சிய இரு தலைவர்களும் இதே வருடத்தில் இரு மாத இடைவெளியில் மறைந்தார்கள். ஜீ.ஜீ.பொன்னம்பலம் பெப்ரவரியிலும் (09.02.1977), தந்தை செல்வா ஏப்ரல் மாத மும் (26.04.1977) மரணமடைந்தார்கள். தமிழரசுக் கட்சி ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து தமிழ் ஐக்கிய விடு தலைக் கூட்டணியாக உருவெடுத்திருந்தது. செல்வநாயகத் துக்குப் பின்னர் அதன் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்ட அமிர்தலிங்கம் தனது சொந்தத் தேர்தல் தொகுதியான வட்டுக் கோட்டையில் போட்டியிடவில்லை. செல்வநாயகத்தின் தொகுதி யிலேயே இந்தத் தேர்தலில் போட்டியிட்டார். 1970 ஆம் ஆண்டு தேர்தலில் அவர் சொந்தத் தேர்தலில் தோல்வி கண்டிருந்தார்.

அதேவேளை தமிழர் கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனத்தின் மூலம் தனி நாட்டுக்கான சபதத்தை எடுத்தது. மிகவும் விரிவான அந்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் இறுதிப் பகுதியில் இப்படி

குறிப்படப்படுகிறது.

"சுயநிர்ணய அடிப்படையின் கீழ், இறைமையுள்ள தாயகத்தை அமைக்கும் பணியை தமிழ் தேசம் பொறுப்பெடுத்துக் கொள்ளும். இதனை சிங்கள அரசுக்கும், உலகிற்கும் அறிவிப்பதற்கான ஒரே வழி, தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களிப்பது ஆகும். இந்த வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள், இலங்கை தேசிய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அதே நேரம், "தமிழீழ தேசிய பேரவை" ஒன்றையும் அமைத்துக் கொள்வார்கள். அந்த அமைப்பு, தமிழீழ அரசமைப்பு சட்டத்தை எழுதுவதுடன், அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழீழத்தின் சுதந்திரத்தை உருவாக்கிக் கொள்ளும். அதனை சாத்வீகமான வழியிலோ, அல்லது போராட்டம் ஒன்றின் மூலமோ அமைத்துக் கொள்ளும். தமிழீழ தேசியப் பேரவையானது, பொருளாதார அபிவிருத்தி, சமூக நலன், பிரதேச பாதுகாப்பு, கல்வி போன்றவற்றை எழுதி அமுல்படுத்தும். தமிழீழத்தின் சுதந்திரத்திற்கு சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்."

சிறீலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்கடிப்பதற்கு ஒரு வகையில் ஐ.தே.கவுடன் புரிந்துணர்வின் அடிப்படையில் மறைமுக கூட்டு இருந்தது என்றே கூற வேண்டும். ஐ.தே.க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் பிரச்சினையை தாம் முழுமையாக தீர்த்து வைப்பதாகவும் அதற்காக ஒரு சர்வகட்சி மாநாட்டை நடத்துவதாகவும் உறுதியளித்திருந்தது. பெரும்பாலும் கூட்டணி போட்டியிடாத தொகுதிகளில் தமிழ் மக்களின் அடுத்த தெரிவாக ஐ.தே.க வாக இருந்தது.

## தேர்தல் தந்த பதில்

1977 யூன் 06 வேட்பு மனு தாக்கல் செய்து, யூலை 21 தேர்தல் நடந்தது. ஐ.தே.க.வரலாறு காணாத வெற்றியை அடைந்தது. 154 தேர்தல் தொகுதிகளில் மட்டுமே போட்டியிட்ட ஐ.தே.க மொத்த 168 ஆசனங்களில் 140ஐ பெற்று 83 வீத அதி பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டது. 147 தொகுதிகளில் போட்டியிட்ட சிறீலங்கா சுதந்திர வெறும் 8 ஆசனங்களை மட்டுமே பெற்று படு தோல்வியடைந்தது. எதிர்க்கட்சியாகும் தகுதியைக் கூட இழந்தது. மறுபுறம் இனத்துவக் கட்சியும், பிரதேச கட்சியுமான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 23 தொகுதிகளில் மட்டுமே போட்டியிட்டு 18 ஆசனங்களை வென்று பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சியாக ஆனதுடன் எதிர்க்கட்சி தலைமைக்கான தகுதியையும் வரலாற்றில் முதற் தடவை பெற்றுக் கொண்டது. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவானார்.

| கட்சி | வேட்பாளர்கள் | வாக்குகள் | % | இடங்கள் |
|---|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 154 | 3,179,221 | 50.92 | **140** |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 23 | 421,488 | 6.75 | **18** |
| இலங்கை சுதந்திரக் கட்சி | 147 | 1,855,331 | 29.72 | **8** |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 2 | 62,707 | 1.00 | **1** |
| லங்கா சமசமாஜக் கட்சி | 82 | 225,317 | 3.61 | **0** |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 25 | 123,856 | 1.98 | **0** |
| மகாஜன எக்சத் பெரமுன | 27 | 22,639 | 0.36 | **0** |
| ஏனையோர் | 295 | 353,014 | 5.65 | **1** |
| **செல்லுபடியான வாக்குகள்** | **755** | **6,243,573** | **100.00** | **168** |
| பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் | | 6,667,589 | | |

மூலம்: Sri Lanka Statistics
1. பல-அங்கத்தவர் தொகுதிகளில் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குகளை அளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

1970 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற கட்சி 1977இல் வெறும் சிறு குழுவாக சுருங்க 1970இல் வெறும் சிறு குழுவாக சுருங்கியிருந்த ஐ.தே.க. 1977இல் 5/6 பங்கை தனதாக்கிக் கொண்ட வியப்பு மிக்க சூழல் உருவானது. பாராளுமன்ற ஜனநாயகம் நடைமுறையிலுள்ள எந்த நாட்டிலும் இப்படி ஒரு வெற்றி கிட்டியதில்லை என்பார்கள். அப்படி கூறுவதற்கு இன்னொரு காரணம் 87% சத வீத வாக்குகள் பயன்படுத்தப்பட்டிருந்ததும் தான். சில தொகுதிகளில் 90% வீத வாக்குகள் கூட பதிவாகின.

1970 தேர்தலில் 49% வீத வாக்குகளை மட்டுமே சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி பெற்றது. அதாவது அதையே இன்னொரு அர்த்தத்தில் சொல்வதாயின் 51% மக்கள் அவர்களை வெறுத்திருக்கிறார்கள். அல்லது எதிர்த்திருக்கிறார்கள். ஆனால் அப்படி குறைந்தளவு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அந்த கூட்டணி அரசியல் அமைப்பையும் மாற்றியது. ஆனால் 1977 தேர்தலில் ஐ.தே.க. வரலாறு காணாத வெற்றி பெற்றபோதும் பெற்ற வாக்குகள் வெறும் 50.84% வீதம் மட்டுமே. அது மட்டுமன்றி வடக்கு கிழக்கிலுள்ள 7 மாவட்டங்களிலும் ஐ.தே.க பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. 49%, 50.84% வாக்குகளைப் பெற்ற இந்த இரு அரசாங்கங்களும் தமக்கு அரசியலமைப்பையே மாற்றும் ஆணையை மக்கள் தந்து விட்டார்கள் என்று அறிவிக்கும் போது. வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்கு 53.53% வீத வாக்குகளை தமிழ் மக்கள் வழங்கியிருந்தார்கள். ஆக் அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு கிடைத்த மக்கள் அங்கீகாரமல்லவா? தமிழீழத்துக்கு மக்கள் வழங்கிய ஆணையாக ஏன் அதை கொள்ள முடியாது. இந்தக் கேள்வியை எழுப்பியவர் கூட வேறு யாருமல்ல ஏ.ஜே வில்சன். (Sri Lankan Tamil Nationalism: Its Origins and Development in the Nineteenth and Twentieth Centuries – February 1, 2000 by A. J. Wilson)

அதுபோல 1947 இல் எதிர்க்கட்சி தலைமையாக தகுதி பெற்றிருந்தது லங்கா சமசமாஜக் கட்சி. எந்த இடதுசாரிக் கட்சியாலும் ஒருவரைக் கூட வெற்றிபெறச் செய்ய முடியாது போனமை இது தான் முதற்தடவை. சிறிமா அரசாங்கத்துடனான இடதுசாரிக்கூட்டு 1975இலேயே உடைந்து போயிருந்ததும் கவனிக்கத்தக்கது.

தமிழர் கூட்டணிக்கு கிடைத்த வெற்றி என்பது அதன் விஞ்ஞாபனத்துக்கு கிடைத்த வெற்றியாகவே பார்க்கப்பட்டது. குறிப்பாக தமிழீழத்துக்கு மக்கள் வழங்கிய ஆணை என்றே உணரப்பட்டது. நாட்டில் ஒரு பாரிய இனப்பிளவை தெட்டத் தெளிவாக உணர்த்திய தேர்தல் பெறுபேறுகளாக அமைந்தது இந்தத் தேர்தல். அதேவேளை கிழக்கில் கூட்டணி சார்பில் போட்டியிட்ட அத்தனை முஸ்லிம் வேட்பாளர்களும் தோல்வி கண்டனர் என்பதையும் இங்கு பதிய வேண்டும். இப்படி ஒரு நிலைமை இதற்கு முன்னர் ஏற்பட்டிருக்கவில்லை.

தனிநாட்டுப் பிரகடனத்தோடு கூட்டணியில் இருந்து விலகி தனித்து இயங்கிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு ஆசனத்தை மட்டும் பெற்றுக்கொண்டது.

## தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி பெற்ற வெற்றி

| தேர்தல் தொகுதி | வாக்கு | % | ஆசனம் | வாக்களிப்பு | கூட்டணி உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 26,648 | 24.70% | 1 | 71.15% | செல்லையா ராஜதுரை |
| சாவகச்சேரி | 20,028 | 65.27% | 1 | 85.63% | வி.என்.நவரத்தினம் |
| யாழ்ப்பாணம் | 16,251 | 56.62% | 1 | 82.32% | வீ.யோகேஸ்வரன் |
| கல்குடா | 12,595 | 43.07% | 0 | 86.02% | |
| கல்முனை | 7,093 | 27.38% | 0 | 89.56% | |
| காங்கேசன்துறை | 31,155 | 85.41% | 1 | 83.08% | அ.அமிர்தலிங்கம் |
| ஊர்காவற்றுறை | 17,640 | 64.05% | 1 | 75.72% | கெ.பி.ரத்தினம் |
| கிளிநொச்சி | 15,607 | 73.42% | 1 | 79.71% | வீ.ஆனந்தசங்கரி |
| கோப்பாய் | 25,840 | 77.20% | 1 | 80.03% | எஸ்.கதிரவேலுப்பிள்ளை |
| மானிப்பாய் | 27,550 | 83.99% | 1 | 79.28% | வி.தர்மலிங்கம் |
| மன்னார் | 15,141 | 51.58% | 1 | 92.40% | பீ.எஸ்.சூசைதாசன் |
| முல்லைத்தீவு | 10,261 | 52.36% | 1 | 79.34% | எக்ஸ்.எம்.செல்லதம்பு |
| மூதூர் | 7,520 | 27.00% | 0 | 91.65% | |
| நல்லூர் | 29,858 | 89.42% | 1 | 83.03% | எம்.சிவசிதம்பரம் |
| பட்டிருப்பு | 15,877 | 49.17% | 1 | 89.92% | பி.கணேசலிங்கம் |
| பருத்தித்துறை | 12,989 | 55.91% | 1 | 81.66% | கெ.துரைரத்தினம் |
| பொத்துவில் | 23,990 | 26.97% | 1 | 179.02% | எம்.கனகரத்தினம் |
| புத்தளம் | 5,268 | 10.52% | 0 | 83.58% | |
| சம்மாந்துறை | 8,615 | 34.65% | 0 | 91.04% | |
| திருமலை | 15,144 | 51.76% | 1 | 81.78% | ஆர்.சம்பந்தன் |
| உடுப்பிட்டி | 18,768 | 63.44% | 1 | 80.05% | ம.ராசலிங்கம் |
| வட்டுக்கோட்டை | 23,384 | 70.18% | 1 | 81.90% | ம.திருநாவுக்கரசு |
| வவுனியா | 13,821 | 59.02% | 1 | 82.31% | ம.சிவசிதம்பரம் |
| மொத்தம் | 399,043 | 6.40% | 18 | | |

## கூட்டணி தந்த ஏமாற்றம்

இந்தத் தேர்தலில் கூட்டணி ஆதங்கத்தையும், அபிலாஷையையும் வைத்து அரசியல் இலாபம் கண்டது என்கிற குற்றச்சாட்டு அதன் பின்னர் மக்கள் மத்தியில் பலமாக எழுந்தது. தேர்தல் விஞ்ஞாபனம் அத்தனை கேள்விகளுக்குமான வழியைத் திறந்து விட்டிருந்தன.

தமிழர் விடுதலை கூட்டணி தமக்கு மக்கள் ஆணை கிடைக்குமிடத்து 'தமிழீழ நிழல் அரசாங்கம்' ஒன்றை தாம் அமைக்கப் போவதாக குறிப்பிட்டிருந்தது. தேர்தல் மேடைகளில் பேசும் போது கூட அயர்லாந்து விடுதலைப் போராளிகள் 1920ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றதும் "அயர்லாந்து நிழல் அரசாங்கத்தை" அமைத்தது போல தாமும் அப்படி ஒரு அரசாங்கத்தை அமைக்கப் போவதாக உறுதியளித்தனர்.

ஆனால் இதன் சரியான தமிழ்ப் பிரயோகம் "இடைக்கால அரசாங்கம்" என்று சமீபத்தில் மு.திருநாவுக்கரசு எழுதிய ஒரு கட்டுரையில் விளக்குகிறார். நிழல் அரசாங்கம் என்பது ஆங்கிலத்தில் Shadow Government எனப்படும். ஆனால் விஞ்ஞாபனத்தில் "இடைக்கால அரசாங்கம்" (Provisional Government) என்றே அவர்கள் பயன்படுத்தியிருப்பதை சுட்டிக் காட்டுகிறார்.

அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் "விடுதலையை எப்படி அடைவது" என்கிற உப தலையங்கத்தின் கீழ் தேர்தல் மூலம் ஆணை கிடைத்ததும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கொண்ட "தமிழீழ தேசியப் பேரவை" (National Assembly of Tamil Eelam) உருவாக்கப்படும் என்றும் அது சுதந்திர தமிழீழ அரசுக்கான அரசியல் யாப்பை உருவாக்கும் என்றும் அந்த சுதந்திர தமிழீழ யாப்பானது அமைதியான வழிமுறைகள் மூலமோ அல்லது வேறு நேரடி நடவடிக்கைகள் மூலமோ அல்லது போராட்டங்கள் மூலமோ நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (Tamil Eelam by bringing that constitution into operation either by peaceful means or by direct action or struggle).

தேர்தல் மேடைகளில் இதுதான் தமிழ் மண்ணில் நடக்கும் கடைசித் தேர்தல் என்றும் இனி தமிழீழத்திற்தான் அடுத்த தேர்தல் நடைபெறும் என்றும் கூட்டணித் தலைவர்கள் மேடைகளில் முழங்கியதை அப்படியே நம்பிய மக்கள் சும்மா இருப்பார்களா என்ன.

மேடைகளில் கூறப்பட்டபடி அயர்லாந்து பாணியிலான ஓர் இடைக்கால அரசாங்கத்தையோ அல்லது "தமிழீழ நிழல் அரசாங்கத்தை"யோ பற்றிய கதைகளை தேர்தலின் அப்படியே கிடப்பில் போட்டார்கள். அதுவே கூட்டணிக்கும் அமிர்தலிங்கத்துக்கும் எதிராக இளைஞர்களை திருப்பியது.

துரோகங்கள் தொடரும்

நன்றி - தினக்குரல்: என். சரவணன், 09.07.2017

### "தமிழீழம் மதச் சார்பற்ற சோஷலிச அரசு"

என்கிற உப தலைப்பின் கீழ் இருந்த பகுதி இது.

முற்று முழுதான முடிவுடன் அறிவிக்கக் கூடிய, ஒரேயொரு மாற்று மட்டுமே உண்டு. எமது முன்னோரின் மண்ணை, நாம் மட்டுமே ஆள வேண்டும். சிங்கள ஏகாதிபத்தியம் எமது தாயகத்தில் இருந்து வெளியேற வேண்டும். தமிழர் விடுதலை கூட்டணியானது, 1977 பொதுத் தேர்தலை, சிங்கள அரசுக்கு தமிழ் தேசத்தை அறிவிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பமாக பார்க்கின்றது. நீங்கள் கூட்டணிக்கு போடும் ஒவ்வொரு வாக்கும், சிங்கள மேலாதிக்கத்தில் இருந்து தமிழர் தேசத்தை விடுதலை செய்வதற்கானது என கருதப்படும்.

அதிலிருந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தத் தேர்தலில், தமிழர்களுக்கான தேசத்தை உருவாக்குவதற்கான கோரிக்கையை முன்வைக்கின்றது. ஒரு சுதந்திரமான, மதச் சார்பற்ற, சோஷலிசத் தமிழீழம், பூகோள ரீதியாக தமிழ் பேசும் மக்களின் பூர்வீக மண்ணை உள்ளடக்கி இருக்கும்.

அதே நேரத்தில், தமிழீழத்தின் பின்வரும் அரசியல், சமூக, பொருளாதார கட்டமைப்புகள் பாதுகாக்கப்படும் என்பதை தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவிக்கின்றது. தமிழரின் தேசமான ஈழம் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் அமைக்கப்படும்.

1. தமிழீழத்தின் பிரஜைகளாக அங்கீகரிக்கப் படுவோர்:

(அ) தமிழீழப் பிரதேசத்திற்குள் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து மக்களும்.
(ஆ) இலங்கையில் எந்தப் பகுதியிலும் வாழும் தமிழ் பேசும் நபர், தமிழீழத்தின் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.
(இ) இலங்கை வம்சாவளியினரான தமிழ் பேசும் மக்கள், உலகில் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், தமிழீழத்திற்கான குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்.

2. அரசியல் அதிகாரம் பரவலாக்கப்படும். ஆகவே, எந்தவொரு பிரதேசமும் அல்லது மதமும், இன்னொரு பிரதேசம், அல்லது மதத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு இடமளிக்கப் பட மாட்டாது. சுவிட்சர்லாந்தில் உள்ள சமஷ்டி அமைப்பு போல, பல்வேறு பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு, பிராந்திய தன்னாட்சி அதிகாரம் உறுதிப் படுத்தப்படும். விசேடமாக, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் தமிழீழத்தின் பகுதியில், ஒரு தன்னாட்சி பிரதேசம் அமைக்கப்படும். அவர்களது சுயநிர்ணய உரிமையும், பிரிந்து செல்லும் உரிமையும் மதிக்கப்படும்.

3. ஒன்றில் தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமோ, அல்லது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமோ, ஒன்றை மற்றது காலனிப் படுத்தவோ, அந்தப் பிரதேச மக்களை சிறுபான்மையினர் ஆக்கவோ அனுமதிக்கப் பட மாட்டாது.

4. தீண்டாமைக் கொடுமை, சமூக அந்தஸ்து அல்லது பிறப்பால் தாழ்ந்தவராக கருதப்படும் அநீதி முற்றாக ஒழிக்கப் படும். அந்தக் குற்றங்களை புரிவோருக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்.

5. தமிழீழ அரசு மதச் சார்பற்றது. அதே நேரத்தில் அனைத்து மதங்களை சேர்ந்தவர்களும் சமமான அரச பாதுகாப்பும், உதவியும் வழங்கப்படும்.

6. தமிழீழ அரசின் உத்தியோகபூர்வ மொழியாக, தமிழ் மொழி இருக்கும். அதே நேரம், நாட்டில் வாழும் சிங்களவர்கள் தமது மொழியில் கல்வி கற்பதற்கும், தமது சொந்த மொழியிலேயே அரசுடன் தொடர்பு கொள்ளவும் சுதந்திரம் வழங்கப்படும். சிங்கள நாட்டினுள் வசிக்கும் தமிழர்களின் மொழி உரிமையை மதிக்க வேண்டுமென சிங்கள அரசிடம் வேண்டப் படும்.

7. தமிழீழம் ஒரு விஞ்ஞான சோஷலிச நாடாக இருக்கும்.

(அ) மனிதனை மனிதன் சுரண்டுவது சட்டத்தால் தடை செய்யப்படும்.
(ஆ) உழைப்பின் மேன்மை பாதுகாக்கப்படும்.
(இ) தனியார் துறை சட்ட வரையறைக்குள் அனுமதிக்கப்பட்டாலும், உற்பத்தி சாதனங்களும், விநியோகங்களும் அரச உடைமைகளாக இருக்கும் அல்லது அரசினால் கட்டுப்படுத்தப் படும்.
(ஈ) குத்தகை விவசாயிகளுக்கும், தனியார் காணிகளில் குடியிருப்போருக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்கப்படும்.
(உ) தமிழ் தேசமான ஈழத்தின் பொருளாதார அபிவிருத்தி, சோஷலிச திட்டமிடல் அடிப்படையில் இருக்கும்.
(ஊ) ஒரு தனிநபரோ, அல்லது குடும்பமோ சேர்க்கக் கூடிய அளவு செல்வத்தின் உச்ச வரம்பு தீர்மானிக்கப்படும்.

8. தமிழீழ சோஷலிசக் குடியரசானது அணி சேராக் கொள்கையை பின்பற்றும். அதே நேரத்தில், சர்வதேச மட்டத்தில், ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுக்கும், ஜனநாயக விடுதலை இயக்கங்களுக்கும் தனது ஆதரவை வழங்கும்.

9. தமிழீழ அரசானது, சிங்கள நாட்டில் உள்ள முற்போக்குச் சக்திகளுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளும். இரண்டு தேசங்களும் எதிர்நோக்கும் பரஸ்பர பிரச்சினைகள், சகோதரத்துவ அடிப்படையில் தீர்த்து வைக்கப்படும்.



# தமிழீழ விடுதலை வரலாற்றில் செப்ரெம்பர்

## லெப். கேணல் திலீபனின் தியாகப் பயணம்



இந்திய வல்லாதிக்க ஆளும்வர்க்கத்தின் அரசியல் முகமூடியைக் கிழித் தெறிந்து, தமிழ் மக்களுக்கும், உலகிற்கும் இந்திய அரசின் நயவஞ்சகச் செயலை சுட்டிக்காட்டுவதற்காக 15.09.1987 அன்று சாகும், வரை நீரா காரமற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து, பன்னிரெண்டு நாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி 20.09.1987 அன்று தனது உயிரைத் தற்கொடை செய்தார் லெப். கேணல் திலீபன் அவர்கள்.

## வந்தாறுமூலை பல்கலைக்கழகப் படுகொலை



மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலை பல்கலைக்கழகத்துள் தஞ்சம் புகுந்திருந்த தமிழ் மக்கள் 05.09.1990 அன்று பீ.ஏ. கருணாதிலக தலைமையிலான சிங்கள இராணவத்தினரால் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்னர். இதில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட் 158 தமிழ் மக்கள் பலியாகினர்.

## சத்துருக்கொண்டான் படுகொலை



மட்டக்களப்பு மாவட்டத்தில் 09.09.1990 அன்று ஏ.எம். டபிள்யூ. செனிவரத் தின தலைமையி லான விசேட அதிரடிப்படையினர் சத்துருக்கொண்டான் பகுதியை சுற்றிவளைத்து பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட 180 தமிழ் மக்களை கைதுசெய்த கொலை செய்தனர்.

## தமிழீழத்தின் முதன் முதல் மணக்கொடைத் தடைச்சட்டம்

தமிழீழத்தில் முதன் முதல் மணக்கொடைத் தடைச்சட்டம் அமுலான நாள் 01.09.1995

## யாழ். கோட்டை மீட்பு



170 நாள் முற்றுகைச் சமரின் பின் பிடுதலைப் புலிகளால் யாழ். கோட்டை மீட்கப்பட்டு 26.09.1990 அன்று யாழ். கோட்டையின் மீது தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப் பட்டது.

## ஒப்பிரேசன் மின்னல் முறியடிப்பு

தமிழீழ தாயகத்தை இரண்டாகப் பிளக்கும் நோக்கத்தைக் கொண்ட மணலாறு ஒப்பிரேசன் மின்னல் படையெடுப்பு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்ட நாள் 26.09.1991. இப் படையெடுப்பு 28.08.1991 அன்று ஆரம்பித்து 26.09.1991 வரையான 28 நாட்கள் நீடித்தது. இச்சமரில் எமது முதல் நிலைத் தளபதிகளில் ஒரவரான லெப். கேணல் ஜஸ்ரின் உட்பட 236 வீரர்கள் வீரச்சாவடைந்து தேசத்தைக் காத்தனர். 300 வரையான தமது சிப்பாய்களை இழந்து சிங்களப்படை தோல்வியைச் சந்தித்தது.

## மாத்தளன் படுகொலை



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன் பகுதியில் 18.09.1993 அன்று இரவு நிகழ்ச்சி ஒன்றில் குழுமியிருந்த தமிழ் மக்கள் சிறீலங்கா விமானப்படையினர் புக்காரா விமானங்களால் குண்டு வீசி கொலை செய்தனர். இதில் 13 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 40ற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர்.

## சாவகச்சேரிப் படுகொலை



யாழ். மாவட்டத்தின் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் 28.09.1993 அன்று சிறீலங்கா விமானக் குண்டுவீச்சால், பதுங்குகுழியில் இருந்த பெண்கள், குழந்தைகள், உட்பட 23 தமிழ் மக்கள் மண்ணால் மூடப்பட்டு மூச்சுத்திணறி உயிரிழந்தனர்.

## ஒப்பிரேசன் யாழ். தேவி முறியடிப்புச் சமர்



29.09.1993 அன்று ஆனையிறவுப் பெருந்தளத்திலிருந்து யாழ். குடா நாட்டிற்கான விநியோக மார்க்கமாக விளங்கிய கிளாலி இறங்கு துறையை கைப்பற்றுவதற்காக கனரகவாகனங்கள் சகிதம் 5,000 ற்கு மேற்பட்ட சிங்களப் படையினர் முன்னேறினர். புலோப்பளையில் வைத்துப் படையினரை வழிமறித்த விடுதலைப் புலிகள் ஆக்ரோசமான முறியடிப்புத் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது இடம்பெற்ற 4 மணித்தியால முறியடிப்புத் தாக்குதலில் 125 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். இப்படை நடவடிக்கையில் சிங்கள இராணுவத்தினரை வழிநடத்திய கட்டளை அதிகாரி கேணல் சரத் பொண்சேகா உட்பட 234 படையினர் படுகாயமடைந்தனர். ரி-55 தாங்கிகள் இரண்டும், பவள் கவச வாகனம் ஒன்றும் முற்றாக சிதைக்கப்பட்டன. வேறு இரண்டு கவசவாகனங்கள் சேதடைந்தன.

## சாகரவர்த்தனா மூழ்கடிப்பு




19.09.1994 அன்று ஏ-602 இலக் கடலரசன் எனும் அர்த்தப்படும் சிறீலங் காக் கடற்படையின்



சாகரவர்த்தனா கட்டளைக் கப்பல் கடற்கரும்புலிகள் மகளிர் படையணிச் சிறப்புத்தளபதி லெப். கேணல் நளாயினி தலைமையி லான கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. இச்சம் பவம் தமிழீழத்தின் மேற்க்கு கடற்பகுதியான கற்பிட்டிக் கடற்பரப்பில் இடம்பெற்றது. இவ் வெற்றிகர கடற்தாக் குதல் சமரின் போது சாகரவர்த்தனா கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் அஜித் போயகொட மற்றும் உதவிக் கட்டளை அதிகாரியும் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

## கிளிநொச்சி நகர் மீட்ட ஓயாத அலைகள் – 2



விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் - 2 நடவடிக்கை மூலம் 27.09.1998 அன்று ஒரு பிரிகேட் தலைமையகத் தையும் பல மினி முகாங்களையும் கொண்டதான 8 கி.மீ நீளமான இராணுவ வலயமும், 1500 இற்கு அதிகமான படையினரும் அழிக்கப்பட்டு கிளிநொச்சி நகர் மீட்கப்பட்டது. இரண்டு யுத்த டாங்கிகள் உட்பட பெருமளவான ஆயுத தளபாடங்களை புலிகள் கைப்பற்றினர். இழந்த எமது பிரதேசங்களை மீட்டெடுத்த பெரும் சமரின் வெற்றிக்கு வலுச்சேர்த்து 405 விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

## ரிவிகிரன முறியடிப்பு



03.09.2000 அன்று இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட ரிவிகிரண எனும் இராணுவ படையெடுப்பு தொடங்கிய நாளிலே விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் - 3 நடவடிக்கை மூலம் முறியடிக்கப்பட்டது.



## ஓயாத அலைகள் – 4

தென்மராட்சிப் பகுதியில் 26.09.2000 அன்று விடுதலைப் புலிகளால் ஓயாத அலைகள் - 4 நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

## விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர் கேணல் சங்கர் அவர்கள் வீரச்சாவு



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் சங்கர் 26.09.2001 அன்று வன்னி ஒட்டுசுட்டான பகுதியில் சிங்கள இராணுவத்தின் கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான அடையை, சிறீலங்கா அரசு 04.09.2002 அன்று நள்ளிரவுடன் நீக்கியது. சந்திரிகா அரசால், 1998 ம் ஆண்டு, விடுதலைப்புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடையானது, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பெரும் தடைக்கல்லாக அமைந் திருந்தது தெரிந்ததே. இத்தடை நீக்கமானது, தாய்லாந்தில் நடைபெற்ற நேரடிப் பேச்சு வார்த்தைக்கு வழியேற்படுத்தியிருந்தது.

## தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரடிப் பேச்சுவார்த்தை




தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரடிப் பேச்சு வார்த்தை 16.09.2002 அன்று தாய்லாந்தில் ஆரம்பமாகி நடை பெற்றது. சந்திரிகா அரசுடன் மேற் கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை, 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முறி வடைந்ததற்குப் பின்னர், சுமார் ஏழாண்டுகள் கழித்து நடை பெற்ற நேரடிப் பேச்சுவார்த்தை இதுவாகும்.

## கைதிகள் பரிமாற்றம்

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காப் படையினருக்கும் இடையேயான கைதிகள் பரிமாற்றம் ஒன்று 28.09.2002 அன்று, வவுனியா ஓமந்தைப் பகுதியில் இடைம்பெற்றது. இந்நிகழ்வில் ஏழாண்டுகளாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருந்த படையினர் ஏழு பேரும் விடுவிக்கப்பட்ட அதே வேளை, சிறீலங்காச் சிறைகிளல் இருந்து விடுவிக்கப்பட்ட பதினொரு விடுலைப் புலிகளும் வைபவரீதியாக பரிமாற்றம் செய்யப்பட்டனர்.

ஓமந்தையில் விடுவிக்கப்பட்ட 11 பேரில், பலாலியில் சிங்கள விமானப் படைத்தளம் மீது 1994ம் ஆண்டு நடத்தப்பட்ட கரும்புலித்தாக்குதல் அணிக்கு தலைமையேற்றுச் சென்று, சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட கரும்புலிவீரர் கெனடியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் புலிகளின் தளபதிகளும், சிறீலங்கா படைத்தளபதிகளும் சந்திப்பு



12.09.2002 அன்று விடுதலைப் புலிகளின் தளபதிகளும் சிறீலங்கா படைத்தளபதிகளும், முகமாலையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். முகமாலையில் இருதரப்பு முன்னணி காவல் நிலைகளுக்கும் இடைப்பட்ட சூனியப் பகுதியில் 12.09.2002 அன்று இச்சந்திப்பு இடம்பெற் றிருந்தது. போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் புரூ ஹோ டே அவர்கள் இச்சந்திப்பை ஒழுங்கு படுத்தி யிருந்தார். விடுதலைப்புலிகளின் வட பகுதிக்கான கட்டளைத் தளபதி கேணல் தீபன், அவரின் உதவியாளர் லெப்டினன்ட கேணல் லோரன்ஸ், பளைப் பகுதிப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் அறிவு ஆகியோரும், சிறீலங்கா தரப்பில், யாழ் மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, நிர்வாக இளைப்பாளர் பிரிகேடியர் உபாலி, லெப்டினன்ட் கேணல் சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்


37ஆம் ஆண்டு
வீரவணக்கம்
37th Year
Veeravanakkam
SEPT
26
2024
"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலரட்டும்"
ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன்
இராசையா பார்த்தீபன் [ ஊரெழு, யாழ்ப்பாணம் 27.11.1963–26.09.1987]
Lt. Col. Thileepan
இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து, தமிழ் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்திய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டு சாகும் வரை உண்ணா நோன்பு [15.09.1987–26.09.1987] இருந்து ஈகைச் சாவடைந்தார்.
Martyr died on a hunger strike till death (15.09.1987-26.09.1987) demanding five demands from the Government of India to fulfill the promises made to the Tamil people.
லெப். கேணல் குமரப்பா
லெப். கேணல் புலேந்திரன்
இந்திய – சிறீலங்கா சமாதான ஒப்பந்த காலப்பகுதியில் கடலில் பயணம் செய்த தளபதிகளை சிறீலங்கா கடற்படை கைது செய்து கொழும்பிற்கு கொண்டுசெல்ல முற்பட்டவேளை 05.10.1987 அன்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவை தழுவிக்கொண்ட லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன் உட்பட்ட பன்னிரு வேங்கைகளுக்கும் எமது 37ஆம் ஆண்டு வீரவணக்கம்
2ம் லெப்.
கஸ்தூரி
வீரவேங்கை
ரஞ்சினி
வீரவேங்கை
தயா
2ம் லெப்.
மாலதி
10.10.1987 அன்று கோப்பாய் பகுதியில் இந்தியப் படையுடன் நடந்த மோதலில் முதல் பெண் மாவீரரான 2ம் லெப். மாலதி மற்றும் அவருடன் 2ம் லெப். கஸ்தூரி, வீரவேங்கை ரஞ்சினி, வீரவேங்கை தயா ஆகிய மாவீரர்களுக்கும் எமது 37ஆம் ஆண்டு வீரவணக்கம்
தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் 10
கேணல் சங்கர்
26.09.2001 அன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் வீதியில் சிறீலங்கா ஆழ ஊடுருவும் படையினரால் நடாத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கு எமது 23 ஆம் ஆண்டு வீரவணக்கம்
வைத்தியலிங்கம்
சொர்ணலிங்கம்
வல்வெட்டித்துறை. யாழ்ப்பாணம்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The thirst of the Thamils is the Homeland of Thamileelam
சங்கத்தமிழ்